# கலைமுகம்

கலை இலக்கிய சமூக இதழ்

இதழ் 72

ஏப்பிரல் - செப்ரெம்பர் 2021



வேல்நந்தன்
அமுது ஜோசப் சந்திரகாந்தன்
மு. புஷ்பராஜன்
சோ. தேவராஜா
லெ. முருகபூபதி
செல்வம் அருளானந்தம்
கந்தையா ஸ்ரீகணேசன்
நா. யோகேந்திரநாதன்
குயின்ரஸ் துரைசிங்கம்
சி. விமலன்
எஸ். கே. விக்னேஸ்வரன்
டிசே. தமிழன்
அந்துவன் கீரன்
சப்னாஸ் ஹாசிம்
முழுமதி எம் முர்தளா
கிரிசாந்
நுஹா
மரின் றேச்சல் மரியதாசன்
ந. குகபரன்
சி. ரமேஷ்
இயல்வாணன்
ச. இராகவன்
நிலாந்தி சசிகுமார்
அஸ்மா பேகம்
சித்தி றபீக்கா பாயிஸ்
ஜமீல்
அ. அஜந்தன்
கொ. ராஜன்

## காலம் தந்த வரம்

கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்

(1939 - 2021)

200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமுகம்

ISSN 1391-0191

இதழ் 72

கலை, இலக்கிய, சமூக இதழ்



Public Library
Jaffna

17 SEP 2021




## உள்ளே

**கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள் நினைவுகள் - பக்கங்கள் 03 - 41**

### கட்டுரைகள்


| | |
|---|---|
| அமுது ஜோசப் சந்திரகாந்தன் | 05 |
| மு. புஷ்பராஜன் | 08 |
| சோ. தேவராஜா | 11 |
| லெ. முருகபூபதி | 16 |
| செல்வம் அருளானந்தம் | 19, 85 |
| கந்தையா ஸ்ரீகணேசன் | 22 |
| நா. யோகேந்திரநாதன் | 24 |
| குயின்ரஸ் துரைசிங்கம் | 28 |
| சி. விமலன் | 30 |
| அ. அஜந்தன் | 90 |
| கொ. ராஜன் | 93 |


### தொடர் கட்டுரை


| | |
|---|---|
| அந்துவன் கீரன் | 49 |


### கவிதைகள்


| | |
|---|---|
| வேல் நந்தன் | 04 |
| சப்னாஸ் ஹாசிம் | 52 |
| முழுமதி எம். முர்தளா | 54 |
| கிரிசாந் | 58 |
| நுஹா | 59 |
| சித்தி றபீக்கா பாயிஸ் | 81 |


### மொழிப்பெயர்ப்புக் கவிதை


| | |
|---|---|
| சார்ள்ஸ் ப்பூகோவ்ஸ்கி<br>தமிழில்: டிசே தமிழன் | 48 |


### சிறுகதைகள்


| | |
|---|---|
| மரின் ரேச்சல் மரியதாசன் | 68 |
| ஜமீல் | 82 |


### நூல் மதிப்பீடுகள்


| | |
|---|---|
| ந. குகபரன் | 71 |
| சி. ரமேஷ் | 72 |
| இயல்வாணன் | 75 |
| ச. இராகவன் | 77 |
| நிலாந்தி சசிகுமார் | 79 |
| அஸ்மா பேகம் | 80 |


### பத்தி


| | |
|---|---|
| எஸ். கே. விக்னேஸ்வரன் | 42 |


### மற்றும்


| | |
|---|---|
| தலையங்கம் | 02 |
| அஞ்சலிகள் | 89 |
| பதிவுகள் | PL |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலாண்டுச் சஞ்சிகை

# கலைமுகம்

கலை, இலக்கிய, சமூக இதழ்

கலை 32 முகம் 02

ஏப்பிரல் - செப்ரெம்பர் 2021

ஸ்தாபக ஆசிரியர்

**அமரர் நீ. மரிய சேவியர் அடிகள்**

பொறுப்பாசிரியர்

**கி. செல்மர் எமில்**

இதழ் வடிவமைப்பு

**கி. செல்மர் எமில்**

அட்டைப்பட கணினி வடிவமைப்பு,
கணினி அச்சுக்கோர்ப்பு, பக்க அமைப்பு,
அச்சுப்பதிப்பு.

**ஜே. எஸ். கிராபிக்ஸ்**
54, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

வெளியீடு

**திருமறைக் கலாமன்றம்**
*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம், இலங்கை.*
தொலைபேசி : 021-222 2393

ஆக்கங்கள் மற்றும் கருத்துக்களை
பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு
அனுப்பவும்.

judesondivera@gmail.com


## தலையங்கம்

வணக்கம்!

கடந்த ‘கலைமுகம்’ இதழின் தலையங்கத்தில் ‘நோய்வாய்ப்பட்டிருக்கும் மரிய சேவியர் அடிகளாரின் நலத்திற்காக இறைவேண்டல் செய்யுமாறு’ எமது வாசகர்களிடம் வேண்டு கோள் விடுத்து, அந்த இதழ் வாசகர்களின் கரங்களில் தவழ்ந்து கொண்டிருந்த வேளையில், இறைமகன் இயேசு குருத்துவத்தை ஏற்படுத்திய ‘பெரிய வியாழன்’ புனித நாளில் மரிய சேவியர் அடிகள் என்ற ஈழத்தின் ஒப்பற்ற கலை ஆளுமைக்கு கண்ணீர் மல்க இறுதி விடை கொடுக்க வேண்டியவர்களானோம்.

கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக ஈழத்துக் கலைவானில் ஒளிவீசிக் கொண்டிருந்த நட்சத்திரமொன்று 01.04.2021இல் ஒளியிழந்து அணைந்தமை எல்லோரது இதயங் களிலும் பெருந்துயராய் இறங்கியது.

அறுபதுகளில் அடிகளாரின் தலைமையில் ஒரு கலைக்குழுமமாக இளையோர் இணைந்து செயற்பட்ட சூழல் திருமறைக் கலாமன்றம் என்ற பெயருடன் மாற்றம் பெற்று ‘கலைவழி இறைபணி’ என்ற விருதுவாக்குடன் இங்கும், இம்மண்ணுக்கு அப்பாலும் பல இடங்களில் இயங்கி வருகின்றது. இறைவன் அளித்த மனிதத்தை இம்மன்றம் கலைகளின் ஊடாகப் பயன்படுத்தி போற்றிக் காத்து, எல்லைகள் கடந்த நிலையில் நல் உறவுகளை ஏற்படுத்தி வருவதனை அனைவரும் அறிவர். இளம் தலைமுறையினர் மத்தியில் கலைக் குடும்ப உணர்வையும், சமுதாயத்தில் முன்னேற்றகரமான மாற்றங்களையும் ஏற்படுத்தும் நோக்குடன் அரைநூற்றாண்டிற்கு மேலாக இயங்கிக் கொண்டிருக்கும் திருமறைக் கலாமன் றம், யாழ். மண்ணில் நிலையாக வேரூன்றி உள்ளது. தனக்கென ஒரு பணிமனை, திறந்த வெளி அரங்கு, கலையகம், அழகியல் கல்லூரி, ஓவியக்கூடம், தியான இல்லம் போன்ற கட்டுமானங்களை உள்ளடக்கி எதிர்காலச் சந்ததியினரையும் கருத்திற்கொண்டு செயற்பட்டு வருகின்றது.

இந்த மாபெரும் கலை இயக்கத்தின் உயிராக, உருவாக நின்று வழி நடத்தியவர் மரிய சேவியர் அடிகளார். சாதாரண கத்தோலிக்கக் குருவாக தன் பணியைத் தொடங்கிய அடிக ளார் இன்று இன, மத, மொழி கடந்து வரலாற்றில் மறக்கப்பட முடியாத, இட்டு நிரப்பப்பட முடியாத ஆளுமையாக அனைவரது மனங்களிலும் நிலைபெற்று நித்திய பேறடைந் துள்ளார்.

தன் அறிவு, ஆற்றல், ஆளுமை அனைத்தையும் கலைகளின் எழுச்சிக்காக அர்ப்பணித்து, எந்நேரமும் அதைப் பற்றியே சிந்தித்து செயலாற்றி வந்த பெருந்தகை அவர். உலக வரலாற்றில், தமக்கென வாழாது தம் வாழ்வு முழுவதையுமே அடுத்த மனிதர்களின் உயர் வுக்காக, சமூகத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த உன்னதமான மனிதர்கள் பலரை நாம் கண்டிருக்கின்றோம். இன்றும் அத்தகைய மனிதர்கள் நிறையப் பேர் நம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பதால் தான், நினைத்துக் கூட பார்க்க முடியாத அழிவுகள், இழப்புகளுக்குப் பின்னரும் இன்னும் உலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது எனலாம். இத்தகைய உயர்வான மனிதர்களில் ஒருவராக வாழ்ந்து மறைந்தவர்தான் மரிய சேவியர் அடிகளார்.

செய்கின்ற பணிகள் எதிலுமே நேர்த்தியும், நேரம் தவறாமையும், கலைஞர்களுக்கு கொடுக்கின்ற உயர்ந்த இடமும் என அடிகளாரின் வாழ்வில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை ஏராளம் ஏராளம். அவரது நிழலில் பயணித்த மணித்துளிகள் இனி மீளப்பெற முடியாத அற்புதமான, உற்சாகம் மிக்க தருணங்கள்.

தன் வாழ்வாலும், பணிகளாலும் அழிக்க முடியாத தடங்களை பதித்துச் சென்றுள்ள அடிகளார் பற்றிய நினைவுகளின் சில பக்கங்களை ‘கலைமுகம்’ இந்த இதழ் சுமந்து வருகின்றது. கூடவே, அவரது சிந்தனையின் வடிவமான ‘கலைமுகம்’ இதழை 1990 ஆம் ஆண்டு ஆரம்பித்த காலம் முதல் அதன் வருகைக்கான மூலசக்தியாகவும் பிரதம ஆசிரி யராகவும் இருந்து வழிகாட்டிய மரிய சேவியர் அடிகளாருக்கு ‘கலைமுகம்’ தனது ஆத் மார்த்தமான அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

திருமறைக் கலாமன்றம் என்னும் கலைக்கோவிலுக்கூடாக அடிகளார் ஆற்றிய பணி களைத் தடையின்றித் தொடர்வதே அவருக்கு நாம் செலுத்துகின்ற உயர்ந்த கைம்மாறாக அமையும். இன்றைய பெருந்தொற்றுக் காலம் இப்பணிகளை முன்னெடுப்பதற்கு மிகப் பெரும் சவாலாக இருந்தாலும் புலரும் புதிய நாள் அதற்கான வாசல்களைத் திறக்கும் என நம்புவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலைத்தூது அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள்

(ஸ்தாபக இயக்குநர், திருமறைக் கலாமன்றம்)

(1939 - 2021)

நீங்கள் விட்டுச் சென்ற தடங்களில்

எங்கள் பயணம் தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருட்சம் ஒன்றின் விதையானவரே விடை தந்தோம்...






கலைத்தூதராய் தமிழின்
நிலை உயர வைத்த தகையாளரே
விலைமதிப்பற்றவை உம் பணிகள்
விருட்சம் ஒன்றின் விதையானவரே
விழுதுகள் பலவற்றின் வேரானவரே
மதங் கடந்த மனித நேயராய்
மானிட இதயங்களை வென்று வாழ்ந்தவரே
திருமறைக் கலாமன்றமதன் பிதாமகரே

மரிய சேவியராய் ஆற்றிய மகத்துவப் பணிகளால் - இன்று
சாதனைத் தமிழனாய் உயர்ந்தவரே
உருவமாய் மறைந்தாலும் - என்றும்
உள்ளத்து ஒளியாய் வழிநடத்த
விடை தந்தோம் இன்றுமக்கு
அன்பில் மலர்ந்த அமர காவியமாய்
நெஞ்சில் உம் பணிகள்
சுமந்து நடக்கின்றோம்
கலையின் உயிர்ப்புக்காய்
உம் பாதை வழியே -உம்
கலைமுகம் என்றும் அழியாது.

சைவசித்தாந்தமதில் பட்டம் பெற்றீர்
மதங்கடந்து கலையால்
மனிதரை நேசித்தீர்
நீண்ட உம் யாத்திரையில்
கலைவாழ தமிழ்வாழ எத்தனை
எத்தனை பணிகள் செய்தீர்

நாம் கண்ட தனிநாயகம் அடிகளாய்
உலகத் திசையெங்கும் சென்று
கலைப்பணி செய்திட்ட கலைத்தூதரே
விருட்சம் ஒன்றின் விடைபெறலாய்
உம் மறைவு
வேராய் என்றும் எமக்குள்
உம் நினைவு
கிளை விட்டும் உம் கனவு.


**- புலோலியூர் வேல்நந்தன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# கலையுணர்வும் தமிழறிவும் கலந்தளித்த ஆசான்

**பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன்**

**1971** ஜூன் மாத நடுப் பகுதியில், திருச்சி மண்ணை தீப்பிளம்புகள் சுட்டெரிப்பது போன்ற அனல் கக்கும் மதிய வெயில். யாழ்ப்பாண மறைமாவட்ட இளம் குருமாணவர் நாங்கள் பத்துப்பேர் திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டிருந்த இனிய நாட்கள். மன்னார் மறைமாவட்டம் அப்போது யாழ்ப்பாண மறை மாவட்டத்துடன் இணைந்திருந்த காலம். அருட்தந்தை மரிய சேவியர் அடிகள் அன்று யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சி வருகின்றார் என்ற நற்செய்தி முதல் நாளே எமக்குக் கிடைத்தது.

நாள்தோறும் மதிய உணவு முடிந்தபின் குருமாணவர்கள் சிறிய குழுக்களாக கல்லூரியின் நடைக்கூடங்களில் உரையாடியபடி உலாவுதல் சகஜம். எமது கல்லூரியின் பிரதான வாசல் கதவுகளின் வலப்புறத்திலுள்ள வரவேற்பு அறையினை அண்மியபோது சுவர்கள் அதிர்வது போன்ற ஆனந்தச் சிரிப்பொலியும் எமக்கு முன்பே பரிச்சயமான கணீர் என்ற கம்பீரமான கலைக் குரலும் கேட்டது.

பாதர் நீக்கிலாப்பிள்ளை மரிய சேவியர் அடிகளாரை சில மணித்துளிகளின் முன்புதான் எமது மூத்த குருமாணவர் மேரி பஸ்தியன் விமான நிலையத்திலிருந்து அழைத்து வந்திருந்தார். எப்பொழுதும் நாம் அவரை பாதர் சவரி (*Father Saveri*) என்று அன்பொழுக அழைப்பது வழக்கம்.

மதுரைப் பெருநகரில் தமது இளம்புலவர்-வித்துவான் பட்டப் படிப்பினை துவங்கு முகமாக, சுவாமி மரிய சேவியர் அடிகள் யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சிக்கு வந்திருந்தார்.

> “
> எங்கள் பலரின் புலமைத்தள வாழ்வில் பாதர் சவரியின் இழப்பு விட்டுச்செல்லும் இடைவெளி இலகுவில் நிரப்பக்கூடியதல்ல.
> இவர் தனது குருத்துவ துறவற அழைத்தலினுள் தமது ஆற்றல்மிகு கலைத்துவ அழைப்பை காத்திரமான இறைகுரலாகவும் பவித்திரமான பகிரங்கத் திருப்பணி ஏற்றும் போற்றியும் வாழ்ந்த பேரறிஞர். பெருங்கலைஞர்.
> ஆழ்ந்த தமிழ் மொழிப்பற்றுடன் அயராத அபார கலையார்வத்தையும் இனிதே இணைத்து தனது வாழ்வையே வற்றாத கலையாக வாழ்ந்த ஒரு அற்புத மனிதர். கலைஞர். பல கலைஞர்களை உருவாக்கிய கலைக் குரு.
> ”

அவ்வப்போது யாழ்ப்பாணத்திலிருந்து வருபவர்கள் தான் எமது நாடு நகரம் பற்றிய செய்திகளை எமக்குத் தருவார்கள். நாங்கள் மகிழ்ச்சி பொங்க ஆவலோடு அவரைச் சுற்றி அமர்ந்திருந்தோம். அவருக்கே உரித்தான ஓயாத சிரிப்பொலியுடன் பல விடயங்களை எங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அவர் இரண்டு நாட்களில் மதுரைக்குப் பயணமானார். வார இறுதி நாட்களில் அடிக்கடி மதுரையிலிருந்து திருச்சிக்கு வந்து எம்முடன் உரையாடி, உணவுண்டு மகிழ்வார். கொடும் வெயிலில் குளிர் தரும் பசும் நிழலைத் தேடுவது போன்று அவரது வருகைக்காய் நாம் எப்பொழுதும், காத்திருப்போம். நாங்கள் வயதில் இளையவர்களாக இருந்த போதும் நல்ல நண்பர்களாக அவருடன் பழகி உரையாடுவதற்கு தலைமுறை இடைவெளி ஒருபோதுமே தடையாய் இருந்ததில்லை.

யாழ்ப்பாணத்தில் இளங்குருவாக அவரைப் பார்த்திருக்கின்றேன். உரும்பிராய், குருநகர் ஆகிய பங்குகளில் அவர் பணியாற்றிய போது அவரது நெறியாள்கையில் இடம் பெற்ற அன்பில் மலர்ந்த அமர காவியம், பலிக்களம் போன்ற இயேசுவின் திருப்பாடுகளைக் காட்சிப்படுத்தும் அரங்க நிகழ்வுகளுக்கு சிறிய குருமடத்து மாணவர்களாக நாம் சென்றதுண்டு. ஆர்வப் பேருணர்வுடனும் போற்றுதல் மிக்க ஆச்சரியத்துடனும் இந்த நிகழ்ச்சிகளை மனதாரப் பாராட்டியமை நினைவிலுண்டு. சுவாமி மரிய சேவியர் அவர்களின் அன்புகலந்த வரவேற்பும், இனிய விருந்தோம்பலும் எமது நினைவில் என்றுமே பசுமையாய் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் குருமாணவனாக வளர்ந்த காலத்தில் இப்படியான சில சந்திப்புகளைத் தவிர யாழ்ப்பாணத்தில் அவருடன் நேரிலே சந்தித்து பலமுறை பேசிப் பழகிய நட்புறவு அப்போது மிகவும் குறைவு.

அவர் மதுரைக்கு கல்விகற்க வந்த பின்புதான் அவரை நன்கு அறியவும் நட்புடன் உரையாடவும் பல வாய்ப்புகள் கிடைத்தன. இந்தத் தொடர்பும் பாசமான பரஸ்பர மரியாதைமிக்க நட்பும் அவர் இறக்கும் வரை பல தசாப்தங்களுக்கு நீடித்தது. எங்கள் பலரின் புலமைத்தள வாழ்வில் பாதர் சவரியின் இழப்பு விட்டுச்செல்லும் இடைவெளி இலகுவில் நிரப்பக்கூடியதல்ல.

இவர் தனது குருத்துவ துறவற அழைத்தலினுள் தமது ஆற்றல்மிகு கலைத்துவ அழைப்பை காத்திரமான இறை குரலாகவும் பவித்திரமான பகிரங்கத் திருப்பணி ஏற்றும் போற்றியும் வாழ்ந்த பேரறிஞர். பெருங்கலைஞர்.

ஆழ்ந்த தமிழ் மொழிப்பற்றுடன் அயராத அபார கலையார்வத்தையும் இனிதே இணைத்து தனது வாழ்வையே வற்றாத கலையாக வாழ்ந்த ஒரு அற்புத மனிதர். கலைஞர். பல கலைஞர்களை உருவாக்கிய கலைக் குரு.

சிவாஜி கணேசன், சுந்தரராஜன், எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா, முத்துராமன் ஆகியோர் நடிக்கும் நீண்ட மேடை நாடகங்கள் அக்காலத்தில் சென்னையில் அடிக்கடி மேடை ஏற்றப்படுவதுண்டு. அவர் மதுரையில் வாழ்ந்த காலத்தில் நாடகம் பார்ப்பதற்காக தவறாமல் அடிக்கடி சென்னைக்குச் சென்று வருவார்.

பின்பு திருச்சியில் எங்களைச் சந்திக்கும் போது, நாடக மேடைகளின் வடிவமைப்பு, சிக்கலான ஒலி, ஒளி, தொழில் நுட்பப் பிரயோகம் போன்றவற்றை உன்னிப்பாக அவதானித்து அவைபற்றி எங்களுக்கு மிக நேர்த்தியாக விமர்சனம் செய்வார். மாணவர்களாகிய எமக்கும் அந்த அறிவனுபவம் பயனுள்ளதெனக்கூறி ஒருமுறை சிவாஜி, சுந்தரராஜன் நடித்த 'ஞானஒளி' நாடகத்தைப் பார்ப்பதற்காய் எங்களில் சிலரை சென்னைக்கு அழைத்துச்சென்றார். இந்தியாவில் அவருடன் நீண்ட பயணம் மேற்கொள்வதே ஒரு அலாதியான அனுபவம். அவை நினைவழியா நிகழ்வுகள். வாழ்வில் மறக்க முடியாத மங்கல நாட்கள்.



இன்று பின்னோக்கிப் பார்க்கும் போது, 1960 களிலும் எழுபதுகளிலும் உரும்பிராய், குருநகர் போன்ற பங்குகளில் அவர் துவங்கிய திருப்பணியுடனான - கலைப்பணி அவரது பணி வாழ்வின் ஒரு புதிய மடைதிறப்பாகவே அமைந்தது.

திருச்சி-மதுரை-சென்னைப் பயணங்களும், பயில்வுகளும் கற்பிதங்களும் 1970 களின் நடுப்பகுதியிலிருந்து ஈழத்துக் கலையுலகிலும் படைப்புலகிலும் புதியதோர் காலத்தைப் புடமிட்டுப் புத்தாக்கம் *(innovation)* செய்ய வழிகோலியது என எண்ணத் தோன்றுகின்றது. சென்ற நூற்றாண்டின் கடைக் காலில் பல்வேறு காரணிகளால் மெல்ல மெல்ல மறைந்து கொண்டிருந்த தமிழ் நாடகம், கூத்து, பாட்டும் பரதமும், இசை நடனம் போன்ற கலை வடிவங்களுக்கு புதுமெருகும், புதுப்பொலிவும் ஊட்டி புனருத்தாரணம் செய்த புரட்சிக் கலைஞர் இவர்.

உலக அளவில் பேராய்வு நெறியில் சைவத் தமிழ் தழைக்க பேருதவி செய்த பெருமகன். சமஸ்கிருத மொழி முற்கால தமிழ் இலக்கிய வகைபடுத்தல்களிலும் காப்பிய நெறிமுறைகள், கவிதையியல் போன்றவற்றிலும் கணிசமான அளவில் செல்வாக்குச் செலுத்தியுள்ளதென்பது பழந் தமிழ்ப் புலமையுலகம் ஏற்றுக் கொண்ட உண்மை. சமஸ்கிருத மொழியில் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் தண்டின் எழுதிய 'காவியா தர்ஷா' எனும் நூல் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் தண்டியலங்காரம் எனும் பெயருடன் தமிழில் விரிவும் விளக்கமும் பெற்றமையை இதற்கு ஒரு சான்றாகக் கொள்ளலாம். இன்னும், இடைக்காலத் தமிழ்ப் பேரிலக்கியங்கள் பலவற்றில் சமஸ்கிருதப் பதங்கள் பரந்து பரவியுள்ளமை கண்கூடு.

ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சியைத் தொடர்ந்து தமிழகத்திலும் ஈழத்திலும் "இந்து" எனும் பெரு வலைக்குள் ஆதித்தமிழ் முருக வழிபாட்டு மறைநெறியான சைவம் சிக்கியுள்ள நிலைதனை ஆழமாகத் திறனாய்வு செய்து தீர்க்கப்பட வேண்டும் என்பதை நீக்கிலாப்பிள்ளை மரிய சேவியர் அடிகள் தமது சைவ சித்தாந்த பேராய்வு மூலமாகக் கண்டுணர்ந்தார். தமது கலாநிதிப் பட்டத்திற்காக ஜேர்மன் மொழியில் அவர் செய்துமுடித்து வெளியிட்ட ஆய்வு நூல் நாம் மேற்கூறிய உண்மையை வலியுறுத்துகிறது. இன்று சமூக சமய வரலாற்றியல் பார்வையில் தமிழர்களின் ஆதி மறைநெறிகளின் அடியும் முடியும் தேடி ஆய்பவர்களுக்கு அவரது ஆய்வுநூல் பேருதவியாகும்.

தமிழியல் வழியாக சைவ சித்தாந்தத்தையும், சைவ சித்தாந்தம் வழிநின்று தமிழியல் தூலங்களை இனம் கண்டு விளங்கவும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நான் பணியாற்றிய பதினேழு வருடகாலத்தில் எல்லா வகைகளிலும் அவர் எனக்கு ஒரு மூத்த சகோதரன் போல் இனிய ஆசானாக, நண்பனாக, வழிகாட்டியாகத் துணை நின்றவர். கல்விப் புலம் சார்ந்த எனது அனைத்து முயற்சிகளிலும் ஊக்கமும் உற்சாகமும் தந்தவர்.

பூலோகசிங்க நாவலரால் 1876 இல் யாக்கப்பட்ட ஈழத்தின் முதல் கிறிஸ்தவ பேரிலக்கியமான 'திருச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வர் காவியம்' எனும் நூலை அறிமுகத் தெளிவுரைக் குறிப்புகள் எழுதி அதனை நானே வெளியிட வேண்டும் என்று விடாக்கண்டராய் நின்று அதனை நான் வெளியிட சகல வழிகளிலும் உதவியாய் இருந்தவர் எமது மரிய சேவியர் அடிகளார்.

நான் கனடாவுக்கு புலம் பெயர்ந்த கடந்த 25 வருடங்களில் பல தடவைகளில் இங்கு வந்து சென்ற அடிகளார் ஒவ்வொரு வருகையின் போதும் தவறாமல் நேரில் எனது இல்லத்திற்கு வந்து என்னைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்து செல்வார்.

1980கள் 90களிலும் அதனைத் தொடர்ந்தும் ஈழத் தமிழ் நிலத்தில் இடம்பெற்ற கொடிய போரின்போது அடிகள் தேசிய அரசியல் விடயங்களில் அதிக அக்கறை கொள்ளவில்லை என்பது ஒரு சாராரின் கருத்து. இது உண்மைக்குப் புறம்பானது. 1980 முதல் 1997 வரையான காலப் பகுதியில் ஈழப்போர் 1, 2, 3, என உக்கிரமாக இடம்பெற்ற காலத்தில் யாழ்ப்பாணத்தில் வாழந்தவன் என்ற வகையிலும் அடிகளாரின் செயல்பாடுகள் சிலவற்றுடன் தொடர்புடையவன் என்ற வகையிலும் அவரது மனப்போக்குகளை என்னால் எடைபோட முடியும் என்று கருதுகின்றேன். எங்களில் பலரைப் போன்று போரின் விளைவால் ஏற்பட்ட அவலங்களையும், அனர்தங்களையும், அழிவுகளையும் எங்களின் இயலாத் தன்மையையும் உலக நாடுகளின் ஊமைத் தனத்தையும் பார்த்து அவர் மனம் வெதும்பினார்.



1990களின் துவக்கம் முதல் நடுக்கூற்றுவரையான காலத்தில், இலங்கையின் ஏனைய பகுதிகள் அனைத்துடனும் எவ்வித் தொடர்புமின்றி யாழ்ப்பாணம் துண்டிக்கப்பட்டிருந்தது. மக்கள் விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்பட்ட காலம். இக்காலத்திலேதான் புறம், ஞானசவுந்தரி, அரிச்சந்திர மயான காண்டம் போன்ற இசை -நடன நாடகங்களையும், இன்னும் தமிழ்ப் பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்களுடன் இணைந்து சத்தியவான் சாவித்திரி, காத்தவராயன் கூத்து ஆகிய அவைக்காற்றுக் கலைவிருந்துகளையும் படைத்தளித்தார்.

வாரம் தோறும், மாதந்தோறும் இடம்பெற்ற இந்த நிகழ்வுகள் உளம், மனம் பாதிக்கப்பட பலமக்களுக்கு ஓரளவேனும் ஆறுதல் தரும் மருந்தாகியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்த்துப் பரவசமடைந்த இந்தக் கலைப் படைப்புகள் பயங்கரமான போரின் மத்தியில் எமது மனிதத்தை மங்கிவிடாமல் காத்தது. சுருங்கக் கூறின் அவர் கலைவழியாக ஒரு உன்னதமான உயர்வான மனித நேயத்தை, சமூக மாற்றத்தை வேண்டி நின்றார்.

கலையே அவரது உணவாக, பானமாக, கனவாக, நனவாக, வாழ்வாக வலிமையாக இருந்தது. உண்மைக் கலைஞன் என்பவன் ஆசிரியன், பயிற்றுவிப்பவன், கற்பிப்பவன், சடங்காற்றுபவன், நோய்தீர்க்கும் மருந்தானவன், குணமாக்கும் மருத்துவன். இவை அனைத்தையும் நேர்த்தியாக உள்வாங்கி செயல்பட்ட இந்த அற்புதக் கலைஞன் கலை வழியாக ஒரு புதிய சமூகத்தை உருவாக்க முனைந்தான். வார்த்தையும் வசனமும் இன்றி மௌனமொழியில் தென்னிலங்கையில் அவர் படைத்தளித்த அசோகா, தர்ஷனா, லங்கா 200 BC போன்ற அரிய படைப்புகள் இதற்கு நிலையான சான்றாகும். எங்கள் தமிழின வரலாற்றில் இந்தப் பெருங்கலைஞன் பல நூறு ஆண்டுகளுக்கு நிற்பான். நிலைப்பான். •



திருமறைக் கலாமன்றத்தின்
ஸ்தாபக இயக்குநர்
அமரர் நீ. மரிய சேவியர் அடிகள்
ஞாபகார்த்தமாக
இல 15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில்
அமைந்துள்ள
மன்றத்தின் கலைத்தூது கலாமுற்ற
வளாகத்தில் அமைக்கப்படவுள்ள
நினைவாலயத்தின் மாதிரித் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்

(03.12.1939 - 01.04.2021)



# வாழி நிந்தன் மேன்மையெல்லாம்...

**மு. புஷ்பராஜன்**

**அ**ந்த அதிர்ச்சியான செய்தியை ஜோசப் யோண்சன் ராஜ்குமாரின் முகநூல் அளித்தது. வழமையாக அவரது முகநூலில், மரிய சேவியர் அடிகளாரின் பல புகைப்படங்களைப் பார்ப்பதுண்டு. சமீபகாலப் புகைப்படங்களில் அடிகளார் தளர்ந்து போயிருப்பதையும் அவதானித்திருந்தேன். ஆனால் மறைந்துவிடுவாரென்று எதிர்பார்க்கவேயில்லை. கோவில், மதம் சார்ந்த விடயங்களில் அக்கறையில்லாத ஒருவனுக்கும் ஒரு மதகுருவுக்கும் ஏற்பட்ட உறவின் நினைவுகள், கடலலைகள்போல் வந்துவந்து மோதிக்கொண்டிருந்தன.

எழுபதுகளில் எமது புனித யாகப்பர் ஆலயப் பங்குக் குரவராக அவர் வந்திருந்தார். மரியசேவியர் எனப் பெயர்கொண்ட அவர் ‘சவிரிமுத்துச்சுவாமி’ என்றும் அழைக்கப்பட்டார். பொதுவாகவே குரவர்கள் கலை சார்ந்த விடயங்களில் அதிகம் ஆர்வமாக இருப்பதில்லை. முந்தைய தலைமுறையினர் ஈஸ்டர் காலங்களில் கோவில் முன்றலில் நடத்தும் ‘பொம்மைப் பாஸ்’, ஊரினுள் மேடையேறும் கூத்துக்களை பங்குக் குரவர்கள் ஆதரிப்பதுண்டு. காரணம், அவை கத்தோலிக்க மறை வரலாற்றை, கருப்பொருளைக் கொண்டிருப்பதுதான் . பின்வந்த இளைஞரின் சமுகம் சார்ந்த மேடையேற்றங்களை ஆதரிப்பதுமில்லை எதிர்ப்பதுமில்லை. இந்த நிலையில் புதிதாக வந்த குரவர் கலைகளில், நாடகங்களில் ஆர்வமுள்ளவராக அறியப்பட்டார். இக்குரவரின் வருகை தனிப்பட்ட ரீதியில் எனக்கு ஆர்வம் அளிக்கக்கூடிய ஒன்றாக இருக்கவில்லை.

மரிய சேவியர் அடிகளார் இளைஞர்மீது அதிகம் ஆர்வமுள்ளவராக இருந்தார். ஊரிலுள்ள நாடக மன்ற இளைஞர்களையும் அழைத்து உரையாடினார். இந்த அழைப்பின் வழியேதான் நான் இவரைச் சந்திக்க நேர்ந்தது. பல இளைஞர்களுடன் இவருக்கு ஏற்பட்ட நெருக்கமான உறவு, பின்னர் ஊர் சார்ந்து அவர் முன்னெடுத்த செயற்பாடுகளைச் சாத்தியமாக்க உதவின. ஊர்பற்றியும் ஊரில் மேடையேற்றும் நாடகங்கள் பற்றியும் உரையாடுவது இவரது இயல்பாக இருந்தது. வழமைபோல் அன்று குருமனைக்கு முன்பாக சில இளைஞர்களுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்தார். அதில் நானும் எனது நண்பர்களும் இருந்தோம். உரையாடல் சமீபத்தில் மேடையேறிய அவரது நாடகம் பற்றியது. எனது கருத்தாக அந்த நாடகம் ‘எனக்குப் பிடிக்கவில்லை’ என்றேன். அது ஒரு திருமறை நாடகம் தான். உள்ளடக்க மாற்றத்தை மத பீடம் அனுமதிக்காது என்பதை நான் அறிவேன். ஆயினும் அதன் உரையாடல்கள் இயல்பாக இல்லை. ஒரே அடுக்குமொழி. நெருடலாக இருந்தது என்றேன். மௌனமாக ஒரு புன்னகையை அளித்தார். அதன் பிறகு உருவான பல சந்தர்ப்பங்கள் எங்கள் நட்பை நெருக்கமாக்கின, ஆயினும் அவர் தமது அடுக்கு மொழியை கைவிடவே இல்லை.

ஊரில் பல நாடக மன்றங்கள் இருந்தாலும் கலையரங்கம் என்று ஒன்று இருந்ததில்லை. இருக்கும் இரண்டு பாடசாலைகளையே அவ்வப்போது அரங்குகளாகப் பாவித்து வந்தனர். இதை உணர்ந்த அடிகளார், திடீரென்று ஒருநாள் ‘நாம் ஒரு கலையரங்கைக் கட்டுவோம்’ என்றார். தொடர்ந்து ‘என்னிடம் எவ்வித பணமும் இல்லை. ஆனால், இந்த ஊர் மக்களைக் கொண்டே நாம் அதைச் செய்து முடிக்கலாம்’

“


மரிய சேவியர் அடிகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலம் யுத்த மேகங்கள் கவிந்திருந்த காலம். விமானக்குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் நாளாந்த வாழ்வை அச்சத்தின் பிடியில் வைத்திருந்தது. அவலமும் அழுகுரல்களும் கேட்டுக்கொண்டிருந்தன. மனித மனங்கள் அமைதியின்றி அலைக்கழிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் மனதை இசைமூலம் அமைதிப்படுத்தும் பணியை ஆரம்பித்தார்.

”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றுகூறிச் செயலிலும் இறங்கினார். அரங்கிற்கு வேண்டிய கட்டடப்பொருட்களை ஊரிலுள்ள பணக்காரர்களிடமிருந்து இலவசமாகத் தருவித்துக்கொண்டார். கட்டட வேலைக்குரிய தொழிலாளர்களுக்கு, ஆர்வமுள்ள இளைஞர்களை அவர்களின் நாளாந்த வேலைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், சிரமதான முறையில் உதவவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். எல்லோரையும் உற்சாகமாக அப்பணியில் ஈடுபடவைத்தார். வியக்கத்தக்க முறையில் இன்று கம்பீரமாக நிமிர்ந்து நிற்கும் 'குருநகர் கலையரங்கம்' அந்த மக்கள்பால் அடிகளார் கொண்ட நேசத்தின் சாட்சியமே.



கலையரங்கின் முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கும் 'உறவுக்குக் கை கொடுப்போம் உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்ற வசீகர வாசகம் மரிய சேவியர் அடிகளாருடையதே! குருநகர் மக்களிற்கான 'அலை கடலை ஆளும் எங்கள் வீரம் வீரம், கலையுலகில் வாழும் நெஞ்சில் ஈரம் ஈரம்' என்ற பாடலையும் புனிதர் யாகப்பர் திருநாள் பாடலான 'கடலலைகள் கொஞ்சும் நகர் காவலனே வாழ்க' என்ற பாடலையும் எழுதினார். பின்னைய பாடல், குருநகர் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் பல நாடுகளில், புனிதர் யாகப்பர் திருநாளில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது . அடிகளார் காலத்தில்தான் அவரின் 'அன்பில் மலர்ந்த அமர காவியம்' என்ற திருப்பாடுகளின் காட்சி யாழ். கோட்டையில் மிகப் பிரமாண்டமாக மேடையேற்றப்பட்டது. இவைகளின் பின்னர் தனது மேற்படிப்பிற்கு அவர் ஜேர்மன் நாட்டிற்கு செல்லவேண்டியிருந்தது.

அடிகளார் குருநகரை விட்டுச் செல்வதை அவ்வூர் மக்கள் விரும்பவில்லை. அந்தக் காட்சி நன்றாக நினைவில் இருக்கிறது. அது மாலை நேரம். சில இளைஞர்களும் பெரியவர்களும் குருமனையில் கூடியிருந்தார்கள். அவர்கள் முகங்களில் ஏமாற்றமும் ஆற்றாமையும். சிலர் கோபமாகவும் இருந்தார்கள். இந்த மாற்றத்தை நிறுத்திவிடும் முனைப்பில் இருந்தனர், ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரணங்களைக் கூறிக்கொண்டிருந்தார்கள். அடிகளார் வலது கையால் தனது நாடியைத் தாங்கியபடி அமைதியாக நின்றிருந்தார். தனது பங்கு மக்களின் கோபத்தையும் அன்பையும் எண்ணிக் கசிந்திருப்பார். இறுதியில் அடிகளார் 'தலைமைக்கு அமைவாக நடப்பது தனது கடமை, மேற்படிப்பு தனது எதிர்காலத்திற்கான நன்மையே' என்றார். 'தனது மக்கள் தனது நலனை எதிர்க்கமாட்டார்கள்' என நம்புவதாகக் கூறினார். பலர் மௌனமாக இருந்தனர். அப்படியிருந்தும் நாடகக் கலையில் ஆர்வமுள்ள ஒரு பெரியவர் அங்கிருந்த 'வாங்கை' உதைத்துவிட்டு வெளியேறினார்,

மரிய சேவியர் அடிகளார் மேற்படிப்பை முடித்ததும், எந்த ஆலயங்களுக்கும் பங்குக் குரவராகச் செல்லவில்லை என்றே நினைக்கிறேன். நான் அவரைச் சந்தித்தது யாழ். ஆண்டகையின் இல்லத்தில்தான். அங்கு ஒரு பகுதியில் தங்கியிருந்து 'கலை வழி இறை பணி'க்கான அடித்தளத்தை அமைத்தார். அவரிடம் கனவுகள் பல இருந்தன. தனது திருமறைக் கலாமன்றத்தை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தின் சகல பகுதிகளிலிருந்தும் கலை ஆர்வலர்களை, திறமைசாலிகளை மன்றத்துடன் இணைத்தார். திறமை வாய்ந்த கலைஞர்கள் அனைவரும் தனது மன்றத்தில் இருக்க வேண்டுமென விரும்பினார். மன்றத்திற்கான தனியான இசைக் குழுவை, பாடகர் குழுவை அமைத்தார். மன்ற அங்கத்தவர்கள் ஆங்கிலம் கற்பதற்காக ஆசிரியர் ஒருவரையும் அமர்த்தினார்.

தனது காலத்தில் ஒரு 'கவின் கலைக் கல்லூரி' உருவாக்க வேண்டும் என்பதும் அவரது கனவுகளில் ஒன்று. அது சாத்தியமாகாது என்றே நம்பினேன். ஆனால், அதன் நடைமுறைச் செயற்பாடுகளில் அவர் ஈடுபட்டபோது எனது நம்பிக்கைதான் நொருங்கியது. அது மாத்திரமன்றி அக்கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பையும் எனக்கு அளித்தார். அக்கல்லூரியில் நாட்டியம், பாட்டு, வீணை போன்ற பல கலைக் கற்கைகள் தகுதிவாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டன. பின்னர் ஓவியம். மிருதங்கம் என கற்கைகள் விசாலிக்கப்பட்டன. வார இறுதி நாட்களில் நடைபெற்ற இக்கற்கைகளில் ஏராளமான மாணவர் இணைந்திருந்தனர். இதன் இன்னொரு பகுதியாக அடிகளாரின் ஆலோசனையின் பேரில் 'கலைமுகம்' என்ற நவீன கலை, இலக்கிய இதழ் ஒன்றும் வெளிவந்தது.


திருமறைக் கலாமன்றத்திற்கு தனியான இசை, பாடகர் குழுக்களை அமைத்ததுபோல் நாடக அரங்குகளை நிர்மாணிக்க தனியான ஒரு குழுவையும் அமைத்தார். மன்றத்திற்கு சொந்தமாக நிரந்தர கலையரங்கு ஒன்றையும் அமைத்துக்கொண்டார். மன்றத்தின் சார்பாக தமிழ் விழா, பொங்கல் விழா, கலைவிழா எனப் பல விழாக்களை அதில் நடத்தினார். ஒரு தமிழ் விழாவில் நல்லூர் கந்தசாமி கோவில் தலைமைக் குருக்கள் பங்குபற்ற வேண்டுமென்று அடிகளார் விரும்பினார். அதற்காக நேரில்சென்று அவரை அழைத்தார். குருக்களும் வந்து விழாவைச் சிறப்பித்தார். இன்னொரு விழாவில் எழுத்தாளர் டொமினிக் ஜீவா அவர்கள் கலந்து சிறப்புரையாற்றினார்.

மரிய சேவியர் அடிகள் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய காலம் யுத்த மேகங்கள் கவிந்திருந்த காலம். விமானக் குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் நாளாந்த வாழ்வை அச்சத்தின் பிடியில் வைத்திருந்தது. அவலமும் அழுகுரல்களும் கேட்டுக்கொண்டிருந்தன . மனித மனங்கள் அமைதியின்றி அலைக்கழிக்கப்பட்டன. இந்தச் சூழ்நிலையில் மக்கள் மனதை இசைமூலம் அமைதிப்படுத்தும் பணியை ஆரம்பித்தார். வார இறுதி நாட்களில் மன்றப் பாடகர் குழு, இசைக் குழு ஆகியன இணைந்து மக்கள் மத்தியில் பஜனைப் பாடல்கள் பாடுவது. ஆரம்பத்தில் கோவில்களை மையமாக வைத்து ஆரம்பித்த இம்முயற்சி பெரும் வரவேற்பைப் பெற்றது. இவை பின்னர் சிறு சிறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பங்கள் இணைந்து விடுத்த வேண்டுகோள்களுக்கு அமைய, குடியிருப்புகளின் மத்தியிலும் நிகழ்த்தப்பட்டன. இத்தகைய நிகழ்வுகளின் பின்னர், ஒரு பொங்கல் நிகழ்விற் குப் பிறகு நான் எனது மண்ணை விட்டுப் பெயர்ந்தேன்.

லண்டன் வாழ்வில் மன்றத்துடனான எனது தொடர்புகள் அருகி வந்தன. ஆனால் பாரிஸில் உள்ள டேமியன் சூரியுடன் தொடர்பில் இருந்தேன். அவர் சில மன்ற வெளியீடுகளை எனக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். நாட்டுக்கூத்து இராகங்கள், நாட்டுக்கூத்துப் பாடல்கள், வியாகுலப் பிரசங்கம் ஆகியவைகளின் இறுவட்டுக்கள் என்பன அவற்றில் முக்கியமானவை. மன்றம் பல புலம் பெயர் நாடுகளிலும் இயங்குவதை அவர் மூலம்தான் அறிந்துள்ளேன். இப் புலம்பெயர் வாழ்வில், மழை தூறிய ஒரு இரவில் வீட்டின் கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தபோது மரிய சவேரி அடிகள் குடையைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்தார். திகைப்புடன் 'பாதர்' என்றேன். "வெள்ளையா! உன்னைக் கண்டுபிடிச்சிற்றன் பாத்தியா?" என்றார் சிரித்தபடி. "உள்ள வங்க" என்றேன். "என்னைக் கொண்டு வந்தவர்கள் காரினுள் இருக்கிறர்கள். நாளை என்னை வந்து சந்தித்துக்கொள்" என்று முகவரியும் தொலைபேசி இலக்கமும் தந்துவிட்டு திரும்பிச் சென்றார். நம்பமுடியாத வியப்புடன் மழையினூடே செல்லும் அவரைப் பார்த்தபடி நின்றேன்.



மறுநாள் அடிகளாரைப் பார்க்க 'லூசியம்' சென்றேன். சென்ற வீட்டின் தம்பதியினர் மன்றத்தின் லண்டன் கிளைப் பொறுப்பாளர்கள், அடிகளார் அழைத்த காரணத்தைக் கூறினார். மன்றம் சார்பாக லண்டனிலிருந்து 'கலைமுகம்' சிறப்பிதழ் ஒன்று வெளிவர வேண்டும். அதை நீதான் செய்து முடிக்கவேண்டும் என்றார். இன்னொரு தடவை எனது கவிதைத் தொகுதியின் வெளியீட்டுவிழா 'வோல்த்தம்ஸ்ரோ'இல் உள்ள வை.எம்.சி. ஏ. மண்டபத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கூட்டத்தின் இடை நடுவில் மரிய சேவியர் அடிகளார் திடீரெனத் தோன்றி வியப்பை அளித்தார். அவ்விழாவில் சிறப்புரை ஒன்றையும் நிகழ்த்தினார். அதில் அடிகளாருடன் ஆரம்பத்தில் நான் எவ்வாறு அடிக்கடி முரண்பட்டேன் என்பதை நகைச்சுவையுடன் குறிப்பிட்டார். நெகிழ்ந்து போயிருந்தேன்.

அதே முகநூலில் வெண்துகில் படுக்கையில் அடிகளார் மல்லார்ந்தபடி கிடக்கிறார். சிவந்த மலர்க்கொத்துக்கள் அவரைச்சுற்றி ஆங்காங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. கலகலப்பாக ஓடித்திரிந்த உடலும் வெள்ளையா என்று அழைத்த குரலும் இனி இல்லை. அவரது இறுதிப் பயணத்தைப் பார்த்துக்கொண்டிருக்கையில், அங்கு நான் இல்லை என்ற நினைவு அலைக்களித்துக்கொண்டிருந்தது.

●


## நீ.மரிய சேவியர் அடிகள் எழுதிய நூல்கள்

1. **கன்னி பெற்ற கடவுள்** *(1968)* (நாடகம்)
2. **ஒரு துளி** *(1969)* (நாடகம்)
3. **அன்பில் மலர்ந்த அமர காவியம்** *(1970)* (திருப்பாடுகளின் நாடகம்)
4. **சுவைத்தேன்** *(1970 )* (கவிதைகள் )
5. **பலிக்களம்** *(1973)* முதற்பதிப்பு (திருப்பாடுகளின் நாடகம்)
6. **THE LIFE AND TIMES OF ORAZIO BETTACCHINI** *(1980)* (ஆங்கில மொழியிலே அமைந்த ஆய்வு நூல்)
7. **கலைமுகம்** *(1981)* (அரங்கக் கட்டுரைகள்)
8. **Die Metaphysik des Shaiva- Siddhanta Systems** *(1984)* (ஜேர்மன் மொழியிலே அமைந்த ஆய்வுநூல்)
9. **சாவை வென்ற சத்தியன்** *(1984)* (உயிர்ப்பு நாடகம்)
10. **சிலுவை உலா** *(1991)* (திருப்பாடுகளின் நாடகம்)
11. **கல்வாரிப் பரணி** *(1992)* (திருப்பாடுகளின் நாடகம்)
12. **கல்வாரிக் கலம்பகம்** *(1993)* (திருப்பாடுகளின் நாடகம்)
13. **Siddhanta Traditions, Philosopher-Sages** *(1993)* (ஆங்கில மொழியிலே அமைந்த கட்டுரைகள் )
14. **பலிக்களம்** *(1993)* இரண்டாம் பதிப்பு (திருப்பாடுகளின் நாடகம்)
15. **A CATHOLIC-HINDU ENCOUNTER** *(1994)* (ஆங்கில மொழியில் அமைந்த ஆய்வு நூல்)
16. **JAFFNA - The land of the Lurd** *(1994)* (ஆங்கில கட்டுரைகள்)
17. **பலிக்களம்** *(1996)* மூன்றாம் பதிப்பு (திருப்பாடுகளின் நாடகம்)
18. **சுவைத்தேன்** *(1996)* இரண்டாம் பதிப்பு (கவிதைகள்)
19. **களங்கம்** *(1996)* (நாடகம்)
20. **காவிய நாயகன்** *(2004)* (திருப்பாடுகளின் நாடகம்)
21. **நகையகம்** *(2007)* ( மொழிபெயர்ப்பு நாடகம்)
22. **வேள்வித் திருமகன்** *(2012)* (திருப்பாடுகளின் நாடகம்)
23. **சிங்க குலச் செங்கோல்** *(2015)* (கூத்துக்கள்)
24. **ESSAYS ON SAIVA SIDDHANTHAA** *(2016)* (ஆங்கில கட்டுரைகள்)
25. **வாகைச் சுடர்** *(2015)* (கட்டுரைகள்)
26. **காலத்தின் தடங்கள்** *(2019)* (கலைமுகம் ஆசிரியர் தலையங்கங்கள்)
27. **மறைபொருள் நாடகங்கள்** *(2019)* (நாடகத் தொகுதி)
28. **அரங்க வலைகள்** (நாடகக் கட்டுரைகள்) (அச்சில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள் (03.12.1939 - 01.04.2021)



# சமகாலத்தில் அதிசயங்கள் நிகழ்த்தியவர்

**சோ. தேவராஜா**

அருள்திரு நீ. மரிய சேவியர் அடிகள் எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார் என்ற துயரத்தினைப் பகிர்ந்து எம்மை நாமே ஆறுதல்படுத்துதற்காக இக்குறிப்புகளை நான் எழுத முற்படவில்லை.

இயேசுபிரான் கொல்லப்பட்டார். எனினும் மீண்டும் உயிர்த்தார். 21 நூற்றாண்டுகளாக மக்களுடன் அவர் சங்கமமாகின்றார். வள்ளுவர், கம்பர், ஔவை, பாரதி ஆகியோர் மரணிக்கவில்லை. எங்களுடன் அன்றாடம் எங்கள் சிந்தனையிலும் செயலிலும் இரண்டறக் கலந்துள்ளார்களல்லவா?

அடிகள் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என்பதனால் அவருடன் கலைகளினூடாக உரையாடி உறவாடிய பொழுதுகளின் மகிழ்வைப் பரிமாறிக் கொள்வதெனில், அவர் பெற்ற விருதுகளையோ, அவரின் ஆளுமை பற்றியோ, அவர் ஆற்றிய தொண்டுகளையோ, அவர் இயற்றிய, பதிப்பித்த, வெளியிட்ட நூல்களையோ, அவர் பெற்ற மூன்று கலாநிதிப் பட்டங்களையோ, அவர் சிறு வயதிலேயே வகுப்பேற்றத்தில் பெற்ற 'டபிள்' புறொமோசன்களையோ, பன்மொழிப்பயில்வையோ, பன்மைத்துவப் பண்பாட்டு பயில்நெறிகளையோ, அவர் அரங்கேற்றிய நெறிப்படுத்திய- எழுதிய நாடகப் பட்டியல்களையோ, அவரின் கருவில் உருவான திருமறைக் கலாமன்றம் பற்றியோ, அதன் பரிணாமமான *Centre for Performing Arts* ஐப் பற்றியோ, இந்தியாவிலும் புலம்பெயர் மேற்கு நாடுகளிலும் பலதடவைகள் நிகழ்த்திய மேடையேற்றங்கள் பற்றியோ, பற்றிப் பிடித்த திருமறைக் கலாமன்றத்தின் பிராந்திய மன்றங்கள் பற்றியோ, யாழ் மாவட்டத்தின் பல கிராமங்களின் தேவாலயங்களில் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய பாங்கினைப் பற்றியோ, பல்துறை ஆளுமைகளுடனும் மொழி, இனம், பிரதேசம், நாடு கடந்து அவர் பழகிய நட்பின் பரிமாணங்கள் பற்றியோ பேசுதல் என்னால் இயலாது.

*1*

வெண்மையான நீண்ட ஆடையுடன் அமைதியான- நிதானமான- சுறுசுறுப்புடன்- நெற்றியில் பொட்டுடன்- புன்முறுவல் பூத்த முகப்பொலிவுடன் அவரைக் கண்ட- தரிசித்த நாட்கள் நெஞ்சிருக்கும் வரை நீங்காது நிலைக்கும் இன்பப் பேறு எல்லோரும் பெறுவர் என்பது திண்ணம்.

> "
> வானத்தில் வட்டமிட்டுப் பறந்து
> நிலத்தில் உலவும்
> கோழிக்குஞ்சுகளைக் கவ்வும்
> நோக்கில் கழுகுப் பார்வையில்
> நோட்டமிடும் சாத்தான்களிடமிருந்து
> தாய்க்கோழி தன் குஞ்சுகளைப்
> பாதுகாப்பது போல் திருமறைக்
> கலாமன்றக் கலைஞர்களைத் தன்
> சிறகால் மூடி உயிர் காத்தார்.
> அவர்களின் ஆளுமை விருத்திக்கு
> வழி சமைத்தார்.
> அடிகளாரைச் சூழ்ந்து குழந்தைகள்,
> சிறுவர்கள், இளைஞர்கள்,
> பெரியோர்கள் என ஆயிரக்கணக்கில்
> அலைமோதி தங்கள் நெஞ்சங்களில்
> தமது பிதாவாக ஏற்று மகிழ்ந்தனர்.
> "

கலைத்தூதுவராக நம்மத்தியில் நடமாடிய மரிய சேவியர் அடிகள் சமகாலத்தில் வாழ்ந்து மக்கள் படும் பாடுகளைப் புரிந்துகொண்டார்.

அவரது இளமைக்கால இரு தசாப்தங்கள் வெள்ளைக்காரரின் ஆட்சியின் கடுங்கோடையைக் கண்டார்.

"வெயிலினாலல்ல, வெளியார் விளைத்த கடுங்கோடைச்" சிறப்பைக் கண்ணுற்றார்.

இலங்கை சுதந்திரமடைந்தது. பின்னர் ஏற்பட்ட பிளவுகள், அனர்த்தம், மதவிரிசல், இன ஒடுக்கல், ஏழை - பணக்காரன், ஆண்டான்- அடிமை முரண்பாடுகள் அடிகளாரின் உள்ளத்தைப் பாதித்தன.

மனிதரோடு கூடிப்பிறந்த நற்குணங்களான இன்சொல், இன்முகம், அன்பு, கருணை, இரக்கம், ஈகை, நட்பு, உறவு, நம்பிக்கை, ஒற்றுமை, காதல், பாசம், பண்பு, உழைப்பு, சிந்தனை, மனித நேயத்துடன் சத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய வேட்கை கொண்ட தர்மாவேசம் மிக்க தனிமனிதராக இயங்கினார் அடிகள்.

நாம் தரிசித்த முதலாவது அதிசயமென்னவெனில் அவர் தனிமனிதராகத் தோன்றினாலும் பெருந்தோப்பாகப் பரிணமித்தார். இந்த அதிசயம் எவ்வாறு நிகழ்ந்ததென வினவி விடைகாணலே இக்கட்டுரையில் எனது நோக்க மாகும்.

2

மனிதர் சமூகப் பிராணி என்பது இயற்கையின் நிஜம். எனவே மக்கள் வாழ்வில் மனித நேயம், மானுடப் பெறு மானங்கள், விழுமியங்கள் என்பவை பிரிக்கப்படமுடியா தவை. எனவேதான் சர்வ தேசமும் சரிநிகர் சமானமாகக் கருதப்பட்டன. குவலயம் முழுவதுமே ஓர் குடும்பமாகக் கருதப்பட்டது.

மூலதன ஊடுருவலை நாடு, தேசம் என்ற எல்லைக ளைக் கடந்தும் விரிவுபடுத்த வாய்ப்பாக கருதிய வேடர்கள் மனிதர்களின் ஒற்றுமையைச் சிதைக்க மக்களிடையே பிறப்பினடிப்படையில் தோன்றிய பேதங்களை ஊக்கு வித்து உற்சாகப்படுத்தி மக்களுக்கு வலை விரித்தனர்.

இன, மத, நிற, சாதி, பால், பிரதேச வேறுபாடுகளை விதைத்தனர் வேடர்கள். இந்த வலைகளினுள் சிக்கியே மானுடர்கள் மீள்வதறியாது, தாம் தாம் பிறந்த பேதங் களினுள்ளேயே முரண்பாடுகளைத் தோற்றுவித்து மோதல் களை ஏற்படுத்தினர். பகைமுரண்பாடுகள் உள்ளூர் கல வரங்களையும் யுத்தங்களையும் ஏற்படுத்தின. இதில் ஒரு தரப்பார் ஒடுக்குவோராகவும் மறுதரப்பார் ஒடுக்கலுக்குள் மாள்வோராகவும் பிளவுபட்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்களின் மத்தியில் ஆண்டவரின் தூது வராக இயேசுபிரான் தோன்றினார். இரண்டாயிரமாண்டு பழைய சுமைகளுடன் மக்கள் படும் பாடுகளை இயேசு பிரானின் மானுடவாழ்வில் அடிகள் கண்டார். கலங்கினார். காட்டினார்.

"இன்னவைதான் ஏற்றபொருளென்று பிறர்
சொன்னவற்றை நீர் திருப்பிச் சொல்லாதீர்
மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள்
மீந்திருக்கும் இன்னல் உழைப்பு
இவைகளினைப் பாடுங்கள்"

என மஹாகவி உருத்திரமூர்த்தி எழுதிய கவிதை ஞாபகம் வருகிறது.

மக்களின் துன்பத்தையும் துயரத்தையும் அவர்களின் கடின உழைப்பையும் கவனித்தார்.

தனியே தான் படித்துப் பட்டம் பெற்றுத் தனியனாக வாழாது தன்னுடன் துன்பப்படும் மக்களையும் இணைத் துக் கொண்டார். பயங்கரவாதத்தடைச் சட்டம் 1978 முதல் திணிக்கப்பட்டும் *1956, 1971, 1981* நூலக எரிப்பு, *1983* இனப்படுகொலைகள் அடிகளாரின் மனதை வாட்டின.

இதற்கெதிராக வேறுபிற வடிவங்களாய் முன்னெடுத்த 'அரசியல்' போராட்டத்தில் அவர் தன்னை ஈடுபடுத்த வில்லை. மாறாக மக்களோடு மக்களாக மக்களின் ஒன்று பட்ட குரலாக- ஒடுக்கலுக்கெதிராக- அரச பயங்கரவாத யுத்தத்துக்கெதிராக மக்கள் மத்தியிலுள்ள வேறுபாடு களைப் புரிந்து கொண்டு அவற்றைக் கொண்டாடுமுகமாக யாழ்ப்பாணத்தில் தனது பணிகளைத் தொடங்கினாலும் குடாநாட்டினுள் மட்டும் குறுக்காமல் இலங்கை முழுவ தும் இருபது பிராந்திய மன்றங்களை நிறுவி அரங்காடு கலைகளை அகலப்படுத்தி அமைதி, சமாதானம் வேண்டியும் யுத்தத்தின் கொடுமையை அம்பலப்படுத்தி யும் சிங்கள- தமிழ்க் கலைஞர்களை இணைத்தும் கொழும் பிலும் மலையகத்திலும் சிங்களப் பிரதேசங்களிலும் அரங்காற்றுக் கலைகளினூடாக அரங்கப் பண்பாட்டில் புதுப்பாய்ச்சலை ஏற்படுத்தினார்.

மிகக் கொடூரமான யுத்த வெற்றிகளைக் கண்டு சலித்த இந்திய அசோகச் சக்கரவர்த்தியின் வாழ்வை 'அசோகா' என்ற மௌன மொழியில் ஊமத்தில் அரங்காற்றுகை செய்து இசைக் கோலம், காண்பியங்களினூடாக அரங்கில் புதியதோர் அனுபவத்தைப் பார்வையாளர் மத்தியில் பரவசமாக்கினார். இவ்வரங்க ஆற்றுகைகளின் பார்வையா ளர்களாகத் தமிழ் மக்கள் மட்டுமன்றிச் சிங்கள இராணுவச் சிப்பாய்களும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சிங்கள இராணு வத்தினரும் பார்வையாளர்களாகித் தங்கள் அனுபவங் களைப் பரந்தளவில் பகிர்ந்தமை பிற்காலச் சமாதான முன்முயற்சிகளுக்கு உந்துதலளித்தன.

*"அன்புதான் இன்ப ஊற்று*
*அன்புதான் உலக ஜோதி*
*அன்புதான் உலக மகாசக்தி"*

என்பது அசோகா என்ற அமைதிகாண் - யுத்த எதிர்ப்பு நாடகத்தின் உட்கருவாகும்.

சிங்கள இராணுவத்தின் அட்டூழியங்களால் பாதிக்கப் பட்ட தமிழ் ரசிகர்கள் மத்தியில் இராணுவத்தினரின் வரு கையும் பார்வையும் அந்நாட்களில் வெறுப்பை ஏற்படுத் தியமையையும் அவதானிக்க முடிந்தது.

யுத்தத்துக்கு இளைஞர்களை இணைத்துக் கொள்ளும் விருப்பில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்களும் இயக்கங்களும் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்ப் பற்றாளராகவிருந்த அடிகளார் சலனங்களுக்கு ஆட்பட்டு சகிப்புத் தன்மையை இழந்து எச்சந்தர்ப்பத் திலும் தன்னைத் தமிழ்வாதியாக்கித் தமிழ் வெறியுடைய வராக மாற்றாமல் சமநிலை காத்து 'பகுத்துண்டு பல்லுயி ரோம்பும்' மானிட நேயராக- கலைத்தூதுவராகத் துலங் கினார்.

இவர்களுக்கான பதிலை இயேசுபிரானின் பாடுகளை, மலைப்பிரசங்கத்தை, அவருடன் தியாக வேள்வியில் ஈடுபட்ட பன்னிரு சீடர்களின் ஒற்றுமையை, யூதாஸ் எனும் சீடனின் துரோகத்தை, ஆலயமே வியாபார நிலையமான போது சவுக்கால் அவர்களை ஆண்டவரே அடித்து விரட்டியதையும் இயேசு பிரான் பட்ட சவுக்கடிகளையும் அவர் சிலுவையில் அறையப்பட்ட போதும் அவரைத் தாக்கியவர்களைப் பற்றி "தந்தையே, இவர்களை மன்னி யும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர் களுக்குத் தெரியவில்லை" என்ற இயேசுபிரானின் போத னையையும் வருடந்தோறும் தவக்கால அரங்க நிகழ்த்து கையாக பல்லாயிரம் மக்கள் முன்னிலையில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற திறந்த வெளியில் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக மேடையேற்றியமையும் அதில் பல கிராமங்களிலிருந்தும் பார்வையாளர் பங்குபற்றியமையும் இளைஞர் இயக்கங்களின் சந்தேகத்தைப் போக்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

வரலாற்றுக் காலம் முதல் மக்கள் ஒடுக்குதலுக்குள்ளாவதும் அதை எதிர்த்துப் போராடுவதும் தோல்விகளைக் கண்டபோதும் துவளாமல் இறுதிவரை போராடுவதுமான வாழ்வனுபவத்தை இவ்வளிக்கைகள் மூலம் மக்கள் பெற்ற அரங்க அனுபவமாய் அமைந்தது.

ஆண்டவரே எத்தனை துன்பங்களைத் தனது 33 வயதிற்குள்ளேயே பட்டதையும் சிலுவையிலறைந்தமையும் அதன் பாடுகளையும், உரோமின் அடிமைக் கிளர்ச்சி வீரன் 'ஸ்பாட்டக்கஸ்', 'வாழ்வு தந்த வாஸ்' போன்ற நாடகங்களும் 'பொறுத்தது போதும்' போன்ற பிற உள்ளூர் பிரதிகளையும் இசை நாடகங்களையும் உள்ளடக்கி 300க்கு மேற்பட்ட அரங்க நிகழ்த்துகைகளைக் கண்டு ரசித்த மக்கள் இயேசுபிரானின் 'தாய் மரியன்னை பட்ட துக்கத்தை விடவா எமது பிள்ளைகள் படுந்துயர் பெரிது!' என யுத்தத்தின் அவலங்களுக்குள் ஆட்பட்ட மக்கள் தம்மைத் தாமே இவ் அரங்க ஆற்றுகைகளின் அனுபவத்தில் ஆற்றுப்படுத்தி உளவள வைத்தியச் சிகிச்சைக்குத் தம்மை உட்படுத்தி அமைதி கண்டனர் எனில் மிகையன்று. யுத்த மேகங்களினுள் வாழ்ந்த மக்களின் பங்குபற்றலுடன் மக்கள் அரங்காக பரிமாணம் பெற்றன இவ்வளிக்கைகளும் பிறவும்.

யோசப் வாஸ் அடிகளின் வாழ்வுபற்றி நூலாக்கம் செய்தும் அரங்க ஆற்றுகை நிகழ்த்தியும் பிரபலப்படுத்தினார். சில்லாலை, இளவாலை, அளவெட்டி மக்கள் ஒல்லாந்தரின் குதிரைப் படைகளாலும் படைவீரர்களாலும் ஒடுக்கலுக்காளானபோதும் 'நத்தார்' பண்டிகையை மிகவும் இரகசியமாகக் கொண்டாடியதுடன் எவ்வாறு விட்டுக் கொடுக்காமல் போராடினார்கள் என்ற வரலாறும் பல பாடங்களைப் போதித்தன.

இவ்வரங்க ஆற்றுகைகள் நூற்றுக்கணக்கான நடிகர்கள், வயோதிபர், இளைஞர், பிள்ளைகள் என சகல வயதினரினதும் பங்குபற்றும் மக்கள் அரங்காகப் பரிமாணம் கொண்டன.

இவ்வாறாகத்தான் மரிய சேவியர் அடிகள் இன, மத, சாதி, பால், வயது வேறுபாடுகளுக்கப்பால் தோப்பாக மிளிர்ந்தார்.

மக்கள் செயற்பாட்டாளர் ஒருவர் ஒரு நிறுவனத்தினுள் இயங்கத் தொடங்கினால் அந்நிறுவனம் அல்லது சபை, சங்கம், கட்சி, குடும்பம், உறவு, சுற்றம், கிராமம், அயலவர் என்பவற்றின் ஆளுகைக்குள்ளும் அபிப்பிராயத்தினுள்ளும் அமுங்கிவிடாமல் அவர்களின் அபிப்பிராயங்களுக்குப் பின்னால் அள்ளுண்டு போய் அலையாமல் தனது இலட்சியம் என்பதில் தன்னிகரற்ற தலைமை கொடுத்து வழித்தடம் பதித்தவர் அடிகள்.

*'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'.*


கத்தோலிக்கத் திருச்சபையின் அருட்தந்தையாகப் பணியாற்றும் ஒருவர் மாற்றுச் சமயத்தைச் சார்ந்த - 'மறு சமயங்கள் மாள்க' எனத் தேவாரம் அருளிய - அனல்வாதம் புனல்வாதம் நிகழ்த்திய - மதம் மாறிய நாவுக்கரசரைக் கருங்கல்லோடு கடலில் விட்ட - கழுமரமேற்றுமொரு சமயஞ்சார்ந்த சைவசித்தாந்தத்தை மனக்கிலேசமின்றி - அன்பு, அறிவு, ஆய்வுத்திறன் பாராட்டி 'மெய்ப்பொருள்' தேடும் ஆர்வத்தில் தனது கலாநிதிப் பட்ட ஆய்வினை மேற்கொண்டு அந்நூலையும் வெளியிட்டு 'வேறுபாடுகளைக் கொண்டாடிய' உத்தமரானார் அடிகள்.

'நூறு மலர்கள் மலரவும் நூறு கருத்துக்கள் முட்டி மோதவும்' அரங்குகள் அமைத்து பல்வேறு கருத்தரங்குகள் அமைத்து பல்துறை விற்பன்னர்களையும் ஒன்று சேர்த்து அரங்காடி அரவணைத்து மகிழ்ந்தார் அடிகள்.

இலங்கைத் தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டுப் பல இலட்சங்களைச் செலவளித்துப் புலம்பெயர்ந்து வெளியேறிய வேளைகளில் அடிகளார் 19 கலைப்பயணங்களை மேற்கொண்டு திருமறைக் கலாமன்றக் கலைஞர்களை மேற்கு நாடுகளெங்கும் கலைத்தூதுக்காக அழைத்துச் சென்று ஆற்றுகைகள் பல நிகழ்த்திய பின்னர் அவர்களை மீளவும் நாட்டுக்கு அழைத்து வருவது மட்டுமன்றி அவர்கள் திரும்பி வந்து விட்டார்களென்ற ஆதாரத்தை அவர்களின் கடவுச் சீட்டுகளை அவ்வத் தூதுவராலயத்துக்குக் காட்டித் தனது கலைப் பயணத்தைத் தூய்மையாக்கினார்.

புலம்பெயர் நாடுகளில் எம்மக்கள் எவ்வளவு கடுமையாக உழைத்து வாழ்கின்றனர் என்பதை இளம் கலைஞர்கள் கண்டறியவும் அங்கிருப்போரின் தாய் நாட்டுத் தாகத்துக்குத் தமது பயணங்களினூடாகத் தண்ணீர் வார்க்கவும் அவர்களிடமிருந்து அனுபவங்களைப் பெறவும் மெத்த வளரும் மேற்குக் கலைகளைக் காணவும் கற்கவும் வழிசமைத்தார் அடிகள்.

வானத்தில்வட்டமிட்டுப்பறந்து நிலத்தில் உலவும் கோழிக் குஞ்சுகளைக் கவ்வும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கில் கழுகுப் பார்வையில் நோட்டமிடும் சாத்தான் களிடமிருந்து தாய்க்கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாப்பது போல் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களைத் தன் சிறகால் மூடி உயிர் காத்தார். அவர்களின் ஆளுமை விருத்திக்கு வழி சமைத்தார்.

அடிகளாரைச் சூழ்ந்து குழந்தைகள், சிறுவர்கள், இளைஞர்கள், பெரியோர்கள் என ஆயிரக்கணக்கில் அலை மோதி தங்கள் நெஞ்சங்களில் தமது பிதாவாக ஏற்று மகிழ்ந் தனர்,

ஆம், மக்கள் சூழத் தனிமரம் தோப்பான அதிசயம் நிகழ்ந்தது.

*3*

பன்மொழித்திறன்- பல்கலை ஆற்றல் அறிவு- ஆக்கம் பெற்ற அடிகளார் தனது ஆற்றலைத் தன்னைச் சூழ்ந்தவர் களின் ஆளுமை விருத்திக்குப் பயன்படுத்தினார்.

*'கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக'*

என்ற வள்ளுவர் வாக்குடன் இயைந்து நடைமுறையில் சாதனை புரிந்தார் அடிகள்.

சிற்பக்கலை, ஓவியக்கலை, அரங்க ஆற்றுகைக் கலை களின் சங்கமத்தை விரும்பிச் செயற்பட்டார். ஏ.வி. ஆனந் தன், ஆசை இராசையா போன்ற பல விற்பன்னர்களின் ஆதரவு பெற்றார்.

அருள்திரு நீ. மரிய சேவியர் அடிகளாரின் பணிக்குச் சாட்சியமாக ஓவியர் ஆசை இராசையாவின் 'விம்பம்' நூலிலிருந்து அவரின் ஆத்மார்த்த பதிவை இங்கு நான் மீள நினைவூட்டுதல் தகும்.

"கலைஞர்களைக் கிள்ளுக்கீரையாக மதிக்கும் நிலை காலங்காலமாக இருந்துவரும் பழக்கம் தொடர்வது நிறுத் தப்படவேண்டும்" என்ற ஆசை இராசையாவின் அடிகள் பற்றிய பதிவின் முக்கியத்துவம் இதனால் உணரப்படும்!

"நீ மரிய சேவியர் அடிகளார் றக்கா வீதியிலிருந்த எனது வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுது அடிகளாருடன் நெருங்கிய பழக்கம் இருக்கவில்லை. ஆயினும் எனக்கு ஏற்பட்டிருந்த இழப்புகளை அறிந்து எனக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் வந்திருந் தார். என்னுடைய மனதுக்கு ஆறுதலாக என்னுடன் உரை யாடிவிட்டு என்னிடம் எனக்குத் தேவையான உபகரணங் களின் விபரப்பட்டியல் ஒன்றைத் தரும்படி கேட்டிருந்தார். என்னுடைய உறவினர்களில் சிலர் பணவசதி படைத்தவர் கள். ஆயினும் அவர்கள் பணப் பெறுமதியை உணர்ந் திருக்கிறார்களே தவிர ஒரு மனிதப் பெறுமதியை உணர்ந் தவர்களல்ல. வீழ்ந்தவனைக் கைதூக்கி விடவேண்டு மென்ற எண்ணமற்ற இவர்களுடன் அடிகளாரை எண் ணிப் பார்த்து வியந்துள்ளேன். இன்றும் அவர் வாங்கித் தந்த உபகரணங்கள் என் பாவனையிலுள்ளன. இன்று கலைத்துறையில் நானடைந்துள்ள வளர்ச்சிக்கு அன்று அடிகளாரின் உதவிதான் காரணமென்று கூறினும் மிகை யல்ல. திருமறைக் கலாமன்ற வெளியீடாகக் 'கலைமுகம்' என்ற சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கிறது.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் நண்பர் பி.எஸ். அல்பிரட் சஞ்சிகைக்குரிய ஆசிரியராக இருந்துள்ளார். அவருடைய காலத்திலேயே என்னுடைய பலதரமான ஓவியங்கள் 'கலைமுகம்' முகப்பை அலங்கரித்திருந்தன.

தன்னை ஆகுதியாக்கி உலகுக்கே ஒளி கொடுத்த இயேசு வின் ஓவியம், பாலன் பிறப்பு போன்ற தரமான படைப் புகள் முக்கியமாகக் குறிப்பிடக் கூடியவை. அல்பிரட்டின் எண்ணங்களும் ஒத்துழைப்பும் என்னை ஊக்குவித்த கார ணிகளாயின. அது ஒரு பொற்காலம். எங்களுடைய பிரச் சினையை மையமாக வைத்து பாலன் பிறப்பை வரைந்தால் என்ன? என்ற அல்பிரட்டின் எண்ணமே 'பாலன் பிறப்பு' ஓவியமாகப் பரிணமித்தது. இடம் பெயர்ந்திருந்த போது வானில் வால்வெள்ளி தோன்றியிருந்தது. அதைப்பார்த்த அனுபவமும் இடப்பெயர்ச்சி அனுபவமும் இப்படைப் புக்கு உதவிநின்றன. வராத்துப்பளையில் நாம் தங்கியிருந்த வீட்டின் முன்னால் உள்ள ஒழுங்கையால் மீன் வியாபாரம் செய்யும் பெண்கள், அருகிலே உள்ள கற்கோவளம் கடற் கரைக்கு மீன் கொள்முதல் செய்வதற்குப் போவதும் திரும்ப வும் மீன் சுமையுடன் வருவதும் அடிக்கடி காணும் காட்சி கள். பின்னர் அக்காட்சி ஒரு நீர்வர்ண ஓவியமாகக் கலைமு கத்தில் பிரசுரமாகியது. இடம்பெயர்ச்சிக்குப் பின்னர் சொந்த இருப்பிடத்துக்குத் திரும்பிய பின்னர் பலருடைய வீடுகள் தரைமட்டமாய் இருப்பதைப் பார்த்த வேதனை கலைமுகத்தில் வந்த ஓவியங்களிலொன்று. நாலுபக்கமும் போர்மேகம் கவிந்து இராணுவத்தால் சூழப்பட்ட நிலை யில் ஏதாவதொரு அற்புதம் நிகழ்ந்தாலொழிய நாம் உயிர் தப்ப வாய்ப்பில்லை என்ற நிலை : 83ஆம் ஆண்டு ஆடிக் கலவரத்தால் வேலையை இழந்து வருமானமின்றி என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு வழி தெரியாது ஏதாவ தொரு அற்புதம் நிகழ்ந்தாலொழிய அதிலிருந்து மீள்வது சாத்தியமில்லை என்ற கையறுநிலை - இவற்றைச் சித்திரிக்கும் 'ஊழிக்காலம்' என்ற ஓவியம் கலைமுகத்தில் பிரசுரமான முக்கியமான ஓவியங்களிலொன்று. அல்பி ரட்டின் காலத்தில் பிரசுரமான பல படைப்புகள் எனக்குப் பேரைச் சம்பாதித்துத் தந்தவை. அதன் மூலம் என்னு டைய இருப்பு உறுதிப்படுத்தப்பட்டு என்னையும் ஒரு தரமான ஓவியனாகக் கணிப்பதற்கு உதவி நின்றதென்றால் அது மிகையல்ல. இப்படியான எனது பங்களிப்புகளும் மன்றத்துடனான எனது உறவு பலப்படுவதற்கு உதவி நின்றன எனலாம்.

கலைப்பணியூடாக இறைபணி செய்வதைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டுக்கொண்டிருக் கும் அடிகளாரில் அதி உச்ச சாதனை இந்த மண்ணில் எமக் கென்றொரு கலைக் கூடத்தை உருவாக்கியதே எனலாம். காலங்காலமாக எமக்கென்றொரு கலைக்கூடத்தை உரு வாக்குவதற்குப் பலவாறும் நின்று இதைச் சாதித்துக் காட்டியுள்ளமை, அவருடைய ஆற்றலுக்கும் ஆளுமைக் கும் எடுத்துக்காட்டாக உள்ளது. ஜேர்மன் நாட்டின் நிதியு தவியைக் கொண்டு அமைக்கப்பட்ட இப்பிரமாண்ட மண்டபம் இல. 15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் மிடுக் கோடு நிற்கிறது. யாமிருக்கப் பயமேன்? என்று கலைஞர் களைக் கேட்டுக் கொண்டிருக்கும் இக் கலைக்கூடம் என்றும் அடிகளாரின் புகழ் பாடி நிற்கும் என்பதில் சந்தேக மில்லை. கலைஞர்கள், கலைபயிலும் மாணவர்கள், கலை ஆர்வலர்கள் இதைப் பயன்படுத்திப் பயன்பெறுவார் களாகுக."

கலைஞர் ஒருவர் தன் மனதார இன்னொரு கலைஞரை- இன்னொரு பெருவிருட்சத்தை அதிசயித்துப் பாராட்டுவ தும் அதிசயமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு*
*காமுறுவர் கற்றறிந்தார்'*

தான் வாழும் சமகாலத்தில் வாழும் மக்கள், சமகால உலகம் உவப்ப, அம்மகிழ்ச்சியின் நீட்சியையும் நிலை பேறான இன்பத்தையும் கண்டு களிப்படையும் பண்பைப் பெற்றிருந்தார் கற்றறிந்த அடிகளார். எனவேதான் உலகு தழுவிய தோப்பாகத் திகழ்ந்தார்.

கலைத்தூது அடிகள் அன்பையே தன் ஆயுதமாகப் பாவித்தார். அன்பால் உலகை ஆளவிழைந்து கலையைத் தன் கருவியாக்கினார். தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார் என்பது அடியாருக்கு அடியராகத் துணைகொண்டு தொண்டாற்றிய பிற கலைஞர்கள் சொல்லக் கேள்விப்பட்டேன். இதனையே வள்ளுவர் இக்குறளினால் விபரித்தார் போலும்.

*அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்*
*என்பும் உரியார் பிறர்க்கு*

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநர் தந்தையின் இறுதி நல்லடக்கத் திருப்பலி யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயத்தில் ஏப்பிரல் மாதம் ஆறாம் திகதி காலை நடைபெற்றவேளை பல்லறிஞர் பெருமக்களும் பொது மக்களும் கொரோனா கட்டுப்பாட்டு விதிகளுக்கமைய தமது இறுதி அஞ்சலியை செலுத்தி தம்மை ஆறுதல் படுத்தினர்.

சுவாமி ஞானப்பிரகாசர், தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் வரிசையில் கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளை வாழ்த்தி வணங்கி வழியனுப்பினர்.

நிறைவாக வண. பிதா. மைக்கல் சௌந்தரநாயகம் அடிகளின் இலத்தீன் மொழியிலமைந்த பாடல்களின் ஒலிப்பேரிகையின் அதிர்வுகள் பெரிய கோயில் எனும் மரியன்னை பேராலயத்தில் வானைப் பிளக்கும் வண்ண மாய் அமைந்தன. உணர்வுகளையும் வணக்கத்தையும் வாழ்த்தையும் இறுதி மரியாதையையும் அன்பையும் பரிமாறுவதற்கு மொழிகள் கடந்த உணர்வு- மனித நேயம் எத்துணை உயர்வானது- இனிமையானது. எல்லோர் மனங்களையும் புனிதப்படுத்தி அமைதிப்படுத்தி ஆறுதலளிக்க வல்லது இசை என்பதையும் சகலரும் உணர்ந்தனர் எனில் மிகையன்று.

*'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்*
*பெருமை உடைத்து இவ் வுலகு.'*

---


## நீ. மரிய சேவியர் அடிகளாரின் மறைவுக்குப் பின்னர் அவரது உருவப்படத்தை முகப்பில் தாங்கி வெளிவந்த இதழ்கள்




**எங்கள் முற்றம்**
கலை இலக்கிய சமூக இதழ்
மார்ச் - ஏப்பிரல் 2021
இதழ் 03




**ஆயகலை**
அருந்தமிழ்க் கலை வளர்க்கும்
இரு திங்கள் ஏடு
வைகாசி - ஆனி 2021
இதழ் 03




**வேடதாரி**
அரங்கிற்கான இதழ்,
சித்திரை - ஆனி 2021
வேடம் 02

இவை தவிர ஈழத்து இதழ்களான ஜீவநதி, எங்கட புத்தகங்கள், அறிந்திரன், நீங்களும் எழுதலாம் போன்ற இதழ்கள் உட்பக்கங்களில் அஞ்சலிகளைத் தெரிவித்திருந்தன. 'ஆயகலை' சஞ்சிகை தனது இரண்டாவது இதழிலும் முன்பக்க உள் அட்டையில் அடிகளாரின் படத்துடன் செய்தி வெளியிட்டிருந்தது.
குறித்த இதழ்கள் அனைத்திற்கும் 'கலைமுகம்' தனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# நினைவில் வாழும் மரிய சேவியர் அடிகளார்

**லெ. முருகபூபதி**

**அ**ன்பால் அனைவரையும் அரவணைத்த பண்பாளர் கலைத்தூது அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார், இப் பூவுலகைவிட்டு மறைந்தாலும் அவரால் நேசிக்கப்பட்ட மக்களாலும் நண்பர்கள் மற்றும் கலை, இலக்கியவாதிகளினாலும் மறக்கப்பட முடியாத அற்புதமான பிறவி.

தனது சமயப்பணிகளுக்கும் அப்பால், தமிழ்க்கலை வளர்த்த கர்மயோகி. தேடல் மனப்பான்மையுடன் அவர் தேடியது பணம், பொருள் அல்ல.

எங்கள் தமிழின் தொன்மையைத் தேடியவர். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றுக்கு அமைய, தான் தேடிப்பெற்றதையும் கற்றுக்கொண்டதையும் தமிழ்மக்களுக்கு நினைவூட்டிச்சொல்லிவந்த பெருந்தகை.

"கன்னித் தமிழ் வேர்களுக்குள் முத்தெடுப்போம், காலமெல்லாம் முத்தம் பதிப்போம்." என்ற தாரக மந்திரத்துடன், இலங்கையில் திருமறைக் கலாமன்றத்தை தங்கு தடையின்றி இயக்கிவந்தவர்.

"மனிதநேயமொன்றையே இவரிடம் காணமுடிகிறது. கலை என்ற புனிதமான பாதையில் மனிதநேயம் என்ற ஒளியைத்தேடி, பூரணத்துவமான பாதையில் சலசலப்பின்றி தெளிந்த நீரோடைபோல் தனது பயணத்தை தொடர்பவர்" என்று *1998* ஆம் ஆண்டு ஜூன் மாதம் 'மல்லிகை' கலை, இலக்கிய மாத இதழில் இவர் பற்றி பதிவாகியிருந்தது. அந்த இதழின் முகப்பை அலங்கரித்தவர் மரிய சேவியர் அடிகளார்தான். அட்டைப்பட அதிதியாக இவர் பற்றிய பதிவை பேராதனை ஏ. ஏ. ஜுனைதீன் எழுதியிருந்தார்.

அதனைப்படித்தது முதல், அடிகளாரை சந்திக்கவேண்டும் என விரும்பியிருந்தேன். நான் 1987 ஆம் ஆண்டே அவுஸ்திரேலியாவுக்கு வந்துவிட்ட பரதேசி. அதனால், அடிகளாரின் அருமை பெருமைகளை மல்லிகையின் குறிப்பிட்ட இதழிலிலேயே தெரிந்துகொண்டேன்.

எனது ஆவல் காலம் கடந்து அவுஸ்திரேலியாவில் நிறைவேறியது. 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியென நினைக்கிறேன்.

அவர் அவுஸ்திரேலியாவில் நான் வதியும் விக்ரோரியா மாநிலத்தில் மெல்பன் மாநகருக்கு வந்திருந்தார். அச்சமயம் எனது நண்பர் கொர்னேலியஸ் செபஸ்தியான் அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்திருந்த அடிகளாரை சந்தித்தேன். அச்சமயம் மெல்பனில் திருமறைக் கலாமன்றத்தின் கிளை அமைக்கப்பட்டது.

நண்பர் அன்டனி கிறேஷியன் உட்பட வேறும் சிலர் இச்சந்திப்பில் பங்கேற்றனர்.

அடிகளார் மறைந்த பின்னர் மெல்பன் 'வானமுதம்' வானொலியில் அதன் நிகழ்ச்சித் தயாரிப்பாளர், திரு. வில்லியம் ராஜேந்திரன் ஒருங்கிணைத்த நினைவேந்தல் நிகழ்விலும் இந்த நண்பர்கள் அடிகளார் பற்றி நினைவுரையாற்றினார்கள்.

முதல் சந்திப்பிலேயே அடிகளார் எனதும் நண்பரானார். அவரை அட்டைப்பட அதிதியாக மல்லிகையில் பாராட்டி கௌரவித்த 'மல்லிகை' ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு 2002 ஆம் ஆண்டு பவளவிழா வந்தது. அந்த விழா 2003 ஆம் ஆண்டுவரை நீடித்தது.

குறிப்பிட்ட 2003 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த தேசிய சாகித்

"
அன்பால் அனைவரையும் அரவணைத்த பண்பாளர் கலைத்தூது அருட்தந்தை மரிய சேவியர் அடிகளார், இப்பூவுலகைவிட்டு மறைந்தாலும் அவரால் நேசிக்கப்பட்ட மக்களாலும் நண்பர்கள் மற்றும் கலை, இலக்கியவாதிகளினாலும் மறக்கப்பட முடியாத அற்புதமான பிறவி.

○

எங்கள் தமிழின் தொன்மையைத் தேடியவர். "தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கூற்றுக்கு அமைய, தான் தேடிப்பெற்றதையும் கற்றுக்கொண்டதையும் தமிழ்மக்களுக்கு நினைவூட்டிச் சொல்லிவந்த பெருந்தகை.
"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திய விழாவுக்காக நான் வந்திருந்தபோது, அடிகளார் என்னைத் தொடர்புகொண்டு, அந்த விழாவுக்கு முதல்நாள் பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடந்த திருமறைக் கலாமன்றத்தின் காப்பிய விழாவுக்கு அழைத்தார். அத்துடன் ஒரு வேண்டுகோளையும் என்னிடம் விடுத்தார்.

இந்த காப்பிய விழாவில் மல்லிகை ஆசிரியரை பாராட்டி கௌரவிக்கவிருக்கிறோம். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் நீங்கள், மல்லிகையால் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர் என்பதை அறிவேன். நீங்களே வந்து ஜீவா பற்றி உரையாற்றவேண்டும் என்றார்.

இந்த எதிர்பாராத அழைப்பு எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தந்தது. அடிகளாரின் வேண்டுகோளை அன்றைய தினம் அங்கே சென்று பூர்த்திசெய்தேன்.

அன்று நடந்த முழுநாள் விழாவில் ஐம்பெரும் காப்பியங்களே அரங்கேறின. குண்டலகேசி, வளையாபதி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி முதலானவற்றை கூத்துப்பாணியில் திருமறைக் கலாமன்ற கலைஞர்கள் நிகழ்த்தினர்.

என்றைக்குமே நான் பார்த்து ரசித்திராத ஐம்பெரும் காப்பியங்களின் கூத்து வடிவத்தை அன்றைய தினம் பார்த்து வியந்தேன். அந்த காப்பிய விழாவில் மூவினக் கலைஞர்களும் மூவின மக்களும் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து கலந்துகொண்டிருந்தனர்.

திருமறைக் கலாமன்றம் இன, மத, மொழி நல்லிணக்கத்திற்காக எவ்வாறு அடிகளாரினதும் அவரோடு இணைந்த கலைஞர்களினதும் அர்ப்பணிப்போடு இயங்குகிறது என்பதை அன்று நேரில் கண்டு சிலிர்த்துப்போனேன்.

சிங்கள பாரம்பரிய நடனக்கலையான கண்டிய நடனங்களும் அன்றைய தினம் மேடையேறின.

மல்லிகை ஜீவாவைப்பற்றி நான் தமிழிலும் சிங்களத்திலும் பேசினேன். அதில் அடிகளார் பற்றியும் அவரது அயராத சேவைகள் பற்றியும் விதந்து குறிப்பிட்டேன்.

இந்த நிகழ்வுக்கு முன்னர் அடிகளாரை எமது மெல்பனில் வேறு நிகழ்ச்சிகளிலும் கண்டு உரையாடி மகிழ்ந்திருக்கின்றேன். ஒரு சமயம் அவர் திருமறைக் கலாமன்ற கலைஞர் சாம் பிரதீபனுடன் வருகை தந்திருந்தார்.

சாம் பிரதீபனின் தனி நபர் அரங்காற்றுகையாக இரண்டு நாடகங்கள் மெல்பனில் ஒக்லி மண்டபத்தில் நடந்தது. அடிகளாரே பின்னணியிலிருந்து இறுவட்டு மூலம் ஒலிச் சேர்க்கைகளை பரவச்செய்தார்.

நெறியாளராக, அரங்க நிர்மாணச் செயற்பாட்டாளராக அவர் இயங்கியதை நேரில் பார்த்து வியந்தேன்.

தமிழர் புலம்பெயர்ந்து வாழும் தேசங்களில் பரதக் கலையும் வளர்ந்துள்ளது. தமிழ்பேசும் மக்கள் மத்தியில், அவர்கள் சைவர்களாயினும் வைணவர்களாயினும் கிறிஸ்தவர்களாயினும் பரத நாட்டியக்கலையிலும் ஈடுபாடு காண்பித்து வருகின்றனர். அத்துடன் பிறமொழிபேசும் பிற இனத்தவர்களின் பிள்ளைகளும் பரதம் பயின்று வருகின்றனர்.

இவர்களின் அரங்கேற்றத்தின்போது, அரங்கமேடையின் வலது புறத்தில் நடராஜர் சிலை வைக்கப்பட்டு, பிரார்த்தனையின் பின்பே நடனம் தொடங்கும்.

பரதக்கலையின் நாயகரின் அந்த நடராஜ தத்துவம் நடன ஆசிரியர்களுக்கு தெரிந்திருக்கும். ஆனால், நடனம் பயிலும் எத்தனை மாணாக்கருக்கு தெரியும் என்பது எமக்குத் தெரியாது.

சில வருடங்களுக்கு முன்னர் நான் மலேசிய சென்றிருந்தபோது, அங்கு வதியும் எழுத்தாளர் பீர்முகம்மது தான் எழுதிய 'மண்ணும் மனிதர்களும்' என்ற பயண இலக்கிய நூலை எனக்குத்தந்தார். அது சுமார் 400 பக்கங்களைக் கொண்டது.

அது இந்திய பயண இலக்கிய நூல். அதில் நடராஜ தத்துவம் பற்றியும் அவர் விரிவாக எழுதியிருக்கிறார்.

தோற்றம் - நிலைத்தல் - மறைத்தல் - அருளல் - அழித்தல் இவையே அந்த ஐவகைத் தத்துவங்கள்.

சற்று யோசித்துப்பாருங்கள். ஒரு இஸ்லாமியரான பீர்முகம்மது, நடராஜ தத்துவம் பற்றி ஆய்வுசெய்து எழுதியவாறு, எங்கள் அடிகளார் மரிய சேவியர் சில வருடங்களுக்கு முன்னர் தனது மதுரமான கம்பீரக்குரலுடன் பதிவுசெய்து வெளியிட்ட இறுவட்டில் இறைவனின் திருக்கூத்தையும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு, மனவாசகங் கடந்தாரிடமிருந்து தான் காணும் உண்மை விளக்கத்தை கூறியிருந்தார்.

அந்த இறுவட்டு மெல்பனில் வெளியிடப்பட்டபோது நண்பர்கள் அன்டனி கிறேஷியனும் கொர்னேலியஸும் என்னையும் வந்து உரையாற்றுமாறு அழைத்தார்கள்.

தவிர்க்கமுடியாத காரணங்களினால், அடிகளாரால் அந்த நிகழ்வுக்கு வரமுடியாதுபோய்விட்டது.

எமது இலக்கிய நண்பர் மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா அவர்கள் மாவிலைகளுடன் வந்து கலந்துகொண்டு உரையாற்றி சிறப்பித்தார்.

எனக்கு அந்த நிகழ்ச்சி ஓர் அதிசயமாக இன்றும் மனதில் நிழலாடுகிறது. அருட் தந்தை மரிய சேவியர் அடிகளாரின் சிந்தனைகள் எவ்வாறு இன, மத நல்லிணக்கத்திற்கு வழி சமைக்கிறது பாருங்கள்.

தமிழ் ஒப்பிலக்கிய - இலக்கண ஆய்வு முன்னோடி அயர்லாந்தைச் சேர்ந்த கால்டுவேல் பாதிரியார், பிரிட்டனைச் சேர்ந்த எல்லீஸ் டாக்டர் ஜீ. யூ. போப், இத்தாலியரான கொன்ஸ்ரன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற வீரமா முனிவர், அமெரிக்கரான தமிழ் மருத்துவ முன்னோடி டாக்டர் கிறீன், தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு வித்திட்ட அருட் தந்தை தனிநாயகம் அடிகளார், அயர்லாந்தின் யாழ்ப்பாணத்தான் என வர்ணிக்கப்பட்ட அதி. வண. லோங் அடிகளார், 'தன்னிலே தானே பெறுமதியுடைய ஆய்வாளன்' என்று தனிநாயகம் அடிகளாரால் விதந்துரைக்கப்பட்ட தாவீது அடிகள், தமிழ் மக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து அதற்காகவே கொடிய சிறைவாசம் அனுபவித்து சித்திரவதைகளுக்குள்ளான வண. பிதா ஆபரணம் சிங்கராயர், மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து அடக்குமுறைக்குப் பலியாகி காணாமல்போன வண. பிதா மேரி பஸ்ரியன் அடிகளார், சமூக சேவைக்கே தன்னை அர்ப்பணித்து இறுதியில் துப்பாக்கிக் குண்டுகளை பரிசாக ஏற்று மடிந்துவிட்ட வண. பிதா சந்திரா பெர்னாண்டோ அடிகள், வெளிநாட்டில் சென்று நிம்மதியாக வாழ்வதற்கான வசதி வாய்ப்புகள் இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதிலும் வன்னி பெரு நிலப் பரப்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவே இறுதிவரையில் வாழ்ந்து மறைந்து விட்ட வண. பிதா ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் , வடபுலத்தில் தாழ்த்தப்பட்ட அடிநிலை மக்களுக்கெல்லாம் ஆதர்ச புருஷராக விளங்கிய சுவாமி ஞானப் பிரகாசர்... இவர்களைப்பற்றியெல்லாம் அறிந்திருப்பீர்கள்.

இவர்கள் அனைவருமே தாம் சார்ந்த சமயப் பணிகளுக்கு அப்பால், சதா காலமும் மக்களைப்பற்றியே சிந்தித்து வாழ்ந்தவர்கள். அவர்களின் வரிசையில் மரிய சேவியர் அடிகளாரும் தமிழ் மக்களையும் தமிழர்களின் தொன்மைக் கலைகளையும் நேசித்து தனது வாழ்வை அதற்காகவே அர்ப்பணித்தவர்.

புலம்பெயர்ந்து வாழும் நாம் எமது இன அடையாளம் குறித்து பேசியும் எழுதியும் சிந்தித்தும் வருகின்றோம். அதற்கு அடிப்படைக் காரணம், எமக்கு முன்பே தென்னாபிரிக்காவுக்கும் பிஜித்தீவுக்கும் மொரிஸியஸுக்கும் சென்ற தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதிதான் !

அப்படியிருக்கும்போது, நூற்றாண்டு காலங்களுக்கு முன்னர் அதாவது 13 ஆம் நூற்றாண்டு காலத்து தமிழ்ச்சொத்தை - தமிழின் மூலதனத்தை 21 ஆம் நூற்றாண்டு மக்களுக்கு அறிமுகப்படுத்த முன்வந்தவர் மரிய சேவியர் அடிகளார் என்று அன்று அவரது இறுவட்டு வெளியீட்டு நிகழ்வில் பேசினேன்.

மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதத்தை கேட்டுத் தெளிந்த நாற்பத்தொன்பது மாணாக்கரில் ஒருவரான தமிழ்நாட்டில் திருவதிகை என்ற ஊரைச்சேர்ந்த "மனவாசகங் கடந்தார்" என்பவர் எழுதிய உண்மை விளக்கம் குறித்து அடிகளார் ஆய்வுசெய்திருந்தார்.

குறிப்பிட்ட இறுவட்டு வெளியிடப்பட்ட மெல்பன் பொக்ஸிலில் புனித பஸ்கஸ் தேவாலய மண்டபத்தில் அதற்குச் சிலவருடங்களுக்கு முன்னர் அடிகளார் ஒரு சந்திப்புக்கு வந்திருந்தார். அவ்வேளையில் விக்ரோரியா தமிழ்ச்சங்கத்தின் முன்னாள் தலைவர் "சோமா" சோமசுந்தரம் அவர்கள், "ஒரு கிறிஸ்தவ பாதிரியார் சைவசித்தாந்தம் குறித்து தெளிந்த ஞானம் பெற்று விளங்குகிறாரே ...! ? - இது எப்படி சாத்தியமானது..?" என்று கேட்டிருந்தார்.

பின்னர் மெல்பன் 3 CR தமிழ்க்குரல் வானொலி ஊடகவியலாளர் சண்முகம் சபேசனும் அவரை நேர்கண்டு ஒலிபரப்பியபோது அதே கேள்வியை எழுப்பியிருந்தார்.

அதற்கு அடிகளார், சிறந்த விளக்கமளித்தார்.

"சைவ சித்தாந்தத்தை மூன்று தளங்களாகப் பிரிக்கலாம். ஒன்று இறையியல், இரண்டாவது மறையியல், மூன்றாவது மெய்யியல். இம்மூன்றுமே சைவ சித்தாந்தத்தில் பின்னிப்பிணைந்துள்ளது. இந்த மெய்யியல்தான் தமிழ் மக்களின் பாரம்பரிய மெய்யியல்.


சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் முதல் தமிழ்மக்களின் வாழ்வியலை, இறையியலை, மறையியலை, மெய்யியலாக்கியவர்கள் சைவசித்தாந்த ஆசாரியார்கள். இந்த ஆசாரியார்கள் ஏனைய சமயங்களிலிருந்தும் பெற்றுக்கொண்ட அறிவையும் பிரயோகித்து தமிழ் மக்களின் மெய்யியலாக்கியிருக்கிறார்கள்.

இது தமிழர்களின் மெய்யியல். நானும் ஒரு தமிழன் என்பதனால், தமிழர்களின் இந்த தொன்மையான சொத்தை தமிழர்களுக்கு அறிமுகப்படுத்த விரும்பினேன்." என்றார்.

நாம் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கத்தில் நடத்திய நான்குநாள் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் இறுதி நிகழ்வு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடந்தபோதும் பிரதம விருந்தினராக வருகை தந்த அடிகளார், உரையாற்றுகையில் மாநாட்டிற்கு வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் கலந்துகொண்ட பேராளர்கள், பார்வையாளர்களை வாழ்த்தினார்.

அதன் பின்னர் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை.

அவரைப்பற்றிய நினைவுகள் சாசுவதமானவை. •




சமாதானத்துக்காக வேலை செய்வது எனது கடமை என்ற உணர்வு எனக்கு எப்போதும் இருந்தது. கலை என்ற தளத்தில் எல்லா மனிதர்களையும் சந்திக்கச் செய்ய முடியும் என்று நம்பினேன். ஏனென்றால் அரசியல், சமயம் இவையெல்லாம் எல்லா மனிதர்களையும் ஒன்றிணைக்காது. அதனால்தான் கலை என்ற தளத்தினை நான் தெரிந்தெடுத்தேன்.

– நீ. மரிய சேவியர் அடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# அன்பறிவு, ஆராய்ந்த சொல்வன்மை

**செல்வம் அருளானந்தம்**

மரிய சேவியர் அடிகளார் இந்த உலகை விட்டுப் பிரிந் தார் என்ற தகவலை முகநூலில், 'கலைமுகம்' சஞ்சிகையின் ஆசிரியர் எமில் அவர்கள் பெரும் துயருடன் அறிவித்த போது என் கணினியை மூடி, கண்ணீரைத் துடைத்தபடி முன்னால் இருந்த திருவாசகப் புத்தகத்தைப் புரட்டினேன்.

'நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்எம் உடையானே'

என மணிவாசகர் உருகும் பாடலிலே கலங்கிய கண் தரித்து நின்றது.

இப்பாடலின் பொருள் எல்லாம் புரிந்ததென்று இல்லா விட்டாலும், திருமறைக் கலாமன் றத்தின் கொள்கையான 'கலை வழி இறை பணி' என்ற, 'சவிரிமுத்து சுவாமி' எனும் மரிய சேவியர் அடிக ளாரின் சொல்லாடல் ஞாபகத் திற்கு வந்தது.

தன்நாட்டையும் இனத்தையும் நேசித்தவர். தான் நம்பிய கடவுளை, உயிருள்ள தேவன் என்று விசுவ சித்து, மற்ற மதங்களை மதித்து, இணைத்து, அணைத்து வாழ்ந்த வர். சடங்குகளினாலும் வழிபாட் டாலும் கோவில்களாலும் மாத்திர மல்லாது, கலைகள் மூலமும் இறை வனை அறியலாம் என எங்களுக்குக் கற்றுத்தந்தவர்.

பேராசிரியர்சிவத்தம்பியின்குறிப் பொன்று ஞாபகம் வந்தது.

"மதம் என்னும் நிறுவனம் இல் லாத சமூகமே இல்லை என்பது சமூக மானுடவியலின்பதிகை ஆகும். சில மனிதத் தேவைகளின் வெளிப் பாடாகவே மதம் அமைகின்றது.

இந்த மனிதத் தேவையை மூன்று மட்டங்களிலே நாம் உணர்ந்துகொள்ளலாம்.

முதலாவது: நம்பிக்கை (விசுவாசம்), சடங்கு, ஐதீகம் என்பன தரும் உலகப் பார்வை ஆகியனவற்றின் மட்டத்தில் ஆகும். சடங்கும் நம்பிக்கையும் ஓர் உலகப் பார்வை நோக்கைத் தரும்."

மரிய சேவியர் அடிகளார் பாட்டாலும் கூத்தாலும் நாடகத்தாலும் எழுத்தாலும் மதங்களைக் கடந்து மேல் உள்ள குழுக்களையெல்லாம் இந்த மானுடம் வெல்லும் எனக் கற்பித்தவர்.

என் மிகச் சிறிய வயதில் 60களின் தொடக்கத்தில், மடுக்கோயில் அருகில் அவரை முதன்முதலில் பார்த்தேன். என் அம்மாவின் ஒன்றுவிட்ட தங் கைகளான பெர்ணவேத்தம்மா, லூர்த் தம்மா என்ற இரட்டைச் சகோதரி களான அன்ரிமாரின் கைபிடித்து கோயில் வீதியில் நடந்து சென்ற போது, அவ்விரட்டை சகோதரிகள் ஒரு மரம் அருகே நூல் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்த இவரைக் கண்டபோது, ஓடிச்சென்று அண்ணா என்று அணைத்தபோது - அந்த கம்பீரமும் அழகும் கொண்ட மிக கனிவான முகம் கொண்ட ஓர் இளைய குருவாக இவரைப் பார்த்தேன்.

என் பேரனார் சொல்லித்தந்தபடி ஒரு குருவானவரைக் கண்டால் முழங்காலில் இருந்து, 'சுவாமி தோத் திரம்' என்று சொல்லாமல் அவ ரையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

அன்ரிமாரின் காதுக்குள்ளே, "யார் இவர்?" என்று விசாரித்த போது, எங்கடை இளவாலைக் குஞ் சியம்மாவின் மகன் சவிரிமுத்து சுவாமி. சிறுவயதிலையே ரோமில் குருப்பட்டம் பெற்று வந்தவர் எனப்

> "
> தன்நாட்டையும் இனத்தையும் நேசித்தவர். தான் நம்பிய கடவுளை, உயிருள்ள தேவன் என்று விசுவாசித்து, மற்ற மதங்களை மதித்து, இணைத்து, அணைத்து வாழ்ந்தவர். சடங்குகளினாலும் வழிபாட்டாலும் கோவில்களாலும் மாத்திரமல்லாது, கலைகள் மூலமும் இறைவனை அறியலாம் என எங்களுக்குக் கற்றுத்தந்தவர்.
> o
> வெறுமையும் வறுமையும் அலைக்கழிப்பும் இடப்பெயர்வும் தமிழர்களை ஆட்டி வைத்த காலத்தில். ஆறுதல் தரும் மருந்தாக, கண்ணீரைத் துடைக்கும் கையாக இருந்தன திருமறைக் கலாமன்றத்தின் கலை முயற்சிகள்.
> "



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையோடு அறிமுகப்படுத்தினார்கள்.

அதன் பிறகு, மிக நீண்ட காலத்துக்குப் பின் அவரை கனடா மிசிசாகாவில் அவரின் அண்ணன் அருளானந் தத்தின் மகன்மார் வீட்டில்தான் பார்த்தேன்.

இதற்கிடையில் 71ஆம் ஆண்டு, யாரோ இந்தியாவில் படித்து வந்த குருவானவர் யாழ். முற்றவெளியில் இயேசுவின் திருப்பாடுகளைப் பெரிதாக நாடகம் போல் செய்யப்போகின்றார் என்று ஊரில் எல்லாம் பெரிய பேச்சாக இருந்தது.

எங்கள் ஊரில் இருந்து பஸ் பிடித்துப் போயிருந்தோம்.

வாழ்க்கையில் பார்த்தறியாப் பிரமாண்டம், அழகு, புதுமை! ஒரு சினிமாப் படம் போல் காட்சிகள். யாழ். நகரே தெரியாத அந்த வயதில் முற்றவெளியே வியப்பளித்தது. அந்த முற்றவெளியில், இயேசு சிலுவையில் அறையப் பட்டபடி தொங்க, 'கார் முகிலாம் திருக்கூந்தல் முள் எடுத்தார் முடிதொடுத்தார் இரத்தம்... இரத்தம்... செக்கச்சிவந்த இரத்தம்...'




போன்ற வசனங்களும் பாடல்களும் காட்சி அமைப்புகளும் என்னை வியக்க வைத்தன.

ஆனால் இந்நிகழ்ச்சியைப் பற்றிப் பேசவோ மகிழவோ முடியாதபடி அடுத்தநாள் ஏப்பிரல் 5ஆம் திகதி வந்தபோது...

'சேகுவேரா புரட்சி' என்று தமிழ் மக்களால் அழைக்கப்பட்ட சிங்கள இளைஞர்களின் எழுச்சியால் வந்த இரத்தம் சிந்திய அரசியலால் இக்கலை நிகழ்வை மறந்து விட்டோம்.

'90களின் ஆரம்பத்தில் இங்கு என்னைத் தொலைபேசியில் அழைத்து, தன்ரை பெயர் மரிய சேவியர் என்றும் மிசிசாகாவில தான் இருக்கும் விலா சத்தைத் தந்து, தன்னை வந்து பார்க்க முடியுமா? என்று கேட்டார்.

திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளை ஓரள வுக்கு அறிந்திருந்த நான், 'சுவாமிக்கு என்னை எப்படி தெரியும்? சிறு வயதில் மடுக்கோயிலில் பார்த்த ஒரு சிறிய ஞாபகம் தான் எனக்கிருக்கு. அவருக்கு அதுவும் இருக் காது.

அவர்கள் இங்கு செய்யும் திருப்பாடுகளின் காட்சியில் ஒரு சிறிய பாத்திரத்தில் நடிக்கிறதுக்குத்தான் யாரோ சொல்லி என்னை அழைக்கின்றார்' என எண்ணியபடி அவரிடம் போனேன்.

அவரைச் சுற்றிப் பலபேர் இருந்தார்கள். என்னைப் பார்த்துப் புன்னகைத்து, "திருமறைக் கலாமன்றம் பற்றி அறிந்தீருப்பீர்கள் தானே!" எனக் கேட்க,

நான் "ஓம்" என்று சொல்லி, "அதன் செயல்பாடுகள் தெரியும். நாடகங்கள் ஒன்றும் பார்த்ததில்லை. 'கலைமுகம்' சஞ்சிகை பார்த்து இருக்கின்றேன்" என்றேன்.

"அதற்குத்தான் உன்னைக் கூப்பிட்டனான். 'கலைமுகம்' சஞ்சிகையின் கனடா சிறப்பிதழை நீதான் செய்ய வேண் டும்" என்றார் அவர்.

அவருக்கு என் அரசியல், இலக்கியச் செயற்பாடுகள் தெரிந்த மாதிரியோ அல்லது என்னுடைய பிறந்த ஊர், மதம் தெரிந்த மாதிரியோ தெரியவில்லை.

நானும், அவரை மடுக் கோவிலடியில் நீண்ட காலத் துக்கு முன் அன்ரிமாருடன் பார்த்த கதையைச் சொல்ல வில்லை. என்ரை அரசியல் நிலைப்பாட்டையும் திறமைக் குறைவையும் சொல்லித் தயங்க, அவர் இடைமறித்து, "உன்னுடைய 'காலம்' சஞ்சிகையை நான் யாழ்ப்பாணத்தில் பார்த்து இருக்கின்றேன். அதனால் தான் உன்னை விசா ரித்து உன்னுடைய தொலைபேசி இலக்கம் வேண்டி அழைத்தனான். உன்னுடைய அரசியல் நிலைப்பாடு உன்னுடையது. நீதான் கனடா கலைமுகம் செய்கிறாய்" என உரிமையோடு உத்தரவிட்டார்.

அன்று தொடங்கிய நட்பும் தொடர்பும் இறுதிவரை இருந்தன.

இன்னொரு தடவை அவர் கனடா விற்கு வந்தபோது அவருக்கு ஒரு சிறிய கூட்டம் ஒழுங்கு செய்திருந்தேன்.

அவரை என் இலக்கிய நண்பர் களுக்கு அறிமுகப்படுத்திப் பேசிய போது, தனிநாயகம் அடிகளாருடன் ஒப்பிட்டு பேசியதற்காக அக்கூட்டத் திலேயே என்னைப் பெரிதாகக் கடிந்து கொண்டார். அந்தப் பெரிய அறிவாளி யுடன் தன்னை ஒப்பிடப்படாது என் றும் தன் செயற்பாடுகள் சாதாரணமா னவை என்றும் சொல்லி அழகிய சிறிய பேச்சொன்று பேசி எல்லோரையும் கவர்ந்தார்.

காலம் - 50ஆவது சிறப்பிதழுக்கு அவரை நேர்காணல் செய்தோம். அவருக்குப் பிரியமான யோண்சன் ராஜ்குமார் நேர்காணல் செய்தார் நான் கேட்டதற்கு அவர் முதலில் சம்மதிக்கவில்லை. யோண் சன்தான் எனக்காகச் சிரமப்பட்டு நீண்ட நாட்களில் அந்த நேர்காணலைச் செய்தார்.

இதற்கிடையில் ஏதோ விதமாக நான் அவருக்குத் தூரத் துச் சொந்தமென்று கண்டுபிடித்துவிட்டார். நான் ஏதாவது அவரைப் பாராட்டினால், "நீ சொந்தக்காறன். அப்படித்தான் சொல்வாய்" எனச் சிரிப்பார்.

இலங்கையில் திருமறைக் கலாமன்றம் போன்ற பெரிய அமைப்பை நடத்துவது பெரிய விடயம். அதுவும் தமிழ்க் கத்தோலிக்க சமயத்தில் அதன் கட்டுப்பாடுகளுக்குள் இருந்து கொண்டு கலைவழி இறைபணியென்றாலும் மிகச் சிரமமானது.

அதுவும் அவர் வாழ்ந்த காலம் தமிழ் மக்கள் கண் ணீரும் இரத்தமும் சிந்திய நாள்கள்.

ஏறச் சொன்னால் எருதிடமும் இறங்கச் சொன்னால் உழவனிடமும் அடிவாங்கும் காலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமையும் வறுமையும் அலைக்கழிப்பும் இடப்பெயர்வும் தமிழர்களை ஆட்டி வைத்த காலம். ஆறுதல் தரும் மருந்தாக, கண்ணீரைத் துடைக்கும் கையாக இருந்தன திருமறைக் கலாமன்றத்தின் கலை முயற்சிகள்.

திருமறைக் கலாமன்றத்தின் செயல்பாடுகளுக்கு இவர்தான் மூல காரணமாயிருந்தாலும் அது செயல்படுவதற்கு இவருக்கு மிகப் பெரிய கலைஞர் பட்டாளம் துணை நின்றது.

இவருடைய மிகப்பெரிய திறமை என்னவென்றால், 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்' என்ற திருக்குறளை நன்குணர்ந்தது. அதனால் மிகத்திறமையானவர்கள் திருமறைக் கலாமன்றத்தின் பட்டறையில் இருந்து வெளிவந்தார்கள்.

யுத்தம் பெரிதாக நடந்து கொண்டிருந்தபோது-
"போதும் மன்னா போதுமே மன்னா
போர் வேண்டாம் மன்னா-
வெந்து அழிந்து மடிந்தனர் கண்டும் போர் வேண்டுமோ
இங்கு நைந்து வருந்தி உயிர்கள் மரிப்பதும் நியாயமோ"

என்று ஆடிப்பாடி கூத்தாலும்

"நாங்கள் கொன்றால் கொலை நீங்கள் கொன்றால் சட்ட ஒழுங்கு வாள் ஏந்துவதைத் தவிர வேறு வழிகளை வரலாறோ நீங்களோ எமக்கு விட்டு வைக்கவில்லை".



இப்படி இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியிலேயே வசனம் பேசி நடித்து, யுத்தம் நடந்துகொண்டிருக்கின்ற அந்தப் பூமியிலே துணிவோடும் நியாயத்தோடும் நடத்திக் காட்டும் திருமறைக் கலாமன்றத்தின் தர்ம ஆவேசத்துக்குப் பின்னால் நிற்பது அடிகளாரின் ஆத்ம பலம்.

இவர் பயிற்சியில் அல்லது இவர் தொடர்பில் வெளிவந்த கலைஞர்கள் வரிசை நீளமானது. அவர்களுள் பலர் மிகச்சிறந்த கலைஞர்களாக எங்கள் கண்முன்னே இருக்கின்றார்கள்.

ஒஷோ சொல்வானே...

தன்னைப் பின்பற்றி வாழும் சீடர்களை உருவாக்குவது அல்ல ஒரு குருவின் பணி. குருமார்களை உருவாக்குவதே அவர் பணி.

திருமறைக் கலாமன்றக் கலைஞர்களைப் பார்க்கும் போது, மரிய சேவியர் அடிகளார்தான் ஞாபகத்துக்கு வருவார்.

எனக்கு அவர் மீது மிகப்பெரிய ஈடுபாடு வந்ததற்குக் காரணம் - கூத்துக்கு அவர் செய்த பணியே.

யுத்தகாலத்தில் எல்லாம் சிதைந்ததுபோல் கூத்துகளும் சிதைந்து போகாமல் இருப்பதற்கு அவர் பெரும் பணியாற்றினார்.

இசைநாடகப் பாடல்களைத் தொகுத்ததும் தென்மோடிக் கூத்துப்பாடல்களைத் தொகுத்ததும் ஈழத்தமிழ் ஆவணக் காப்புக்குப் பெரிய கொடை. கூத்தைப் பொறுத்தவரை, கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாக மரிய சேவியர் அடிகளாரின் பங்கு அல்லது திருமறைக் கலாமன்றத்தின் உழைப்பு பிரமிக்கத்தக்கது.

சிங்ககுலச் செங்கோல், அனைத்தும் அவரே, நீ ஒரு பாறை, செந்தூது, ஜெனோவா, சோழன் மகன், கம்பன் மகன், கொல் ஈனுங் கொற்றம், அற்றைத் திங்கள்... இப்படியே பட்டியல் இட்டுக்கொண்டு போகலாம், இதைவிட, கூத்துக் கலைஞர்களுக்கு ஊக்குவிப்பு, கௌரவிப்பு, கூத்துப் போட்டிகள், கூத்து விழாக்கள் என இவர் பின்னாலும் முன்னாலும் நின்று செய்த அரிய முயற்சிகள் மனதில் ஓடுகின்றன.

இதைவிட, 'கலைமுகம்' சஞ்சிகையைத் தொடர்ந்து வெளியிடுவது எவ்வளவு சிரமமான காரியம் என ஒரு சஞ்சிகை வெளியீட்டாளனாக அனுபவரீதியாக உணர்ந்தவன் நான். தொடர்ந்தும் காத்திரமாக அச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருக்கின்றது.

எத்தனை புத்தகங்கள்! எத்தனை இறுவட்டுகள்! இப்படியே எழுதிக் கொண்டு போகலாம்.

சிதறுண்டு போன ஈழத்தமிழர்கள் மத்தியில் வந்து ஒவ்வொரு நாட்டிலும் மன்றத்தை நிறுவி அதற்குரிய பொருத்தமான ஆட்களைத் தெரிவு செய்து கலைகள் மூலம் மக்களை இணைக்க அவர் செய்த பணிகள் வியக்க வைக்கும்.

இப்படி தமிழில் எப்போதாவது ஒரு முறைதான் அபூர்வ பிறவிகள் தோன்றுவார்கள். அதுதான் வராது வந்த மாமணி என எழுதினேன். தான் நம்பிய இறைவனை உயிருள்ள தேவன் என்று விசுவசித்துக் கொண்டு, தன் தாய் மொழியையும் கலைகளையும் உயிராய் நேசித்துக் கொண்டும் வாழ்ந்த ஓர் இறைவனின் தூதன் என்று சொல்வதற்காய், வள்ளுவன், ஒரு தூதுவன் எப்படியிருக்க வேண்டும் என்று சொன்ன 'அன்பறிவு ஆராய்ந்த சொல்வன்மை' எனச் சொன்னேன்.

அவரை முதன்முதலில் பார்த்த போது, ஒரு குருவானவரைக் கண்டால் முழங்காலில் இருந்து 'சுவாமி தோத்திரம்' என்று சொல்லவேண்டும் என்று என் பேரன் சொல்லித்தந்ததை சொல்லவில்லை. இன்றைக்கு பல்லாயிரம் மைலுக்கப்பால் இன்னொரு வானத்துக்குக் கீழ் இருந்து, 'சுவாமி தோத்திரம்' எனக் கலங்குகின்றேன். •

தற்போதைய 'கொரோனா' பெருந்தொற்று சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்தியுள்ள நெருக்கடி நிலைமைகளால் 'கலைமுகம்' இந்த இதழ் தாமதமாகி வெளிவருகின்றது என்பதனை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# தமிழ்ப்பண்பாட்டுக் கோலங்களை அடையாளம் காட்டியவர்

**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**

ஈழத்தில் தமிழர் வாழ்வும் வரலாறும் இலங்கைத்தீவின் வடக்கு கிழக்கு மற்றும் மலையக வாழ்விடங்களை மையம் கொண்டுள்ளமை யாவரும் அறிந்ததே. புவியியல் அமைப்பும், காலநிலை வித்தியாசங்களும் பொருளாதார உழைப்புச் சூழலும் அவர்கள் வாழ்வியலையும், பண்பாட்டு வளர்ச்சியையும், மொழிவளர்ச்சிப் பண்புகளையும் செப்பனிட்டு நின்றன. ஆயினும் காலனித்துவகால அரசியலும், தொடர்ந்து வந்த சுதந்திரத்துக்கு பிந்திய இனத்துவ அரசியலும் தமிழர் வாழ்வையும் பண்பாட்டையும் கேள்விக்கு உட்படுத்திய போதும் காலந்தோறும் தோன்றிய தவப்புதல்வர்கள் தமிழின் உயிர்ப்பைக் கட்டிக்காத்து வந்தனர் என்பதே ஓர் ஆறுதல் தரும் விடயமாகும்.

அந்த வகையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சுவாமி ஞானப்பிரகாசர், சுவாமி விபுலானந்தர், வண.பிதா. தனிநாயக அடிகள், பேராசிரியர் வித்தியானந்தன் ஆகியோர் வரிசையில் வண.பிதா. அருட்கலாநிதி மரிய சேவியர் அவர்களின் பண்பாட்டு வழிகாட்டல்கள் வரலாற்றில் மறுக்க முடியாத தடயங்கள் ஆகிவிட்டன.

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்கள் கூத்துக்கலையை ஈழத் தமிழர் கலையாக கண்டு கொண்டு அதனை எவ்வாறு அடுத்த தலைமுறை தக்கவைக்க முடியும் என அடையாளம் காட்டினார். குறிப்பாக ஆட்டக் கோலங்கள் அதிகமாக காணப்படும் மட்டக்களப்பு வடமோடி, தென் மோடிக்கூத்துக்களை நவீன காலத்து அரங்கு, பார்வையாளர், நடைமுறையாக்கம் என்பனவற்றைக் கருத்தில் கொண்டு தகவமைத்து தமிழர் மத்தியில் ஓர் உற்சாகம் பிறக்க வழி சமைத்தார்.

> “அறுபதுகளின் மத்தியிலிருந்து “திருப்பாடுகளின் காட்சி” உருவாக்கத்தினூடாக நாடக அரங்க பாங்கினையையும் இரசிப்பையும் மக்கள் மத்தியில் புத்துணர்வுடன் ஊட்டி பல்வேறு மேடையேற்றங்களை ஏற்படுத்தி, கலைத்தாகத்தை உண்டு பண்ணி, கலைஞர் மத்தியில் புதிய உற்சாகத்தை பாய்ச்சி மூத்த கலைஞர்களையும் இளைய கலைஞர்களையும் இணைய வைத்து சமயங்கள் கடந்த கலைச்சங்கமத்தை ஏற்படுத்தி புரட்சி செய்தவர் அடிகளார்.”

அதன் அடுத்த கட்டமாக பேராசிரியர். சி. மௌனகுரு அவர்களின் கூத்து மேடையேற்றங்கள் இளந்தலைமுறையினருக்கு வழிகாட்டியது. இன்னொருபுறம் யாழ்ப்பாணக் களத்தில் கத்தோலிக்கக் கூத்துக்களை குறிப்பாக தென்மோடிக்கூத்துக்களை பூந்தான் ஜோசப்பு போன்ற முதுபெரும் கலைஞர்களுக்கு பிறகு சமூக மட்டத்திலும் சமய மட்டத்திலும், கலைஞர் மட்டத்திலும் தென்மோடி யாழ்ப்பாணக் கூத்துக்களை மட்டுமல்லாது மன்னார் வடபாங்கு, தென்பாங்கு வாசப்பு போன்ற கூத்துக்களையும் இசைநாடக வடிவத்தையும் மீளவும் ஓர் உயிர்ப்பு நிலைக்கு உய்வித்தவர் அருட்கலாநிதி மரிய சேவியர் அவர்கள்.

அறுபதுகளின் மத்தியிலிருந்து “திருப்பாடுகளின் காட்சி” உருவாக்கத்தினூடாக நாடக அரங்க பாங்கினையையும் இரசிப்பையும் மக்கள் மத்தியில் புத்துணர்வுடன் ஊட்டி பல்வேறு மேடையேற்றங்களை ஏற்படுத்தி, கலைத்தாகத்தை உண்டு பண்ணி, கலைஞர் மத்தியில் புதிய உற்சாகத்தை பாய்ச்சி மூத்த கலைஞர்களையும் இளைய கலைஞர்களையும் இணைய வைத்து சமயங்கள் கடந்த கலைச்சங்கமத்தை ஏற்படுத்தி புரட்சி செய்தவர் அடிகளார்.

திருமறைக் கலாமன்ற திறந்த வெளி அரங்கு பல புதுமைகளைக் கண்டது. கிரேக்கத்து, ரோம, மத்தியகால, ஷேக்ஸ்பியர் அரங்குகளை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தியதோடு, எமது மண்சார்ந்த கூத்துக்களங்களையும் ஒரு சேர மீட்டு வந்தது அடிகளாரின் தூரநோக்கு.

கண்முன்னே கூத்து நாடகக் காட்சிகள் வானத்தில் நிமிர்ந்தால் வெள்ளிகளுடன் நிலவின் அழகு, தென்னங்கீற்றினூடு பரவும் தென்றலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதம், காதுகளில் ரீங்காரம் செய்யும் கூத்தரின் இசைக் கோலங்களும் ஜதிகளின் தாளமும். இவ்வாறாக நாடகக் கலை வளர்ச்சிக்கு நிலைக்களனான அரங்க அமைப்புக்கள் இது மட்டுமல்லாமல் ஊரே கூடி நிற்கும் பண்பாட்டுச் சூழல். சிறியவர் முதல் பெரியவர் வரை கூடி நின்று பணி ஆற்றும் சூழலை கட்டி அமைத்தார்.

இந்த சமூகக் கட்டியமைத்தல் என்பது வெறும் கத் தோலிக்க சூழல் உடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்று அல்ல. நாடக அரங்கு, பண்பாடு என்று வரும்போது தமிழ்ச் சூழலின் கூட்டு அத்தியாவசியமாகின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணச் சூழலிலும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் பண்பாட்டிலும் சமூகக் கூட்டு தவிர்க்க முடியாததாகிறது. மிக முக்கியமாக கூத்தின், இசைநாடகத்தின் கதைக்களங் கள், ஐதீகங்கள் என்பன தமிழர் பண்பாட்டுப்புலத்தின் ஊற்றுக்களே.


அந்த வகையில் சமயங்களுக்கிடையிலான புரிந்து ணர்வை, பரஸ்பர மதிப்பை சமூகமட்டத்தில் உணர வைத்து கலைஞர்கள் எந்தத்தரப்பிலிருந்து வந்தாலும் இன்முகம் கொண்டு வரவேற்று களம் அமைத்து கலைச் சங்கமத்தை ஏற்படுத்துவதே அடிகளாரின் குறிக்கோள். அப்படியாகவே குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு போன்றவர்களையும் அழைத்து தமது அரங்கச் செயற்பாடுகளை மேற்கொண்டார். அதன் நிமித் தம் இளையவர்களாகிய எமது தலைமுறையும் அமரர். பிரான்சிஸ் ஜெனம் தலைமையில் அடிகளாரின் வழிகாட் டலில் நாடகப்பட்டறைகளில் பங்குகொண்டது. தாசீசிய ஸின் 'பொறுத்தது போதும்' நாடகங்களில் நாம் நடித் தோம். அத்தோடு நவீன நாடகங்களையும் மேடை ஏற்றிய தும் இசை நாடகப் பயிற்சியையும் அமரர் தைரியநாதன் வழிகாட்டலில் பெற்றுக்கொண்டோம்.

இவ்வாறாக, ஒரு சமய வேறுபாடு அற்ற ஒரு கலை பண்பாட்டுச் சூழல் அடிகளாரால் உருவாக்கப்பட்டது. இது ஏற்கெனவே வண. தனிநாயகம் அடிகளார் தமிழ் ஆராய்ச்சி மட்டத்தில் உருவாக்கிய சூழல் ஆகும். இதன் தொடர்ச்சியில் இந்துமதம் சார்ந்தவர்களுக்கும் ஏற்படக் கூடிய அந்நியத்தன்மை இயல்பாக அற்றுப்போய்விட்டது. மேலும் அடிகளார் அரவணைத்துக்கொண்ட தமிழ்ப் பண்பாட்டு அம்சங்களான தைப் பொங்கல் பண்டிகை, சந்த னப் பொட்டு போடுதல், வாழை தோரணம் கட்டுதல் என் பன தமிழருக்கு பொதுவான பண்பாட்டுக் கோலங்களாக உருவாகின. பொது மொழியான தமிழ் பேசும் சூழல், கூத் தின் பொதுத்தளம் என்பவற்றோடு ஈழத்தமிழர் அரசியல் என்பதுவும் எம்மையெல்லாம் ஒன்றுபட வைத்தது.

தமிழர் அரசியல் தலைமை அமரர் எஸ். ஜே.வி. செல்வ நாயகம் அவர்களால் ஏற்கப்பட்டபோதே ஒட்டு மொத்த தமிழரும் அவர் பின்னால் அணிதிரண்ட ஒற்றுமை உணர்வும் தமிழ் ஆய்வு மட்டத்தில் வண.பிதா. தனிநாயகம் அடிகளார் வளர்த்த உணர்வும் மேலும் பலமடைய கூத்துப் பண்பாடும், இதர பண்பாட்டு செயல்பாடுகளும், அம்சங் களும் வழிவகுத்தன என்றால் மிகையாகாது. இதனை தத்துவார்த்த ரீதியிலும் இறுக்கமடையச் செய்தது அடிகளாரின் 'சைவசித்தாந்த ஆய்வு' தமிழரின் இறையியல் தத்துவமாக இருக்கக் கூடிய சைவ சித்தாந்தத்தை கிறிஸ்தவ இறையியலுடன் பார்க்கும் இயல்பு மனிதர் மீது மனிதர் கொள்ளும் அன்பின் வெளிப்பாடுகள் தாம். 'அன்பே சிவம்' என்பதும் 'அன்புதான் கடவுள்' என்பதும் மும்மலங்களின் தாக்கங்கள் அற்ற உயிரின் செயற்பாடு ஆண்டவர் மீதான பற்றுதல் என்கிற பொதுத்தளத்தில் யாவரும் ஒன்று கூடுதல் என்பதும் எவராலும் வரவேற்கக்கூடிய ஒன்று.

'கலைத்தொண்டு இறைதொண்டு' என்பதை 'கலைத் தொண்டு சமூகத்தொண்டு' எனவும் கொள்ள முடியும். ஞானம் இல்லாத உலகிற்கு ஞான ஒளி ஏற்படுத்துதல், அறியாமை நிலையிலிருந்து விழிப்புணர்வு அடைதல் என்பனவே கலையூடாக சமூகம் பெறக்கூடிய விளைவுகள். இதனையே அடிகளாரின் தொடர்ந்த செயற்பாடுகள் எமக்கு உணர்த்தி நின்றன.

அடிகளார் இன்னும் ஒருபடிமேலே சென்று இன ஐக்கியமும் பேச விழைந்தார். தமிழ் பேசும் சமூகங்களி டையே ஒற்றுமைக்கான தளத்தை பண்பாட்டினூடாக மேற்கொண்டமையின் இன்னொரு காலடிதான் கலைக் கூட அமைப்புகள். இதன் மூலம் தென்னிலங்கைக் கலை ஞர்கள், ஓவியர்களையும் இணைத்தார். 'மௌன



நாடகங்கள்' மூலம் போர்க்காலத்தில் இன ஐக்கியம் பேச முனைந்தமை போல உலகளாவிய கலைப்பாலத்தையும் பல்வேறு உலக நாடகப்பயணங்கள் மூலம் உருவாக்க விழைந்தமை அடிகளாரின் பரந்த கலாபூர்வ சிந்தனையை சுட்டிநிற்கின்றது.

ஆக, நமது யாழ்ப்பாணக் களத்தில் கூத்து மற்றும் பண்பாட்டு நடவடிக்கைகள் ஊடாக ஒரு புதிய தடத்தை ஏற்படுத்தி ஒரு புதிய வாழ்வை கோடிட்டு காட்டியுள்ளார் அருட்திரு மரிய சேவியர் அடிகளார். வானில் உயர எழும் கூத்தின் ஒலியும் மத்தள இசையும் தாளக்கட்டுகளின் வீச்சும் மேலும் மேலும் எமது சமூக ஒற்றுமைக்கும், எழுச்சிக்கும், விடுதலைக்கும் இன சௌயன்னத்திற்கும் வழி விடட்டும் என உறுதி எடுப்போமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# மரிய சேவியர் அடிகளாரின் ஒப்பற்ற கலைப் பயணம்

**நா. யோகேந்திரநாதன்**

***1965***ஆம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையில் 3 வருடங்களாக இடம்பெற்ற இரண்டாம் வத்திக்கான் சங்கம் கிறிஸ்தவரல்லாத மக்களுக்கும் திருச்சபைக்குமிடையேயான உறவை விருத்தி செய்வது தொடர்பாகவும் பரந்துபட்ட பொதுமக்களுடனான நற்பணிகளின் முன்னெடுப்பு தொடர்பாகவும் இரு தீர்மானங்களை முன்மொழிந்தது. அதையடுத்து உலகளவில் திருச்சபையின் நடவடிக்கைகள் புதிய பொலிவுடனும் செயல் வீச்சுடனும் முன்னெடுக்கப்பட்டன.

ஆனால் இத்தீர்மானங்கள் திருச்சபையால் உத்தியோக பூர்வமாக முன்னெடுக்கப்படுவதற்கு முன்பாகவே இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளில் அப்பிரதேசங்களில் அமைந்திருந்த பல தேவாலயங்களின் அனுசரணையுடன் கலை, இலக்கியப் பணிகள் மூலம் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுடன் உறவை வளர்ப்பதிலும், சாதாரண பொது மக்களை ஆன்மீக நெறியில் ஒன்றிணைப்பதுமான முயற்சிகள் இடம்பெற ஆரம்பித்துவிட்டன.

மிக இளவயதிலிலேயே இறையியலின் இளமானி, முதுமானிப் பட்டங்களைப் பெற்றுக்கொண்ட மரிய சேவியர் அடிகளார் தனது 22 ஆவது வயதிலேயே பாப்பரசரின் விசேட அனுமதியுடன் உரோமாபுரியில் திருநிலைப்படுத்தப்பட்டார். பின்பு சிறிது காலம் புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் பணியாற்றிய பின்பு மன்னார், கிளிநொச்சி, நாரந்தனை ஆகிய இடங்களில் உதவிப் பங்குத் தந்தையாகச் செயற்பட்டார்.

இவர் மன்னாரில் பணியாற்றிய நாட்கள் இவரின் இதயத்தில் கனிந்துகொண்டிருந்த கலை வேட்கையைக் கொழுந்து விட்டெரியச் செய்திருக்கலாம் எனக் கருத முடியும்.

ஏற்கெனவே தமிழர்கள் மத்தியில் நிலவி வந்த பள்ளு, கும்மி, அம்மானை, குறவஞ்சி, கூத்து போன்ற கலை வடிவங்களிலிருந்து பெறப்பட்ட பாடல் மெட்டுக்களையும் ஆட்ட வடிவங்களையும் அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ குருமாரின் வழிகாட்டலில் புலவர் லோறன்ஸ் பிள்ளை அவர்களால் புனிதர்களின் மேன்மையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்த 'மூவிராசாக்கள்' கூத்தே மன்னாரின் முதல் கூத்து எனக் கருதப்பட்டது. அதை அடியொற்றி அவரின் சீடர்களால் சாந்தோமையர், மரியசித்தான் உட்பட ஆலயத்துக்கு ஒரு கூத்து எனப் பல கூத்துக்கள் உருவாக்கப்பட்டன.

மன்னார் கூத்துகள் ஒரு கலை வடிவம் என்பது மட்டுமின்றி அதன் மக்கள் மயப்படுத்தப்பட்ட தன்மை ஒரு முக்கிய விடயமாகும். அடிகளாரின் கலை மூலம் மக்களை ஆன்மீக நெறிகளில் இணைக்கும் சிந்தனாப் போக்குக்கு இது ஒரு பெரும் ஊக்கியாக அமைந்திருக்க முடியும்.

மன்னாரில் நாட்டுக் கூத்துகள் ஒரு கலை வடிவத்தின் மேடையேற்றம் என்ற மட்டத்துக்குள் அடங்கி விடவில்லை. நேர்த்தி கட்டுதல் முதல் மங்களம் கூறுதல் வரை இடம்பெறும் ஒவ்வொரு விடயமும் ஊர் மக்களின் பங்களிப்பாகவே இடம்பெறும்.

முதலில் கூத்து நடத்துவதென ஊர் மக்கள் தீர்மானித்த பின்பு நாடக அண்ணாவியார் ஏடு வைத்

> “ அவரின் ஆற்றலும் இடையறாத உழைப்பும் ஏனையோரை அரவணைத்து முன் செல்லும் அவரின் பண்பும், திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் திருமறைக் கலாமன்றத்தைக் கலைத்தாயின் கோவிலாக மாற்றியது. அது மட்டுமின்றி பல கலைஞர்களையும் படைப்பாளிகளையும் உள்ளீர்த்து அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்புகளையும் உருவாக்கியது. ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

திருக்கும் புலவர் ஆகியோருக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பு விடுக்கப்படும்.

அதன்பின்பு ஊர் நலன் வேண்டி கோவில் மருந்து வைத்து மாதாவுக்கு நேர்த்தி கட்டப்படும். அதையடுத்து ஏடவிழ்ப்பு, வரவு கொடுப்பு, பறையறைதல், கப்புக்கால் நாட்டு, கெச்சைக்கட்டு, ஊர்மறியல், படிப்பு, மேடையேற்றம், மங்களம் போன்ற சகல சடங்குகளும் ஊர் திரண்டே மேற்கொள்ளும். கூத்துப் பழகும்போதே ஆண், பெண் பேதமின்றி மக்கள் கூடியிருந்து ஆதரவு வழங்குவார்கள். அது மட்டுமின்றி நேர்த்தி கட்டிய நாளிலிருந்து ஒவ்வொரு வீட்டிலும் நாடகப்பானை என ஒன்று வைப்பார்கள். அதில் நாளாந்தம் அரிசி, தானியம், பணம் என்பன போடப்படும். அது நாடகம் பார்க்க அயலூரிலிருந்து வரும் நண்பர்கள், உறவினர்களை உபசரிக்கும் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும். இது உறவுகளைப் பலப்படுத்தவும் திருமணம் போன்ற புதிய உறவுகளை உருவாக்கவும் வாய்ப்பளிக்கும்.

இவ்வனுபவங்கள் கலைப்பணியூடாக இறைபணியை முன்னெடுக்கும் அடிகளாரின் நோக்கங்களுக்குப் புதிய கதவுகளைத் திறந்து விட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

அடுத்து அவர் உரும்பிராய் பங்குத் தந்தையாக நியமனம் பெற்று வந்த பின்பு மக்கள் மயப்பட்ட கலைப் பணியை முன்னெடுக்கும் பணியில் நேரடியாகவே இறங்கினார்.

வேதாகமத்தில் வரும் நன்னெறியூட்டும் சம்பவங்களை நாடகமாக்கியதுடன் இளைஞர்களை அணி திரட்டி அவற்றில் பங்கு கொள்ள வைத்தார். இதில் சிறப்பம்சம் என்னவெனில் கிறிஸ்தவ இளைஞர்கள் மட்டுமின்றி கிறிஸ்தவரல்லாத இளைஞர்களும் நடிகர்களாக பங்கு கொண்டனர். இவரால் மேடையேற்றப்பட்ட திருப்பாடுகள் நாடகத்தை இன, மத பேதமின்றி முழு ஊரும், அயலூர் மக்களும் வந்து கண்டு களித்தனர். இவ்வாறு கலைப்பணி மூலம் வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களை அவரால் ஓரணியில் திரட்ட முடிந்தது. அதன் பின்பு நூறடி மேடையில் அவர் நடத்திய நாடகம் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. மூன்றாகப் பிரிக்கப்பட்ட மேடையில் பிரமாண்டமான அரங்கமைப்புடன் காட்சிகள் இடைவெளியின்றித் தொடர்ந்து நடந்து ரசிகர்களை வியப்பூட்டின. அப்போது அவர் நிழலில் வளர்ந்தவர்கள் பின்னாட்களில் 'வடக்கும் தெற்கும்', 'அலாவுதீன்'போன்ற நாடகங்களைச் சுழல் மேடையில் அரங்கேற்றி எல்லோரையும் அதிசயிக்க வைத்தனர். அவர்கள் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அந்நாட்களில் அவரால் முன்கொண்டுவரப்பட்ட பல கலைஞர்கள், பின் நாட்களில் சிறந்த இசை நாடக நடிகர்களாகவும் வாத்தியக் கலைஞர்களாகவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சகல சமூகங்களையும் ஒன்றிணைத்து அடிகளார் தன் கலைப்பணியை முன்னெடுத்த வேளையில் 1965இல் வத்திக்கானின் இரண்டு நோக்கங்களைக் கொண்ட அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

ஏற்கெனவே அதற்கேற்ற வகையில் பணியாற்றி வந்த அவர், அவ்வழைப்பைச் சிறப்புற முன்னெடுக்க வேண்டுமானால் தனது பணிகள் நிறுவனமயப்படுத்தப்பட வேண்டுமென்பதைப் புரிந்து கொண்டார். எனவே அதே ஆண்டிலேயே திருமறைக் கலாமன்றத்தை ஆரம்பித்தார்.

அவரின் ஆற்றலும் இடையறாத உழைப்பும் ஏனையோரை அரவணைத்து முன் செல்லும் அவரின் பண்பும், திறமைசாலிகளை இனங்கண்டு அவர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் திருமறைக் கலாமன்றத்தைக் கலைத்தாயின் கோவிலாக மாற்றியது. அது மட்டுமின்றி பல கலைஞர்களையும் படைப்பாளிகளையும் உள்ளீர்த்து அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் வாய்ப்புகளையும் உருவாக்கியது.

அதேவேளையில், அவர் திருமறைக் கலாமன்றத்துக்கு வெளியேயும் கலை இலக்கியப் பணிகளை விரிவுபடுத்தினார். 'பாதுகாவலன்' பத்திரிகையின் உதவியாசிரியராகப் பணியாற்றிய அதேவேளையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கத்தோலிக்க சேவைப் பொறுப்பாளர் பதவியையும் ஏற்றுச் செயற்பட்டார். இக்காலப்பகுதியில் அந்த நிகழ்ச்சிகளில் அவர் இனிமையான தமிழில் ஆற்றிய பிரசங்கங்களும் அவற்றில் அவரால் முன்வைக்கப்பட்ட தர்க்க ரீதியானவையும் ஆணித்தரமானவையுமான கருத்துகளும் அந்நிகழ்ச்சிகளில் அவரால் தயாரிக்கப்பட்டு ஒலிபரப்பப்பட்ட சிறு நாடகங்களும் கத்தோலிக்கர் அல்லாதவர்களையும் அந்த நிகழ்ச்சிகளைக் காத்திருந்து விரும்பிக் கேட்க வைத்தன. நாளாந்த வாழ்வியல் அம்சங்களூடாகவும் மனித உறவுகளூடாகவும் நிகழ்ச்சிகளில் இழையோடிய ஆன்மீக தொனிப் பொருட்கள் நிகழ்ச்சிகளின் காத்திரத் தன்மையை வெளிப்படுத்தின.

அதேவேளையில் கிறிஸ்தவரல்லாத மக்களுடனும் சாதாரண அடித்தட்டு மக்களுடனுமான நல்லுறவையும் பலப்படுத்த அந்த மக்களின் மதம், மொழி, பண்பாட்டுப் பழக்க வழக்கங்கள், வரலாற்றுத் தொடர்ச்சி என்பவற்றில் ஆழமான பரிச்சயத்தை உள்வாங்க வேண்டிய தேவையை உணர்ந்து கொண்டார். பரந்துபட்ட தேடல்கள் மூலமும் ஒவ்வொரு அம்சங்களினதும் மூலங்களைக் கண்டறிந்து உள்வாங்குவதன் மூலமுமே தன்னால் முன்வைக்கப்பட்ட அளிக்கைகளை இலகுவிலும் ஆழமாகவும் மக்கள் மத்தியில் கொண்டு செல்லமுடியும் என்ற அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்.

எனவே மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இளம்புலவர், புலவர் பட்டப்படிப்புகளை மேற்கொண்டதுடன் லண்டன் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுத் துறையில் இளமானி, முதுமானிப் பட்டங்களையும் பெற்றுக்கொண்டார். அத்துடன் அத்துறையில் ஆய்வுகளைச் சமர்ப்பித்து கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அதுமட்டுமின்றி ஜேர்மன் பல்கலைக்கழகத்தில் சைவசித்தாந்தத்தை ஆய்வு செய்து மெய்யியல் கலாநிதி பட்டத்தைப் பெற்றார். அதன் காரணமாக ரோம் பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயற்பட்ட புனித சவேரியார் உயர் குரு மடத்தில் சைவ சித்தாந்தம் கற்பிக்கும் பேராசிரியராகவும் பணியாற்றினார். இந்தக் காலப்பகுதியில் யாழ். பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. மேலும் அவர் தனது அறிவுத் தேடலை மென்மேலும் விரிவாக்க ஆங்கிலம், லத்தீன், டொச், இத்தாலி, பிரெஞ்ச், சமஸ்கிருதம், கிரேக்கம் ஆகிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்ந்து தேடிப் பெற்ற பன்மொழியறிவு, வரலாற்று அறிவு, கிராமிய கலை இலக்கியங்களில் இவர் கொண்டிருந்த அறிவு, பிறநாட்டுக் கலை இலக்கியங்கள் கற்றதன் மூலம் பெற்றுக்கொண்ட பாரம்பரிய, நவீன கலை, இலக்கிய வடிவங்கள் பற்றிய அறிவு என்பன மக்கள் மயப்படுத்தப்பட்ட அவரின் அளிக்கைகளை வலுப்படுத்தின.

அவற்றின் களங்களாக சமயப் பணிகளூடாக இரு துறைகளைத் தெரிவு செய்து கொண்டார். ஒன்று சமூக சேவை, மற்றது கலை இலக்கியத்துறை. கலைத்துறையில் அவரின் ஆடுகளமாக திருமறைக் கலாமன்றமும், இலக்கியத்துறையின் களமாகக் கலைமுகமும் உருவாகி ஒளி வீசத் தொடங்கின.

அடிகளார் திருமறைக் கலாமன்றம் மூலம் ஏறக்குறைய 25இற்கு மேற்பட்ட கத்தோலிக்க மதம் சம்பந்தப்பட்ட நாடகங்களையும் அதற்கு வெளியே சமூகத்தை நன்னெறிப் படுத்தும் பல நாடகங்களையும் கூத்து, இசை நாடக வடிவிலான படைப்புகளையும் எழுதி, நெறியாள்கை செய்து மேடையேற்றியதாக அறிய முடிகிறது. அதேவேளையில் இவரது வானொலி நாடகங்களும் மக்களால் விரும்பிக் கேட்கப்படுபவையாக விளங்கின.

இவரின் நாடகங்களில் உலகப் புகழ் பெற்ற திருப்பாடுகளின் நாடகக் காட்சிகளை எமது தேசிய மரபுகளுக்கேற்ற வகையில் வடிவமைத்து மெருகுபடுத்தி மேடையேற்றியமை இவரின் கலைத்துறைச் சாதனையில் ஒரு முக்கியமான சாதனை என்று சொல்லலாம். இத்திருப்பாடுகள் நாடகத்தைக் காணக் கிறிஸ்தவ மக்கள் மட்டுமின்றி பல்வேறு மதமக்களும் பல்லாயிரக்கணக்கில் கூடுவதைக் காண முடியும்.

மேற்கத்தைய நாடகங்களில் நீண்ட மேடையமைக்கப்பட்டு அவை சொர்க்கம், பூமி, நரகம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டு நாடகம் நடத்தப்படுவதே வழமையாக அமைந்திருந்தது. ஆனால் அடிகளார், நீண்ட மேடையமைத்து அவற்றை பகுதிகளாகப் பிரித்தாலும், களங்கள் தேவைக்கேற்ற வகையில் வேறுபடுத்தி உருவாக்கப்பட்டன. ஒப்பற்ற அர்ப்பணிப்புடனான நெறியாள்கை, பாத்திரங்களை கண்ணில் கொண்டுவரும் வகையிலான நடிப்பு, ஒப்பனை, பிரமாண்டமான அரங்க நிர்மாணம், இசைப் பிரயோகம், நெஞ்சைத் தொடும் பாடல் வரிகள் இவையெல்லாம் பார்வையாளர்களை வரலாற்றுக் காலத்துக்கே இட்டுச் சென்று, நாடகத்துடன் ஒன்ற வைக்கும் வகையில் அமைந்திருந்தன.

ஏனைய மறைபொருள் நாடகங்கள், இசை நாடகங்கள், கூத்துக்கள் என்பனவும் அதன் உயர் தரத்திலேயே அமைந்திருந்தமை சிறப்பான அம்சமாகும்.

ஒரு மதகுருவானவர் தமது மதம் சாராத கலைப்படைப்புக்களை உருவாக்குவதை அன்று சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை இருக்கவில்லை. ஆனால் அடிகளாரால் உருவாக்கப்பட்ட அத்தகைய நாடகங்களும் மக்களைச் சென்றடைந்ததுடன் சகல தரப்பு மக்களினதும் ஆதரவைப் பெற்றன.

குறிப்பாக கதையும் காவியமும், சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி போன்ற ஐம்பெருங்காவியங்களை அடிப்படையாகக் கொண்ட அடிகளாரின் அத்தகைய நாடகங்கள் குறிப்பிடத்தக்கவை.


அதேவேளையில் அரிச்சந்திரா, காத்தவராயன். தர்மபுத்திரன் கூத்து போன்ற பாரம்பரிய நாட்டார் கலைகள், இசை நாடகங்கள் என்பனவும் திருமறைக் கலாமன்றத்தில் மேடையேற்றப்பட்டு ஆதரவளிக்கப்பட்டன.

இதில் 2003ஆம் ஆண்டு திருமறைக் கலாமன்றம் நடத்திய கூத்துப்போட்டி ஒரு முக்கிய நகர்வாகக் கருதப்படுகிறது. இதில் வட்டுக்கோட்டையின் தர்மபுத்திரன், புத்தூரின் அபிமன்யு, வாதரவத்தையின் பப்பரவாகன், நீர்வேலியின் வசந்தன் கூத்து, மாதகலின் காத்தவராயன் முதலிய கூத்துகள் பங்கு கொண்டன. இப்போட்டி பல்வேறு காரணங்களால் சோர்வுற்றிருந்த கூத்துக் கலையை மீண்டும் புதிய உற்சாகத்துடன் முன்னெடுத்துச் செல்லும் நிலையை உருவாக்கியது என்பதை மறுத்துவிட முடியாது.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் வத்திக்கானின் இரண்டாவது கூட்டத்தின் கிறிஸ்தவரல்லாத மக்களுடன் நல்லுறவைப் பேணுவது, சாதாரண மக்களுடன் இணைவது என்ற இரு கோட்பாடுகளிலும் மரிய சேவியர் அடிகளார் திருமறைக் கலாமன்றம் மூலமும் அதற்கு அப்பாலும் பாரிய சாதனைகளை ஈட்டி வெற்றி பெற்றுள்ளார் என்பதாகும்.

அடிகளாரின் அர்ப்பணிப்பான சேவை காரணமாகவும் அவருடன் இணைந்து செயற்படுபவர்களின் சீரிய பணிகள் காரணமாகவும் திருமறைக் கலாமன்றம் இலங்கையின் பல பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் கிளை விட்டுப் பரந்து ஒரு பெரும் விருட்சமாக ஓங்கி நின்று கலைப்பணியாற்றி வருகிறது.

அதே வேளையில் கலைப்பணிக்கு எவ்விதத்திலும் குறைவுபடாத வகையில்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவரது இலக்கியப் பணியும் மேலோங்கி நின்றது.

அவரது நாடகங்கள் 20 இற்கு மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. அதுமட்டுமின்றி இவரின் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கிய நூல்கள் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. இவரது 'பலிக்களம்' என்ற திருப்பாடுகள் நாடகம் மூன்று தடவைகள் நூல் வடிவில் பதிப்பிக்கப்பட்டு மக்களைச் சென்றடைந்தது. இவரின் பிரதியாக்கத்தில் வெளியிடப்பட்ட நாடகங்கள் இவரின்றியே மேடையேற்றக் கூடிய வகையில் அவை சுலபமான மேடையேற்றத்துக்கு ஏற்றவகையில் பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

இவற்றில், இவரால் 'கலைமுகம்' சஞ்சிகைக்கு எழுதப்பட்ட ஆசிரியத் தலையங்கங்கள் ஒரு நூலாக அண்மையில் வெளிவந்துள்ளது. இவற்றில் கையாளப்பட்ட சங்க இலக்கியப் பாடல்களும் அறிவியல் போதனைகளும், தேவார திருவாசகங்களும் மதங்களின் எல்லைகளைக் கடந்து அறிவியல் பயணத்துக்கும் மனிதகுல மேம்பாட்டுக்கும் இலக்கிய முன்னெடுப்புகளுக்கும் வழிகாட்டும் வகையில் அமைந்திருந்தன. 2020இல் இவரது நாடகங்கள் 'மறை பொருள் நாடகங்கள்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இவரது இலக்கியப் பணியின் இன்னுமொரு உச்சமாக 1990இல் வெளியாகிய 'கலைமுகம்' கலை இலக்கிய, சமூக இதழ் கடந்த 30 வருடங்களாக தொடர்ந்து இலக்கியப் பணியாற்றி வருகிறது. தொன்மை வாய்ந்த தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் முதல் யதார்த்த, நவீனத்துவ, பின் நவீனத்துவப் படைப்புகள், விமர்சனங்கள் என இலக்கியத்தின் பல்வேறு வளர்ச்சிப் படிகளுக்கும் களம் கொடுத்து அது முழுமையான இலக்கியப் பணியாற்றி வருகிறது. பாரம்பரியக் கலை வடிவங்கள், நவீன கலைப் படைப்புகள், நல்ல சினிமாப் படங்கள், குறும்படங்கள், நூல்கள் என்பன பற்றிய அறிமுகங்கள், விமர்சனங்கள் என்பன மூலம் 'கலைமுகம்' பல படைப்புகளை மக்கள் மயப்படுத்துவதில் பாரிய பங்காற்றி வருகிறது. அது மட்டுமின்றிப் பல படைப்பாளிகளை அறிமுகப்படுத்தி ஊக்குவிக்கவும் அது தயங்கவில்லை. அடிகளாரால் தொடக்கப்பட்டு நெறிப்படுத்தப்பட்டு தொடர்ந்து வெளிவரும் 'கலைமுகம்' தென்னாசியப் பிராந்தியத்திலேயே வெளிவரும் முக்கிய மக்கள் மயப்படுத்தப்பட்ட தரமான ஒரு கலை, இலக்கிய ஊடகமாக விளங்கி வருகிறது.

ஒரு உண்மையான துறவி எப்படி இருக்கவேண்டுமென்பதைத் தனது வாழ்வின் மூலமும் வாழ்நாளில் மேற்கொண்ட பணிகள் மூலமும் முன்னெடுத்தவர் மரிய சேவியர் அடிகள் என்றால் மிகையாகாது. துறவறம் என்றால் எல்லாவற்றையும் துறப்பதல்ல. ஆனால் அவர் தன் சொந்த நலன்களைத் துறந்து தனது வாழ்வு, ஆற்றல், உழைப்பு அத்தனையையும் மக்கள் பணிக்காக அர்ப்பணித்து ஒரு இமயமாக உயர்ந்து நின்றார்.

அவரது நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், படைப்புகள், சாதனைகள் என்பன அவர் மறைவின் பின்பும் மக்கள் பணியை முன்னெடுக்கும் என்பது மட்டுமின்றி அவரின் உன்னதமாக இலக்குகள் நோக்கிய பயணத்தை அவரால் உருவாக்கப்பட்ட "திருமறைக் கலாமன்றம்", "கலைமுகம்" ஆகியன தொடர்ந்து முன்னெடுக்கும். அவற்றின் மூலம் அவர் என்றென்றும் மக்கள் மத்தியில் மேலோங்கி நிலைத்திருப்பார் என்பது உறுதி. •

## எதை மறப்போம், எதை விடுப்போம்...

வானதூதர் முழங்கிய எக்காளச் சத்தம் கேட்டு
பனி போர்த்திய இருண்ட வானைக் கிழித்து
தோன்றிய நட்சத்திரத்தின் கீழே
ஒரு பகல்
மனுமகனைப் பூமிக்குச் சுமந்து தந்ததென
சொல்லக் கேட்டோம் - அந்த
எக்காளச் சத்தங்கள் கேட்டிலோம்.

காணுமிடமெல்லாம் கலைகள் விளையாடிய
எமது வானத்தையும் பூமியையும்
கருமிருட்டுக் கவிந்த காலத்தில்
கலைத்தூதாக எக்காளம் ஏந்தி
ககனமெல்லாம் முரசறைய
எங்கள்முன் வந்த சூரியன்தானே நீ?

கண்டோம்,
ஆயிரமாயிரம் கண்களால் கண்டோம்.
கேட்டோம்,
ஆயிரமாயிரம் செவிகளால் கேட்டோம்.

ஒன்றா, இரண்டா,
ஒரு பத்தா, பல நூறா...,
எதையென்று எடுத்துச் சொல்வோம்,
எந்தப் பெட்டகத்தில் அடுக்கி வைத்துப்
பவுத்திரம் செய்வோம்?

சிறகெடுத்துப் பறந்து பறந்து
பறவைகளையும் தேனீக்களையும்
முந்திக்கொண்டு
பட்டி தொட்டியெல்லாம் சென்று சேகரித்த
அத்தனை கலை முத்துக்களையும்
மாலையாக்கி, மரபுக்குச் சூட்டி
உலகுக்கு அழகு காட்டிய
கலைச் சிற்பியல்லவா நீ?

பறிபோன கலைகளையெல்லாம்
பல்லக்கில் சுமந்து வந்து
ஆரத்தழுவி உச்சி முகர்ந்து
எங்கள் -
காதிற் சொன்ன கதைகளெல்லாம்
காலம் முழுக்க வானம் நிரப்பி
வாசம் கமழும் வரலாறாக
தேசம் பலதும் உள்ளதே ஐயா.

எதை மறப்போம்,
எதை விடுப்போம்...
அப்படி என்ன அவசரம் தந்தையே...

வா, மீண்டும் வா!
கலைப்பரிதிகள் பூட்டிய தேரிலேறி வா.
நீ கற்பித்தவைகளை நாங்கள்
களரியாடுவதைக் காணவேனும்
இன்னுமொருக்கால் வா தந்தையே.

- திருமறைக் கலாமன்றம், நோர்வே -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகள்
## (03.12.1939 - 01.04.2021)



# பாரம்பரியக் கலைப் பரிமாணங்களின் மீளெழுச்சிக்குப் பங்காற்றியவர்

**குயின்ரஸ் துரைசிங்கம்**

***1965***ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட திருமறைக் கலா மன்றம், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையிலும், உலகின் பல நாடுகளிலும், அளப்பரிய கலைப் பணிகளைப் புரிந்து வருகிறது.

எம்மிடமுள்ள மண் மற்றும் மொழிப்பற்றைத் தக்க வைத்து, அழிந்துபோய்விடுமென வரலாற்றாய்வாளர்களும் பற்றாளர்களும் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்க, அதற்கு முத்தாய்ப்பாய் வழிதேடிய சித்தர் எமது இயக்குநர் அருட்கலாநிதி மரியசேவியர் அடிகளார். 'கலைவழி இறைபணி' என்ற தாரக மந்திரத்துடன், தான் கொண்ட இலக்கை நோக்கி மிகுந்த உழைப்புடனும் தியாகத்துடனும் வைராக்கியத்துடனும் பயணித்தார். அவரது இறை பக்தியும், மண் மற்றும் மொழிப் பற்றும், மனிதத்தின் மீது அவர் கொண்டிருந்த மனிதாபிமானமும், அவருக்கு அந்த உறுதியைக் கொடுத்தது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநரான அருட்கலாநிதி மரிய சவிரி அடிகள், இலங்கை, இந்திய பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும், பிலிப்பைன்ஸ் போன்ற உலகளாவிய பல்கலைக் கழகங்களிலும் சைவ சித்தாந்த நெறிக்கான விசேட வருகைதரு விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார். பல பல்கலைக் கழகங்களின் கௌரவ பேராசிரியராகவும் ஆலோசகராகவும் பணியாற்றி வந்தார். கனடா, ஜேர்மனி, செக்கோசெலவாக்கியா போன்ற சில நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் கலைப் பிரிவில், இவரது பெயரைப் பாவிப்பதற்கு அனுமதித்தாலே போதும் என்று இவரிடம் விசேட அனுமதி பெற்றுக்கொண்ட அரிய வரலாற்றுப் பெருமைகளும் இவருக்கு உண்டு. கனடாவில் புகழ்பெற்ற பல்கலைக் கழகமொன்றின் கலைப் பிரிவில், இவரது புதுவடிவ நுண்கலை ஆற்றுகைத் தயாரிப்பும் தகவலும், ஒரு தனிப் பிரிவாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்திலுள்ள யோர்க் பல்கலைக் கழகத்தின் விசேட அழைப்பில், இயக்குநர் அவர்கள் பல தடவை வருகை தந்து விசேட விரிவுரைகளை வழங்கியதுடன், சில தடவைகள், இலங்கையிலிருந்து பல்லின கலைக் குழுக்களை அழைத்து வந்து, பல்கலைக்கழக கலைப்பிரிவு மாணவர்களுக்கு எமது தாயகத்தின் பாரம்பரியக் கலைகளை நேரடியாக நடித்துக் காண்பித்து, பட்டறைகளையும் பயிற்சி நெறிகளையும் வழங்கியதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

மன்ற இயக்குநரின் கலை, கல்வி, தமிழ்மொழி, சைவசித்தாந்தம், பாரம்பரியக் கலைப் பரிமாணங்களின் மீளெழுச்சி போன்றவற்றிற்கான அளப்பரிய பங்களிப்புக்கள் அபாரமானவை. கனடா தமிழ் எழுத்தாளர் இணையம், அடிகளாருக்கு **கலாமேதை** என்று பட்டமளித்து கேடயம் வழங்கியது. கனடா இந்துமாமன்றத்தின் சார்பில், **கலைஞானவாரிதி** என்னும் பட்டம் இயக்குநருக்கு வழங்கப்பட்டது. கனடா இந்துமாமன்றத்தின் 1998-99ஆம் ஆண்டிற்கான அகில உலக சைவ மாநாட்டில் அருட்கலாநிதி மரிய சேவியர் அடிகள் இலங்கையிலிருந்து வந்து கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்றியுள்ளார். அடிகளாரின் ஐம்பதாவது குருத்துவ விழாவை, மிகச் சிறந்த கலைவிழாவாக கனடாவில் கொண்டாடியபோது, கனடா திருமறைக் கலாமன்றம், அடிகளாருக்கு கௌரவப் பட்டத்தை வழங்கியது. கலைச்சிற்பி, கலைஞானி

> “
> குருத்துவப் பணி செய்யாமல் கூத்துப் போட்டுத் திரிகிறார் என்று அங்கும் இங்கும் குரலெழுந்த போதெல்லாம், அதைக் கண்டுகொள்ளாமல், கலைவிரும்பிகளிடமெல்லாம் எம் கலையைத் தக்கவைக்கக் கையேந்தி, யாரும் கணக்கிலெடுக்காத தெருக் கலைஞரையும், வருவாய் தராத துறையென்பதால் வீட்டில் மதிப்பில்லாமல் முடங்கியிருந்த கூத்துத்துறை சார் ஆற்றல் கொண்ட அத்தனை கெட்டிக்காரர்களையும் தேடித்தேடி ஊக்கமளித்தவர்.
> ”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற பல பட்டங்களுடன், பேராசிரியர் டாக்டர் மரிய சேவியர் அடிகள் உலகளாவிய ரீதியில் செயற்படும் திருமறைக் கலாமன்றத்தின் கிளைகள் அனைத்தையும் சீராக நிர்வகித்து, வழி நடத்தி வந்தார், தொடர்ந்தும் அவரது ஆளுமையும் பயிற்சியும் அதே வழி காட்டுதலை வழங்க வழிசமைத்திருக்கிறார்.



குருத்துவப் பணி செய்யாமல் கூத்துப் போட்டுத் திரிகிறார் என்று அங்கும் இங்கும் குரலெழுந்த போதெல்லாம், அதைக் கண்டு கொள்ளாமல், கலைவிரும்பிகளிடமெல்லாம் எம் கலையைத் தக்க வைக்கக் கையேந்தி, யாரும் கணக்கிலெடுக்காத தெருக் கலைஞரையும், வருவாய் தராத துறையென்பதால் வீட்டில் மதிப்பில்லாமல் முடங்கியிருந்த கூத்துத்துறை சார் ஆற்றல் கொண்ட அத்தனை கெட்டிக்காரர்களையும் தேடித்தேடி ஊக்கமளித்து, பூஜ்யத்திலிருந்து ஆரம்பித்து, திருமறைக் கலாமன்ற விதை நட்டு, இரவுபகலாகக் கண்ணீர் ஊற்றி வளர்த்த தொலைநோக்குப் பார்வைகொண்ட பிதாமகன் எங்கள் இயக்குநர். மண்ணின் மைந்தர், மண் பற்றாளர், பாரம்பரியக் கலைகளின் அழிவைத் தடுத்து, மீண்டும் உயிர் கொடுத்து மீட்டுவந்த கலைச்சிற்பி. எமது பாரம்பரியக் கலைகளுக்கான ஒரு தீர்க்கதரிசி என்றும் கூறலாம்.

அவரது வழிகாட்டலில், 1993இல் கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட திருமறைக் கலாமன்றத்தின் கனடியக் கிளை, இன்றுவரை இன மத பேதங்களைக் கடந்து, பல்வேறு கலைப் பரிமாணங்களின் ஒரு பாலமாக, மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை கூறும்:

*அறமெனப் படுவது யாதெனக்கேட்பின்*
*மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்*
*உண்டியும் உடையும் உறையுளும் அல்லது*
*கண்டதில்லை.*

அறம் என்பது நான் என்ற தனிமனித செயற்பாடுகளும் புகழும் சார்ந்ததல்ல. தேவைப்படுவோருக்கெல்லாம் உணவும் உடையும் உறையுளும் கொடுப்பதே உலகிற் சிறந்த அறம் என்பதே இதன் அர்த்தம்.

அறம் போற்றி வாழ்ந்த அடிகளார், திருமறைக் கலாமன்றத்தை, இலாபநோக்கற்ற அரச சார்பற்ற தன்னார்வத் தொண்டர் அமைப்பாக (NGO) இலங்கையில் பதிவு செய்து, அதன் மூலம், வசதி குறைந்த ஏழைகள் மற்றும் கைவிடப்பட்டவர்களுக்கு விளம்பரமற்ற வகையில் அறப்பணி செய்தார். 2009இல் இடம்பெற்ற கொடிய போர் மற்றும் இனஅழிப்பின் உச்சத்தில், இலட்சக்கணக்கான எம் இரத்த உறவுகள் முட்கம்பி வேலிபோட்ட மனிக்பார்ம் போன்ற பல பாரிய திறந்த சிறைகளில் அடைக்கப்பட்டு, பட்டினிச் சாவையும் கொடிய தொற்றுநோய் அவலத்தையும் சந்தித்தபோது, அந்த முகாமுக்குள் சென்று அடிப்படை உதவிகளை வழங்க அனுமதிக்கப்பட்ட முதல் ஒருசில அமைப்புக்களில் திருமறைக் கலாமன்றமும் ஒன்றாக இருந்தது. இப்படி வேகமாக அனுமதி பெற்று மக்களுக்கு உதவ முடிந்தமைக்கான காரணம், அடிகளாரின் அறம் சார்ந்த பணிகளும் நீதியும் நேர்மையும் மிக்க தொடர்பாடல்களுமே என்றால் அது மிகையல்ல.

அடிகளாரின் ஆலோசனை மற்றும் திட்டமிடலில், 2016ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில், கனடா-ரொறன்ரோவில் **சர்வதேச கலைப்பாலம்** என்ற நிகழ்வை, கனடா திருமறைக் கலாமன்றம் வெற்றியுடன் முன்னெடுத்தது. தலை சிறந்த ஐந்து தாயகக் கலைஞர்கள், கனடாவிற்கு கலைப்பயணம் மேற்கொண்டு வெற்றியுடன் தாயகம் திரும்பினர்.

2020ஆம் ஆண்டு ஒக்ரோபரில், கனடா திருமறைக் கலாமன்றம் அங்குரார்ப்பணம் செய்து ஆரம்பித்த **கலைப்பாலம் பயிற்சி மையத்தின்** *(Bridging Communities through Art and Beyond)* ஆரம்ப நிகழ்வு, மீண்டும் ஒரு சர்வதேச கலைப்பாலமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளதுடன், அடிகளார் அத்திவாரமிட்டுள்ள இக் கலைப் பாலம், எம் பாரம்பரிய தாயகக் கலைகளை, புலம்பெயர் மண்ணில் ஆழமாக நடுவதற்கான காத்திரமான படிக்கல்லாக அமையுமென்பதை, கல்மேல் எழுத்தாக இங்கு பதிவு செய்வதில் பெருமையடைகிறோம்.

புலம்பெயர்ந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் இப்பனிப் புலங்களில் பயிரிடப்பட்ட எமது இனம், மிகவும் சுதந்திரமாக காலூன்றி, வேரூன்றி, தோளுயர்த்தி தனி இனமாக வாழ, இந்த நாடுகள் எமக்கு வழி சமைத்துத் தந்ததுடன், எமது பாரம்பரிய கலைகளை வளர்த்துக் கொள்ளவும் இடமளித்தது.

திருமறைக் கலாமன்றத்தின் இயக்குநரான, பன்மொழிப் பாண்டித்தியம் பெற்ற அண்ணாவியார், புலவர், அருட் கலாநிதி மரிய சவிரி நீக்கிலாப்பிள்ளை அடிகள் அவர்களது இழப்பு, தமிழ் மொழிக்கும் மண்ணுக்கும் கலைக்கும், குறிப்பாக எமது பாரம்பரிய தமிழ் கலைகளுக்கும் மிகப்பெரிய இழப்பு.

தொடர்ந்தும் அவரது ஆலோசனை வழிகாட்டல் மற்றும் தொலைநோக்குப் பார்வையுடனான பல திட்டமிடல்கள் மூலம் என்றும் எம்மோடு வாழ்வார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் தலையங்கங்களின் ஊடாக 'காலத்தின் தடங்களை' பதித்துச் சென்ற மரிய சேவியர் அடிகள்



சி. விமலன்

ஈழத்து கலை, இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஒருவராக விளங்கியவர் திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குநருமான நீ.மரிய சேவியர் அடிகளார் அவர்கள். 1980களின் தொடக்கத்தில் திருமறைக் கலாமன்றம் வெளியிட்ட நூல் ஒன்றின் பெயர் தான் 'கலைமுகம்'. பின்னர் மன்றத்திற்கான பருவ இதழ் ஒன்றை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலில் 'கலைமுகம்' என்ற பெயரே பொருத்தமாக இருக்கும் எனக் கருதியதால் காலாண்டு இதழுக்கும் 'கலைமுகம்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அதன் வருகை குறித்து

"கலையின் முகங்கள் பல. ஆடலும் ஒரு முகம். நல்ல பாடலும் ஒருமுகம். ஓவியமும் ஒரு முகம். சிறந்த காவியமும் ஒரு முகம். சிற்பமும் ஒரு முகம். வார்ப்புச் சிலையும் ஒரு முகம். நாடகமும் ஒரு முகம். தனி நடனமும் ஒரு முகம். இவை பற்றிய அறிவைப் பரப்பி அவைகளின் அழகையும் எடுத்துரைக்கப் பிறந்துள்ள புதுமுகமே கலைமுகம்"

என்று இதழின் முதலாவது ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கலைமுகம்' ஆசிரியராக விளங்கிய மரிய சேவியர் அடிகளார் இந்த இதழ்களில் எழுதி வந்த ஆசிரியர் தலையங்கங்களின் தொகுப்பே 'காலத்தின் தடங்கள்' என்ற இந்த நூல் ஆகும். 1990 ஆம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கும் கலைமுகம் இதழ் 2020 ஆம் ஆண்டு 30 வருடங்களைப் பூர்த்தி செய்ததையும் அடிகளாரது எண்பதாவது அகவையை முன்னிட்டும் இந்த நூலை திருமறைக் கலாமன்றம் வெளியிட்டுள்ளது. இந்நூலில் முதலாவது இதழ் தொடக்கம் 68 ஆவது இதழ் வரையிலான ஆசிரியர் தலையங்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

ஒரு பத்திரிகை அல்லது சிற்றிதழின் நோக்கத்தையும் செல்நெறியையும் தெரிந்து கொள்வதற்கு அதில் வரும் ஆசிரியர் தலையங்கம் முக்கியமானது. இன்று இலக்கியத்தின் பல்வேறு வடிவங்களுள் ஆசிரியர் தலையங்கமும் ஒன்றாகியுள்ளது. அதனால் தான் அவற்றின் முக்கியத்துவம் கருதி தனி நூலாக அவை வெளிவர ஆரம்பித்தும் இருக்கின்றன. ஒரு இதழாசிரியருடைய கருத்துநிலை என்ன? காலப் போக்கில் அவர் எத்தகைய கருத்தியல் ரீதியான மாற்றங்களுக்கு ஆளாகின்றார் என்பதனை தெரிந்து கொள்வதற்கு ஆசிரியர் தலையங்கங்கள் துணை புரிகின்றன.

அணிந்துரையில் கலாநிதி சி.ரகுராம் அவர்கள்

"சொல்ல வேண்டியவைகளைத் தன்மையாய்ச் சொல்லும் அதேவேளை, தான் சொல்பவற்றை எவரும் ஏற்கும் வண்ணமும் முன்வைப்பதென்பது எல்லோருக்கும் வாய்த்திராத திறமை. அதற்கு அறிவும் அனுபவமும் அடுத்தவர்களைப் புரிந்து கொள்ளும் பக்குவமும் கைவரப் பெற வேண்டும். நீ.மரிய சேவியர் அடிகள் அந்தத் தகுதி நிலைகள் அனைத்தும் கொண்டவர்"

என்று குறிப்பிடுகின்றார்.

அந்தவகையில் முப்பது வருடங்களாக வெளிவந்து கொண்டிருக்கும் 'கலைமுகம்' சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதிய மரிய சேவியர் அடிகளாரின் கருத்துநிலைகளைப் புரிந்து கொள்வதற்கு ஏதுவாக அவற்றை கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. திருமறைக் கலாமன்றச் செயற்பாடுகள்
2. கலையும் இலக்கியமும்
3. போரும் அமைதியும்
4. அரசியலும் இனநல்லிணக்கமும்
5. சுற்றுச்சூழலும் காலநிலை மாற்றமும்
6. சமூகப் பிரச்சினைகள்
7. ஆளுமைகள்
8. உலகமயமாக்கல்
9. புலம்பெயர்ந்தோர்
10. ஏனையவை

அடிகளாரைப் பற்றி குறிப்பிடும் பொழுது திருமறைக் கலாமன்றம் வேறு அவர் வேறு என்று பிரித்து நோக்க முடியாது. எனவே மன்றத்தின் செயற்பாடுகள் வழியாகவும் அவரை நாம் புரிந்து கொள்ளலாம். அந்தவகையில் திருமறைக் கலாமன்றச் செயற்பாடுகளில் அவரது கருத்துநிலை என்ன என்பதை முதன்மைப்படுத்தி நோக்க வேண்டியுள்ளது. திருமறைக் கலாமன்றத்தின் பருவ இதழாக 'கலைமுகம்' காணப்படுகின்றமையினால் அம்மன்றத்தின் செயற்பாடுகளை அது ஆவணப்படுத்தி வருவது ஆச்சரியமில்லை. இதனை ***2010 இதழ் 50*** இல் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"ஈழத் தமிழ் மக்களின் கலை, இலக்கிய, பண்பாட்டு, சமூக, வாழ்வியல் சார்ந்த படைப்புக்களை வெளிக்கொண ரும் இலக்கைக் கொண்டது கலைமுகம். அதேவேளை இளம் எழுத்தாளர்களை இனங்கண்டு ஊக்குவித்தல், நடுநிலை நின்று ஆக்கங்களைத் திரட்டி வெளியிடல், கலைஞர்களை, குறிப்பாக இலைமறை காய் போல் வாழ்ப வர்களையும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களையும் அறிமுகம் செய்தல். ஒரு சில துறைகளிலாவது சமூக மாற்றங்களை ஏற்படுத்தல்,* ***மன்றத்தின் செயற்பாடு களைப் பதிவு செய்தல்*** *போன்ற நோக்கங்களும் கலை முகம் வெளிவருவதற்கு தூண்டுகோல்களாக அமைந் திருந்தன"*

எனக் குறிப்பிடுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

*1*

திருமறைக் கலாமன்றம் இலங்கைத்தீவில் தமிழர் வாழும் அனைத்துப் பகுதிகளிலும் மன்றம் அமைத்து பண்பாட்டுத் தளத்தில் நின்று கலைச் சேவை செய்து வருகின்றது. வேறு ஒரு வகையில் கூறினால் திருமறைக் கலாமன்றம் உறவுப் பாலங்களை அமைப்பதை தனது நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் நாற்பதாண்டு நிறைவை முன்னிட்டு அடிகளார் எழுதிய தலையங்கம் ஒன்றில்

*"நமது நாட்டில் வாழ்ந்த, இன்னும் வாழ்ந்து கொண்டி ருக்கின்ற பல்வேறு கலைஞர்கள் வேற்றுமைகள், பாகுபாடு கள் பாராட்டப்படாது. இனங்காணப்பட்டு ஊக்குவிக்கப் பட்டு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளனர். கலைஞர்களைப் பொறுத்தமட்டில் வாழும் பொழுதே போற்றப்பட வேண் டும் என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வந்துள்ளது.*

*கலைஞன் வாழ்வு எப்படியும் இருக்கலாம் என்பதனை மாற்றி, இப்படி வாழ்ந்தால் மட்டும் தன்மானப் பெருமிதத் துடனும் சுயமரியாதையுடனும் சமூக மதிப்பைப் பெற்று அதன் வாழ்வைச் சீரமைத்துச் செம்மைப்படுத்தும் தகுதி யைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற கொள்கைக்கு இணங்க கட்டுப்பாடு நிறைந்த அறநெறிக்குள் தனது கலை ஞர்களை வளர்க்க தீவிர முயற்சிகளை எடுத்துள்ளது. பலன்களும் கண்டுள்ளது.*

*அனைத்துக் கலை நிறுவனங்களும் நிலைகுலைந்து, செயலிழந்து இருந்த போர்க்காலத்தில் முதலாக தனது உச்ச செயற்பாடுகளில் - கருத்தரங்குகள், கலை விழாக்கள், பயிற்சிப் பட்டறைகள், நூல் வெளியீடுகள் போன்றவை களில் - தீவிரமாக ஈடுபட்டு கலைகளைத் துயர் துடைத்து ஒத்தணம் பிடிக்கும் கருவிகளாகப் பயன்படுத்தியிருந்தது"*

**ஏப்பிரல் - ஜூன் 2005, இதழ் : 41**

மேலும் புலம்பெயர் திருமறைக் கலாமன்றத்தினரின் பங்களிப்பையும் குறைத்து மதிப்பிட முடியாது.

*"1996இல் 'கலைமுகம்' வெவ்வேறு நாடுகளிலும் நகரங்களிலும் முதல் இதழ் லண்டனிலும் இவ்விதழ் ரொறொன்ரோவிலும் அச்சேறுகின்றது. இம்முயற்சி திருமறைக் கலாமன்றத்தின் உலகளாவிய தன்மைக்குச் சான்று பகர்கின்றது என்பது ஒரு புறம், தாயகத்துக் கலை இலக்கியப் படைப்பாளிகளையும் புலம் பெயர்ந்து வாழும் இத்துறை சார்ந்தோரையும் ஒன்றிணைக்கும் பாலமாகத் திருமறைக் கலாமன்றம் மாறியிருக்கின்றது என்பது மறுபுறம்.*

**சித்திரை - ஆனி 1996, இதழ் : 20**

திருமறைக் கலாமன்றக் கலைஞர்கள் *1973* ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து தென் இந்தியாவுக்கு இரண்டு வாரப் பயணத்தை மேற்கொண்டமை, *1997* இல் திரு மறைக் கலாமன்றத்து வடலிக்கூத்தரின் ஐரோப்பிய முதற் கலைப்பயணம், *1998* இல் மேற்கொண்ட இரண்டாவது கலைப்பயணம் நிறைவு பெற்றிருந்ததும் குறிப்பிட வேண்டியவை.

போர்ச் சூழலிலும் தனது கலைப்பணிகளில் இருந்து ஒய்வு பெற்ற வரலாறு திருமறைக் கலாமன்றத்திற்கு இல்லை. உச்சி மீது வான் இடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமின்றி நமது கலைப்பணி இறையருளால் தொடரும் என்று அவர் ஓரிடத்தில் குறிப்பிடுகின்றார்.

*"இன்னும் சொல்லப்புகின், இத்தகைய பின்னணியில் தான் அது இன்னும் வேகமாகவும் அர்ப்பணத்துடனும் இயங்குகின்றது. தனது இலக்கில் இருந்து சற்றும் வில காது சூழ்நிலைக்கேற்ப தன்னை அது தகவமைத்துச் செயற் பட்டுக் கொண்டு வந்துள்ளது. வருகின்றது.*

*சிட்னி, மெல்போண், இலண்டன், பாரிஸ் போன்ற உலக நகரங்களில் அண்மைக்காலம் அங்குள்ள திருமறைக் கலா மன்றத்தினரால் நடத்தப்பட்ட கலைநிகழ்ச்சிகள், குடா நாட்டிலும் வன்னியிலும் திருகோணமலையிலும் வழமை யான கலைச் செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாச் சூழ்நிலையிலும் திருமறைக் கலாமன்றம் என்னும் உலகக் கலைக்குடும்பம் பரந்தும் விரிந்தும் தனது இலட்சியக் கனவுகளை ஒருமை இயல்பினாலும் உறவினாலும் அடைய முனைகின்றது என்பதற்கு சான்று பகர்கின்றன"*

**ஜூலை - டிசம்பர் 2006, இதழ் : 44**

திருமறைக் கலாமன்றச் செயற்பாடுகள் குறித்து சில விமர்சனங்கள் எழுந்த பொழுது

*"நாம் எவ்வளவு விரிவுபட்டு இயங்கினாலும் நமக்கென ஒரு சில வரையறைகளை வகுத்துள்ளோம். அவைகளைக் கடக்க நாம் விரும்பவில்லை. இதைப் புரிந்து கொள்வது ஒரு சிலருக்குக் கடினமாக உள்ளது"*

**ஆடி - புரட்டாதி 1993, இதழ் : 09**

என்று தலையங்கத்தில் பதிவு செய்தாலும் அதே தலை யங்கத்தில் இன்னொரு இடத்தில்

*"திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் இன்று பல்வகைப்பட்ட எதிரொலிகளை எழுப்பிய வண்ணம் உள்ளன. பாராட்டுபவர் பலர். வசை கூறுபவர் சிலர். பக்கச் சார்பற்ற ஆக்கபூர்வமான விமர்சனங்களை அளிக்கும் அன்பர்களும் வேறு உளர். எல்லோருடைய கருத்துக்களை யும் நன்கு எடை போட்டு, கொள்ள வேண்டியவற்றை கொள்ளும் நோக்குடன் வரவேற்கிறோம். கலைப்பணியில் நிறைவோடு வளர அவற்றைக் குறை தீர்க்கும் ஊன்று கோல்களாகக் கணிக்கிறோம். இசையும் வசையும் வளர்ச்சி யின் அறிகுறி என்று பெருமிதம் கொள்ளுகின்றோம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கூறுவதில் இருந்து விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையினையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதேவேளை

"திருமறைக் கலாமன்றம் தனது இலட்சியப் பணியில் நாளையும் சிறப்புற இயங்க வேண்டுமெனின், அது கலை யார்வமுள்ள இளம் தலைமுறையினரை இணைத்துக் கொள்ள வேண்டும். இவர்கள், கலைப்பணி ஈடுபாட்டால் கரடு முரடான பாதையின் ஊடாகத் தியாக ஒளி ஏந்திச் சென்றால் மட்டும், உள்ளத்தில் உண்மை ஒளியும் உலக சமூகத்தில் புது வழிகளையும் சமைத்து வரலாற்றுப் பெருமையினைத் தேடிக் கொள்ளலாம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டியது இன்றியமையாதது"

**ஆடி - புரட்டாதி 1996, இதழ் : 21**

என்று எதிர்காலவியல் நோக்கில் முக்கியமானதொரு கோரிக்கையையும் அவர் முன்வைத்துள்ளார்.

**2**

அடிகளாரோடு அத்யந்தத் தொடர்புடைய துறைகளாக விளங்கும் கலையும் இலக்கியமும் குறித்து கணிசமான தலையங்கங்கள் தீட்டப்பட்டுள்ளன.

அடிகளாரின் கலை குறித்த நோக்கத்தைப் புரிந்து கொள்வதற்கு

"கலை - அது எக்கலையாக இருப்பினும் - சமுதாய மேம்பாட்டுக்கு வழிவகுக்க வேண்டும். சமூக நலன் என்னும் இக்குறிக்கோள் திருமறைக் கலாமன்றத்தின் 'கலை வழி இறைபணி' புரியும் செயற்பாடுகளுக்கு முனைப்புக் கொடுத்து வந்துள்ளது"

**ஜூலை - டிசம்பர் 2005, இதழ் : 42**

மேற்படி எடுத்துக்காட்டே போதுமானதாக உள்ளது.

அத்தோடு ஏன் கலைகள் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதற்கான காரணத்தையும் தலையங்கத்தில் அவர் முன்வைக்கின்றார்.

"ஒரு இனத்தின் பண்பாட்டு அடையாளங்களுள், சிறப்பானவையாக கருதப்படுபவை அதன் கலை வடிவங்கள். அவை, அவ் இனத்தின் வரலாற்றுடன் ஒன்றித்து, காலத்துக்கு ஏற்ப தகவமைக்கப்பட்டு, அவ்வினத்துக்கே தனித்துவமான இயல்புகளை எடுத்துக் காட்டும் ஆற்றல் படைத்தவை. கலைத்துறையில் ஏற்படும் பாதிப்பு, அவ் இன இருப்பின் அழிவையோ, மறைவையோ, திரிபையோ தீவிரப்படுத்தக் கூடிய வலுப்படைத்தது"

**ஜூலை - செப்ரெம்பர் 2012, இதழ் : 54**

அத்தோடு இருப்புக் குறித்த அச்சத்தில் வாழும் தமிழினம் கலைகள் குறித்து செய்ய வேண்டிய இரண்டு முக்கிய விடயங்கள் குறித்து கூறியுள்ளதோடு அவற்றைச் செயற்படுத்துவதற்கான அவசியத்தையும் முன்வைத்துள்ளார்.

"ஒருபுறம், நமது பாரம்பரியக் கலை வடிவங்கள் தேய்ந்து மறைந்து விடாதிருப்பதற்குரிய வழிவகைகளை வகுக்க வேண்டும். மறுபுறம், அவைகள் உயிர்த்துடிப்புடன் வாழ்வதற்கான எதிர்காலத்தை உறுதிப்படுத்த வேண்டும். இந் நோக்கங்கள் நிறைவேறுவதற்கான ஆய்வுகளை மேற்கொண்டு, தேவையான திட்டங்களை வகுத்து அவைகளை நடைமுறைப்படுத்த முனைப்புடன் செயற்பட வேண்டியது இன்றைய காலத்தின் சவால்"

**ஜூலை - செப்ரெம்பர் 2012, இதழ் : 54**

அதேவேளை கலைகள் எவ்வாறு அமைதிக்கு வழிவகுக்கின்றன என்பதையும் கூறியுள்ளார்.

"கலைகளால் மட்டும் நாட்டில் அமைதியை உருவாக்கி விட முடியும் என்பது திருமறைக் கலாமன்றத்தின் கருத்தன்று. நடுநிலை தவறா அரசியல் தீர்வினதும் பொருளாதார சீர் முறையினதும் இன்றியமையாத் தன்மை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதே. ஆனால் அமைதிக்கு அடிப்படையான மனப்பக்குவத்தை படிப்படியாகவும் ஆணித்தரமாகவும் மக்கள் உள்ளத்தில் வேரூன்றச் செய்யும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. அரசியல் துறையில் அமைதியைச் சாதிப்பதற்கு கலைகளின் ஆன்மீக சக்தி உறுதுணை புரிகின்றது என்பதே திருமறைக் கலாமன்றத்தின் நிலைப்பாடு"

**ஜூலை - டிசம்பர் 2005, இதழ் : 42**

அடிகளாரது இலக்கியம் குறித்த பார்வையும் விசாலமானது

"இலக்கியம் என்பது சிந்தனைச் செறிவிலும், கற்பனை வளத்திலும், சூழல் வரையறை செய்யும் பட்டறிவிலும் உருவாகும் கலைப்படைப்பு"

**ஜனவரி - ஜூன் 2007, இதழ் : 45**

என்று இலக்கியத்தை வரையறை செய்கின்றார்.

திருமறைக் கலாமன்றம் கலைகளின் பங்களிப்பாக நடத்திய நாட்டுக்கூத்து விழா, நாடகக் கண்காட்சி, சிற்பக் கண்காட்சி போன்றவற்றை 'கலைமுகம்' ஆவணப்படுத்தியதன் மூலம் இலக்கியப் பங்களிப்பாகவும் அவற்றை மாற்றியுள்ளது. அந்தவகையில்

"திருமறைக் கலாமன்றம் 34 பிரிவுகளைக் கொண்ட ஓர் அமைப்பு. அவற்றுள் நாடகப் பிரிவும் ஒன்று. இம்மன்றம் இன்றைய சூழலில் நமது மண்ணில் பரவலாக மலர்ந்து பொலிந்து வளமுடன் நடைபோடும் நாடகப் படைப்புக்களை உலகளாவப் பரப்பும் வாய்ப்பும் பொறுப்பும் கொண்டுள்ளது... அதன் நாடகப் பணியின் ஒரு சிறிய வெளிப்பாடே நாடகமும் அரங்கியலும் என்ற சிறப்புப் பருவ இதழாக வெளிவரும் இக்கலைமுகம்"

**தை - பங்குனி 1994, இதழ் : 11**

பிறிதொரு தலையங்கத்தில்

"அறுபதுகளிலும் எழுபதுகளிலும் நமது மன்றம் நாடகத்துறையில் ஆற்றியவைகளைப் பற்றிப் பேசவோ எழுதவோ முடியாத நாடக விமர்சகர் பலர் உண்டு. அவைகட்கு ஆதாரப் பத்திரங்கள் இல்லையே என்ற சாக்குப் போக்குச் சொல்லப்படுகின்றது. அவைகளைத் தேடி எடுப்பது தான் ஆய்வாளர்களின் கடமை என்பதை அவ்வறிஞர் மறந்து விடுகின்றனர். அதே நிலை நமது இன்றைய பாரிய கலை முயற்சிகளுக்கும் நேரக்கூடாது என்று பெரிதும் விழைகின்றோம்"

**சித்திரை - ஆனி 1993, இதழ் : 08**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதன் ஊடாக ஆவணப்படுத்தத் தவறுவதால் கலை முயற்சிகளுக்கு ஏற்பட இருக்கும் ஆபத்தையும் ஆய் வாளர்களின் வகிபங்கு என்னவென்பதையும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதனோடு 'நாடக அரங்கியற் கண்காட்சி 95' இற்கு எழுதிய ஆசிரியர் தலையங்கமும் இணைத்து நோக்கப்பட வேண்டியதாகின்றது.

*"நாடக அரங்கியல் கல்வி, உலக நாடக அரங்கியல் தளத்தில் ஒப்பீட்டாய்வுக்குத் துணை செய்ய வேண்டும் என்ற நோக்குடன் பன்னாட்டு அரங்குகள் பற்றிய குறிப்புக் களும் மாதிரிகளும் வரைபடங்களும் புகைப்படங்களும் சிறு திரைப்படங்களும் சிற்பங்களும் காட்சியரங்குகளில் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைத்துத் தரப்படு கின்றன. நமது மண்ணின் சொத்தாகிய நாடக வடிவங்கள் பலதும் அழகுக் கலையின் அருமருந்தாய் ஆக்கி அளிக்கப் படுகின்றன.*

**சித்திரை - ஆனி 1995, இதழ் : 16**

அதுபோன்றே கிராமியக் கலைகள் குறித்தும் தலையங் கம் தீட்டியுள்ளார்.

*"கிராமியக் கலைகள் ஓர் இனத்தின் மரபுக் கலைகளைக் காத்து வருகின்றன. அவை தொன்மையானவை. தூய்மை யானவை. எளிமையானவை. கும்மி, கரகம், காவடி, கூத்து, வில்லுப்பாட்டு, அம்பா போன்றவை காலத்தால் அழியாத கலை வடிவங்கள். பல கிராமியக் கலைகள் அன்று தொழி லோடு இணைந்து வளர்ந்தன. இன்று முதலாக நமது மண்ணில் கலைத்திறனை வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் மக்கள் பலர் உண்டு. ...நமது கலைச் சொத்தாகிய கிராமியக் கலைகள் காக்கப்பட வேண்டும். பேணப்பட வேண்டும். வளமோடு நிலைக்க வழிவகைகள் செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இயங்கி வரும் திருமறைக் கலா மன்றம் இக்கலைகள் பற்றிய வகுப்புகளை நடத்துகின்றது. கருத்தரங்குகளை ஏற்பாடு செய்கின்றது. நிகழ்ச்சிகளை மேடையேற்றுகின்றது. எதிர்வரும் காலத்தில் தமிழ்க் கிரா மியக் கண்காட்சி களஞ்சியம் ஒன்றையும் நிறுவ எண்ணம் கொண்டுள்ளது. இத்தகைய கலைப்பணியின் வெளிப் பாடாகவே இக்கலைமுகம் கிராமியக் கலைகள் சிறப்பித ழாக வெளிவருகின்றது"*

**தை - பங்குனி 1993, இதழ் : 07**

'நாமும் நமக்கென்றோர் நலியாக் கலையுடையோம்' என்று மஹாகவி கூறியது போல கிராமியக் கலைகள் பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய தோடு அதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயல்வடிவம் கொடுத்துள்ளதையும் அறிந்து கொள்ளலாம்.

அவ்வாறே கூத்து குறித்து எழுதிய தலையங்கத்தில்

*"நம் மண்ணின் பாரம்பரியக் கலைச் சொத்தாகிய கூத்தையும் அதன் பல்வேறு வடிவங்களையும் பேணிப் பாதுகாத்து நவீனப்படுத்தி வளர்ப்பதில் இன்று திருமறைக் கலாமன்றம் முன்னணியில் திகழ்கின்றது. நாம் இவ்வாண்டு மேத்திங்கள் ஏழாம்நாள் தொடக்கம் ஒன்பது வரையும் நாட்டுக்கூத்து விழா ஒன்றினை நடத்தினோம். அவ்விழா வின் போது கூத்துத் துறையில் வல்லுநர்கள் ஆய்வுரைகள் வழங்கினர். 22 அண்ணாவிமார் பொன்னாடை போர்க்கப் பட்டு பாராட்டப்பட்டனர். முதல் தடவையாக 9 வேறு பட்ட நாட்டுக் கூத்துக்கள் ஒரே அரங்கில் மேடையேறின. இவ்விதழ் அவ்விழாவின் சில கட்டங்களை ஆவணப்படுத் துகின்றது"*

**சித்திரை - ஆனி 1993, இதழ் 08**

இது கலைகளை வளர்ப்பதில் திருமறைக் கலாமன்றம் காட்டி வரும் சிரத்தையையும் கலைஞர்கள் வாழும் பொழுதே கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை யும் வெளிப்படுத்தி உள்ளது.

ஒவ்வொரு பிரதேசத்தின் தனித்துவங்களைக் கோடிட் டுக் காட்டும் நோக்குடன் கலைமுகம் சில சிறப்பிதழ்களை வெளியிட்டுள்ளது. அந்தவகையில் திருகோணமலைச் சிறப்பு மலர், மட்டக்களப்புச் சிறப்பு மலர் ஆகிய பிரதேசச் சிறப்பு மலர்களை வெளியிட்டதைச் சுட்டிக்காட்ட வேண்டும். இது குறித்து எழுதிய தலையங்கம் ஒன்றில் பிரதேச சிறப்பு மலர்கள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கான காரணத்தை முன்வைக்கின்றார்.

*"ஈழத்தின் தமிழ் பேசும் மக்களுடைய கலை, இலக்கியச் செல்வச் சொத்துக்களும் தனித்துவங்களால் சிறப்புற்று விளங்குகின்றன. ...பிரதேச வேறுபாடுகள் ஈழத்தமிழர்களு டைய கலை இலக்கிய படைப்புகளுக்குச் செழுமையைக் கொடுக்கின்றன. 'பிரதேசப் பண்பாடுகளை'த் தரப்படுத்தி ஒன்றை உயர்ந்தது என்றும் மற்றையதைத் தாழ்ந்தது என் றும் வெளிப்படையாகக் கூறுவதோ அல்லது இத்தகைய கருத்து நிலையை மறைமுகமாக ஆதரிப்பதோ தமிழ் மக்களின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு வழிவகுக்கும். பண்பாட்டைப் பற்றிய புரிந்துணர்வு அத்தகையோருக்கு இல்லை என்பதையும் சுட்டிக்காட்டும். மாறாக, இடத் துக்கு இடம், புலத்துக்குப் புலம் மாறு பட்டு நிற்கும் தனித்துவங்களை - உப்பண்பாடுகளை - இணைத்தும் அவைகளைப் பேணி வளர்த்தும் அத்தனித்துவங்களுடன் தொடர்புண்ட பேராளர்களை இனங்கண்டு அவர்களை யும் அவர்களது படைப்புக்களையும் அறிமுகம் செய்து ஊக்குவித்துப் போற்றியும் பணிபுரிய வேண்டியது பண் பாட்டுப் பற்றாளர்களது பொறுப்பாகும்.*

**சித்திரை - மார்கழி 2002, இதழ் : 36**

அத்தோடு புலம் பெயர்ந்தவர்களின் இலக்கியப் பங் களிப்பையும் ஆசிரியர் தலையங்கத்தில் கவனத்தில் எடுக்க வும் அவர் தவறவில்லை.

*"புலம்பெயர்ந்தவரின் இலக்கியத் துறையைப் பொறுத் தமட்டில் தனிப்பட்டும் குழுக்களாகவும் இயங்கிக் காத்திர மான பணிகளை அவர்கள் செய்து வருகின்றனர். இலக்கியச் சந்திப்புகளும் - காரசாரமான இலக்கியச் சர்ச்சைகளும் - இலக்கிய சஞ்சிகைகள், ஏடுகள் முதலியவற்றின் தோற்றங்க ளும் நிலைப்பாடுகளும் (நிலையற்ற பாடுகளும்) முன்பென் றும் இல்லாதவாறு இன்று தமிழ் இலக்கிய இரத்த ஓட்டம் உலகளாவ - கனடா தொடங்கி இந்தியாவை ஊடறுத்து அவுஸ்ரேலியா வரை பரவி உயிர்த்துடிப்புடன் செயற் பட்டு வருகின்றது என்பதைக் காட்டுகின்றன.*

ஒரு வகையில், புலம் பெயர்ந்தோருடைய இலக்கியப் பணியும் பங்களிப்பும் மரபுப் பார்வைகளுக்குச் சற்று வேறுபட்டதாய் தோன்றுவது இயல்பு. வெவ்வேறு நாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் வாழும் தமிழ் இலக்கியவாதிகளுக்கு தாம் புகுந்த நாட்டு இலக்கியங்கள் பற்றி அந்தந்த நாட்டு மொழிகளின் ஊடாகத் தெரிந்து கொள்வதற்குரிய வாய்ப்புண்டு"

**தை - பங்குனி 1999, இதழ் 28**

இதே விடயத்தை முதலாவது ஆசிரியர் தலையங்கத் திலேயே

"பழமையும் புனிதமும் நிறைந்த நம் கலாசாரத்தில் புதியன பலவும் புகுத்தப்பட்டு புதுமெருகேற்றப் பெற்றுக் காலத்திற்கு ஏற்ற கலாசார மறுமலர்ச்சிக்குக் கலைமுகம் துணைசெய்யும்"

எனத் தீர்க்கதரிசனத்தோடு பதிவு செய்ததில் இருந்தும் அறிந்து கொள்ளலாம்.

"இலக்கிய உலகம் இன்று பல்வகைதொகையான வளர்ச்சியை அடைந்திருக்கின்றது. ஒரு புறம் வாய்மொழி யில் இருந்து எழுத்து நூல் வழியூடாக ஒலிப் பேழை வடி வத்தில் கால் தரிப்பு பெற்றுள்ளது. மறுபுறம் பெருங் கதை, சிறுகதை, கவிதை, கட்டுரை, நாட்குறிப்பு, நிக ழாய்வு ஏடு என்று பன்முகப்பட்ட படைப்புக்களாக வெளி வந்து கொண்டிருக்கின்றன இலக்கியங்கள்.

இப்பின்னணியில் நமது இலக்கிய வேர்களிலும் பாரம் பரியங்களிலும் பற்றுறுதியுடன் காலூன்றி நின்று, காலத் துக்கு ஏற்ப புதிய இலக்கியங்கள் படைக்கவும், அன்றைய, இன்றைய உலக இலக்கியங்களின் பிழிவுகளை உள்வாங்கி அவைகளைத் தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு அளிக்கவும் படைப்பாளர்கள் முன்வரவேண்டும்"

**ஜனவரி - ஜூன் 2007, இதழ் : 45**

இலக்கிய உலகம் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண் டிய விடயங்கள் குறித்தும் சிலாகித்துள்ளார்.

அதேவேளை எண்ணிம நூல்கள் பெருகி வரும் நிலை யில் அச்சு நூல்களின் எதிர்காலம் குறித்தும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

"சமகாலத்தில் அசுர வேகத்தில் வளர்ந்துவரும் தொழில் நுட்பங்களும், தொடர்பாடல் கருவிகளாகிய இணைய வலைத்தளங்களும் நூல்களைக் கையில் வாங்கிப் படியாது எண்ணிம வடிவத்தில் வாசிக்கக் கூடிய வாய்ப்பினை வழங்குகின்றன. இதன் விளைவாக, அச்சேறிய நூல்களைப் பெற்று வாசிக்கும் பழக்கம் சில ஆண்டுகளில் மறைந்து விடும் என்ற அச்சம் பரவலாகக் காணப்படுகின்றது. இருப் பினும், இவ் அச்சம் ஆதாரமற்றது என்பதை பல நிகழ்வுகள் வலியுறுத்தவும் செய்கின்றன... அண்மையில் யாழ்ப்பாணத் தில் முதற்தடவையாக பிரமாண்டமான அளவில் நடை பெற்ற 'புத்தகத் திருவிழா' யாரும் எதிர்பார்க்காத வகையில் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது. ஆயிரக்கணக்கில் வயது எல்லைகளைத் தாண்டி, பலரும் அங்கு சென்று நூல்க ளைப் பார்வையிட்டது மட்டுமன்றி, வாங்கக்கூடிய நூல் களை வாங்கியும் சென்றார்கள். ஆக, நூல்களைப் பெற்று வாசிக்கும் வழக்கம் நீடித்தே தீரும்"

**ஏப்பிரல் - செப்ரெம்பர் 2019, இதழ் : 68**

*3*

மனித குலத்தையே கருவறுக்கும் யுத்தம் குறித்தும் அங்கு கடைப்பிடிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அடிகளார் ஆதங்கத்தோடு தனது மனக்குமுறல் களை வெளிப்படுத்தி உள்ளார்.

"மனித வரலாற்றுடன் பின்னிப்பிணைந்து நிற்பது போர் என்னும் வன்முறை... ஆறறிவு படைக்காத உயிரினங் கள் நடுவில் காணப்படாது பகுத்தறிவு படைத்த மக்கள் வாழ்வில் தென்படும் ஒரு கொடிய எதார்த்த நிலை. போர் களின் விளைவுகளை வைத்துக்கொண்டே பெரும்பாலும் ஒரு நாட்டின் அல்லது ஓர் இனத்தின் வரலாறு வரையப் படுவது மனித வாழ்க்கையையும் அதன் நாகரிக வளர்ச் சியையும் வரையறை செய்யும் ஆற்றல் போருக்கு உண்டு என்பதை உணர்த்துகின்றது... பொதுவாக, போரின் மூல மாக நாம் எதை அடைய விளைகின்றோமோ அதை அமைதி வழியில் இன்னும் சிறப்பான முறையில் அடைந்து விட முடியும் என்பது அறிஞர்கள் பலரின் கருத்து"

**ஜனவரி - ஜூன் 2006, இதழ் : 43**

"மனித உரிமைகள் குறிப்பிட்ட ஒரு சூழலில் காலால் போட்டு நசிக்கப்படுகிறது. அதுதான் போர்க்களம். உலகின் பல நாடுகளிலும் நடந்து கொண்டிருக்கும் போர்க ளிலும் ஆயுதப் போராட்டங்களிலும் 'போர்மை' என்ற அறப்பண்பு பலியாகிப் போவதைப் பார்க்கலாம். போரி லும், அறம் காக்கப்பட வேண்டியதை தமிழ் இலக்கியம் எடுத்துரைக்கும், மனிதநேய அமைப்புக்கள் வலியுறுத்தும் அறவோரை, வயதானவர்களை, பெண்களை, சிறுவர்களை குறிவைக்கக் கூடாது என்பதும் இத்தகையோர் எத்தகைய சூழ்நிலையிலும் காக்கப்பட வேண்டியவர் என்பதும் அகி லம் முழுவதிலும் ஏற்றுக்கொள்ளப்படும் காலம் எப் போதுதான் உருவாகும்?"

**ஜனவரி - மார்ச் 2014, இதழ் : 57**

அதேசமயம் போரினாலும் இயற்கை அழிவுகளாலும் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தவும் அவர் தவற வில்லை.


"அம்மா - உயிர் உள்ளவரை உறுதியை இழக்காதே. உனக்கு மட்டுந் தானா இவ்வாழ்வு? அமைதியைத் தரவந்த அண்ணலும் அகதியாக இருந்ததை நினைவில் கொள்"

**ஐப்பசி - மார்கழி 1995, இதழ் : 18**






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



"அழிவையும் ஆக்கத்தையும் ஒன்றிணைத்து நிற்கும் மெய்யியற் பாரம்பரியத்தையும் பண்பாட்டையும் உடையவர்கள் நாம். சாம்பல் மேட்டில் இருந்து சரித்திரம் வியக்கும் கோபுரங்களைக் கட்டி எழுப்பும் ஆற்றல் நம்மிடம் உண்டு. இழப்புகளைச் சந்தித்தவர்கள் நாம். இன்னல்களுடன் வாழப் பழகியவர்கள் நாம். இரத்தக் கண்ணீரைச் சிந்தினாலும் இதயத்தில் நம்பிக்கையின் ஒளியை ஏந்தி வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்பவர்கள் நாம். அழிவில் நின்று ஆக்கங்கள் காண உழைப்போம்"

**ஜனவரி - மார்ச் 2005, இதழ் : 40**

என்றும் குறிப்பிடுகின்றார். அதேவேளை இன்னொரு தலையங்கத்தில்

"எது எதுவாக இருப்பினும், போர் என்னும் அரக்கன் கோரத்தாண்டவம் ஆடினும், அவ் வெறியாட்டத்தின் நடுவிலும் மனித உயிர்களும் மனித உரிமைகளும் பேணப்பட வேண்டிய இயற்கை அறம் இன்று உலகநெறியாகி விட்டது. எந்நாட்டில் நிகழும் போர் என்றாலும் அதில் அடிப்படை மனித உரிமைகளை மீறி, இன ஒழிப்புப் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் சிலர் கைது செய்து தண்டிக்கப்படுவதை இன்று கண்கூடாகக் காணலாம்"

**ஜனவரி - ஜூன் 2006, இதழ் : 43**

என்பதன் ஊடாக மனித உரிமைகளை மீறி போரில் ஈடுபடுபவர்களுக்கு கிடைக்கும் தண்டனைகள் மூலம் ஆசுவாசப்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

மானுடத்தை நேசிக்கும் அடிகளார் போரையும் அதன் விளைவுகளையும் ஆதரித்ததில்லை. ஆனாலும் சமாதானத்திற்கான வாசல்கள் திறக்கப்படும் போதெல்லாம் அதனை வரவேற்றுள்ளார்.

"வெண்புறா ஒன்று விண்ணில் பறக்கின்றது / அது தன் கால்களை / நமது மண்ணில் ஊன்ற விளைகின்றது! / எத்தனை தடைகள்! / எத்தனை இடர்கள்! / இருந்தும், / நிறைவு காலம் அண்மித்து விட்டது! / அழுகைக்கு விடிவும் / அழிவுக்கு முடிவும் / அன்புக்கு வடிவும் / பிறக்கும். அப்போது. புறாவின் நிழல் மட்டுமல்ல, / அதன் பொருளும் அருளும் நமக்குக் கிட்டும் / நாம் எல்லோரும் / நல் மனத்தோர் அனைவரும் / நாடுவதும் அதுதானே! / தேடுவதும் அதுதானே! / தெய்வத்தை வேண்டுவதும் அதுதானே!"

**ஐப்பசி - மார்கழி 1994, இதழ் : 14**

என்று கவிதையில் தலையங்கம் தீட்டி மகிழ்ந்துள்ளார்.

அது மாத்திரமன்று சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவ்வப்போது நடைபெறும் நிகழ்வுகளின் ஊடாகவும் சமாதானத்தின் அவசியத்தை மீள மீள வலியுறுத்தியும் உள்ளார். அசோகச் சக்கரவர்த்தி போரினால் ஈட்ட முடியாத வெற்றியை புத்த தர்மத்தினால் எட்டியவன். அந்தக்கதையை திருமறைக் கலாமன்றம் வார்த்தைகளற்ற நாடகமாக மேடையேற்றிய பொழுது

"நம் - நாட்டை இன்று சீர் குலைத்துச் சிதைக்கும் அழுகைக்கும் அவலத்துக்கும், அலங்கோலத்துக்கும் அழிவுக்கும் முடிவு கட்டி, உண்மையும் உறுதியுமான விடுதலையைத் தருவதற்கும் பெறுவதற்கும் அமைதியே (சமாதானம்) ஒரே ஒரு வழி எனச் சொல்லாமல் சொல்லுகிறது"

**ஐப்பசி - மார்கழி 1996, இதழ் : 22**

என்று குறிப்பிடுகின்றார். அதுபோல பலஸ்தீன அதிபர் ஜசீர் அரபாத் மறைந்த பொழுது 'எனது ஒரு கையில் ஒலிவ இலை, மறு கையில் துப்பாக்கி. துப்பாக்கியை விட்டாலும் கூட ஒலிவ இலையை விடமாட்டேன்' என்று அவர் ஐக்கிய நாடுகள் சபையில் கூறியதை நினைவு கூர்ந்து சமாதானத்தின் அவசியத்தைப் பதிவு செய்கின்றார்.

**புரட்டாதி - மார்கழி 2004, இதழ் : 39**

**4**

சமகால அரசியல் பிரச்சினைகளுக்கான எதிர்வினைகளையும் ஆசிரியர் தலையங்கத்தின் ஊடாக அடிகளார் பிரதிபலித்துள்ளார்.

"சொந்த பந்தங்களை பெரு வெள்ளத்திற்கும் மண்சரிவிற்கும் பலிகொடுத்து கவலையில் ஆழ்ந்துள்ள தெற்கு மக்களுக்கு, வடக்கிலும் கிழக்கிலும் தமது சொந்தங்களின் இழப்பை எண்ணி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்றும் ஆறாத துயரில் மூழ்கி உள்ளதைப் புரிந்து கொள்ள முடியும். இன்றும் வடக்கிலும் கிழக்கிலும் காணாமல் போனோர், காணாமல் ஆக்கப்பட்டோர், அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டோர் போன்றவர்களின் உறவுகள் மீளாத் துயரில் வாழ்ந்து கொண்டிருப்பதை தெற்கு ஏனோ இன்னும் புரிந்து கொள்ளவில்லை"

**ஏப்பிரல் - ஜூன் 2017, இதழ் : 62**

"ஓர் இனத்தின் இருப்புடன் அதன் வரலாறும் பின்னிப்பிணைந்துள்ளது. அவ்வரலாற்றின் சுவடுகள் அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்படும் போது அவ்வினத்தின் இருப்பு கேள்விக்குறியாக்கப்படுகின்றது... ஈழத்தமிழரின் தொன்மை வாய்ந்த வரலாற்றுத் தடயங்களும் அடையாளங்களும் வடக்கிலும் கிழக்கிலும் நமது மண்ணுக்குள் புதைந்து கிடக்கின்றன. அவை அழிக்கப்பட்டு விடும் அபாயம் தோன்றியுள்ளதாக தமிழ் உணர்வாளர்கள் பலர் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபயக்குரல் எழுப்புவதில் உண்மையுள்ளதை சமகாலத்தில் நடந்தேறும் நிகழ்வுகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன"

**ஒக்ரோபர் - டிசெம்பர் 2017, இதழ் : 64**

என்பவர் அதே ஆசிரியர் தலையங்கத்தில்

"ஈழத்தமிழ் மக்கள் இருப்பின் தொன்மையான வரலாற்றுச் சின்னங்கள், இடங்கள், அடையாளங்கள் பற்றிய அகழ்வாராய்ச்சிகளின் தீர்க்கமான முடிவுகள் பல்கலைக்கழகங்களில் மட்டுமல்லாது பொதுவெளியிலும் பேசு பொருளாக மாற வேண்டும் என்பவர் சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது அவர்களின் பங்களிப்பை சுட்டியும் காட்டுகின்றார். அந்தவகையில் பேராசிரியர் ப.புஷ்பரட்ணத்தினதும் அவரது குழுவினரதும் காத்திரமான பணி, வரலாற்றுத்துறை பேராசிரியர்கள் சி.க.சிற்றம்பலம், எஸ்.பத்மநாதன், கே.இந்திரபாலா, பி.ரகுபதி (தொல்லியல்) போன்றோரின் ஆய்வுப் பதிவுகள் நம்மவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும்" என்கிறார்.

தமிழ்க்கட்சிகள் பன்னாட்டு அரசியலைப் புரிந்து ஒற்றுமையுடன் செயலாற்ற வேண்டியதன் அவசியத்தையும் குறிப்பிடுகின்றார்.

"நமது மண்ணில் நம்மவர்கள் இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருந்த அவல வேளையில் முதலாக தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவியதா? பிரிவுபட்டும் பிளவு பட்டும் தானே நின்றோம்.இன்றும் அதே நிலைமை ! நாம் இன்னும் வரலாறு உணர்த்தும் பட்டறிவை உள்வாங்கவில்லை. வெற்றிக் கொடியை நாட்டுபவர்கள் எல்லோரும் மாமன்னன் அசோகனின் வழித்தோன்றல்களாக இருப்பார்கள் என ஏமாறாமல், பன்னாட்டு அரசுகளின் சுயநல அரசியலைக் கருத்திற் கொண்டு ஒற்றுமையின் வலுவை உணர்ந்த இனமாக, இணக்கப்பாட்டுக்கான வெளியில் நிதானமான சாணக்கியத்துடன் நகர்த்த வேண்டிய காய்களை நகர்த்த வேண்டும்"

**ஒக்ரோபர் - டிசம்பர் 2016, இதழ் : 60**

இவற்றை விட அடிகளாரது அரசியல் நிலைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு

"இயற்கையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிய இலங்கை அரசும், அரச அமைப்புகளும் காட்டிய ஆர்வமும், வேகமும் ஏன் வடக்கு கிழக்கு மக்களுக்கு போரின் தாக்கத்தால் ஏற்பட்ட காயங்களை அகற்றுவதில் காட்டப்படவில்லை?"

**ஏப்ரல் - ஜூன் 2017, இதழ் : 62**

எனக் கேட்பதே போதுமென நினைக்கிறேன்.

திருமறைக் கலாமன்றம் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த தன்னாலான பங்களிப்பை வழங்கியிருக்கின்றது.

"திருமறைக் கலாமன்றம், தனது சிறப்பு இலக்காக இனங்களுக்கிடையிலான இணக்கப்பாட்டையும் நல்லெண்ணத்தையும் நல் உறவையும் நிரந்தர அமைதியையும் நிலைநாட்டுவதற்கு எப்போது முனைந்ததோ அன்றிலிருந்து இன்று வரையும் மற்றைய அமைப்புக்களால் செய்ய முடியாதவற்றை சாதித்துள்ளது. முன்பு தமிழ் மணமே ஊடுருவாத ஒரு சில சிங்களக் கிராமங்களுக்குள் புகுந்து அங்கு செயற்தளங்களை அமைத்துள்ளது. பேரினவாத அமைப்புக்களின் உறுப்பினர்களாய் இருந்த ஒரு சிலரை வடக்கிற்கு அழைத்து வந்து அவர்களில் மனமாற்றத்தை உருவாக்கி அவர்களின் அரசியல்போக்கை மாற்றியுள்ளது. ...அரசியல் தீர்வு எதுவாக இருப்பினும் இத்தீர்வில் அனைத்து இனங்களும் நல் உறவுகளுடன் தமக்குரிய உரிமைகளுடன் வாழ்வது இன்றியமையாதது. அதற்கு கலைகள் கரங்கொடுக்கும். அதற்காகத் தூய உள்ளத்துடன் உழைப்பின் பயன் கிட்டும்"

**ஜுலை - டிசெம்பர் 2005, இதழ் : 42**

இதே ஆசிரியர் தலையங்கத்தில், திருமறைக் கலாமன்றத்தின் நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா அதன் சிங்களப் பிரிவினரால் கண்டியில் நடத்தப்பட்ட பொழுது அதில் கலந்து கொண்ட தம்மானந்த தேரர் கூறிய

"கலைகள் உள்ளத்தைக் குணமாக்குகின்றன. சில பாரம்பரிய நடனங்கள் மூலம் தீயசக்திகளின் ஆக்கிரமிப்பு அடக்கப்படுகின்றது. இந்நாட்டில் கலைகள் மூலம் நல்லிணக்கத்தையும் அமைதியையும் அடைய முடியும் என நம்புகின்றேன். இன்றைய காலகட்டத்தில் திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகள் மிகவும் முக்கியமானவை"

என்ற கருத்துகளும் அதுபோல தம்மே றதிக்கித்தா தேரர் கூறிய

"கலைகளின் ஊடாக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு உழைக்கும் திருமறைக் கலாமன்றத்தைப் பாராட்டுகின்றேன்"

என்ற கருத்தும் அதனை மெய்ப்பிக்கின்றன.

உள்ளூர் அரசியல் மாத்திரமன்றி சர்வதேச அரசியல் குறித்தும் விரிந்த பார்வையோடு தலையங்கம் வரைந்துள்ளார். பராக் ஒபாமா அமெரிக்க தேர்தலில் போட்டியிட்ட பொழுது மக்களாட்சியின் மகத்துவம் குறித்து

"அமெரிக்காவில் பேணப்படும் தனிமனித சுதந்திர உணர்வும், குடிமக்களுக்கு அளிக்கப்படும் சமவாய்ப்புகளும் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் சிறுபான்மை - பெரும்பான்மை முரண்பாடுகளை சீர் செய்ய தளம் கொடுக்கும் அரசியல் அமைப்பும் மெச்சத்தக்கவை. மக்களாட்சி என்பது மக்களால், மக்களுக்கான ஆட்சி முறையே என்பதில் ஆணித்தரமான உறுதியும் பிறப்பாலோ, நிறத்தாலோ, சமயத்தாலோ, இனத்தாலோ, பொருள் வளத்தாலோ அறிவுத் தரத்தாலோ ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள் சட்டத்திற்கு முன்பும் மனித உரிமை அளவுகோலின் முன்பும் செல்லுபடியாகாதவை என்ற கொள்கையும் போற்றுதற்குரியவை. பின்பற்றுவதற்கும் உகந்தது"

**ஜுலை - செப்ரெம்பர் 2008, இதழ் : 48**

எனக் குறிப்பிடுகின்றார்.

## 5

இன்று நம்முன் உள்ள தலையாய பிரச்சினையாக சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றப் பிரச்சினைகள் விளங்குகின்றன. இது குறித்து ஓர் ஆசிரியர் தலையங்கம்

"இயற்கையின் மாற்றங்களைத் துரிதப்படுத்துவது போல, மனிதர்களும் உலக வெப்பத்தை அதிகரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஆலைகள் ஒவ்வொன்றிலிருந்தும் கிளம்பும் புகை, வருவாயின் பொருட்டு வெட்டிக்குவிக்கப்படும் மரக்காடுகள், நச்சுத் தன்மை கலந்த கழி பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் நெருப்பில் இடப்படும் போது கிளம்பும் நச்சு ஆவி போன்றவை வெப்பம் வெளியே செல்லாது தடுக்கும் கரியம் ஈருயிரகையை (கார்பன் டைஒக்சைட்) அளவு கடந்த படலங்களாக வான் வெளியில் உருவாக்குகின்றன. அதன் வெளிப்பாடாகவே உலக வெப்பம் அதிகரிப்பதை தடுக்கத் தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள்"

**ஏப்பிரல் - ஜூன் 2011, இதழ் : 51**

என்று குறிப்பிடுகின்றார். இன்னொரு தலையங்கத்தில்

"பழையன கழிதலும், புதியன புகுதலும் வாழ்வின் நியதியே. ஆயின், அம்மாற்றங்கள் இயற்கைக்கும் நமக்கும் இடையில் உள்ள உயிர்த்துடிப்பான வேரை தகர்த்து விடும் நிலைக்கு வந்துவிடுமோ என்ற அச்சம் எழும்பு கின்றது. இன்று நாம் உண்ணும் உணவு ஓர் எடுத்துக் காட்டு. நம்மண் சார்ந்த இயற்கைப் பொருள் உற்பத்தியைக் கைவிட்டு மெல்லெனக் கொல்லும் நச்சுத் தன்மை உள்ள பசளை வகைகளை பூமித்தாயின் கருவறைக்குள் புகுத்துவ தன் மூலம் அதிலிருந்து விளையும் அனைத்தும் நச்சுத் தன்மை கொண்ட உணவுகளாக மாறுகின்றன... உணவுடன் பின்னிப்பிணைந்த உடல்நோய்கள் நம்மைத் தாக்குகின்ற பொழுது அவற்றைக் குணப்படுத்துவதற்கு அருந்தும் மருந்துகள் பல அச்சம் தரும் பக்கவிளைவுகளை உருவாக் கும் ஆற்றல் படைத்தவை. இவைகளைச் சீர்தூக்கிப் பார்க்கின்ற பொழுது நம்மவர்கள் மத்தியில் இயற்கை பற்றியும் குறிப்பாக உணவு, மருத்துவம் குறித்து விழிப் புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். இப்பணியில், அரசு மட்டுமன்றி, சமூக உணர்வுள்ள அமைப்புகளும் ஈடுபடுதல் இன்றியமையாதது.

**ஜனவரி - மார்ச் 2018, இதழ் : 65**

இத்தகைய பிரச்சினைகளுக்கு இயற்கையின் மொழியை மனிதன் இன்னமும் அறியாதிருப்பதே அடிப்படைக் காரணமாகும். ஆனாலும் அடிகளார் மனிதர்கள் மீதான தனது அக்கறையையும் இயற்கை மீதான தனது நேசத்தை யும் இவற்றின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார்.

*6*

சமகாலச் சமூகப் பிரச்சினைகளையும் தலையங்கங்களில் அடிகளார் ஆவணப்படுத்தியுள்ளார். அந்தவகையில் பெண்கள், சிறுவர்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாவதையும் அவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் பதிவு செய்துள்ளார்.

"அடக்குமுறையால் நசுக்கப்படுவது மனிதர்கள் மட்டு மல்ல ; மனிதமும் கூட. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியாகிய இக்கால கட்டத்திலும் பல இடங்களில், பல சமுதாயங்களில், பல தளங்களில் பெண்கள் இரண்டாந்தரத் தினராய்க் கணிக்கப்பட்டு அதற்கு ஒப்ப நடத்தப்படுகிறார் கள் என்பது கசப்பான உண்மை. மனிதத்தைப் போற்றும் கலையுலகமும் இதற்கு விதிவிலக்கு அன்று. ...பெண்கள் சரிநிகராக மதிக்கப்பட வேண்டும் என விழிப்புணர்ச்சி பெற்ற இன்று, அவர்களின் நிலையைச் சமனாக்கும் வாய்ப்புக்கள் கலையுலகில் உருவாக்கப்பட வேண்டும். மக்களின் உள்ளங்களைப் பக்குவப்படுத்தும் பணியும் பல முனைகளில் முன்னெடுக்கப்பட வேண்டும். இவ்வகையில் திருமறைக் கலாமன்றத்தின் படைப்புக்களான பெண்ணி யம் பேசுகிறது, ஜெனோவா போன்றவை நெஞ்சங்களில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களுக்கு வழிகோல உதவுவன"

**தை - பங்குனி 1998, இதழ் : 25**

அதுபோல

சிறுவர்களுக்கும் உரிமைகள் பல உள்ளன என்பதை மறந்து வாழ்கின்றதாக நமது சமூகம் காணப்படுகின்றது. சிறுவர்கள் ஓய்வில்லாது, பாடசாலை தவிர்ந்த வியாபார நோக்குடன் இயங்கும் பின்னூட்டல் வகுப்புகளுக்கு செல்ல நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பெரும்பாலான பெற்றோர் தமது விருப்பங்களைப் பிள்ளைகள் மேல் திணித்து அவர் களை தமது கைப் பொம்மைகளாக மாற்றி வருகின்றனர். ஓய்வெடுப்பதற்கும் ஓடியாடி விளையாடுவதற்கும் உறவு களுடன் அளவளாவுவதற்கும் தமது பல்வகை ஆற்றல்க ளையும் ஆளுமைகளையும் வளர்ப்பதற்கும் ஓய்வு நேர மெல்லாம் சிறுவர்களுக்கு வாய்ப்புக்கள் அளிக்கப்படாது விடின் அது மனித உரிமை மீறலாகக் கணிக்கப்படும்.

**ஜனவரி - மார்ச் 2014, இதழ் : 57**

"சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கும் போர்ச்சூழ்நிலையில் அப்பாதிப்பின் வேகத்தைத் தணித்தும் அவர்களுக்கு மனிதத்தின் உயர் பண்பினைப் புகட்டியும் பணிபுரியக் கூடியவை கல்வி, சமயம், கலை. கலையும் கலை சார்ந்தவையும் சிறுவர்களுடைய திறன்களை வளர்க்க உதவுகின்றன. தன்மானம், தற்புதுமை, தன்னிறைவு போன்ற உணர்வுகளை ஊட்டுகின்றன. ...தன்னைத்தான் மதிப்பது போல் பிறரையும் மதித்து, புரிந்து, ஏற்று அவர்களுடன் இயைந்து வாழத் தகைமையைக் கொடுக்கின்றன. முழுமை நிறைந்த வாழ்வின் குறிக்கோளை முன்னிறுத்தி அவர்களு டைய கற்பனை, கனவு, வாழ்வியக்கம் அனைத்தையும் நெறிப்படுத்துகின்றன. ஒருபுறம், நம்மத்தியில் வாழும் சிறுவர்களின் நிலை கலை உலகத்துக்கு ஒரு சவால்! மறுபுறம், அது கலை உலகில் பணிபுரியும் அனைவருக்கும் அளிக்கப்படும் அரிய வாய்ப்பு"

**ஆடி - புரட்டாதி 1998, இதழ் : 26**

என்று சிறுவர்கள் மனஅழுத்தத்திற்கு ஆளாகும் கார ணங்களையும் குறிப்பிட்டு அதற்கான தீர்வுகளையும் முன் வைக்கின்றார்.

போர் முடிவடைந்த பின்னர் பண்பாட்டின் மீது தொடுக் கப்படும் போரால் இளைஞர்கள் மதுப்பாவனை, போதைப் பொருள் பாவனை, பாலியல் நடத்தைப் பிறழ்வுகள் என வழி தவறிச் செல்வது குறித்து இவ்வாறு பதிவிடுகின்றார்.

"நமது இனத்தின் தனித்துவத்தையும் இருப்பையும் இழந்துவிடப் போகிறோம் என்று அழுவதில் மட்டும் பயன் இல்லை. இச்சீரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஒவ்வொருவரும் தத்தமது இயங்குதளத்தில் நின்று எதைச் செய்யலாம், எதைச் செய்யவேண்டும் என்ற துடிப்புடன் இதே இலட்சியமுள்ள அனைத்து சக்திகளுடனும் ஒன்று திரண்டு செயற்பட வேண்டும். நடந்து முடிந்த அவலப் போரை விட மிக ஆபத்தான அறப்போர் இப்போது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்து, இது பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்ட கலைஞர்களும் இலக்கியவாதிகளும் அர்ப்பணத்துடனும் உறுதியுடனும் முன்வரவேண்டும்"

**ஏப்பிரல் - ஜூன் 2012, இதழ் : 53**

இன்னொரு ஆசிரியர் தலையங்கத்தில்

"ஈழத் தமிழினத்தின் தனித்துவத்தையும், பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும் பேணிக் காத்து வளர்ப்பது, முப்பது ஆண்டுகளாக நடந்தேறிய விடுதலைப் போரின் இலட்சியங்களுள் ஒன்றாக இருந்தது. ஒரு தலைமுறையே அழிந்து மண்ணுக்குள் புதைக்கப்பட்டு விட்டது. ஆயிர மாயிரம் உயிர்களைக் காவு கொண்ட அப்போருக்குப் பின்னர் நமது பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காத்து, காலத்துக்கு ஏற்ப மெருகூட்டி வளர்க்கும் பொறுப்பு இன்றைய தலைமுறையினரைச் சாருகின்றது"

**ஜனவரி - மார்ச் 2017, மார்ச் : 61**

வாழையடி வாழையாகப் பேணப்பட்டு வரும் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டியதன் அவசியத்தையும் அதற்கு கொடுத்த விலைமதிப்பற்ற உயிர்களையும் சுட்டிக்காட்டி இளந்தலைமுறையினருக்கு இருக்கும் பொறுப்புக்களையும் கவனப்படுத்தி இருக்கின்றார்.

இனக்கலவரங்களிலும் முள்ளிவாய்க்கால் போரிலும் பேரழிவைக் கண்ட தமிழினம் அதன் பின்னர் 'பட்டகாலிலேயே படும் கெட்ட குடியே கெடும்' என்பது போல விபத்துக்களிலும் தற்கொலைகளிலும் அவலச்சாவடைந்து வருவதை 'ஈழமண்ணில் இருந்து எமனுக்கு எழுதப்படும் ஒரு மடலாக' புள்ளி விபரத்தோடு பதிவு செய்கின்றார்.

"கடந்த எட்டு ஆண்டுகளில், யாழ்.மாவட்டத்தில் மட்டும் ஆண்டுக்குச் சராசரி 165 பேரும் இவ்வாண்டு ஆவணித்திங்கள் வரையில் 74 பேரும் தற்கொலை செய்துள்ளனர். அதுமட்டுமன்றி, அதேமாவட்டத்தில் ஆண்டுக்குச் சராசரி 550 பேர் தற்கொலை முயற்சியை மேற்கொண்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறுகின்றனர் எனவும் கூறப்படுகின்றது"

**ஜூலை - செப்ரெம்பர் 2017, இதழ் : 63**

**7**

ஆளுமைகள் என்ற வகையில் அவர் தம் பெருமைகளைப் போற்றுவதிலும் திறமைகளைப் பாராட்டுவதிலும் அடிகளார் பின்னிற்பதில்லை. யாழ்.ஆயர் மேதகு கலாநிதி வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை குறித்து ஒரு தலையங்கத்தில்

"கலையை கண் போல வளர்த்தவர்கள், கலைஞர்களை உயர்நிலைப் படுத்தியவர்கள், கலைப்பணியால் கலைச் செல்வத்தைப் பெருக்கியவர்கள் பலர் தமிழர் நம் வரலாற்றில் உண்டு. அவர்கள் வரிசையில் யாழ்.ஆயரையும் வைத்து கலைமுகம் வாழ்த்தி நிற்கின்றது. கலைவழி இறைபணி செய்வித்த பெருமையை வருங்கால வரலாறு தான் எடைபோட்டுச் சொல்ல வேண்டும். தற்கால வரலாறோ வாய்விட்டே வணங்குகின்றது. திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணியின் சிறப்பெல்லாம் ஆயர் அவர்களையே சாரும்"

**சித்திரை - ஆனி 1992, இதழ் : 04**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிற்பச்செல்வன் ஏ.வி. ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி குறித்து

இவ்வாண்டின் சிறப்பு நிகழ்ச்சியாக நமது மன்றத்து மூத்த உறுப்பினர் 'சிற்பச்செல்வன்' ஏ.வி.ஆனந்தனின் சிற்பக் கண்காட்சி பல இடங்களிலும் நடத்தப்பட்டது. ...இச்சிற்பியின் படைப்புகள் போரின் பகைப்புலத்தில் பிறந்தவை. ஒரு சில, இரத்த ஆறு ஓடும் சண்டையின் கொடுமையை எடுத்துச் சொல்வதுடன், சிலுவை மரத்தில் கட்டப்பட்ட அமைதிப் புறாவின் ஆக்கத்தின் மூலம் அல்லலுற்று ஏங்கும் மக்களின் இதயக்குமுறலையும் வெளிப்படுத்துகின்றன... ஆனந்தனின் சிற்பங்களைப் பார்த்துச் சுவைத்த வெளிநாட்டவர் வியந்தனர். தெற்கிலே உள்ள ஒரு சிலர் ஆனந்தன் தமிழரா? எனக் கேள்விக்கணை ஒன்றை எழுப்பினர். இது (ஒரு பக்கத்தில், கவலையைக் கொடுத்தாலும் மறுபுறத்தில்) பெருமிதத்தை அளிக்கின்றது. 'திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற பாரதியின் கனவு நனவாகிறது.

**தை - ஆனி 1997, இதழ் : 23**

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் மறைந்த பொழுது

"பல்துறைகளில் ஈடுபாடு கொண்டவர்களை இன்று காண்பது அரிது. அதிலும், பல்துறைகளில் ஈடுபாடும் ஆற்றலும் ஆழ்ந்த புலமையும் கொண்டவர்களைக் காண்பது மிக அரிது. அரிதிலும் அரிது. அத்தகைய புலமை படைத்தவர்களை பல்நாடடு அறிஞர்களும் புகழ்ந்துரைப்பது. ஈற்றில் குறிப்பிடப்பட்டவர்கள் வரிசையில் போற்றப்படக் கூடிய ஒருவர் தான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி. மெய்யியல், இறையியல், சமூகவியல், பண்பாட்டியல், மானுடவியல், அரங்கியல், அரசியல், அறிவியல் போன்ற பல்வேறு துறைகளிலும் பரந்து விரிந்த அறிவும், ஆளுமையும் படைத்த பேராசானாக விளங்கிய சிவத்தம்பி, தமிழிலக்கிய சமூக வரலாற்றியலில் தனக்கெனத் தனியிடம் வகுத்துக் கொண்டவர்"

**ஜூலை - செப்ரெம்பர் 1997, இதழ் : 52**

எனக் குறிப்பிடுகின்றார்.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு எழுதிய தலையங்கம் ஒன்றில்

"சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து எழுபதுகள் முடியும் வரை, தமிழ்ப் பணி ஆற்றி, தமிழ் மொழி வரலாற்றில் உலகளாவிய முறையில் தமிழுக்கு அங்கீகாரம் பெற்றுத்தந்த மாமேதை தவத்திரு தனிநாயகம் அடிகள் என்றால், அது மிகையன்று. அடிகளாரின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு உலகின் பல பகுதிகளிலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றமை பாராட்டுக்குரியது. இத்தகைய விழாவின் நோக்கம், அடிகளாரின் வாழ்வையும் பணியையும் நினைவு படுத்தல் மட்டுமன்று. அவரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களும் வாழ்க்கை நெறியும் இன்றைய காலகட்டத்தில் எமக்கு எத்தகைய வழிகாட்டலாக அமைகின்றன என்பதை சிந்திப்பதற்கும் ஓர் உந்துசக்தியாக அமைகின்றது"

**ஒக்ரோபர் - டிசெம்பர் 2013, இதழ் : 56**

எனக் குறிப்பிடுகின்றார்.

இவற்றோடு போர்க்கால சூழ்நிலை காரணமாக ஓவிய ஆர்வம் அருகி இருந்த நிலையில் ஓவியர்களான ஏ.மார்க்கு, திருமதி அம்பலவாணர் ஆகியோரின் உதவியுடன் மன்றத்தின் ஓவிய - சிற்ப - வார்ப்பு கலைப்பிரிவு உயிரூட்டம் பெற்றதையும் பதிவு செய்கின்றார். திருமறைக் கலாமன்றத்துக்கு ஆங்கிலத்திலும் ஒரு பெயரைக் கொடுத்து *(Centre for Performing Arts)* கலை - பண்பாடு என்னும் பெரும் பரப்பினுள் காலடி எடுத்து வைப்பதற்குப் பெரும் உதவி புரிந்தவர் திரு. குழந்தை சண்முகலிங்கம் அவர்கள் என்பதையும் நினைவு கூருகின்றார்.

8

*"இன்று 'உலகமயமாக்கல்' நம்வாழ்வின் பல துறைகளிலும் மெதுவாகப் புகுந்து கொண்டிருக்கின்றது. ...தென் கிழக்காசிய நாடுகள் சிலவற்றில் இன்று நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அந்நாடுகளின் நிதி நிலை உலகமயமாக்கல் எனும் சூழலில் சிக்குண்டமையே காரணம் என வாதிடுவர் ஒரு சிலர். அதே போல், பயங்கர நோய்கள் பல இன்று உலகின் வெவ்வேறு பகுதிகளில் தீவிரமாகப் பரவுகின்றன என்றால், அது உலகமயமாக்கலின் ஒரு விளைவே எனக்கூறுவர் அந்நோய்கள் பற்றிய விளக்கம் தெரிந்தோர்"*

**ஐப்பசி - மார்கழி 1998, இதழ் : 27**

எனச் சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னதாகப் பதிவு செய்தமை இன்றைய கொரோனா காலத்திலும் நிதர்சனமாகின்றது.

*"எது எதுவாயினும் உலகமயமாக்கலைத் தடுத்து நிறுத்த முடியாது. அதன் விளைவுகள் சில நன்மைகளாகவும் தீமைகளாகவும் இருக்கப் போகின்றன. நன்மைகளுள் ஒன்றாக, அறிவு விரிவாக்கத்தைக் குறிப்பிடலாம். வெவ்வேறு பாரம்பரிய பழக்க வழக்கங்கள், பண்பாட்டு விழுமியங்கள் பாதிக்கப்படப் போவதை தீமையான விளைவுகளில் நாம் கணக்கிடலாம். ...'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலக நோக்குப் பண்பாட்டில் வளர்ந்த நம்மவர்க்கு, உலகமயமாக்கல் முற்றுமுழுக்கப் புதியதொரு கருத்தைத் தரவில்லை. புதியதொரு பரிமாணத்தைத்தான் சுட்டிக் காட்டுகின்றது. உலகமெலாம் தமிழ் மணத்தைப் பரப்ப வேண்டும் என்ற கொள்கை படைத்தவர் வரிசையில் பிறந்த திருமறைக் கலாமன்றம், ...ஒருவகையில், உலக மயமாக்கலின் சூழலைத் தனக்குச் சாதகமாக மாற்றி, தன்பணியைத் தீவிரப்படுத்த முனைகிறது"*

**ஐப்பசி - மார்கழி 1998, இதழ் : 27**

அடிகளாரிடம் காணப்படும் தனித்துவம் என்னவென்றால் கால ஓட்டத்தில் நிகழும் மாற்றங்கள் குறித்து விமர்சனங்கள் இருந்தாலும் அவற்றில் உள்ள சாதகத் தன்மைகளை ஏற்றுக்கொண்டு பயணிப்பது. இதனை 'இணையம்' குறித்து எழுதிய ஆசிரியர் தலையங்கத்திலும் அறிய முடிகின்றது.

*"கலைகளையும் இலக்கியங்களையும் பொறுத்த அளவில் இணையம் என்பது ஓர் அற்புதமான கொடை ...இவ்விரு துறைகளிலும் உலகளாவிய ரீதியில் பல்லினக்கலைகளும் பல்லின இலக்கியங்களும் தத்தம் துறைகளில் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன என்பதனையும் எவ்வாறு தனித்துவத்துடன் வேறுபட்டு நிற்கின்றன என்பதையும் கால தாமதமின்றி ஆசிரியன் உதவியின்றி சுயமாகப் பார்த்து படித்தறியக் கூடிய வாய்ப்பு இணையம் மூலம் அளிக்கப்பட்டிருக்கிறது. ...இதுதான் இன்றைய காலத்தின் முன்னேற்றம். திருமறைக் கலாமன்றமும் காலத்தின் அதிவேக தகவல் தொழில் நுட்பத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு புதிய புதிய சிந்தனைகளுடனும் செயற்பாடுகளுடனும் கலை வழி சமூக மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. காலத்துடன் ஒட்டிச் செல்வதுதான் வாழ்வின் நியதி"*

**ஜூலை - டிசம்பர் 2007 இதழ் : 46**

9

உள்நாட்டுப் போரின் காரணமாக நம்மவர்கள் பெருமளவு அகதிகளாக வெளிநாடுகளுக்குச் சென்றதனால் நம் எண்ணிக்கையிலும் பாரதூரமான பாதிப்பை உள்ளாக்கி இருக்கின்றது. ஆனாலும் புலம் பெயர்ந்து சென்ற நம் உறவுகளின் உதவியில் நம்மண்ணில் பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன என்பதையும் நாம் மறுத்து விட முடியாது. ஆனாலும் புலம் பெயர்ந்த நம்மவர் ஒரு சிலரால் விளையும் தீமைகளையும் சுட்டிக்காட்டுகின்றார்.

*"தமது சொந்த பந்தங்களுக்கு, உண்மையான தேவைகளுக்கு அப்பால் உதவி அளித்து, உதவி பெறுபவர்களை சொந்தக் காலில் நிற்பதற்குப் பதிலாய் சிலவேளைகளில் சோம்பேறிகளாகவும், எதற்கும் மற்றவர்களிடம் கையேந்தி நிற்கும் இரப்போர் போன்ற மனப்பக்குவம் உடையவர்களாகவும் மது - போதை போன்றவற்றிற்கு அடிமைகளாகவும் மாற்றி விடக்கூடிய ஆபத்தும் உள்ளதை நன்கு உணர வேண்டும். ...போர் வடுக்கள் செறிந்த இம்மண்ணில், அர்த்த இராத்திரியில் குடை பிடிக்கும் அற்பர்களாக நாம் மாறி விடாது நமது பாரம்பரிய நல்லொழுக்க வாழ்வில் நிலைத்து நிற்க உதவி செய்வதே உகந்ததாகும்"*

**ஏப்பிரல் - ஜூன் 2018, இதழ் : 66**

அதேவேளை

*"புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் பிள்ளைகளின் எதிர்காலம் ஒளிமயமாயுள்ளது. பள்ளிகளில் கல்வி கற்பவர்கள் அறிவிலும், விளையாட்டு, கலை முதலிய துறைகளில் காட்டும் ஆர்வம், ஆற்றல்களிலும் முன்னணியில் திகழ்கின்றனர். ...தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் தக்க வைத்துக் கொள்ள மேற்புலத்து நாடுகளில் வாழும் தமிழ்ப் பற்றாளர் போற்றத்தகு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் தமிழ் இளவல்கள், இளம் பெண்கள் தாம் வாழும் நாடுகளின் பண்பாடுகளில் ஊறி, தமது சூழலுக்கு ஏற்ப வளர்ந்து வருகின்றனர். வெகு தொலைவில் இல்லாத எதிர்காலத்தில், நமது மண்ணும் மொழியும், பழக்க வழக்கங்களும் அவர்களுக்கு பெரும்பாலும் அந்நியமாகிவிடும் என்று கருத இடமுண்டு. அவர்களுடைய ஆற்றல்களின் பலன்களும், வளங்களும் நமது மண்ணுக்குக் கிட்டாமல் போகலாம். அத்தகைய ஓர் இழப்பு முற்று*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுதாக நடைபெறாதிருக்க புலம் பெயர்ந்து வாழும் மூத்த தலைமுறையினர் மட்டும் அல்லாது, இங்கு நமது இருப்பைப் பல சவால்கள் மத்தியில் தக்க வைத்துக் கொண்டிருக்கும் நாமும் ஆவன செய்ய வேண்டும்"

**ஜூலை - செப்ரெம்பர் 2014, இதழ் : 59**

அந்தவகையில் புலம் பெயர்ந்தோர் தொடர்பில் அவர் முன்வைக்கும் புத்திஜீவிகள் வெளியேற்றத்தால் நம்நாடு அடைந்த இழப்புகள், தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்காக அவர்கள் எடுத்துவரும் செயற்பாடுகள் பாராட்டத்தக்கதாக அமைந்தாலும் அவர்களின் பிள்ளைகள் அந்தந்த நாட்டுப் பண்பாடுகளுக்கு அடிமையாகி தமிழ்ப் பண்பாடுகளை மறந்து விடுவதற்கான வாய்ப்பிருப்பதால் அதனைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தமை தமிழ்ப் பண்பாடு குறித்து அவருக்கிருக்கும் அக்கறையை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக உள்ளது.

10

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தவிர்த்து உதிரிகளாகவும் சில விடயங்கள் மீது தனது பார்வையை அடிகளார் செலுத்தி உள்ளார்.

*"மேற்புலத்தைப் பற்றிய அறிவை மையமாகக் கொண்டு கல்வி பயின்ற எம்மத்தியில் அண்மைக் காலத்தில் தாயகத்தை மையப்படுத்தும் உணர்வு தோன்றியுள்ளது வரவேற்கப்பட வேண்டியது. வளர்க்கப்பட வேண்டியது. நாம் வாழும் சுற்றுச் சூழலும் அதைப் பயன்படுத்திய நம் மூதாதையரின் வினைத்திறனும் நம்மையே நாம் புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன.*

*...வாழ்க்கையின் இன்றியமையாத் தேவைகளுக்கும் அவர்களது கற்பனையில் உதிக்கும் கலை வடிவங்களுக்கும் மூலப் பொருளாக விளங்குகின்றன. ...காலத்தின் இத் தேவையை நிறைவு செய்யும் வகையில் யாழ்.பல்கலைக் கழக நுண்கலைப் பிரிவு மாணவ, மாணவியர் யாழ்ப் பாணத்தின் மரச் செதுக்குகள் பற்றி களநிலை ஆய்வு செய்து கட்டுரைகள் வரைந்தனர். கலைமுகத்தின் இவ் விதழ் அவ்வாக்கங்களைத் தாங்கி வருகின்றது.*

*இம்முன்னோடி முயற்சிக்கு ஆதரவு நல்குவதுடன், இத்தகைய பணிகள் பல மட்டங்களிலும் மேற்கொள்ளப் பட்டு 'நம்மை' நாம் அறிந்தவர்களாய் வாழ்வதற்கு துணை செய்வது கற்றோரின் கடனாகின்றது"*

**சித்திரை - ஆனி 1999, இதழ் : 29**

அவ்வப்போது 'கலைமுகம்' இதழ் காலந்தாழ்த்தி வருகையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கும் ஆசிரியர் தலையங்கம் ஒன்றில் பதில் அளித்துள்ளார்.


*"கலைமுகம் வெளிவந்த வேகமும் இடைவெளிகளும் ஈழத்தமிழ் மக்களின் போர்க்கால வரலாற்றால் பெரிதும் வரையறை செய்யப்பட்டிருந்தன. வறுமை, வெறுமை, சிறுமை, கண்ணீர், செந்நீர், செம்மணி, முள்ளிவாய்க்கால் போன்ற துன்பியல் பின்னணியின் தாக்கம் குறிப்பிடக் கூடிய பாதிப்பை ஏற்படுத்தியது வியப்பன்று. பொருளாதாரச் சிக்கல்கள் பாரச்சுமையாக மாறி கலைமுகத்தின் திட்டமிடற் பணியைக் குழப்பிவிட்டன. இன்றேல் சில ஆண்டுகளின் முன்னமே கலைமுகம் இன்னும் பல முகங்களைக் காட்டியிருக்கும்"*

**2010 இதழ் 50**

திருமறைக் கலாமன்றச் செயற்பாடுகளின் பதிவுகளைத் தாங்கி 'கலைமுகம்' எனும் பெயரில் ஆங்கிலத்தில் மூன்று இதழ்கள் வெளிவந்துள்ளன. இந்நிலையில் சித்திரை – ஆனி 2001, தமிழ் இதழின் ஆசிரியர் தலையங்கம் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. அதுவும் இந்நூலை அலங்கரிக்கின்றது. மொத்தம் உள்ள 68 ஆசிரியர் தலையங்கங்களில் 8 ஆசிரியர் தலையங்கங்கள் கவிதை வடிவில் எழுதப் பட்டுள்ளன. தொண்ணூறுகளில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்களை விட இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னர் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கங்கள் புதியதொரு பரிமாணம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

தொகுத்து நோக்கும் பொழுது 'கலைமுகம்' இதழில் வெளிவந்த அடிகளாரின் ஆசிரியர் தலையங்கங்கள் அவை வெளிப்படுத்தும் காலப்பொருத்தமான, கனதியான விடயங்களின் வழியாக சமகாலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஏற்றதான வழிகாட்டல்களை வழங்குகின்றன.

'காலத்தின் தடங்கள்' நூலைப் படித்தபொழுது அடிகளாரின் ஏனைய ஆக்கங்களையும் படிக்க வேண்டும் என்ற ஆவல் மேலோங்குகின்றது. ஆனாலும் இந்நூலின் பதிப்புரையின் வாயிலாக பொறுப்பாசிரியர் செல்மர் எமில் அவர்கள் குறிப்பிட்டுள்ளதற்கமைவாக, அடிகளாரால் காலத்துக்கு காலம் எழுதப்பட்ட கலை, இலக்கியம், வரலாறு, ஆன்மீகம் உட்பட பல்துறை சார்ந்த நூற்றுக்கணக்கான எழுத்தாக்கங்கள் இன்னமும் நூலாக்கம் பெறாமல் இருக்கின்றன. அவை அனைத்தையும் நூல் வடிவில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதனை அறியக்கூடியதாக இருப்பது உடனே படிக்க முடியாத ஏமாற்றத்தையும் விரைவில் அது சாத்தியமாகும் ஆறுதலையும் ஒருங்கே அளிக்கின்றது. எனவே அடிகளாரின் ஆக்கங்கள் நூல் வடிவம் பெறும் பொழுது அதுகூட அடிகளாருக்குச் செலுத்தப்படும் சிறந்த அஞ்சலியாக அமையும் எனலாம். •



கலை என்பது மென்மையானது;
பன்மையானது; ஒண்மையானது;
உண்மையானது; திண்மையானது;
வண்மையானது; வாய்மையானது;
தூய்மையானது; ஆகவே தெய்வீகமானது.

– நீ. மரிய சேவியர் அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மரிய சேவியர் அடிகள் எழுதிய நாடகங்கள்

## மறைபொருள் நாடகங்கள்

1. உயிர் கொடுத்த உத்தமர்கள் (1963)- (வரலாறு)
2. கோவில் கண்ட கொலை (1964)- (வரலாறு)
3. ஒருதுளி (1965- 1970)
4. காட்டிக்கொடுத்தவன் (1965- 1970)
5. அமைதியின் அண்ணல் (1965) (கிறிஸ்து பிறப்பு)
6. எழுதிய கரம் (1965- 1970)
7. கன்னி பெற்ற கடவுள் (1965- 1970) (கிறிஸ்து பிறப்பு)
8. கபட மனக்காவலன் (1965- 1970) (கிறிஸ்து பிறப்பு) வானொலி
9. வா மகனே வா (1965- 1970)
10. கவலையின் எல்லை (1965- 1970) (வானொலி)
11. இன்றிரவு (1965- 1970) (வானொலி)
12. சோதனைக் களம் (1965- 1970) (வானொலி)
13. கலக்கம் தீர்த்த கலிலேயர்கள் (1965- 1970)
14. அளவுகோல் (1975)
15. செந்தணல் (1965- 1970)
16. குவலயம் பெற்ற குழந்தை (1965- 1970) (கிறிஸ்து பிறப்பு)
17. அமலன் காட்டிய வழி (1965- 1970) (வானொலி)
18. கனவு கண்ட மனைவி (1989)

## திருப்பாடுகளின் நாடகங்கள்

19. திருப்பாடுகளின் காட்சி (1964)
20. கல்வாரியில் கடவுள் (1967)
21. கடவுள் வடித்த கண்ணீர் (1968)
22. சாவை வென்ற சத்தியன் (1968) (உயிர்ப்பு நாடகம்)
23. அன்பில் மலர்ந்த அமர காவியம் (1969)
24. களங்கம் (1969) (பாடுகள் தொடர்பான நவீனம்)
25. பலிக்களம் (1972)
26. மலையில் விழுந்த துளிகள் (1989)
27. சிலுவை உலா (1991) (சிற்றிலக்கிய வரிசை)
28. கல்வாரிப்பரணி (1992) (சிற்றிலக்கிய வரிசை)
29. கல்வாரிக்கலம்பகம் (1993) (சிற்றிலக்கிய வரிசை)



30. சிலுவைச்சுவடுகள் (1998)
31. காவிய நாயகன் (2000)
32. வேள்வித்திருமகன் (2010)

## இலக்கிய நாடகங்கள்

33. கதையும் காவியமும் (1973)
34. சிந்தாமணி (1993)
35. குண்டலகேசி (1993)
36. வளையாபதி (1994)

## நாட்டுக் கூத்துக்கள்

37. மூவேந்தர் (1967)
38. சிங்ககுலச் செங்கோல் (1968)

## நடன நாடகங்கள்

39. அருளும் இருளும் (1971)
40. சிறை மீட்ட இறை (1992)
41. இயேசு பிள்ளைத் தமிழ் (2010 )
42. வானோர் விடு தூது (2011)
43. இயற்கை ஆடுகளம் (2015)
44. காலதுாரிகை (2015)
45. மெய்யியல் துளிகள் (2015)

## வார்த்தைகளற்ற நாடகங்கள்

46. புறம் 231/232 (1992)
47. அசோகா (1992)
48. திருச்செல்வர் காவியம் (1992)
49. தர்சனா (1994)
50. சமயத்துாது (1995)
51. கி.மு.200 (1993)
52. புயலான பூ (2013)
53. ஒனிரோ
54. ஒமேகா(13.7+ð=Ù) (2018)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தி

# கனவு நனவாம் கதையும்

எஸ். கே. விக்னேஸ்வரன்

## சமூக அசைவியக்கமும் சமூக ஊடகங்களும்

உலகளாவிய ரீதியில் கொரோனா பெருந்தொற்று ஆரம்பித்து ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்டன. உலகம் முழுவதிலும் வாழும் மக்களிடையேயான, இனம், மொழி, மதம், வர்க்கம்,சாதி என்று இன்னோரன்ன எந்த வேறுபாடுகளுமின்றி எல்லோருக்கும் ஒருமித்த விதத்திலான பொதுவான அச்சத்தையும் அதன் காரணமான நெருக்கடியையும் இப் பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ளது. இந்த நெருக்கடி காரணமாக அனைத்து மக்கள் மத்தியிலும், இயல்பான சமூக ஊடாட்டங்கள், கூட்டுச் செயற்பாடுகள் என்று எல்லாமே, கிட்டத்தட்ட முழுமையாக முடங்கிவிட்டுள்ளன. ஆயினும், மக்கள் இன்னமும் நம்பிக்கையுடனும், இந்த நோய்ச் சவாலை எதிர் கொள்ளும் ஓர்மத்துடனும் தம்மால் முடிந்தளவு இயல்பான வாழ்க்கைக்கு நெருக்கமாக செல்லப் பல்வேறு வழிகளிலும் முயன்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை அவதானிக்கும் போது, கவிஞர் மஹாகவி அவர்கள் மறைந்த ஐம்பது ஆண்டுகள் நிறைவினை ஒட்டி அவரது நூல்களை மீண்டும் பதிப்பிக்க எடுக்கப்படும் முயற்சிகளின் போது மீளவும் வாசித்த அவரது 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற கவிதை வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன.

*'மப்பன்றிக் கால மழை காணா மண்ணிலே*
*சப்பாத்தி முள்ளும் சரியாய் விளையாது*
*ஏர் ஏறாதுகாளை இழுக்காது*
*அந் நிலத்தின்*
*பாறை பிளந்து பயன் விளைப்பான் என்னூரான்.*
*ஆழத்து நீருக்கு அகழ்வான் அவன். நாற்று*
*வாழத்தன் ஆவி வழங்குவான்...'*

என்று தொடரும் அந்தக் கவிதை சொல்லும் அத்தகைய ஒரு விட்டுக்கொடுக்காத மிடுக்கு மனோநிலையுடன் உலகெங்கும் வாழும் மக்கள் இந்தக் கொடுநோய்க்கெதிராகத் தீவிரமான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வீட்டுக்குள் முடங்கிக் கிடத்தல், முகக் கவசமணிதல், 'அல்லும் பகலும், அனவரதமும்' கைகளைக் கழுவிக் கழுவி வாழ்தல், தெரிந்தவரோ, அறிந்தவரோ அல்லது உறவினர்களில் ஒருவரோ இறந்துவிட்டார் என்ற செய்தி எந்த நேரமும் வந்துவிடலாம் என்ற ஒருவகை மனப் பதைபதைப்புடன் வாழ்கின்ற நிலையிலும் கூட, வாழ்வின் மீதான நம்பிக்கையும், அதைத் தக்கவைப்பதற்கான உறுதியும் கூட, அவர்களிடையே பிரமிப்பூட்டும் விதத்தில் நிலவவே செய்கின்றன.

கொரோனா நெருக்கடி வந்ததைத் தொடர்ந்த கடந்த ஒன்றாரை வருட காலத்துள் நம்மவர் மத்தியில் காணப்பட்டுள்ளவையாகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த மூன்று விடயங்களைக் குறிப்பிடலாம். இந்த மூன்று விடயங்கள் தொடர்பாக நாம் வாழும் சமூக மட்டத்தில் நடைபெற்றுவரும் அக்கறை மிக்க செயற்பாடுகள், பரந்தளவிலான மக்களது கவனத்தை ஈர்க்கும் நடவடிக்கைகளாக விருத்தியடைந்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்த மூன்று விடயங்களையும் சுருக்கமாக இவ்வாறு வகைப்படுத்தலாம்:

1. இயற்கையைப் பேணல், சூழலியல் தொடர்பான விழிப்புணர்வு. அதன் அடிப்படையில் நிகழும் மரநடுகைச் செயற்பாடுகள் மற்றும் இயற்கையோடியைந்த உற்பத்தியில் கவனம் செலுத்தல் போன்ற விடயங்கள் அக்கறைக்குரிய பேசுபொருட்களாகவும், நடைமுறைக்கு இட்டுச் செல்வனவாகவும் முன்னெப்போதையையும் விட அதிகளவில் ஆகியுள்ளமை.

2. நமது மக்கள் முதல் நமது நூல்கள் வரையிலான 'நமது' என்ற அடிப்படையிலான சமூக நலன்சார் அக்கறைகளும் நடவடிக்கைகளும், இளைஞர்கள் மத்தியில் சமூக அமைப்பு வடிவங்களினூடாக முன்னெடுக்கப்படும் நிலைமை உருவாகியிருத்தல்.

3. கலை, இலக்கியம், அரசியல், வரலாறு, பண்பாடு, தொல்லியல், சமூகவியல் போன்ற சமூக விழிப்புணர்வுக்கு அவசியமான பல்வேறு விடயங்கள் தொடர்பான கற்றலை முதன்மைப்படுத்தும் வகையிலான ஒன்றுகூடல்கள், கலந்துரையாடல்கள், சமூக நடவடிக்கைகள் போன்ற நிகழ்ச்சிகளும் நடவடிக்கைகளும் பரவலாக மேற்கொள்ளப்படல்.

முதலாவதான சூழலியல் சார் விடயங்கள் தொடர்பான விழிப்புணர்வு உலகளாவிய ரீதியிலும் சரி, இலங்கையிலும் சரி பெருமளவான சமூக அக்கறைக்குரிய ஒரு முக்கிய விடயமாக ஏற்கெனவே மாறியுள்ளது உண்மையே. ஆயினும் நமது சமூகத்தில் குறிப்பாக யுத்தம் முடிந்ததன் பின்னான இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்கான நெருக்கடி நிறைந்த காலத்தைக் கடந்து வரும் பயணத்தின் போதே, மிகப் பெரியளவில் இந்த விடயம் அடையாளம் காணப்பட்டிருக்கிறது. யுத்தம் தின்றழித்த நமது சூழலை மீள உருவாக்குதலின் முக்கியத்துவம், யுத்தின் பின்னான காலத்தில் அது தந்த அழிவுகளிலிருந்து மீண்டெழுவதற்கான பெரும் பாடுகளின் அனுபவத்திலிருந்து எழுந்த புரிந்துணர்வே இது என்று சொல்லலாம். இது எவ்வளவுதான் சிறிய அளவிலான புரிந்துணர்வாக இருந்தபோதும் ஒரு முக்கியமான, தவிர்க்க முடியாத தேவை என்ற புரிதல், கடந்த ஒரு தசாப்த காலத்துள், வெளிப்படையாக அடையாளம் காணப்படக் கூடியளவுக்குப் பேசப்படுவதாக வளரத் தொடங்கியுள்ளது என்று சொல்லலாம். அழிக்கப்பட்ட காடுகள், கைவிடப்பட்ட நீர் நிலைகள், தரிசு பத்திப்போன வயல் நிலங்கள் என்பவற்றை மீளுருவாக்கம் செய்தல், காடுகளை உருவாக்குதல், மரங்களை நாட்டுதல் என்பவற்றை ஒரு இயக்கமாகவே மேற்கொள்ளுதலின் தேவை, கடல் வளங்களின் சிதைவுகளிலிருந்து அவற்றை மீட்டெடுத்தல், அதற்கு அச்சுறுத்தலாக உள்ள விடயங்களை இனங்காணல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான முயற்சிகளில் ஈடுபடல் என்பன குறித்த பல கருத்துக்களும் நடைமுறைசார் முயற்சிகளும் இப்போது வளர்ந்து வருகின்றன. இந்த விடயங்கள் இத்தோடு சம்பந்தப்பட்டவர்களால் இரண்டு நிலையிலான நடவடிக்கைகளாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒன்று சிறுவர்கள், மாணவர்கள் மத்தியில் குறிப்பாகவும், பொதுமக்கள் மத்தியில் பரவலாகவும் சூழலியல், சூழலைப் பசுமையாக்கம் செய்தல் என்பவற்றின் முக்கியத்துவம் என்பவற்றை பரவலாக எடுத்துச் செல்லும் நடவடிக்கைகளில் ஈடுபடல். இரண்டாவது, முடிந்தளவு பரவலாக காடுகளை உருவாக்குதல், மரங்களை நாட்டுதலும் அவற்றைப் பராமரித்தலும், இயற்கை விவசாய வழிமுறைகளை அறிமுகப்படுத்துதலும், நிலக்கீழ் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் விதத்திலான விவசாயத் திட்டங்களை வகுத்தலும் செயற்படுத்தலும் ஆகிய முயற்சிகளில் ஈடுபடுதலும், கடல் நீர் வளங்களின் மீதான சிதைப்பு நடவடிக்கைகளின் ஆபத்துக்கு எதிராகக் குரல் எழுப்புவதும், அதற்கெதிரான முயற்சிகளில் ஈடுபடலும்.

இரண்டாவது விடயமான 'நமது' என்ற கருத்தமைவு மட்டத்திலான செயற்பாடுகளைப் பொறுத்தவரை,அது முழுக்க முழுக்க அண்மைக்காலத்திய ஒரு விடயமாகவே சொல்ல வேண்டும். அரச அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்த காலத்தில் இருந்த 'நமது' என்ற கருத்தாக்கம் பெரிதும் அரசியல் மட்டத்திலான ஒன்றாகவே இருந்து வந்தது. ஆனால் இப்போது பேசப்படும் இந்த 'நமது' அல்லது 'எங்கட' என்ற கருத்தாக்கம், அரசியலை மட்டுமல்லாமல், முழுதான சமூக நலன்களையும் அடிப்படையாகக் கொண்டு எழுவதாக அடையாளம் காண முடிகிறது. 'எங்கடை புத்தகங்கள்' என்பது அதன் ஒரு ஆரம்பமே. எங்கடை வீடு, எங்கடை காணி, எங்கடை இனம், எங்கடை சாதி, எங்கடை ஊர் என்றிருந்த கருத்துக்களுக்குப் பதிலாக 'எங்கட புத்தகங்கள்' என்ற கருத்துநிலை மிகவும் விரிவானது. அது எங்களுக்கான எங்களது கல்வி என்று விரிவதற்கான வாய்ப்பைக் கொண்டது. நம்மிடையே நிலவிய மேற்சொன்ன எல்லா 'எங்கடை'களும் மொத்த சமூகத்தைத் தனித்தனிக் குழுக்களாக குறுக்கும் தன்மையைக் கொண்டிருக்க 'எங்கட புத்தகங்கள்' என்பது விரிந்த பரப்பை ஒன்றிணைக்கும் ஒன்றாக அமைகிறது. அது எமது மக்கள், எமது சூழல், எமது வளங்கள், எமது உற்பத்திகள், எமது செயல்கள், எமது சிந்தனை, எமது முன்னேற்றம் என்றெல்லா வகையிலும் விரிவடைவதற்கான அடிப்படைகளைக் கொண்ட ஒரு கருத்து நிலையாகும். இத்தகைய சிந்தனையும் அவற்றின் அடிப்படையிலான கருத்துக்கள், அனுபவங்கள், பொருட்கள் என்பவையும் பரவலான பரிவர்த்தனைக்கு உள்ளாகும் போது, அவற்றை விரிவுபடுத்துதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்படுவதன் அவசியம் மேலும் மேலும் வலியுறுத்தப்படுவதும் அதற்கான செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதும் வளரும். இது அண்மைக்காலத்திய ஒரு முக்கியமான மாற்றம் எனலாம். ஏற்கெனவே, நமது முன்னைய தலைமுறையினரின் நூல்களையும் எழுத்துக்களையும் பற்றிய மறு வாசிப்புக்களும் அனுபவங்களும் பகிரப்படலும் விவாதத்துக்குள்ளாக்கப்படலும் நடக்கத் தொடங்கியுள்ளன. நூல்கள், பத்திரிகைகள், உற்பத்திப் பொருட்கள் என்பவற்றை உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் பரவலாக விநியோகம் செய்வதற்கான முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயினும், இந்தமுயற்சி ஒரு மொத்தச் சமூக மேம்பாட்டின் அடிப்படையிலான செயற்பாடாக வளர்வது என்பது, இந்தக் கருத்துப்போக்கின் பரவலான வளர்ச்சி மூலமே வெற்றிகரமாக சாத்தியமாக முடியும். ஆகவே அவைபற்றிய பரவலான அறிமுகமும் உரையாடலும் கூட அவசியமாகும்.

மூன்றாவதாக கலை இலக்கியம்,பண்பாடு, தொல்லியல், அறிவியல், வரலாறு, பால்நிலை என்று பல்வேறு துறைகள் சார்ந்து பரவலான உரையாடல்களும் விவாதங்களும், அறிமுகப்படுத்தல்களும் உலகளாவிய ரீதியில் துறைசார் அறிஞர்களுடனான உரையாடல்கள் மூலமாக நடைபெறுவது மிகவும் பரவலாகவும் அதிகரித்தும் வருகின்றன என்பதைச் சொல்ல வேண்டும். இவற்றுடன், நமது குழந்தைகள், நமது சமூகம், நமது கல்விமுறை, நமது சமூகப் பார்வை என்பவை பற்றிய உரையாடல்களும் சர்வதேச மட்டத்திலும் பரந்துள்ள எமது படைப்பாளிகள், துறைசார் நிபுணர்கள், அறிவாளிகளின் பங்கேற்புடன், அதுவும் சர்வதேச ரீதியான பங்கேற்புடன் விவாதிக்கப்படுகின்றன. நாம் வாழும் சமூகம், கிட்டத்தட்ட ஒரு கால்நூற்றாண்டு காலத்துக்கு மேலாக, யுத்த சூழலில் வாழ்ந்தும், வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவில் பெருமளவில் இளம் சந்ததிகளை இழந்ததன் காரணமாக, சந்ததிகள் வழியான அறிவு மற்றும் அனுபவத் தொடர்ச்சி என்பதைப் பெருமளவில் இழந்துவிட்ட ஒரு ஒரு சமூகமாக இருப்பதால், இத்தகைய கற்கைகளும், உரையாடல்களும் மிகவும் முக்கியத்துவமும் அவசியமும் வாய்ந்தவையாக அமைகின்றன. அந்த அவசியம் இப்போது தெளிவாக உணரப்பட்டிருப்பதை, இத்தகைய நடவடிக்கைகள் தெளிவாக இனம் காட்டுகின்றன.

உண்மையில் இவையெல்லாம் எப்படியும் வரத்தான் செய்யும் என்பதும், அப்படித்தான் மனித சமூகம் தப்பிப் பிழைத்து வரலாற்றுக் காலம் பூராவும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கிறது என்பதும் அது எப்படியும் ஒருகால் வரத்தான் செய்யும் என்பதுவும் ஒரு சமூகவியல் உண்மைதான் என்ற போதும், இவை இப்போது பரவலாக, உலகளாவிய நடைமுறைக்கு வந்ததற்கு கொரோனாப் பெருந்தொற்றுப் பரவலாகியது ஒரு முக்கியமான காரணமாகும். மேற்கத்தைய அரசுகளின் உலகம் முழுவதையுமே ஒரு பெரும் சந்தையாக மாற்றும் உலகமயமாதல் திட்டத்தின் பக்கவிளைவாக உருவாகிய ஒன்றே இந்த உலகமயப்பட்ட பெருந்தொற்று. அந்தவகையில் அதன் இன்னொரு பக்கமே இத்தகைய உலகமயப்பட்ட, உரையாடலுக்கான வாய்ப்பு உருவாகியுள்ளமையுமாகும். அதாவது இடம் விட்டு இடம் மாறியோ, நாடுகளைக் கடந்தோ பயணிக்க முடியாத நிலையில் இருக்கின்றபோதும், இடையறாத தொடர்பாடலுக்கான வாய்ப்பைத் தரும் சாதனமாக மாறியுள்ள சமூக வலைத் தளங்களூடான உரையாடல்கள் நமது சமூக வாழ்வில் ஒரு முக்கியமான திருப்பத்தை ஏற்படுத்திவிட்டுள்ளன. உண்மையில் இதை ஒருவகையில் முக்கியமான ஒரு வாய்ப்பாகவே கொள்ள வேண்டும். இந்த மாதிரியான உரையாடல்களும், அறிமுகங்களும் ஒரு உலகளாவிய ஒன்றிணைவான கருத்தை உருவாக்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளன. 'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் மகிமையில்லை' என்ற நிலைமையை இது மிக இலகுவாகவே மாற்றிவிட்டுள்ளது.


அண்மையில் எழுத்தாளர் மலரன்னை அவர்களது 'அசை' என்ற நூல் ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருப்பதாக அறிந்தபோது, எனக்குப் பெரும் ஆச்சரியமாக இருந்தது. அந்தப் பெயரை நான் கேள்விப்பட்டிருக்கவே இல்லை. 2013 இல் நான் கனடா வந்துவிட்டதால், 2015 இலிருந்து இதுவரை 10 நூல்களை வெளியிட்ட ஒருவரைப் பெயரளவில் கூடக் கேள்விப்படாமல் இருந்திருக்கிறேன் என்பது எனக்கு ஒரு அதிர்ச்சிதரும் செய்தியாக இருந்தது. ஆனால் அவரது நூல் ஜீவநதி ஊடாக வெளிவந்தது எனபதை அது விற்பனைக்குப் போகமுதலே இந்த வலைத்தள வசதி எனக்கு அறிவித்துவிட்டது. ஆகவே இந்த சமூக வலைத்தளமும் அதன் பரவலாக்கமும் உலகை ஒரு எல்லைகளற்ற கிராமமாக மாற்றிவிட்டுள்ளது. அந்த வகையில் எமது மக்களது நலனுக்காகவும், மேம்பாட்டுக்காகவும் இந்த வாய்ப்பை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்தியே ஆகவேண்டும். இல்லையேல் நாம் வரலாற்றில் மிகவும் பின்தங்கியவர்களாக ஆகிவிடுவோம்.

அந்தவகையில், சமூக இயக்கங்கள், கலை இலக்கிய அமைப்புக்கள், அரசியல் அமைப்புக்கள் அனைத்தும் முடிந்தளவுக்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். அது எல்லாவற்றையும் அறிந்து கொள்ளுதல், எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்குதல் என்று வளர்க்கவும் வளரவுமான ஒரு பேரியக்கமாக இயங்கவேண்டும். இதன் மூலமாக அது மேலும் மேலும் அறிவை ஆழப்படுத்துதல், அதன்மூலம் எதிர்கால மக்கள் நலன்சார், கலை இலக்கிய, சமூக, அரசியல் செயற்பாடுகளுக்காக மக்கள் மத்தியில் இறங்கிச் செயற்படுவதற்கான பரவலான தொடர்பையும் வலுவையும் வழங்கும் என்று நினைக்கிறேன்.

## மரிய சேவியர் அடிகள்; கிறிஸ்தவம் நமக்கு அளித்த இன்னொரு பெருங்கொடை

'கலைமுகம்' 71 ஆவது இதழ் வெளிவந்தபோது, நம் காலத்தில் வாழ்ந்த மிகப்பெரும் நாடகக் கலைஞரும், பல்துறை ஆற்றல் கொண்ட பேரறிஞரும், ஓய்வொழிச்சலில்லாத கலை இலக்கியச் செயற்பாட்டாளரும், 'கலைமுகம்' இதழின் ஸ்தாபகரும் பிரதம ஆசிரியருமான பெருமதிப்புக்குரிய கலாநிதி மரிய சேவியர் அடிகள் அவர்கள் நோய் வாய்ப்பட்டிருக்கிறார் என்ற செய்தியை அறியக் கிடைத்தது. அவர் வழமையாக எழுதும் சிறிய ஆசிரியர் தலையங்கம் இல்லாமலே வெளிவந்தது இந்த இதழ். ஆனால் இந்த இதழ் எனது கைகளுக்கு வந்துசேருவதற்கு முன்பாகவே அடிகளார் இயற்கையெய்திவிட்டார் என்ற பெருந்துயரச் செய்தி ஊடகங்கள் மூலமாக வந்து சேர்ந்திருந்தது.

கலாநிதி மரிய சேவியர் அடிகள் அவர்களை நான் ஒருபோதும் நேரில் சந்தித்ததில்லை. அதற்கான எந்தச் சந்தர்ப்பமும் எனக்குக் கிட்டவும் இல்லை. அவரது கலைப்



பணி தொடர்பாக வியப்புடனேயே, சரியாகச் சொல்வதானால் ஒரு கிறிஸ்தவ மதகுருவாக இருந்தபோதும், தமிழில், சைவ சித்தாந்தத்தில், கலைத்துறையில், குறிப்பாக நாடகத்துறையில் இவ்வளவு ஆற்றல் படைத்தவராக இருக்கிறாரே என்ற வியப்புடனேயே அவரது பங்களிப்புகளை அவதானித்து வந்திருக்கிறேன். கலைமுகத்தில் அவர் எழுதும் தலையங்கங்களை தொடர்ந்து வாசித்திருக்கிறேன். மிகச் சுருக்கமாக ஏதாவதொரு கருத்தை ஒரு சில வரிகளில் தெளிவுற அவர் எழுதும் அந்தத் தலையங்கங்கள் ஆழ்ந்த உண்மைகளை மென்மையாகச் சொல்பவை, சித்தர்கள் சொல்லும் ஒருசில வரிகளில் பெரும் பொருள் பொதிந்திருக்கும் என்று சொல்வார்களே, அது போன்றவை அவரது தலையங்கங்கள். வாழ்வின்மீது நம்பிக்கையையும், விழிப்புணர்வையும் ஊட்டும் வகையிலான ஓரிரு வரிகளைக் கொண்டவையாக அமைந்திருக்கும். அண்மையில், கொரோனா காலத்திய நிலைமைகளை முன்வைத்து அவர் எழுதிய ஆசிரியர் தலையங்கம் ஒன்றில், இயற்கையைப் பேணுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இருந்தார். 'இயற்கையைப் பேணி அதில் இறைவனைக் காண்பதும், மனிதத்தைப் பேணி அதில் மன நிறைவு காண்பதுமே 'மானிடக் கடமை' என்பதை உணர்வோம்' எனறு அவர் எழுதிய அந்த வாசகம் தான் அவரது மறைவுச் செய்தி கிடைத்தபோது எனக்கு நினைவுக்கு வந்தது!

உலகம் முழுவதிலும் கிளைபரப்பி இயங்குகின்ற திருமறைக் கலாமன்றத்தின் கலைஞர்கள் பற்றி நான் கேள்விப்பட்டும் வாசித்தும் அறிகிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்களது நாடகங்களைப் பார்க்கக் கிடைக்கிற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் இவை அனைத்துக்கும் காரணரான பேராசிரியர் மரிய சேவியர் அடிகள் மீதான எனது மதிப்பு தொடர்ச்சியாக வளர்ந்துவந்திருக்கிறது. ஒரு தடவை, மதிப்புக்குரிய தனிநாயகம் அடிகளாரது தமிழ்ப்பணி தொடர்பாக எனக்குத் தேவையான சில தகவல்களுக்காக பேராசிரியர் சிவத்தம்பி அவர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தபோது, கிறிஸ்தவமும் தமிழும் பற்றிய உரையாடலாக அது வளர்ந்தது. உண்மையில் அதை உரையாடல் என்று சொல்ல முடியாது. அவர் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தார் நான் கேட்டுக் கொண்டு இருந்தேன் என்பதே உண்மை. அப்போது அவர் சொன்ன ஒரு முக்கியமான வாசகம் எனக்கு இன்னமும் நினைவில் இருக்கிறது. அவர் சொன்னார்: ' தனிநாயகம் அடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் தமிழுக்கும் எங்களுக்கும் கிடைத்த, கிறிஸ்தவம் தந்த ஒரு பெருங் கொடை. அதுபோல்தான் இப்போது நாடகக் கலைக்காக கிடைத்திருக்கும் கொடை மரிய சேவியர் அடிகள்'. திருமறைக் கலாமன்றமும் அதன் நாடக முயற்சிகளும் தொடர்பாக ஓரளவு அறிந்திருந்த எனக்கு, இந்த உரையாடல் மரிய சேவியர் அடிகள் மீதான எனது மதிப்பை மேலும் உயர்த்தியது என்று சொல்வேன்.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக இடையறாது சமூக கலை இலக்கிய பண்பாட்டுத் தளங்களில் இயங்கி வந்த, நான் மிக மதிப்பு வைத்திருந்த ஒரு பேராற்றல் என்ற வகையில் அவரது இழப்பு, ஓரளவு எதிர்பார்த்ததேயாயினும், மிகுந்த கவலையைத் தரும் ஒன்றாகும். அவருக்கு நான் செய்யும் அஞ்சலியாக எழுதும் இந்தக் குறிப்பில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள், அடிகளின் அறுபதாவது அகவை மலரில் எழுதிய கட்டுரையிலிருந்து ஒரு பந்தியை இங்கே குறிப்பிடுவது பொருத்தமானது என்று நினைக்கிறேன்.

"மரிய சேவியர் அடிகளின் சிறப்பு அவர் ' மன்னர்களாயினும் மண்ணின் சிசுக்களாயினும் ஒரே நிலையில் அவரவர் தேவையைப் பூர்த்தி செய்பவராக இயங்குவது தான். இவற்றுக்கு மேலே மரிய சேவியருக்கு ஒரு புலமை வீச்சு உண்டு. அதனை யாழ்ப்பாணத்துக் கத்தோலிக்க வரலாற்றிலும், சைவசித்தாந்தத்திலும் அவருக்குள்ள புலமை ஈடுபாட்டிலிருந்து அறிந்துகொள்ளலாம். இந்தச் செயற்பாட்டிலும் அவர் கத்தோலிக்கத் திருச்சபையின் பெரும் பாரம்பரியத்தினது *(The Great Tradition)* தொடர்ச்சியாகவே காணப்படுகிறார். மரிய சேவியர் அடிகள் இறைபணி, கலைப்பணி, தமிழ்ப்பணி ஆகியவற்றையும் இணைக்கிறார்.

*"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாய் தமிழ் செய்யுமாறே"*


என்பது இவருக்கு பொருத்தமான இலக்கு வலுவாகும், மரிய சேவியரின் அறுபது வயதுக்குரிய சாதனைகள் பல நிரம்பிக் கிடக்கின்றன.'

சென்று வாருங்கள் அடிகளே!
உங்களுக்கு என் அஞ்சலிகள்.

# நாராயணபுரம்: வடமராட்சியின் மண்வாசனை வீசும் நாவல்!

'நாராயணபுரம்' ஒரு ஈழத்து நாவல் என்றும், இதை எழுதியவர் இப்பொழுது புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் நன்கு அறியப்பட்ட ஒரு ஈழத்து எழுத்தாளர் ராஜாஜி ராஜகோபாலன் என்றும் தெரிந்துகொண்டு இந்நாவலை வாசிக்கப் புகும் வாசகர்களுக்கு, இந்தப் பெயர் இலங்கையிலுள்ள எந்த இடத்தின் பெயர் என்ற கேள்வி எழலாம். உண்மையில் அப்படி ஒரு பெயர் நானறிந்தவரை இலங்கையில் இல்லை என்றே நினைக்கிறேன், ஏன் நாராயணன் என்ற பெயர்கூட பெருமளவுக்குப் பரவலாக நம்மவர் மத்தியில் பாவிக்கப்படும் பெயரும் அல்ல. ஆனால் அது ஈழத்தவர்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில்,பெரும்பாலான எல்லோருக்கும் தெரிந்த ஒரு ஊர்தான். ஊரின் பெயரைத்தான் நாவல் ஆசிரியர் மாற்றியிருக்கிறார். 'விஷ்னுபுரம்' என்ற ஜெயமோகனின் நாவலில் வரும் விஷ்னுபுரம் ஒரு கற்பனைப் பெயர் மட்டுமல்ல, அப்படி ஒரு இடமே இருந்ததில்லை என்பர். ஆனால் நாராயணபுரம் இரத்தமும் சதையுமாய் மக்கள் காலம் காலமாக வாழ்ந்துகொண்டு இருக்கும் ஒரு நிலம் மட்டுமல்ல, வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு நிலமும் கூட. நாம் எல்லோரும் நன்கறிந்த, வடமராட்சிப் பிரதேசத்தின் புகழ்பெற்ற ஆலயமான வல்லிபுர ஆழ்வார் கோவில் நிலைகொண்டுள்ள வல்லிபுரம் என்ற பிரதேசம் தான் இந்த நாராயணபுரம்!. வடமராட்சியில் வல்லிபுரம் என்ற பெயர்கொண்ட ஒருவராவது இல்லாத ஊரே இல்லை என்று சொல்லும் அளவுக்குப் பிரபலமானது அந்தப் பெயர்.

இந்தக் கிராமத்தில் வாழும் ஒரு விவசாயக் குடும்பத்தின் மூன்று தலை முறைகால வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பாகங்களில் விரிந்துள்ளது இந்த நாவல். மொத்தம் நானூறு பக்கங்களைக் கொண்ட ஒரு நாவலாக இருந்தபோதும், ஆசிரியர் ராஜாஜி ராஜகோபாலனின் மொழி அழகும், கதைசொல்லும் பாணியும் அதைச் சலிப்பேதுமின்றி சுவாரஷியமாக ஒரே மூச்சில் வாசித்துவிடக்கூடியதாக ஆக்கிவிட்டிருக்கின்றன. நாவல் முழுவதும் விரவிக் கிடக்கும், ஈழத்தமிழுக்கும், வடமராட்சி மண்ணுக்கும் உரிய -இன்று பாவனையில் அருகிவருகின்ற- பலநூறு சொற்கள், இயல்பான முறையில் தமது ஆழத்தையும் அழகையும் வெளிப்படுத்தும் விதத்தில் கதையின் அழகுக்குப் பலம்சேர்ப்பவையாக அமைந்துள்ளன. தமிழ் நாட்டில் பதிப்பிக்கப்பட்ட போதும், பதிப்பாளர்கள் அச் சொற்களை மாற்றாமல் அப்படியே விட்டிருப்பதற்காக நூலைப் பதிப்பித்த 'டிஸ்கவரி புத்தக நிலைய'த்துக்கு நன்றி கூற வேண்டும். அர்த்தம் புரியாததால், எழுத்துப் பிழையென எண்ணி திருத்தப்பட்டிருக்கக் கூடிய அல்லது மொய்ப்புப் பார்த்தலில் ஏற்பட்ட தவறால், தவறாக வந்துவிட்ட ஒருசில






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்களைத் தவிர (உதாரணத்துக்கு ஒன்று: தாவாரம் என்பது தாவரம் என வந்திருக்கிறது), ஓரிரு பதிப்பகங்கள் தவிர்ந்த தமிழ்நாட்டுப் பதிப்பாளர்கள் செய்யும் 'திருத்த வேலை' களை அது செய்யவில்லை என்பது மகிழ்ச்சியே. கிட்டங்கி, புலுடா, அயத்துப்போதல், மோனை, சண்டிக்கட்டு, பரியலங்கள், தின்னு, ஈளதாளம், படலை, மல்லுக்கு நிக்கிறது என்று பல சொற்கள் வடமராட்சிப் பிரதேசத்தில் ஒலிக்கும் அதே மண்வாசனையோடு நாவல் முழுவதும் நிறைந்து கிடக்கின்றன. அந்தப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்ததாலோ என்னவோ, நாவலில் வரும் ஒவ்வொரு சம்பவமும், உரையாடலும் எனக்கு எவ்வளவோ பழைய கதைகளையும் நினைவுகளையும் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவந்துகொண்டிருந்தன.

ஒரு படைப்பின் வெற்றிக்கு அடிப்படையான ஒரு விடயம் என்று எதனைச் சொல்வது? அது சொல்லும் கதை, அது சொல்லப்படும் விதம், அது கையாண்டுள்ள மொழி என்ற இந்த மூன்றும் சரியாகப் பொருந்தி வரும்போதுதான் ஒரு நூல் இலக்கிய முழுமையையும், வெற்றியையும் பெறுகிறது என்பது எனது கருத்து. அந்த அடிப்படையில், நாராயணபுரம் நாராயணன் கோவிலை மையமாகக் கொண்ட ஒரு சூழலில், அதனோடிணைந்த வாழ்வைப் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வாழும் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தின் மூன்று தலைமுறை வாழ்வைச் சொல்வதனூடாக, மூன்று தலைமுறை காலத்தின் அந்தப் பிரதேசத்திலும், நாட்டிலும், ஏற்பட்டுவந்த அரசியல், சமூக, பண்பாட்டுப் போக்குகளையும், நிகழும் மாற்றங்களையும் அழகுறப் பதிவு செய்வதாக அமைகிறது. அதிகம் படிக்காத, மிகுந்த பிரயாசை உள்ள விவசாயியான முத்துவேலர் மாயவன் கோவிலில் மனமுருக நின்று அவனைத் தொழுகின்ற காட்சியுடன் தொடங்கும் நாவல், நாராயணபுரமும் அதைச் சூழவுள்ள கிராமங்கள் என்று அந்தப் பிரதேசத்தையே முழுமையாக வாசிப்பவர் கண்களில் விரியச் செய்துவிடுகிறது. அந்தமக்கள் பேசும் பேச்சுக்கள், அவர்களது குணாதிசயங்கள், அவர்களிடையே நிலவும் நெருக்கமும் விரிசலும் சேர்ந்த இயல்பான உறவுகள், அவற்றிடையான ஊடாட்டங்கள் என்று அன்றைய அந்தச் சமூக வாழ்வின் அனைத்துப் பக்கங்களையும் மிக லாவகமாகக் காட்சிப்படுத்திக் காட்டுகிறது அவரது அழகான மொழி.

முத்துவேலர் ஒரு விவசாயி. தனது முழு ஈடுபாட்டுடனான உழைப்பினால் வளர்ந்தவர். விவசாயம் அவரது உயிர். பாடசாலையில் கல்வியில் சிறந்து விளங்கும் மகனுக்கு, ஆங்கிலக் கல்வி, சங்கீதம் என்பவற்றையெல்லாம் படிக்க அனுமதிக்கும் அவர், அவனுக்குப் பல்கலைக் கழகம் கிடைத்தபோதும் அது தேவையில்லை, எங்கடை விவசாயத்தை நாங்கள் விடக்கூடாது, படிச்சவனாக இருக்க வேண்டும் என்பதற்காக படித்தது போதும். இனி விவசாயத்தில் கவனம் செலுத்து என்று மறித்துவிடுகிறார். அவர் நினைத்தது போலவே மகன் தேவனும் விவசாயத்தில் சிறப்பாக ஈடுபடுகிறான். அவனுக்கு வரும் காதலையும், அது எங்கள் விவசாயக் குடும்பத்தின் தொடர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பொருந்தி வராது என்று மறுத்து ஒரு விவசாயக் குடும்பத்தில் திருமணம் செய்து வைக்கிறார். இரண்டுக்கும் அவருக்கிருந்த ஒரே காரணம் பரம்பரைத் தொழிலான விவசாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற அவரது ஓர்மம். அடுத்த தலைமுறையைச் சேர்ந்த தேவனுடைய காலம் பல நெருக்கடிகளைத் தோற்றுவிக்கிறது. நாட்டில் ஏற்படும் நெருக்கடிகள், அரசியல் மாற்றங்கள், விடுதலை இயக்கங்களின் தோற்றமும், வளர்ச்சியும் பின்னரான சிதைவுகளும் என்று விரிகிறது. தேவன் தனது படிப்பு ஆசையைப் பிள்ளைகளில் காண விரும்புகிறார். மகன் பல்கலைக் கழகம் செல்கிறான், தேவன் விரும்பிய பொறியியல் பட்டப் படிப்புக்காக. ஆனால் பட்டப் படிப்புப் படிக்கும் மகன் தகப்பனுக்கு இப்படி எழுதுகிறான்: 'கொழும்பு வாழ்க்கை சுகமானது தான். ஆனால் அதற்காக வீட்டையும் ஊரையும் வெறுத்து அந்த வாழ்க்கைக்கு ஆசைப்படமாட்டேன். படிக்கவும் வேலைக்கும் என தேடிப்போன இந்த நகரம் எவ்வளவு அழகாகவும் வசதியாகவும் கடற்கரையில் மாலை முழுவதும் காலார நடக்க இதமாக இருந்தாலும், அது பிறந்த ஊராகி விடுமா? நெருக்கமான நகரத்தின் இடுக்கில் கால் நீட்டிப் படுக்க முடியாத அறையும் நாலடி முற்றமும் வீடாகி விடுமா? கோடிப்புறத்தில் நிற்கும் ஒற்றைத் தென்னையும் பெயர் தெரியாத பூ மரங்களும் தோட்டமாகி விடுமா?'


ஆழமான சங்கீத உணர்வும், ஈடுபாடும் கொண்ட தேவன், தன் மனைவியின் மறைவுக்குப் பிறகு, அவளே தன் இறுதிக் காலத்தில் விரும்பியபடி, அவரது முன்னாள் காதலியான அக்காலத்தின் தலைசிறந்த பாடகி நித்யாவை மறுமணம் செய்ய, பிள்ளைகளே முன்னின்று ஊக்குவிப்பதுடன் ஒரு திருப்பத்தை அடையும் நாவல் மூன்று தலைமுறைகளதும் வாழ்வுபற்றிய சிந்தனைகள், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள், அக்காலத்தில் தொடங்கிய விடுதலைப் போராட்டம் ஏற்படுத்தும் புதிய சிந்தனைப் போக்குகளின் தாக்கம் என்று கிராமம் மாறுதலடையும் போக்கை அழகாகப் பேசுகிறது. இந்த நாவல் வடமராட்சியின் மொழியை, வாழ்க்கை முறையை, அதன் மண்வாசனையை மிக அழகாகப் பதிவுசெய்யும் ஒரு படைப்பு என்று துணிந்து கூறலாம். நாவலின் எழுத்து பல இடங்களில் கல்கியையும், தி.ஜானகிராமனையும் எனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்தின என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும். ஈழத்தில் வெளிவந்த இதுவரை நான் வாசித்த நாவல்களில் இது பெருமளவில் வேறுபட்ட, தனித்துவம் பொருந்தியதாக அமைந்துள்ளது. நூலுக்கான அணிந்துரையில் நாவல் பற்றி மிக விரிவாகவே பேசியுள்ள பேராசிரியர் கலாநிதி நா.சுப்பிரமணியன் அவர்கள், 'இதை எழுதியவர் ஒரு புலம்பெயர் தமிழர் என்ற வகையில் இந்நாவல் புலம்பெயர் இலக்கியம் என்ற வகையிலும் இது கவனத்துக்குரியதாகிறது' என்றும் இது 'ஈழத்தின் போர்க்கால நாவல்' என்றும் குறிப்பிடுகிறார். இந்த வரையறைகள் மேலும் விரிவான உரையாடலுக்குரியவை என்றே நினைக்கிறேன். என்னைப் பொறுத்தளவில் இந்த நாவல் நிகழும் பிரதேசத்து நம்பிக்கைகள், சமூக உறவுகள், சிந்தனைப் போக்குகளை அந்தப் பிரதேசத்துக்குரிய மண்வாசனையுடன் முன்வைக்கின்றது என்பதே அதன் தனித்துவம் என்று நான் நினைக்கிறேன். இது ஈழத்து நாவல்கள் மத்தியில் போர்க்காலம் பற்றிப் பேசினும் கூட, இதன் தனித்துவம் வேறு என்றே நினைக்கிறேன். இந்தப் பத்தியில் நான் அதனுள் நுழைய விரும்பவில்லை. ஆயினும், நாவல் வாசிப்பில் ஆர்வமுள்ள அனைவரும் அவசியம் வாசிக்க வேண்டிய ஒரு நாவல் என்று எந்தத் தயக்கமும் இன்றி என்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிபாரிசு செய்ய முடியும். நண்பர் ராஜாஜிக்கு எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்!

## மஹாகவி படைப்புக்கள் மூன்று தொகுதிகளாக!



மஹாகவி அவர்கள் மறைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு அவரையும், அவரது படைப்புக்கள் பற்றியும் உலகம் பூராவும் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் பரவலான உரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் அவர் நினைவாக, சிறப்புப் பக்கங்களில் ஆக்கங்களை வெளியிட்டு வருகின்றன. கூடவே, அவர் எழுதி இதுவரை நூல்வடிவு பெறாத ஆக்கங்களைத் தேடி எடுத்து நூல்வடிவில் கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பேராசிரியர் நுஃமான் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு, அவரது கவிதைகள், பா நாடகங்கள், காவியங்கள் மூன்று பெருந்தொகுதிகளாக ஜீவநதி வெளியீடாக வெளிவந்துள்ளன.

நாற்பதுகளிலிருந்து அவர் கிராம ஊழியன், ஈழகேசரி, சுதந்திரன், கலாமோகினி, தமிழன், தேனருவி போன்ற பல இதழ்களில் வாணன், பண்டிதன், புதுக்கம்பன் மாபாடி ஆகிய புனைபெயர்களில் எழுதிய கிட்டத்தட்ட இருபதுக்கும் மேற்பட்ட கவிதைகள், மற்றும் அவரது ஆறு சிறுகதைகள் (ஒரு சிறுகதை மட்டும் கிடைத்துள்ளது) இலங்கை வானொலியில் அவர் நடத்திய கலை நிகழ்ச்சிகளின் போது அவர் எழுதி நிகழ்த்திய எழுத்துக்கள் என்று பல ஆக்கங்கள் இன்னமும் முற்றாகத் திரட்டப்படவில்லை. வெளிவந்த இதழ்களோ பத்திரிகைகளோ கிடைக்காமை, அவரது சேகரத்தில் இருந்த சில படைப்புக்களின் பிரதிகள் நெருக்கடியான இடப்பெயர்வுகளின் போது தவறிப் போனமை போன்ற காரணங்களால் கைக்குக் கிடைக்காதவற்றைத் தேடித் தொகுத்ததும் இன்னொரு தொகுதியாகக் கொண்டுவரும் நோக்கம் இருப்பதாக கவிஞர் சேரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மஹாகவி அவர்களது நாடகங்கள், கவிதைகளிற் சில மாணவர்களுக்கான பாட நூல்களாகவும் இருந்தும், அவை நூல் வடிவில் விற்பனையில் இல்லாமல் இருந்ததாலும் பல மாணவர்களுக்குக் கிடைத்துள்ள றோணியோ பண்ணப்பட்ட பிரதிகள், பல்வேறு எழுத்துப் பிழைகள், சொற்பிழைகளுடன் பயன்பாட்டில் இருப்பதை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். இந்த நூல்களின் வருகை அத்தகைய பிழைகள் அற்ற பிரதிகள் மாணவர்களுக்குச் சென்றடைவதற்கான வாய்ப்பை எதிர்காலத்தில் வழங்கும் என்பது ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். மஹாகவி மறைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவையொட்டி இப்போது பரவலாக நடைபெற்றுவரும் பல்வேறு நிகழ்வுகள், ஈழத் தமிழ்க் கவிதை வரலாற்றில் ஒரு புத்துணர்ச்சியையும் புது வேகத்தையும் உருவாக்கிய அவரது கவியாற்றலின் சிறப்பு இளந்தலைமுறையினர் மத்தியில் பரவலாகுவதற்கும் வழிவகுக்கும் என்பதுவும் மேலதிக மகிழ்ச்சிக்குரிய ஒன்றே!

## வரவு




**நூல்:**
கொரோனா ஊரடங்கு:
நானும் என்னூர் நாய்களும்

**நூல்:**
அதிர்வுகள் - 03




**ஆசிரியர்:**
செ. அன்புராசா

**வெளியீடு:**
முத்தமிழ்க் கலாமன்றம்
முருங்கன்

விலை ரூபா: 350.00

விலை ரூபா: 300.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சார்ல்ஸ் ப்யூகோவ்ஸ்கி கவிதைகள்

**தமிழில்: டிசே தமிழன்**

## எழுத்து

உனக்கும்
உன் இயலாத்தன்மைக்கும்
இடையில் இருக்கும் ஒரேயொரு விடயம்
பெரும்பாலும் இதுவாகும்.
குடி
பெண்ணின் காதல்
வசதி வாய்ப்புக்கள்
இவை எதனையும்
இதனோடு ஒப்பிடமுடியாது

எழுத்தைத் தவிர
எந்தவொன்றாலும்
உன்னைக் காப்பாற்ற முடியாது

இது நீ சரிந்து வீழ்வதிலிருந்து
தடுக்கும் சுவர்களாகின்றன
பெருங் கூட்டம் உன்னை நெருங்காது
காக்கவும் செய்கின்றது
சூழும் இருளை விளாசியும் விடுகிறது

எழுத்து
மிக உயர்ந்த மனோவியல் நிபுணர்,
கடவுளர்களில் மிகக் கருணையான கடவுள்.

மரணத்தைக் கள்ளமாய்ப் பின் தொடர்கிறது எழுத்து
எங்கே நிறுத்துவது என்பது இதற்குத் தெரியாது
அத்துடன் துயரத்தின்போது
தன்னைத் தானே பார்த்துச் சிரித்தும் கொள்கிறது

இறுதி எதிர்ப்பார்ப்பாகவும்
இறுதி விபரிப்பாகவும் இதுவே இருக்கிறது

இவை எல்லாமாக இருப்பதாலேயே
அது எழுத்து.



## தனித்து எல்லோருடனும் இருத்தல்

சதை என்புகளை மறைக்கிறது
அதற்குள் அவர்கள் ஒரு மனசை வைக்கின்றார்கள்
சில வேளைகளில் ஓர் ஆன்மாவை.

பெண்கள் பூச்சாடிகளை சுவர்களில்
எறிந்து உடைக்க
ஆண்கள் அளவுக்கதிகமாய்க் குடிக்கின்றார்கள்

எவராலும் தேடுவதைக் கண்டுபிடிக்க முடியவில்லை
ஆனால் கட்டில்களுக்கு உள்ளேயும் வெளியேயும்
தவழ்ந்தபடி அதைத் தேடிக் கொண்டிருக்கின்றார்கள்.
சதை எலும்புகளை மூடுகின்றது
சதை மேலும் மேலும் சதையைத் தேடுகிறது

இதைக் கண்டுபிடிப்பதற்கான எந்தச் சந்தர்ப்பமும்
ஒரு போதும் இருக்கப்போவதில்லை:
நாம் அனைவரும்
ஒற்றை விதியால் பொறி வைக்கப்பட்டிருக்கின்றோம்.
எவராலும்
அந்த ஒன்றைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

நகரம் தேவையற்றதால் நிரம்புகிறது
குப்பைத் தொட்டிகள் நிரம்பகின்றன
பைத்தியக்கார விடுதிகள் நிரம்புகின்றன
வைத்தியசாலைகள் நிரம்புகின்றன
சவச்சாலைகள் நிரம்புகின்றன.

நிரம்ப வேண்டியது இன்னும் நிறையவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்காலத் தமிழகச் சிறுகதைகள்

அந்துவன் கீரன்

(70ஆவது இதழின் தொடர்ச்சி)

**தொன்ம மறுஆக்கங்கள்**

ஆரம்பத்தில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கரிசான்குஞ்சு, நரசய்யா முதலான பலரால் கையாளப்பட்ட தொன்மம் 1980களுக்கு பின்பு எழுத வந்த படைப்பாளி களிடமிருந்து தொன்ம மறுஆக்கங்கள் புதிய பார்வை பெற்றன. சிறுகதைகளில் தொன்ம மீளுருவாக்கம் புதிய நோக்கு, புதிய சிந்தனைக்கூடான பெரும் வீச்சுடன் வெளிப் பட்டன. வாழ்வின் புரியாத புதிர்களை, முடிச்சுக்களை, காலாகாலமாக தொடர்ந்து வரும் ஐதீகங்களை, கற்பி தங்களை மீள்வாசிப்புக்குட்படுத்தும் தொன்மங்கள் மனித மனங்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் ஒன்றாகவும் காணப்படுகின்றன. தொன்மங்கள் உலகம் உள்ளிட்ட அண்டங்களின் தோற்றக்கதைகளைப் பேசுவதைப்போல் மனிதர்கள் மற்றும் அனைத்து ஜீவராசிகளின் உற்பத்தியை எடுத்துரைக்கின்றன. பகுத்தறிவுக்குட்படாத கடவுளர், அசுரர்களின் செயல்களைப் பேசும் இத்தொன்மங்கள் மாபெரும் பேரழிவுகள், போர்கள் பற்றிய கதைகளை உரைக்கின்றன. காலந்தோறும் ஐதீகக்கதைகள், பௌராணி களின் கதைகளில் மையங்கொள்ளும் தொன்மங்கள் சிறுகதைகளில் மறுபடைப்பாக்கம் செய்யப்படுகின்றன. இன்றைய சிறுகதையாசிரியர்கள் தொன்ம மரபுக் கதைக ளைத் தம் படைப்பாக்கத்திற்குப் பயன்படுத்தும்போது புதிய மதிப்பீடுகளை அத்தொன்மங்களில் இடம்பெறச் செய்வதோடு புதிய விமர்சனங்களையும் அதனுள் பொதித்து வைக்கின்றார்கள்.

சிறுகதையில் கதைசொல்லி தன் கதையின் தேவைக் கேற்ப அதன் கருத்து நிலைக்கேற்ப தொன்மங்களை நுட்பமாகக் கையாளலாம். இதிகாச புராண கதைகளைக் கதைசொல்லி தன் நோக்குநிலை, கருதுகோளுக்கமைய முற்றிலும் மாற்றி அமைத்துக் கொள்ளலாம் அல்லது தேவைக்கேற்ப குறிப்பிட்ட சில விடயங்களை புத்துருவாக் கம் செய்யலாம். கதைசொல்லி தொன்மங்களின் சாயல்க ளில் பாத்திரங்களை உருவாக்கி கதையைத் தன்போக்கில் வளர்த்துச் செல்லலாம். எதிர்ப்பிலக்கியங்களுக்காக கதை மூலங்களைப் பயன்படுத்தலாம். கதையின் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் தொன்மங்களை உவமைகளாகவும் பயன் படுத்தலாம். புதுமைப்பித்தன் இருபதுக்கு மேற்பட்ட சிறு கதைகளை தொன்மங்களை உள்வாங்கியே படைத்துள் ளார். கரிசான் குஞ்சு துரியனின் மனைவி பானுமதியை கன்னனின் ஒருதலைக் காதலியாக்கி 'பானுமதி' கதையை உளவியல் நுட்பத்தோடு வெகுதுல்லியமாகப் படைத்தார். இந்திரா பார்த்தசாரதி 'அஸ்வத்தாமா' கதையில் இறப்புக் கள் அற்று உலகில் சிரஞ்சீவியாய் அலையும் அஸ்வத்தா மனை அவனின் இயல்புநிலை சிறிதும் குலையாது கண் முன் நிறுத்தினார்.

1990களில் ஏற்பட்ட 'இந்துமத மீட்பு' நடவடிக்கைகள் மற்றும் அரசியல் பண்பாட்டு பிற்புலங்களை இராமாயண, மகாபாரதத் தொன்மங்கள் புதிய கோணத்தில் வெளிப் படுத்தி இருந்தன. இந்துமதத்தின் மேன்மையை எடுத் துரைக்கும் நோக்கிலும் அதன் தொன்மையை வெளிப்படுத் தும் நோக்கிலும் சமயப் பண்பாடுகளைப் பரப்பும் வகையி லும் தொன்மங்கள் மீளுரைக்கப்பட்டன. இதனால் இதிகாசத் தொன்மங்கள் புத்துயிர்ப்பு பெற்றன.

ஜெயமோகனின் 'பத்மவியூகம்', 'திசைகளின் நடுவே', 'வனம்', 'நதிக்கரையில்', 'விரிந்த கரங்களில்' முதலான சிறுகதைகள் இதிகாசத் தத்துவப்பின்னணியுடன் படைக் கப்பட்டவை. ஜெயமோகனின் 'பத்மவியூகம்' மகாபார தத்தை புதிய நோக்கில் சித்திரிக்கிறது. மகாபாரத யுத்தத் தில் பத்மவியூகத்துக்குள் சிக்கிக் கொண்டு கொல்லப்பட்ட அபிமன்யுவை மையப்படுத்தி அவளது தாய் சுபத்திரை அழியாத நினைவுகளோடு மனம் வெதும்புவதை உணர்வு பூர்வமாக கண்ணீர் மல்க எடுத்துரைக்கும் சிறுகதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பத்மவியூகம்'. நீர்க்கடன் வார்க்க கங்கைக்குச் செல்லும் சுபத்திரை தன் மகன் அநியாயமாக இறக்க தன் தமையன் கண்ணனே காரணம் என்பதை எண்ணித் தவிக்கிறாள். பத்ம வியூகத்துக்குள் நுழைய வழி சொன்ன கண்ணன், அவன் மீளத் திரும்ப வழி சொல்லாத அவனது கபடநாடகத்தைப் புரிந்து கொண்டு மனம் கலங்குகிறாள். கண்ணன், சல்லியன், துரோணர், ஜெயரதன், துரியன் முதலானோர் மகனின் கொலைக்கு சூத்திரதாரிகளாக விளங்கியதை எண்ணி சுபத்திரையின் தாய் மனம் கொந்தளிப்பதை ஜெயமோகன் சுபத்திரையின் உணர்வின் பிரவாகத்தில் கூறிச் செல்கிறார்.

ஜெயமோகனின் 'திசைகளின் நடுவே' சிறுகதை பாண்டவர்களின் யுத்தத்தை சார்வாகன் பாத்திரத்தின் வாயிலாக விமர்சனத்துக்குட்படுத்துகிறது. மக்களின் மூடநம்பிக்கைகளை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி யாக வேள்விகளை தம் பிழைப்புக்காக நடத்தும் பிராமணத்தின் ஆதிக்க முகங்களைக் கட்டுடைக்கும் இச்சிறுகதை தெய்வங்களின் தோற்றப்பாடுகள் குறித்த ஐயங்களையும் நம்முள் விதைத்துச் செல்கிறது.

"ஓ மூட ஜனங்களே! தஸ்யுக்களே! சூத்திரர்களே! யாருடைய விழாவைக் கொண்டாடுகிறீர்கள் நீங்கள்? வென்றடக்கிய ஆரியனின் விழாவையா? யாககுண்டத்து நெருப்பில் உழைப்பை நெய்யாக ஊற்றுகிறீர்கள்? மோட்சத்திற்காகவா? எங்குள்ளது அந்த மோட்சம்? யார் பார்த்தது அதை? இந்திரனை நோக்கி அவிஸைக் கொட்டும் பிராமணர்களே, எங்கே உங்கள் இந்திரன்? அவன் ஜடமா? ஜடமல்ல என்றால் அவன் வடிவம் என்ன? வடிவம் இல்லாவிடில் அவனை எப்படிக் கண்டீர்கள்? இந்திரன் பிரம்மா இல்லை. விஷ்ணு இல்லை. முப்பது முக்கோடி தேவர்களும் முழுக்கற்பனை..."

(திசைகளின் நடுவே, கவிதா பப்ளிகேஷன், பக் 97-98)

சார்வாகரின் கூற்றுக்கள் நிதர்சனமானவை. சத்தியத்தின் பாற்பட்டவை. சனாதன இந்துமதச் சடங்குகளைக் கேள்விக்குட்படுத்தும் 'திசைகளின் நடுவே' சிறுகதை உறவினர்களைக் கொன்று விட்டு உதிரவாடையுடன் தருமன் நிகழ்த்தும் தான, தர்மங்களையும் கேள்விக்குட்படுத்துகிறது. பக்கச் சார்பற்று பாரத யுத்தத்தில் நிகழ்ந்த சம்பவங்களை மீள்வாசிப்புக்குட்படுத்துகிறது இச்சிறுகதை. மகாபாரதம் சாந்திப் பருவத்து தொன்மங்களுக்கூடாக விரியும் இச்சிறுகதை பூர்வமீமாம்சம், சாங்கியம், சார்வாகம் முதலான அவைதீக மதங்களின் வாயிலாக பிராமண எதிர்ப்பையும் வெளிப்படுத்திச் செல்கிறது. பிறிதொருவகையில் கூறினால் இந்துமத ஆசாரங்களை மீட்டுருவாக்கம் செய்கின்றது.

ஜெயமோகனின் 'வனம்' சிறுகதை மனம்பிறழ்வுற்ற மனிதனுக்கும் காகத்திற்கும் நிகழும் உரையாடல் மூலம் 'நதி' வழி இந்தியப் பண்பாட்டின் வரலாற்றை எடுத்துச் சொல்கிறது. நதியின் வரலாற்றுடன் மகாபாரத தொன்மக் கதைகளும் இணைந்து வரும் வகையில் காகத்துக்குனு மனம் பிறழ்ந்த பிராமணருக்குமான உரையாடல் நடக்கிறது. ஜெயமோகனின் தர்க்கபூர்வமான மொழி கதையை பிசிறின்றி நடத்திச் செல்கிறது.

பாவண்ணனின் மொழியாக்கத்தில் வந்த எஸ்.எல். பைரப்பாவின் 'பருவம்' என்ற மகாபாரத நாவல் தமிழில் நிகழ்ந்த ஒரு மகத்தான முயற்சி. இதன் பின்னணியில் 2001இல் எழுந்ததே 'ஏழு லட்சம் வரிகள்' தொகுப்பு. முற்றிலும் மாறுபட்ட கோணத்தில் கதையை நகர்த்திச் செல்கிறார் பாவண்ணன். காரண, காரிய தர்க்கங்களுடன் வெளிப்படும் இச்சிறுகதைகள் ஒவ்வொன்றும் தன்னளவில் தனித்துவமானது. திரை, ரணம் முதலான கதைகளின் புனைவுவெளி துரியோதனன், கர்ணன் என்ற பாத்திரங்களின் வாயிலாக மானுட தவறுகளின் விளைவாக எழும் நெருக்கடிகளையும் அது சார்ந்து மனம் அடையும் வேதனைகளையும் காட்டி நிற்கிறது.

'திரை' சிறுகதையில் அறிவுரைகளும், அறவுரைகளும் சரியான வகையில் துரியோதனனைச் சென்றடையாததால் வாழ்வின் கடைசித் தருணம் வரைக்கும் தான் எடுத்த ஒவ்வொரு முடிவும் சரியானதுதான் என்று முற்றிலும் நம்புகிறான் துரியோதனன். அஸ்தாமனுக்கும் துரியோதனனுக்கும் இடையிலான உரையாடலாக விரியும் இச்சிறுகதை துரியோதனனின் வாழ்வின் கடைசித் தருணங்களை நினைவு கூருகிறது. அப்போது துரியோதனன் தன்னைச் சுற்றி நிகழ்ந்த மரணங்களை எண்ணிப் பார்க்கிறான். அத்தனை மரணங்களும் தனக்காகவே நிகழ்ந்ததை எண்ணி வேதனைப்படுகிறான். தான் சற்று சிந்தித்துப் பார்த்துச் செயற்பட்டிருந்தால் பெருமளவான இவ்விறப்புக்களைத் தவிர்த்திருக்கலாம் என எண்ணி மனஞ் சோர்கிறான். குற்றவுணர்வினால் தடுமாறுகிறான். அச்சமயம் அவனின் மனத்திரை விலகி மனம் தெளிவடைகிறது. துரியோதன் பாத்திரத்தை செவ்வனே வெளிப்படுத்தும் சிறுகதையாக இச்சிறுகதை அமைகிறது.

'கல்கி' தீபாவளி மலர் 2000இல் வெளிவந்த 'ரணம்' சிறுகதை பரசுராமரின் கோபத்துக்கு இரையான கர்ணனின் மனவுணர்வை வெளிப்படுத்துகிறது. தன் பிறப்பின் மூலமறியாது மற்றவரின் கேலிக்குள்ளாகி மனம் வெதும்பி வாழ்வையே ரணமாக வரித்துக் கொண்டவன் கர்ணன். வாழ்வின் ஒவ்வொரு செயல்களிலும் அவனை பிறப்பறியாதவன் என்ற கொடுநிழல் துரத்துகிறது. பரசுராமரின் கோபத்துக்குள்ளாகி சாபம் பெற்று காட்டில் ஆறாவடுவுடன் தனித்திருக்கிறான் கர்ணன். வண்டு ஏற்படுத்திய வலியைத் தாங்கிக் கொண்ட கர்ணனின் மனம் பரசுராமரின் வார்த்தைகளால் வேதனையில் புழுங்கித் தவிக்கிறது. வலி மேலிட அநாதரவாய் நிற்கும் கர்ணனை பெரியவர் ஒருவர் ஆறுதல்படுத்துவதாக அமையும் இச்சிறுகதை கன்னன் மீது பரசுராமர் கொண்ட கோபம் அர்த்தமற்றது என்பதையும் குழந்தையை ஒரு தாய் இக்கட்டான, நிர்க்கதியான சூழலிலேயே கைவிடுகிறாள் என்பதையும் உணர்த்திநிற்கிறது. தன் பிறப்பின் மூலமறியாது அவன் வாழ நேரிடும்போது வாழ்வே ரணமாகிறது. அவன் தன்னிலை அறிந்த போது அவனைக் காலம் சபித்துக் கொள்கிறது. இதனை 'ரணம்' என்ற கதை உணர்த்தி நிற்கிறது.

ஆதிகாலந்தொட்டு இன்று வரையிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் குரலாகவும், எண்ணமாகவும் ராகு விளங்குகிறது. தன் சமூகம் வஞ்சகத்தாலும் துரோகத்தாலும் சிதறுண்டு, அழிவுண்டு போகுமோ என்ற ராகுவின் ஐயத்தையும் ஏமாற்றப்படுவோர்க்கும் ஏமாற்றுவோர்க்கும் இடையான போராட்டத்தில் அதை வெளிப்படுத்த முடியாது தவிக்கும் ராகுவின் மனத்தையும் ஆழ்படிமங்கள், குறியீடுகளுக்கூடாக வெளிப்படுத்தும் சிறுகதையே 'போராட்டம்' ஆகும். ஈற்றில் ராகு எதிர்பார்த்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலவே அவனுடைய சமூகத்தினர் தேவர்களால் ஏமாற்றப்படுகிறார்கள். சந்தேகத்தின் மொத்த வலியையும் சுமந்து திரிந்த ராகு அமிழ்தம் உண்ட பின்னர் இரண்டாகச் சிதைக்கப்படுகிறான். அமரராகும் பேராவலில் காத்திருந்த அவன் கூட்டம் பாற்கடலின் விளிம்பில் ரத்தச்சிவப்பு படர அழிகிறது. கடற்கரை ரணகளமாகிறது. நம்பிக்கையின் உச்சகட்டம் இங்கு ஏமாற்றத்தில் முடிகிறது.

அவமானத்தின் உச்சகட்டத்தில் மனித மனங்களால் எடுக்கப்படும் எதிர்பாரா முடிவுகள் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நுண்மனவுணர்வுகளுக் கூடாக வெளிப்படுத்தும் சிறுகதைகளே பாவண்ணனின் 'ஏழுலட்சம் வரிகள்' மற்றும் 'அர்ஜுனன் தவம்'. 'ஏழு லட்சம் வரிகள்' சிறுகதையில், மொழியை குறைத்து மதிப்பிட்டதால் சீண்டப்பட்ட குணாட்யர் சத்தியத்திற்கு கட்டுப்பட்டு நாட்டை விட்டு காட்டிற்குச் செல்கிறார். காட்டில் மலைமக்களோடும் வனராசிகளோடும் இணைந்து பைசாச மொழியை கற்றுத் தேர்கிறார் குணாட்யர். தன் குருதியால் அழியாத காவியத்தை முதன்முதலில் பைசாச மொழியில் எழுதுகிறார். பைசாச மொழியில் காவியம் எழுதப்பட்டாலும் அக்காவியம் ரத்தத்தால் எழுதப்பட்டதால் தத்துவச் சாஸ்திரப்படி அக்காவியத்தை அரங்கேற்ற முடியாது என்று முடிவாகக் கூறிவிட குணாட்யர் ஏமாற்றத்தாலும் அவமானத்தாலும் மனம் புழுங்குகிறார். அவருடன் அவர் சீடர்களும் மனம் குமைகிறார்கள். காவியம் படைத்த அதி உன்னத, ஆனந்த பித்து நிலையினை மனம் மீண்டும் அசை போடுகிறது. அப்போது குடிலில் தாலாட்டுப் பாடல் கேட்க பைசாச மொழியின் செழிப்பையும் வனப்பையும் எண்ணிப் பூரிக்கிறார். தீட்டு என்ற சொல்லால் மொழி இழிவுபடுத்தப்பட்டதை அவரால் தாங்க முடியவில்லை. மெல்ல அவர் உள்ளாடத்தில் ஒளி படர்கிறது. அப்போது இக்காவியத்தை அரங்கேற்றும் இடம் காடுதான் என்று எண்ணி குளத்தில் மூழ்கி எழுந்து குடிலை அடைந்து ஈரத் தோலாடையுடன் அக்கினி குண்டத்தின் முன் அமர்ந்து காவியத்தை அரங்கேற்றுகிறார். அக்னிக்கு தீட்டு இல்லை. காவிய ஓசையில் காடே ஸ்தம்பிக்கிறது. காட்டு விலங்குகள் அவரை நோக்கி வந்தன. பறவைகள் பறக்க மறந்தன. மக்கள் கூட்டம் அவரைச் சுற்றி நின்றனர். வாசித்து முடித்ததும் அக்காவியத்தை நெருப்புக்கு அவிசாக்கினார் குணாட்யர். அப்பொழுதே அவரின் மனம் அமைதி காண்கிறது. அரசர் வந்து அவர் காலடியில் வீழ்ந்து மன்னிப்பு கோருவதற்குள் ஆறு லட்சம் வரிகள் நெருப்புக்கு இரையாயின. அவர் காவியத்தை எரிக்கவில்லை. மக்களை, மக்களின் மொழியை ஒதுக்கிய ஆணவத் தீட்டை எரித்தார். இதனையே 'ஏழுலட்சம் வரிகள்' சிறுகதை எமக்கு உணர்த்தி நிற்கிறது.

புராண நிகழ்வின் புனைவாக கிருஷ்னையை மணக்க வைக்கப்படும் சுயம்வரத்தில் வென்றிட துடிக்கும் துரியோதனனின் ஒவ்வொரு நொடி மனவோட்டத்தையும் விவரிக்கும் கதையே 'இன்னும் ஒரு கணம்'. காமத்தை உடலியல் உளவியல் பார்வைகளோடு அணுகும் இச்சிறுகதை துரியோதனனின் உடலிச்சையை பெருகிவரும் காமத்தை கட்டுப்படுத்தி இருந்தால் மகாபாரத யுத்தம் கிடையாது என்பதையும் வலியுறுத்தி நிற்கிறது.

'அர்ஜுனன் தவம்' சிறுகதையில் ஆதரவற்ற கோபாலை மாடுமேய்க்கும் மண்ணாங்கட்டி எடுத்து வளர்க்கிறான். கன்றோடு தாமும் வளர்ந்த கோபால் மாடுகளை கண்காணிக்கும் காவலனாகிறான். அர்ஜுனனாக மாறி கோபால் கூத்தாடும் போது குழந்தை வரம் கொடுப்பதாக மக்கள் நம்புகிறார்கள். அர்ஜுனன் வேஷம் போட்டு சாமியாடிய கோபால் திருவிழாவின் கடைசி நாளில் இறந்து போகிறான். அவனுக்காக ஊரே வருத்தப்படுகிறது. இந் நிகழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட 'அர்ஜுனன் தவம்' சிறுகதை நம்பிக்கைகளோடு புராண இதிகாச நிகழ்வுகளையும் ஒன்றிணைத்து பின்னப்பட்டுள்ளது.

பாவண்ணனின் 'புதிர்' சிறுகதை தன்னளவில் தனித்துவமான சிறுகதை. வைணவ ஆழ்வாரான பெரியாழ்வார் தனது மகள் ஆண்டாளுக்கு நல்ல ஓர் வரன் பார்த்து மணம் முடித்து வைக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார். அதேசமயம் ஆண்டவனையே பதியாக மனதால் வரித்து விட்ட ஆண்டாள் அவ்வரங்கனேயே அடைய வேண்டும் என்று எண்ணுகிறாள். தந்தைக்கும் பாசமிக்க மகளுக்கும் இடையிலான உணர்ச்சிப் போராட்டமே 'புதிர்' சிறுகதையாக விரிகிறது. உண்மையில் அரங்கனுக்குத் தான் சொந்தம் என்ற ஆண்டாளை பெரியாழ்வார் ஆசிர்வதித்திருக்க வேண்டும். இறைவனுடன் இணைந்து தன் மகள் இறையியாவதை தந்தையாகிய பெரியாழ்வாரின் மனம் விரும்பியிருக்க வேண்டும். அதனால் பெரியாழ்வார் மனநிறைவு கண்டிருக்கவேண்டும். ஆயினும் அரங்கனோடு ஆண்டாள் கொண்ட நட்பினை பெரியாழ்வாரின் மனம் ஏற்க மறுக்கிறது. தன்னை விட்டு தன் மகள் போய்விடுவாளோ என்ற பயம் தந்தைக்கு ஏற்படுகிறது. ஆண்டாள் மீது பெரியாழ்வார் கொண்ட பாசம் மனம் நெகிழும் வகையில் கதையில் சம்பவங்களுக்கூடாக விபரிக்கப்படுகிறது. அன்பையும் பரிதவிப்பையும் ஒரு மையப்புள்ளியில் இணைத்துப் பின்னப்பட்ட சிறுகதையே 'புதிர்' ஆகும்.

முற்றும் உணர்ந்த வியாசர் தன் வயதான காலத்தில் தன் புத்திரன் சுகர் மீது கொண்ட அளவற்ற அன்பினையும் அவனைப் பிரியப் போகின்றோமே என எண்ணி அவர் படும் மனஅவஸ்தையையும் எடுத்து விளக்கும் சிறுகதையே பாவண்ணனின் 'பிரிவு'. தான் தன் வாழ்வில் இழந்த அனைத்தையும் தன் மகன் மூலம் திரும்ப அடைந்துவிட வேண்டும் என்று எண்ணும் வியாசரால் மகனின் பிரிவைத் தாங்க முடியவில்லை. மகன் மீது கொண்ட அளவற்ற அன்பு, கடமையை நிறைவேற்றப் புறப்படும் மகனை அனுப்பிவைக்க தயங்குகிறது. இப்பின்னணியில் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் நிகழும் 'மோட்சம்' குறித்தான உரையாடல், வாழ்க்கை குறித்தான உண்மையான தேடலை எமக்கு உணர்த்தி நிற்கிறது.

"மோட்சம் என்பது மிகப்பெரிய கனவு மகனே. ஒரு போதும் ஒரு உயிரும் அங்கே செல்ல முடியாது. மனித குலம் தோன்றிய காலத்திலிருந்து இந்தக் கனவு ஒரு வியாதி போல பீடித்துக் கசக்குகிறது. இந்த உலக உறவை உதற முடியாதடா மகனே. தாய், தந்தை, மகன் உறவு, சுற்றம் இவைதான் உண்மை. மோட்சம் என்ற ஒன்று இல்லவே இல்லை. உலக உறவை விஷமாக வெறுத்த யாரோ ஒரு ஆதிக் கிறுக்கன் கண்ட கனவு மோட்சம்"

என்கிறான் வியாசன். ஆரியர்களால் வடிவமைக்கப்பட்ட மோட்சத்தைக் கட்டுடைக்கும் இக்குரல் பகவத் கீதைக்கு உரைவடிவம் கொடுத்த வியாசனின் குரலன்று. இயற்கை வழிபாட்டுக்குத் தன்னை ஆகுதியாக்கிக் கொண்ட ஆதித்தமிழனின் குரல். சிறுகதையின் சூத்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனங்கண்டு அதனைப் புராணப் பின்னணியில் இணைத்து எழுதப்பட்ட பாவண்ணனின் சிறுகதைகள் அதிக கவனத்தைப் பெறுகின்றன. புராணப் பாத்திரங்களின் வாயிலாகச் சிறுகதையின் ஆழத்தை அனாயசமாய்த் தொட்டுப் பார்த்துவிடுகிறார் பாவண்ணன்.

தொல் தாய்வழி சமூக அமைப்பு தந்தை வழி சமூக அமைப்பாக மாறிய நிலையில் தாயின் வகிபாகத்தை ஆண் சுவீகரித்துக்கொண்டான். உலகப் பெண்ணின வரலாறு தூக்கி எறியப்பட்டு ஆண் முதன்மைப்படுத்தப்பட்டான். பெண் அடிமைப்படுத்தப்பட்டு ஆட்சியின் கடிவாளம் ஆணின் கைகளுக்குள் சிக்குண்ட நிலையில் பெண் ஆணின் உடலின்பத்தை தணிப்பவளாகவும் குழந்தை பெறும் இயந்திரமாகவும் மாற்றப்பட்டாள். தாய்வழி அதிகார அமைப்பின் சிதைவுகளை அதன் அடையாள மறுப்புக் களை பாவண்ணன் அல்லி, தமயந்தி, ஏவாள், சீதை எனப் பல தொன்மக்கதைகள் வாயிலாக மீள்வாசிப்புக்கு உட்படுத்தினார்.

அல்லிராணி குறித்து, 'அல்லி கதை', 'அல்லி அரசாணி மாலை', 'பவளக்கொடி மாலை', 'புலவேந்திரன் கலவா மாலை' என தமிழில் கதைகள் பல வெளிவந்துள்ளன. அல்லிராணியை மையப்பாத்திரமாகக் கொண்டு எழுதப் பட்ட நாடகமே 'அல்லி அரசாணி'. அரசாட்சியின் உச்ச நிலையில் இருந்த அல்லி, அதிகாரப் பீடத்தில் இருந்து எவ்வாறு வஞ்சகமாக வீழ்த்தப்பட்டாள் என்பதையும் ஆணின் இச்சைக்கு எவ்வாறு பலிக்கடா ஆக்கப்பட்டாள் என்பதையும் மேற்குறிப்பிட்ட அனைத்துப் பிரதிகளும் விளக்கி நிற்கின்றன. அல்லி ராணியின் தொன்மத்தை ஆதா ரமாகக் கொண்டு பாவண்ணனால் எழுதப்பட்ட சிறு கதையே 'அல்லி'. தந்தையால் வளர்க்கப்படும் அல்லி தனக்கு சமதையான வீரனை காணமுடியாத காரணத்தால் ஆண்கள் மீது வெறுப்பை வளர்த்துக் கொள்கிறாள். சதா ஏமாற்றங்களோடும் குரோதங்களோடும் வாழும் அல்லி நித்திரையின்றி அல்லற்படுகிறாள். எந்தப் புற்றிலிருந்து எந்தப் பாம்பு வருமோ என்ற எச்சரிக்கை உணர்வுடன் வாழும் அல்லி பாம்புக்காரனைக் கண்டு ஏமாந்து போகி றாள். அவனைக் கண்ட நாள் முதலாக உடலில் ஏற்படும் மாற்றங்களை உணர்கிறாள். எவ்வளவுதான் எச்சரிக்கை யோடு இருந்த போதிலும் கட்டிலடிக்கு பாம்பு வரும் போது அர்ச்சுணனின் வஞ்சனையால் ஏமாந்துபோகிறாள் அல்லி. சாதாரண பெண்ணின் கவலையற்ற சந்தோசத்தை எப்போதும் தன்னால் அடையமுடியாது என்று அவளுக் குத் தெரிகிறது. ஒட்டுமொத்த ஆண்களின்மேல் இருக்கும் கோபம், வளர்த்து வைத்த குரோதம் எல்லாமே எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகிறது. தந்திரத்தால் அர்ஜூ னனால் தான் ஏமாற்றப்பட்டதை எண்ணி அருவருப்படை கிறாள். ஏமாற்றத்தின் உச்சம் அவள் மனதை மீண்டும் திடமடையச் செய்கிறது. இப்பின்னணியை இயல்பான மொழிகளுக்கூடாகக் கூறும் அல்லி பாவண்ணனின் தனித் துவமான சிறுகதைகளில் ஒன்று.

பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே தகுதி வாய்ந்த ஆடவனைக் கணவனாகத் தேர்ந்து எடுக்கும் பொறுப்பு பெண்ணுக்கு வழங்கப்பட்டது. தாய்வழிக் கோட்பாட்டின் எச்சசொச்சமாக இருந்து இவ்வுரிமை மகாபாரத வழி நளவெண்பாவில் தமயந்திக்கு வழங்கப்பட்டது. இப்பின் னணியில் எழுந்த பாவண்ணனின் 'முற்றுகை'க் கதை பெண்ணுக்கு வழங்கப்பட்ட அவ்வுரிமையை எய்ப்பதற் கான வியூகங்களை ஆண்ஆதிக்க சக்திகளான தேவர்கள் எவ்வாறு வகுத்துக் கொண்டனர் என்பதை இச்சிறுகதை துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கிறது. பெண்மையை முற்றுகையிட்டு வீழ்த்த தேவர்களால் வகுக்கப்பட்ட வியூகம் தமயந்தியின் மதிநுட்பத்தால் தோல்வியில் முடிந்ததை இச்சிறுகதை உணர்த்திச் செல்கிறது.


தந்தைவழி சமூக அமைப்பால் உருவாக்கப்பட்ட 'ஏவாள்' என்ற தொன்மம், இன்றைய சூழலில் தாய்வழிச் சமூக அமைப்பின் சிதைவைப் பிரதிபலிக்கிறது. பைபிளில் இடம்பெறும் ஏவாள் தொன்மம் ஆண் தலைமைத்து வத்தின் அசல் பிரதிபலிப்பு. ஆதாம் என்ற ஆணுக்குப் பின் னரே ஏவாள் என்ற பெண் பிறப்பதாகக் கூறுவது ஆண் தலைமையை முதன்மைப்படுத்தும் செயலாகும். கடவுள் அவனது விலா எலும்பிலிருந்து ஏவாளைப் படைத்தாள் எனக் கூறுவது ஆணாதிக்க மனோபாவத்தின் வெளிப்பா டாகும். பிரசவம் பெண்மையின் வெளிப்பாடு. இதனை மறுத்து ஆதாமின் முதிராத குருத்தெலும்பில் இருந்து ஏவாள் பிறப்பதாகக் கூறுவது இயற்கை நியதியைத் தலைகீழாக மீறும் செயலாகும். இப்பிற்புலத்தில் தன்னை முன்மொழியும் சிறுகதையே பாவண்ணனின் 'ஏவாளின் இரண்டாவது முடிவு'. பெண் ஆதிக்க அரசியலை உள்ளீ டாகக் கொண்டு புனையப்பட்ட இப்புனைவு தீண்டத் தகாத கனியை உண்டு ஏவாள் எடுத்த முதல் முடிவால் அவள் குடும்பத்தளையில் சிக்குண்டதைக் கூறிநிற்கிறது. கதையில் ஏவாள் எடுக்கும் இரண்டாவது முடிவு ஆணா திக்க சமூகத்துக்கு விழுந்த அடியாகக் காணப்படுகிறது. தாய்மையைக் காரணங்காட்டி ஏவாளைச் சுரண்ட

## குறுமழையின் கால்

குழி நதிகளை எட்டப்பார்க்கிறது
குறுமழையின் புதிய கால்.
கால் முளைத்த எல்லா குறு மழைகளும்
சேறும் சகதியுமான
குழி நதிகளை ஒத்திருந்தன.

எனக்கு முன்னிருந்த
மழைக்குழியில்
மனித எண்ணெயில்
வானத்தின் நிறம்
சேறோடு விகாரமாயிருந்தது.

அங்கே
பொஸ்பரசில் மிதந்த
உடலங்களில் கரைந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்படும் போது அத்தந்திரத்திலிருந்து அவள் எவ்வாறு தப்பிக்கிறாள் என்பதைக் கூறி நிற்கிறது.

எஸ்.ராமகிருஷ்ணனின் 'ஆதாமின் பாஷை' ஆணாதிக்க மனோநிலையில் கட்டமைக்கப்பட்ட பிறிதொரு பிரதி ஆகும். சிறுகதை உலகின் முதல் மனிதர் ஆதாம், ஏவாளோடு தன் வாழ்வை ஆரம்பிப்பதோடு தொடங்கும் இச்சிறுகதை வாழ்வில் பிறப்பும் இறப்பும் காலச்சுழற்சியில் இயங்குவதையும் இயற்கையின் சீற்றத்தில் அதற்கு ஆட்பட்டு சகல ஜீவராசிகளும் அல்லலுற்று அதனுள் அள்ளுண்டு போவதையும் எடுத்துக் காட்டுகிறது. இங்கு ஆதாமே கட்டளையிடுபவனாகவும் பெண்ணை வழிப்படுத்துபவனாகவும் சித்திரிக்கப்படுகிறான். எவ்வித சுவாரஷியமுமற்று ஆதாமின் சந்ததியினரின் தோற்றம் கதையில் விவரப்பட்டியலாகவே காட்சிப்படுத்தப்படுகிறது.

திரேதா யுகத்தில் பரசுராமர் தன் தந்தையான ஜமதக்னியின் சொல்லைக் கேட்டு தனது தாயார் ரேணுகாவின் தலையை வெட்டிவருவது தாய்வழிக் கோட்பாடு தந்தை வழிக் கோட்பாடாக மடைமாற்றம் பெறுவதைச் சுட்டுகிறது. கற்பு என்னும் புனிதமான வஸ்துக்குள் பெண்மையை உட்படுத்தி ஆண்கள் பெண்களை அடக்கி ஆளும் தந்திரத்தின் வெளிப்பாட்டையே இத்தொன்மக்கதை பேசிநிற்கிறது. ஒவ்வாத கற்புநெறியை பெண்ணுக்கு விதித்து அவளை அடக்கி ஆள வெளிப்படும் ஆண் மைய வாதத்தின் எதிரொலியாக விளங்கும் இத்தொன்மம் பாவண்ணனின் 'காற்றில் கரைந்து வரும் குரல்' கதையில் அம்பாள், கௌரி பாத்திரங்களின் இயல்பு நடத்தைகளுக்கூடாக வெளிப்படுகிறது. தன் மகன் பரசுராமனிடம் கற்பிழந்த உன் தாயின் தலையைக் கொண்டுவா என்று கர்ஜிக்கும் ஜமதக்னியின் குரல்... காலம் காலமாய் பெண்ணை பாவத்தின் சின்னமாக்கி ஆளும் ஆணின் அதிகாரவர்க்கத்தின் குரல். ஆண்மையவாத எழுச்சியில் முடங்கிப் போகும் பெண்ணின் இயல்பான இருப்பு இச்சிறுகதையில் பெண் கடவுளரின் எழுச்சியையும் அதன் இயக்கத்தையும் தலைகீழாகப் புரட்டிப் போடுகிறது. பெண்ணின் அடையாள அழிப்பையும் அதன் ஒடுக்குமுறையையும் இச்சிறுகதை பேசிச் செல்கிறது.

இராமாயணத் தொன்மங்களில் ஒன்றான சீதை காலத்துக்குக் காலம் சிறுகதை ஆசிரியர்களால் மீளுருவாக்கம் செய்யப்பட்டு வந்துள்ளது. ராஜாஜி, அனுராதா, ஆண்டாள் பிரியதர்சினி, நரசய்யா, பாவண்ணன் என இந்தப்பட்டியல் நீண்டு செல்லும். கதைசொல்லிகளால் எடுத்தாளப்படும் சீதை என்னும் தொன்மம் சிறுகதையின் நோக்குக்கும் போக்குக்கும் அமைய புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. 1970களில் தஞ்சைப் பிரகாஷால் எழுதப்பட்ட 'இராவண சீதை' சிறுகதை இராவணனுக்கும் சீதைக்கும் தமிழிலக்கிய உலகில் புது அங்கீகாரத்தைத் தந்தது.

இராமாயண யுத்த காண்டத்தில் 'இன்று போய் நாளை வா' என இராமன் சொன்ன இடத்தில் இருந்து கதை தொடங்குகிறது. கம்பரின் கோணத்தில் இருந்து முற்றாக விலகி இராவணனின் தியாக உள்ளத்தையும் அவனின் தூலசிந்தனையையும் இச்சிறுகதை பேசிநிற்கிறது. இராவணன் போரக்களத்தில் 'இன்று போய் நாளை வா' என்ற வார்த்தைகளால் அவமானப்படுத்தப்படுகிறான். அச்சொல் அவனைக் கொல்கிறது. மாளிகைக்குச் செல்லாது அருகில் இருக்கும் சிவன் கோயிலுக்குச் சென்று கூனிக் குறுகி மனம் வெதும்புகிறான். அப்போது சீதை இராவணனைத் தேடி அக்கோயிலுக்கு வருகிறாள். கோயிலுக்கு வரும் சீதையை கண்டு குற்றவுணர்வால் புலம்பும் இராவணன் தன் தவறை நினைத்து மனம் வெதும்புகிறான். தன்னை மன்னிக்கும்படி கூறி அவளிடம் சரணாகதி அடைகிறான். "களங்கமின்றி வந்தாய். அத்தன்மையுடனேயே இராமனோடு செல்வாய்" எனக் கூறுகிறான். அப்போது சீதை கூறுகிறாள். "நீ தூக்கி வந்தே என்னைக் கெடுத்தாய்... அவர் பறிகொடுத்தே என்னைக் கெடுத்தார்". அவ்வார்த்தைகளைக் கேட்டு இராவணன் உயிரற்று நின்றான். இராவணனைப் பார்த்து சீதை கூறும் வார்த்தைகள் ஆழப் பொருள் பொதிந்தவை. சீதைக்கு களங்கம் கற்பித்து அவளைத் தீக்குள் இறக்க முற்படும் இராமனை முற்கூட்டியே அறிந்த மனம் வார்த்தையாய் எதிரொலிக்கிறது. "ராவணா என் தெய்வம் என்னைக் காக்கவா உன்னுடன் போரிடுகிறது!. இல்லை இல்லவே இல்லை. என்னைத் தூக்கி வந்த உன்னைப் பழி வாங்க? உலகுக்கு காட்ட.... உண்மையில் என்னைக் காக்கவன்று". நாளைக்கு அயோத்தி நகருக்கு அழைத்துச் செல்லும் போது உன் அந்தப்புரத்தில் அழைத்துச் செல்லப்பட்டவள் என்ற பழிச் சொல்லுக்கு ஆளாவேன். ஆகையால் தன்னை இன்றே கொன்றுவிடும்படி சீதை இராவணனிடம் மன்றாடுகிறாள். இல்லையேல் தான் தற்கொலை செய்து கொள்வேன் எனக் கூறுகிறாள். இராவணன் சீதையின் கால்களில் விழுந்து தன் தவறுக்கு வருந்துகிறான். அதே சமயம் ஆறுதலும் தேறுதலும் கூறி சீதையிடம் தற்கொலை செய்யக் கூடாது என்ற வாக்குறுதியையும் பெறுகிறான். இராவணனின் நற்குணத்தை

---

சிவப்புக் குழிகள்,
கண்கள் கட்டப்பட்ட
முகங்கள் தெரியும் அல்லது
வெளிச்சமில்லாத குழிகள்,
புதிதாக முளைத்த
தட்டையான நடுநிலை குழிகள் அல்லது
ஆக்கிரமிப்பை முறுகலென
சமரசம் செய்யும் இருட்டிவிடும் குழிகள்
இன்னும் முக்கியெடுத்த சாயம் வெளுத்த
அத்தனை துரோகங்களினதும் குழிகள்.

அவை முளைத்த குறுமழையின்
காலுக்காகவிருந்த
குழிநதி வகையறாக்கள்.

○

சப்னாஸ் ஹாசிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்து சீதை சம்மதிக்கிறாள். சீதையின் கற்பை அக்னி குண்டத்தில் இறக்கி நிரூபித்த இராமனின் மாட்சிமையையும் அயோத்தி மக்கள் பழிசுமத்தி அவளை வஞ்சித்த தன்மையையும் இச்சிறுகதை கண்டிக்கிறது. கம்பனோ, வால்மீகியோ சிருஷ்டிக்காத அற்புத சிருஷ்டி இக்கதை. பிறப்பில் கிறிஸ்தவரான தஞ்சை பிரகாஷ் இக்கதையை "இராவணன் தோற்பும், சீதையின் தோற்பும் இராமனின் வெற்றியில் நிலைத்தது" என முடிப்பார்.

சலவைத் தொழிலாளர்களின் அவச்சொல்லைக் கேட்டு கர்ப்பினியான சீதையை இராமன் காட்டுக்கு அனுப்பிய மனிதாபிமானமற்ற செயலை தொன்மங்களுக்கூடாக விளக்கும் சிறுகதையே பாவண்ணனின் 'சுழல்'. இராமனின் கட்டளைக்கமைய லட்சுமணனால் அழைத்துச் செல்லப்படும் சீதாப்பிராட்டிக்கு தான் காட்டில் தனித்து விடப்படுவதற்காகவே அழைத்துச் செல்லப்படுகிறேன் என்பது தெரியாது. வால்மீகி முனிவரின் தரிசனம் பெறுவதற்காகவே தான் செல்கிறேன் என நினைத்தவருக்கு இராமனின் கட்டளை வேதனையைத் தருகிறது. செய்யாத குற்றத்துக்காக தான் தண்டிக்கப்படுவது நியாயமற்ற செயலாகவே சீதைக்குப்படுகிறது. சீதையின் பரிதாபத்துக்குரிய நிலையைக் கண்டு வால்மீகி முனிவர் மனம் வருந்துவதுடன் இராமனின் செயல் தவறானது என்பதையும் சீதைக்கு உணர்த்துகிறார். லட்சுமணனுக்கும் கங்கையைக் கடக்க உதவும் குகனுக்கும் குடிமக்களுக்கும் இராமனின் செயல் அநாகரிகமாகவே படுகிறது. இதனால் இராமன் அடையும் நன்மை யாது? என்பது அனைவருக்கும் தெரியாத புதிராகவே உள்ளது. ஆயினும் அரசகட்டளை மீற முடியாததொன்று என்பதால் அனைவரும் மௌனமாக மனதுக்குள் குமுறுகின்றனர். இராமனின் கட்டளை சீதாமீது அன்பு கொண்ட அனைவரையும் சுழலாகத் தாக்குகிறது. ஈற்றில் கட்டளையை மதித்து சீதை, வால்மீகி முனிவருடன் செல்வதுடன் கதை நிறைவுக்கு வருகிறது. பெண்மையின் உள்ளத்து உணர்வோட்டங்களுக்கூடாக விரியும் இச்சிறுகதை இராமரின் அநாகரிக நடத்தைகளை கேள்விக்குட்படுத்துகிறது.

அம்பை தன்னுடைய 'அடவி' சிறுகதையில் இரண்டாம்முறை மீண்டும் சீதையைக் காட்டிற்கு அனுப்பியதைக் காட்டுகிறார். துண்டு துண்டாக கதையை அமைத்து அதை மையப் புள்ளியில் இணைத்து இச்சிறுகதையை அம்பை நகர்த்திச் செல்கிறார். செந்திரு காணும் காடும் அது சார்ந்த இருப்பும் அதனைச் சுற்றியுள்ள வாழ்வும் இச்சிறுகதையின் முதற்பகுதி. அக்காட்டில் சீதை, தன் கதையைத் தானே புனைந்து கொள்வதாகச் செந்திரு எழுதும் கதை பிறிதொரு பகுதி. சவிதாபாயினுடைய வீடும் அங்கு நடக்கும் சம்பவங்களும் இன்னொரு பகுதி. இம்மூன்று பகுதிகளின் கூட்டிணைப்பே நிகழ் கதையோட்டத்தின் மையத்தை தீர்மானிக்கிறது. கணவனின் தொழில் சார்ந்த முன்னேற்றங்கள் அனைத்திலும் துணையாக இருந்து அவனை வழிபடுத்திய செந்திரு, அவனது தொழில் கூட்டாளியாகத் தானும் ஏற்கப்பட்டிருக்க வேண்டிய தருணத்தில் அது மறுக்கப்பட்டுவிட அதை ஒரு காரணமாக்கிக் கொண்டு, தன் அறுபதாவது வயதை எட்டிய நிலையில் வானப்பிரஸ்தத்தை மேற்கொள்கிறாள். அங்கே அவள் பெறும் அனுபவங்கள், அவளுக்குள் கிளர்ந்தெழும் சிந்தனைகள் அவளின் மனக் காட்சிப் புலத்தில் விளையும் கதையாடல்கள் அதன் வழி அவள் காணும் தரிசனங்கள்

## ஒரு இலைக்குள் இரு பறவை

ஒரேயொரு நாள்
குருவி என்ற சொல்லில்
பறந்து களித்தேன்.

இரவைத் தானியமாக்கி
அன்பை பெருக்கிக் கொண்டிருந்தது
ஒரு சோடி

ஒரு இலைக்குள் இரு பறவை
நான்கு கண்கள்
தீயில் பனிக்காத நிலம்

மேலே
பதினைந்து பிறை சேர்ந்த
ஒற்றைக் கால் வெண்மதி

என்பவையே அடவி சிறுகதையின் அடிமூலங்கள். தன் வாழ்வின் பெரும்பகுதியைக் காட்டில் கழித்த சீதையின் வாழ்வை நாட்டுப்புறக் கதையாடல்கள், இதிகாசக் குறிப்புகள் மற்றும் தொன்மங்கள் வாயிலாக செந்திருவே மறு வாசிப்பு செய்து 'சீதாயண'மாக எழுதுகிறாள். சமகாலம், புராண காலம் என்ற இரு களங்களிலும் மாறி, மாறிப் பயணிக்கிறது சிறுகதை. இச்சிறுகதை முதுமைக் காலத்தில் இராவணனுக்கும் சீதைக்கும் இடையிலான நட்பினை யதார்த்தமாக வெளிப்படுத்தி நிற்கிறது.

திலகவதியின் 'சீதாயணம்' பிறிதொரு கோணத்தில் சீதையின் வாழ்வை நம் கண் முன் நிறுத்துகிறது. இராமனை விட்டுப் பிரிந்த சீதை பதினெட்டு ஆண்டுகளாக வான்மீகி ஆச்சிரமத்தில் லவன், குசனோடு வாழ்ந்து வருகிறாள். அக்னி குண்டலத்தில் இறங்குதல், சுடு சொற்களைத் தாங்கிக் கொள்ளல், கானகம் வருதல் என கொடுமைகள் நிழலாட சீதா வால்மீகியின் ஆச்சிரமத்தில் தனிமையின் கொடுமையில் தவிக்கிறாள். பதினெட்டு ஆண்டுகளின் பின் வால்மீகியின் இராமாயண அரங்கேற்றத்தில் லவன், குசனைச் சந்திக்கும் இராமன் குழந்தைகள் மீது கொண்ட அன்பினால் சீதையுடன் இணைந்து வாழ நினைக்கிறான். அதற்கு முன்னர் சீதை தன் கற்பின் திண்மையை அதன் மாட்சியை உலகுக்கு பறைசாற்ற மீண்டும் அக்னி குண்டலத்தில் இறங்க வேண்டும் எனப் பணிக்கிறான். இராமன் முன்னிலையில் மீண்டும் ஒரு விஷப்பரீட்சையை சந்திக்க சீதைக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. கோபம், வேதனையால் அவள் மனம் வெந்து நீறாகிறது. நரை, திரை பூத்த முதிர்ந்த பருவத்திலும் கூட இராமன் பச்சாத்தாபத்தால் கூட தன் செயலுக்கு வருந்தவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna

நெடுநாள் தாகங் கொண்ட
இரண்டும் களியாடிக் களியாடி
ஒரு துளியென தீர்ந்தது
பெருங்கடல்

வானமெங்கும் கூடுகள்
சிறகுகள்
வண்ணங்கள்
கீச்சொலிகள் என நிறைந்தது
அன்றைய நாளின் வாழ்வு!

முழுமதி எம். முர்தளா



சீதையின் மனம் எரிமலையாய்க் குமுறுகிறது. இவனுடன் பட்டமகிஷியாய் வாழ்வதைவிட மண்ணாவதே மேல் என மனம் துணிய இராமனை மறுத்த சீதை மண் புகுந்தாள். சீதையின் மனப்போராட்டத்தை சித்திரிக்கும் இக்கதை இராமனைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றி

"இத்தனை ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஒரு அக்னிப் பரீட்சையா? அதன் பிறகும் எங்கோ ஒரு வண்ணானோ வைத்தியனோ எதையும் சொன்னால் மீண்டும் ஒரு வன வாசமோ? விபீடணன் என்னும் அரக்கனுக்கிருந்த தெளிவு இராமனுக்கு இல்லையா? அனுமன் என்னும் விலங்கிற்கு இருந்த தெளிவு இராமனுக்கு இல்லையா? படை கொண்டு வந்த பரதனைக் கண்டு வெகுண்ட இலக்குமணனிடம், பரதனின் பெருமையைக் கூறத் தெரிந்த இராமனுக்கு, கூட வாழ்ந்தவளின் பண்பு தெரியாதா?"

இவ்வாறு பலவாறெல்லாம் கூறி நியாயம் கேட்கிறது. ஆயினும் நரசய்யாவின் 'அக்னி பிரவேசம்' சிறுகதையோ சீதை இலக்குமணனின் கட்டளையை மீறியதற்கான தண்டனையாகத் தன் அக்னி பிரவேசத்தைச் செய்தாள் எனக் கூறுகிறது.

*1988இல் 'கலைமகள்' இதழில் வெளிவந்த எம்.ஏ. சுசிலாவின் 'புதிய பிரவேசங்கள்' சிறுகதை முற்றிலும் புதிய கோணத்தில் சீதையின் அக்னி பிரவேசத்தை விமர்சிக் கிறது. இராமன் சீதையை அக்னி பிரவேசம் செய்யும்படி கூற அதனை சீதை மறுக்கிறாள். அக்னி பிரவேசம் செய்யும் படி இராமன் சீதையைப் பணிக்க அதற்கு சீதை கூறிய வார்த் தைகள் சத்தியத்தின் வழிநின்ற உத்தமியின் வார்த்தைகள். மனிதகுல வளர்ச்சிக்கு ஆதார சுருதியாய் அமைபவை.*

"நாம் இருவரும் மனித உருவத்தில் இந்த மண்ணுக்கு வந்திருக்கலாம் என்றாலும் கடவுளின் அவதாரம் என்று சொல்லப்படுகிற பலம் நம்மிடத்திலே இருக்கிறது. என் னைச் சுட வரும் அக்கினியையும் கூடத் தீய்த்துவிடும் தெய்வீக ஆற்றல் என்னிடம் இருப்பது தங்களுக்கும் தெரி யும்! அதனாலேயே என்னைத் தீக்குளிக்குமாறு ஆணை இடுகிறீர்கள்! ஆனால் இனிவரும் காலத்தில்.., தங்களின் இந்த ஒரு செயலை மட்டுமே முன்னோடியாக எடுத்துக் கொள்ளும் மண்ணுலக மனிதர்கள் தவறே செய்யாத ஒரு பெண் மீது களங்கம் சுமத்திக் கழுவில் ஏற்றத் துடிக்கும் போது ... மனைவி மீது சிறியதொரு சந்தேகம் எழுந்தாலும் அதைக் காரணமாக்கி அவளை ஆட்டிப் படைக்க ஆசை கொள்ளும்போது... அங்கேயும் தங்கள் பெயர் தவறாகப் பயன்பட்டு விடக் கூடிய அபாயம் இருக்கிறதே...? அப் போது... பாவப்பட்ட அந்த மானுடச் சீதைகளின் நிலை...? அக்கினிப் பிரவேசம் செய்து என் பெருமையைப் பறை சாற்றிக் கொள்வதை விட அதைச் செய்யாமலிருப்பதன் மூலம், எதிர்காலத்தில் என் பெயரால் எரியூட்டப்படும் என் சகோதரிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும் என்றே ஆசைப்படுகிறேன் நான்!. தங்களின் செயல், தவ றான ஒரு முன்னுதாரணமாகி வரலாற்றின் பக்கங்களைக் கறைப்படுத்திவிடக் கூடாதே என்ற ஆதங்கத்தினாலேயே தயங்கி நிற்கிறேன் நான்..."

மனிதர்கள் தவறாக நினைப்பார்கள் என்பதற்காக அக்னி பிரவேசம் செய்வது எதிர்காலத்துக்கு ஆரோக்கியமல்ல என்பதை நிதர்சனபூர்வமாக இச்சிறுகதை முன்வைக்கிறது. இதனையே ஆண்டாள் பிரியதர்சினியின் அக்னி பிரவேசம் காட்டமாகச் சொல்கிறது. சீதை அக்னி குண்டலத்தில் இறங்கச் சொன்ன இராமன் வார்த்தையை மறுத்து அவ னைக் கடிந்துரைக்கிறாள். "என்னைப் பிரிந்த நீ, இறங்கி உன் தூய்மையை நிருபிக்க வேண்டும். அதன் பின் நான் இறங்குகின்றேன்" என்கிறாள். இதுபோல அனுராதாவின் 'வலி' சிறுகதை இராமாயணத்தை மீள்வாசிப்புக்குட்படுத் துகிறது. இராமனால் சீதைக்கு ஏற்பட்ட சோதனைகள் இராமன்பால் அவள் வைத்திருந்த நம்பிக்கையை குலையச் செய்கிறது. அவளது பெண்மைக்கு ஏற்பட்ட களங்கம் அவளைச் சினமடையச் செய்வதுடன் அதுவே இராமன் மீது தீராத வெறுப்பாகவும் உருமாறுகிறது. இப்பின்னணி யில் சீதையின் உளநிலையோட்டங்களை ஆழமாக இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. சீதையின் அக்னி பிரவேசம் குறித்து வெளிவந்த தொன்மக் கதையாடல்கள் புதியசோபையுடன் படைக்கப்பட்டவை. அவை தமிழிலக் கியத்துக்குப் புதிய பொலிவையும் நிறைவையும் தருபவை.

தொன்மங்களை மீள்புனைவாக்கியவரில் எஸ்.ராம கிருஷ்ணனும் ஒருவர். இவருடைய 'பத்மவிகாரை' என்ற சிறுகதை புத்தபிக்குகள் குறித்த புனைவு. 'பால்ய நதி' என்ற கதையும் யசன் என்ற புத்த பிக்குவின் வழியாகச் சொல்லப் படுகிறது. முன்னோர்கள்தான் ஆறாக ஓடிக்கொண்டிருக் கிறார்கள் என்ற தொன்மம் இக்கதையின் வழியாக விவாதிக்கப்படுகிறது.

பைபிளை, இயேசுவின் வாழ்க்கையை மறுவாசிப்புக் குட்படுத்தி ஏராளமான புனைவுகள் மலையாளத்திலும் தமிழிலும் வெளிவந்துள்ளன. மலையாளத்தில் பால் சக்கா ரியா, ஆனந் முதலானவர்கள் கிறிஸ்தவ தொன்மங்களை நடைமுறை வாழ்வோடு ஒன்றிணைத்து சிறந்த கதைகளைத் தந்தவர்கள். ராமகிருஷ்ணனின் 'ஆதாமின் பாஷை',



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘நட்சத்திரங்களோடு சூதாடுபவர்கள்’, ‘மூன்று வான சாஸ் திரிகள்’ முதலான கதைகள் கிறிஸ்தவ தொன்மங்களை மீள்வாசிப்புக்குட்படுத்தும் சிறுகதைகள். இயேசுக் கிறிஸ்து வின் அதி உன்னத பருவமான பருவ வயது குறித்தும் அவருடைய இறப்பு குறித்தும் பேசும் ‘நட்சத்திரங்களோடு சூதாடுபவர்கள்’ சிறுகதை மரியாளின் மகனான இயேசுவை தன்மகனாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் ஜோசப்பின் மன நிலையையும் இயேசுவுக்கும் ஜோசப்புக்கும் இடையிலான உறவுநிலையையும் நுட்பமாகச் சித்திரிக்கின்றது.

வைகைச்செல்வியின் ‘ஓ... மரியா!’ சிறுகதை கன்னித் தாயான மரியா தான் கர்ப்பம் தரிக்க முயன்ற அவலத்தை யும் அதனால் அவள் எதிர் கொள்கின்ற அவலங்களையும் வெளிப்படுத்துகிறது. ஜோசப்பிற்கு தான் நிச்சயிக்கப்பட்ட தருணத்தில் ஆடவனின் இணைவின்றி தான் கர்ப்பம் தரித் ததை எண்ணி மனதிற்குள் குமுறும் மரியா குற்றவுணர் வால் வருந்துகிறாள். அவளுக்கு ஒரே ஆறுதல் அவளுடன் கூட இருக்கும் மூதாட்டி எலிசபெத். ஊரவரின் கேலிப் பேச்சினால் ஜோசப்பும் மனம் புண்படுகிறான். நகரத்தில் தன் நடமாட்டத்தை குறைத்துக் கொண்டு தன் தொழில் மேல் அதிக கவனத்தை எடுத்துக் கொள்கிறான். மரியாளின் கர்ப்பம் குறித்த பென்யமின்னின் வார்த்தைகள் அவனை முள்ளாய் தைத்தன. மரியாவை ஏற்பதா, விலக்கி வைப்பதா என்ற குழம்பிய மனத்துடன் இருந்த ஜோசப்புக்கு சிமியோ னின் வார்த்தைகள் தெம்பை அளித்தன. கன்னி கழியாத மரியாவின் மூலம் கடவுள் வர இருக்கும் செய்தியை சிமி யோன் ஜோசப்புக்கு புரிய வைக்கிறான். அதனால் அவன் வாழ்வில் ஏற்படும் சுபிட்சங்களைக் கூறுகிறான். குழம்பிக் கலங்கி குற்றவுணர்வால் புளுங்கிக் கிடக்கும் மரியாவை வீதியில் கண்ட ஜோசப் அவளைத் தேற்றுகிறான். நொந்த மனதுக்கு ஜோசப்பின் வார்த்தைகள் இதமளிக்கின்றது. ஜோசப்பை காதல் பொங்க மரியாள் பார்க்கிறாள். அத்து டன் கதை நிறைவுக்கு வருகிறது. ராமகிருஷ்ணனின் கதைக்கு முற்றிலும் முரண்நிலையில் இக்கதை பின்னப்பட்டுள்ளது. மொழியின் எளிமை, கனதி கதைக்கு வலுச்சேர்க்கிறது.

‘நட்சத்திரங்களோடு சூதாடுபவர்கள்’ சிறுகதையின் தொடர்ச்சியாக அமையும் ‘மூன்று வானசாஸ்திரிகள்’ கதை இயேசுவின் பிறப்பை வான சாஸ்திரிகள் அறிவித்த பிறகு அப்பாவிக் குழந்தைகள் கொல்லப்பட்டதில் உள்ள குற்ற வுணர்வை நமக்கு எடுத்துரைக்கிறது. குழந்தை இயேசு வின் பிறப்பை அறிவித்த வான சாஸ்திரிகள் மூவரும் முப் பது வருடம் கழித்து ஜெருசலேமில் கூடி தேவமைந்தனின் மனிதப் பிறப்பை பல்வேறு கோணங்களில் விவாதிக்கின் றனர். விவாத முடிவில் இயேசுபிரான் சாதாரண மனிதன் என்ற முடிவுக்கு வருகின்றனர். அந்நிலையில் தொடர்ச்சி யாக அவர்கள்வாழ்வில்நிகழும் அற்புதங்கள் அவர்கள்கணிப்பை நிர்மூலமாக்குகிறது. அப்போது வானில் ஒலிக்கும் அசரீதி இறைமைந்தன் வாலிபனாக பிறக்க இருக்கும் பிறிதொரு பிறப்பை கூறிச் செல்கிறது. இப்பின்னணிக்கூடாக விரியும் இச்சிறுகதை இயேசுபிரானின் இரண்டாவது பிறப்பை அறிவிப்பதோடு அவர் இறைவனின் தவக்குமாரன் என்ப தையும் நிறுவிச்செல்கிறது.

கிறிஸ்தவ தொன்மங்களையும் இணைத்து பாவண்ணன் சிறுகதைகளை எழுதியுள்ளார். அவ்வகையில் பாவண்ண னின் ‘சிலுவை’ சிறுகதை ஒரு மனிதனின் வாழ்க்கையும் அவன் மீது சுமத்தப்பட்டிருக்கும் எதிர்பார்ப்புகளும் சிலுவையாகிப் போனதை பூடகமாக உணர்த்துகிறது.

அம்பையின் ‘திக்கு’ சிறுகதை பாபர் மசூதி இடிப்பு கால கட்ட உணர்வுகளை விஸ்ணுவின் ஆணாதிக்க மனோ நிலைக்கூடாகவும் ராம வழிபாட்டு வெறிக்கூடாகவும் பதிவு செய்கிறது.

தமிழ்ச் சிறுகதைகளில் கதை நிகழும் காலத்தை வெளிப் படுத்தி நிற்கும் தொன்மங்கள் சிந்தனை ஆழத்தை வெளிப் படுத்தும் வகையில் அழுத்தமாகப் பதிவு செய்யப்படு கின்றன. கதைகளில் வரும் காட்சிகள் மற்றும் சம்பவ விவ ரிப்புக்கள் உயிர்ப்புடன் விளங்குவதுடன் சிந்தைக்கு விருந் தாகவும் அமைகின்றன.

## பெண்நிலைவாதச் சிறுகதைகள்

தற்காலத்தில் பொழுதுபோக்கு, வணிகநோக்கு, சுய விளம்பரவேட்கை என்பனவற்றில் இருந்து வேறுபட்டு பெண்களின் எழுத்துக்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெண் கல்வி, பொருளாதாரச் சுயசார்பு, வேலைவாய்ப்பு, வெளி உலகத் தொடர்பு காரணமாகப் பெண்களின் கதைக் களம் இல்லம் என்ற குறுகிய வட்டத்திற்குள் நில்லாது விரிவுபடுகிறது. கதை சொல்லும் உத்திமுறை, வடிவ நுணுக்கங்கள், புதிய உள்ளீடுகள் என்ற நிலையிலும் பெண் எழுத்துகள் இக்காலக் கட்டத்தில் சிறப்புப் பெற்றன. இன் றைய நடப்பியல் பிரச்சினைகளாக பெண்ணின் சுயம், வலி, கருவழிப்பு, பெண் சிசுக்கொலை, இரட்டைச் சுமை, பாலி யல் பலாத்காரம், நவீன தொழில் நுட்பங்களால் ஏற்படும் பாதிப்பு, சுற்றுச் சூழலால் ஏற்படும் பாதிப்பு, பெண் உடல் அல்லது மனம் சார்ந்த பிரச்சினைகள் முதலானவற்றை பெண்ணிலைவாதச் சிறுகதைகள் அதிகம் பேசின. இச் சிறு கதைகள் பெண்ணின் மீட்சிக்கான போராட்டமாகவும் அவர்களின் சுயம் அழிப்புச் செயல்களுக்கெதிரான எதிர் வினைகளாகவும் ஆதிக்கச் சக்திகளின் வன்முறைக்கெதிரான குரலாகவும் அமைந்தன. ஆணதிகார மையத்தால் வரைய றைக்குட்படுத்தப்பட்டு அவர்களின் நடைமுறைக் கட்டுக் குள் இயங்கும் பெண்களின் விருப்பு வெறுப்புக்களைச் சுதந்திரமாகவும் நடப்பியல் சார்ந்தும் வெளிப்படுத்தவும் பெண்நிலைவாத சிறுகதைகள் உதவின. பெண்நிலைவாதச் சிறுகதைகள் பெண்களுக்கு விழிப்புணர்வையும் தன்னம் பிக்கையையும் துணிவையும் ஊட்டுபவையாக அமைவது டன் பெண்களுக்கு விடுதலைச் சிந்தனைகளை விதைப் பவையாகவும் அமைகின்றன.

இக்காலக் கட்டத்தில் ராஜம் கிருஷ்ணன், ஜோதிர்லதா கிரிஜா, வாஸந்தி, சிவசங்கரி முதலான மூத்த படைப்பாளி களுடன் அம்பை, காவேரி, திலகவதி, சிவகாமி, பாமா, அனுராதா, உஷா சுப்பிரமணியன், தமயந்தி, உமாமகேஸ் வரி, தமிழ்ச்செல்வி, சல்மா, வைகைச்செல்வி, இந்திரா முதலான பெண் எழுத்தாளர்களும் தொடர்ச்சியாக எழுதி வருகின்றனர். பெண்ணுக்கென வகுக்கப்பட்ட பண்பாட்டு மரபுகளை உடைத்து கணவன், மனைவி, பிள்ளைப்பேறு, தாய்மையின் மகத்துவம் என்ற கதைக்கருக்களைத் தாண்டி பெண்ணின் சுயசிந்தனைகள், அவளின் உள்மன உணர்வு கள், உடற்கூறுகளை பெண்கள் எதிர்கொள்ளும் திறன் முதலானவற்றை அடிப்படையாகக்கொண்டு சமூக ஒடுக்கு முறைகளுககெதிராகச் சுயமாகப் பெண் தன்னை தகவமைக் கும் கதைகளை இவர்கள் எழுதினர்.

இவர்களில், அம்பையின் சிறுகதைகள் தனித்துவமா னவை. அம்பை சிறுகதைகள் வெளிப்படுத்தும் உருவ,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம் கச்சிதமானவை. பெண்மையின் மேல் திணிக் கப்படும் பண்பாட்டு எதிர்பார்ப்புக்களை தகர்ப்பவை. அகமனதில் புதைந்தும் முடங்கியும் கிடக்கும் பெண்ணின் சுயத்துவத்தையும் தனித்துவத்தையும் இச்சிறுகதைகள் நுட்பமாக வெளிப்படுத்துபவை. உணர்ச்சியும் வேகமும் அழுத்தமும் கொண்ட சொல்லாடலுக்கூடாக சிறுகதை யின் பொருண்மையில் மாறுபாட்டைக் கையாண்டு புது மைக்கதைகளைப் படைத்தவர். அம்பையின் இயற்பெயர் சி.எஸ்.லட்சுமி. ஆங்கிலத்தில் இதே பெயரில் கட்டுரை களை எழுதிவருகிறார். தற்போது மும்பையில் வசிக்கிறார். 'காட்டில் ஒரு மான்' கதையின் ஆங்கில மொழிபெயர்ப்புக் காக ஆங்கில இலக்கியத்தின் உயரிய விருதுகளுள் ஒன்றான 'க்ராஸ் வேர்டு' விருதைப் பெற்றுள்ளார்.

1972இல் 'கணையாழி' இதழில் இவரது முதல் சிறு கதையான 'சிறகுகள் முறியும்' வெளிவந்தது. தன் மனை வியையும் குழந்தையையும் சரியாகக் கவனிக்கத் தவறிய கருமியான கணவனுக்கும் மனைவிக்குமிடையே எழும் உறவுச் சிக்கல்களை மையச் சரடாகக் கொண்டு பின்னப் பட்ட சிறுகதையே 'சிறகுகள் முறியும்'. கணவனின் அன்பும் கவனிப்பும் கிடைக்காத நிலையில் சாயா, உப்புச்சப்பற்ற தாம்பத்திய வாழ்வால் ஒரு பயனும் இல்லை என்ற முடி வுக்கு வருகிறாள். விதியை நோகிறாள். ஆனால் அதற்காக அவள் அவ்வுறவை முறித்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறவில்லை. தனக்கு விதிக்கப்பட்டது இது தான் என்று அவள் சமாதானம் செய்து கொண்டு அவனைச் சகித் துக்கொண்டு வாழ முற்படுகிறாள். தீர்வு என்பது எதிர்த்துக் கொண்டு முரண்பட்டுக் கொண்டு வெளியேறுவதல்ல. இருந்து கொண்டு சாதிப்பதே என்பதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. ஆணை அனுசரித்து வாழும் பெண் மையைப் போற்றும் வைதீக மரபு பெண்ணைப் பேசா மடந்தையாகவும் ஆக்கி வைத்தது. வாழ்வில் ஆணிடம் அதிருப்தியைத் தவிர எவ்வித திருப்தியும் காணாத பெண் மையைச் சித்திரித்த அம்பையை சனாதனதர்மவாதிகள் எவரும் கண்டுகொள்ளவில்லை. ஆகையால் எந்தப் பத்திரி கையும் இக்கதையை பிரசுரிக்க முன்வரவில்லை. சிறுகதை எழுதப்பட்டு பலகாலங்களுக்குப் பின்னர் சுயாதீனத் தடை களை நீக்கி 'கணையாழி' பத்திரிகையே இதனைப் பிரசுரித்தது. முற்று முழுதாகவே பெண்மையவாதச் சிந்த னைகளுக்கூடாகத் தோற்றம் பெறும் அம்பையின் சிறு கதைகளில் வரும் பெண்மை ஆளுமையின் உருவம். அம்பை, சிறுகதையை கருத்தியல் வடிவமாகவோ போராளியின் மேடையாகவோ பயன்படுத்தாது இலக்கியவாதியின் சீற்றத்துக்கான சமூகத்துக்கான கலைவடிவமாகவே கையாள்கிறார். சமூகப் பெண் அடக்குமுறைக்கு எதிராக எழும் அம்பையின் குரல் பெண் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கான உரிமையை அளித்தது.

இதனைத் தொடர்ந்து 'சிறகுகள் முறியும்' (1976) 'வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை' (1988), 'காட்டில் ஒரு மான்' (2000), 'அம்பை சிறுகதைகள்' (2016), 'அந்தேரி மேம்பாலத்தில் ஒரு சந்திப்பு' (2014), 'வற்றும் ஏரியின் மீன்கள்' (2007), 'ஒரு கறுப்புச் சிலந்தியுடன் ஓர் இரவு' (2013) என பல தொகுப்புக்கள் வெளிவந்தன.

அம்பை பெண்களின் வாழ்க்கையை அதுவும் சுயசிந் தனை கொண்ட படித்த பெண்களை மிக இயல்பாய் படைத்தார். உடலாலும் மனதாலும் ஆணாதிக்கத்தால் வதைபடும் ஒற்றைப் பெண்முகத்தை அம்பை 'சக்கர நாற்காலி', 'காட்டில் ஒரு மான்' உட்பட பல சிறுகதை களில் எடுத்துக் காட்டியவர். 'சக்கர நாற்காலி' சிறுகதை பணக்கார இளைஞர்கள் பேசும் மாக்சியப் புரட்சியையும் குடியுடன் கூடிய மேற்தட்டு வர்க்கப் பெண்கள் பேசும் பெண்ணியத்தையும் அப்பட்டமாகச் சித்திரிக்கிறது. வெளி நாடுகளில் படித்துவிட்டு வந்து குடித்துக் கொண்டு மார்க் சிய பிரதிகளிலிருந்து எடுத்துச் சொற்களை உபயோகிப்ப தும், புரட்சி பேசுவதும், எவ்வளவு போலியானது என்ப தைச் சித்திரிக்கும் இச்சிறுகதை வாழ்க்கையை மனம் போனபடி இயல்பாக வாழ்ந்து கொண்டு கண்மூடித்தன மாகத் தன்முன் நிகழும் அநியாயங்களை தட்டிக் கேட்கும் பெண்களையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

கதைக்கருவை உருவகமாக்கித் தலைப்பிலே தரும் உத்தியை அம்பையின் 'காட்டில் ஒரு மான்' சிறுகதைத் தலைப்பிலும் காணலாம். மான் கொடிய மிருகங்களுக்கு அஞ்சி ஓடி ஒளியக் கூடியது. அச்சத்துடன் ஓடினாலும் அதற்கென்று ஓர் உலகம் இருக்கிறது. ஒருநாள் தன் கூட் டத்தை விட்டுத் தனித்துச் சென்ற மான் காட்டில் இருந்து புதியதொரு பகுதிக்கு வந்து விடுகிறது. காடு புதிதென் பதால் ஆரம்பத்தில் அம்மான் அஞ்சி நடுங்குகிறது. பின் னர் பழகப் பழக காடு அதற்கு பழக்கமாகிறது. பின்னர் அச் சமின்றி அங்கு வாழப் பழகிக் கொள்கிறது. அந்த மானைப் போன்றவள்தான் தங்கம் அத்தையும். மணமான அவளுக் குக் குழந்தைப் பேறில்லை. அனைவரிடமும் அவள் அன்பு செலுத்துகிறாள். நல்ல எண்ணங்கள் கொண்ட அவள் குழந்தைப் பேறின்மையால் சமூகத்தின் பழிக்குள்ளாகிறாள். இதனால் கணவனுக்கு மறுமணம் செய்து வைத்தாள். எல் லாக் குழந்தைகளையும் அன்புடன் நேசித்தாள். பிள்ளை பெறாதவள் என எய்க்கும் சமூகத்தை தன் உள்ள உறுதி யால் வென்று அந்த மான் போல் அச்சமின்றி வாழ்கிறாள் என்பதை உருவகமாக இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது.

இவரின் 'வீட்டின் மூலையில் ஓர் சமையல் அறை' (1988) என்னும் கதை சமூகத்தில் பெண்ணுக்குரிய மதிப்பை கூறிநிற்கிறது. "வீடென்பது சுதந்திரம் வீடென்பது உனக் கான இடம் அதே நேரம் அங்கு தான் ஓர் மூலையில் சமை யல் அறையும் இருக்கிறது என்பதை வெளிப்படையாகப் பேசும் இச்சிறுகதை அச்சமையலறைக்குள் தான் ஓர் பெண்ணின் வாழ்வும் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை வாசகருக்கு உள்முகமாக எடுத்துக் காட்டுகிறது. ராஜஸ் தானில் குடும்பத்தின் சமையலறைக்குள் காலம் காலமாக பெண் ஒடுக்கப்படுவதை அதைப் பெண்கள் ஏற்றுக் கொள் ளும், எதிர்கொள்ளும் விதங்களை இச்சிறுகதையில் அம்பை மிகச்சிறப்பாக காட்டிவிடுகிறார். வைகைச் செல்வி யின் 'வீடு' என்ற சிறுகதையும் பெண் சுதந்திரமாக வாழ்வ தற்கான வதிவிடமே வீடு என்பதை உணர்த்தி நிற்கிறது. பெண் தனித்து வாழும்போது சந்திக்கும் நெருக்கீடு களையும் அதில் அவள் சந்திக்கும் மனக்கசப்புகளையும் இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது.


அம்பையின் 'சிவப்புக் கழுத்துடன் ஒரு பச்சைப் பறவை' சிறுகதைத் தொகுப்பு முதியோர்கள் பற்றிய ஆழமான கதைகளைக் கொண்டிருக்கின்றது. 'தொண்டை புடைத்த காகம் ஒன்று' கதை, ஒரு மகளின் பார்வையில், இறந்து போன அப்பாவின் இறுதி நாட்களாக விரிகிறது. கல்லூரி யில் பேராசிரியராக இருக்கும் மகளால் வீட்டில் செவிலியர் வைத்து நல்ல முறையில் கவனிக்கப்படும் அப்பா வயது முதிர்ந்த காலத்தில் ஞாபகமறதியால் அவதிப்படுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு கவிதைகள்

**கிரிசாந்**



## மாரி

ஈரம் திரும்பச் சுனைக்கிறது
நிறை முற்றிய மலரென
திராட்சையின் ஊறிய புளிப்பு
பரிமாறிக் கொள்ள உதடுகள்
நறுமணத் தைலங்கள்
திசைகெட்ட காற்று
காமம் படரும் கொழுகொம்பு
எல்லாப் பகல்களும்
எல்லா இரவுகளும்.



## விரகம்

அதிரச் சிதறும் கணம்
நாசிக்குள் நுழையும் சுகந்தம்
காணப் புணரும் கண்கள்
தகிக்கும் பொழுதில்
ஊறும் காடு
விரல்களில் நுரைக்கும் அருவி
தீரச் செய்த பின் தலை
திரள் தடவிய நாவு
புகையிலையில் பெய்யும் பனி.

அவரது நினைவுகள் வெவ்வேறு காலங்களில் முன்னும் பின்னுமாகக் குழம்பிக் குழம்பி சஞ்சரிக்கின்றன. கல்லூரிப் பேராசிரியையான மகளை மாணவியாக நினைத்துக் கொண்டு இறந்து போன மனைவியை நிஜத்தில் தேடுவது மாக வாழும் அப்பா தொண்டைப் புற்றுநோயால் அவதிப் பட்டுக் கொண்டு தன்வாழ்வில் நடந்த சம்பவங்களை மீட்டுப்பார்க்கிறார். ஈற்றில் உணவை விழுங்க முடியாமல் ஒரு நாள் இறந்தும் போகிறார். கதையில் இச்சம்பவங்கள் காக்கையின் காட்சிப் படிமங்களுக்கூடாகவே காட்டப்படு கின்றன. கதையில் வரும் காகம் அப்பாவைப் போலவே தொண்டை புடைத்த காகம், அப்பாவைப் போலவே நாள் முழுக்கக் கரையும் காகம். கத்தி நினைவின் கீறலாய் ஓடும் இச்சிறுகதையில் தந்தை மீது அன்புகொண்ட மகளின் உணர்வின் பல்வேறு பரிமாணங்களைக் காணலாம். இறந்து போன தந்தை குறித்த ஒரு பெண்ணின் உள்ளத்துணர்வின் துலக்கமான வடிவமே இந்திராவின் 'அப்பா' சிறுகதை. தாயை விட்டுப் பிரிந்து வாழும் தந்தைக்கும் மகளுக்கும் இடையிலான அன்பையும் பிரிவையும் பெண்ணின் மன வோட்டத்தில் விளக்கும் இச்சிறுகதை தந்தையின் அந்தி மக் காலத்தில் அவரைப் புரிந்து கொண்டு அவருக்கு நெருக்கமாக வாழ நினைக்கும் மகளுடைய நேசத்தையும் விளக்கி நிற்கிறது.

மூன்று குடும்பங்களின் அவலக்கதையாக விரியும் அம் பையின் 'சாம்பல் மேல் எழும் நகரம்' பெண் முதுமையை எதிர்கொள்ளும் போது அவள் எதிர்நோக்கும் வாழ்க்கைச் சிக்கல்களைப் பேசுகிறது. இடிந்து விழுந்த ரயில்ப்பாதை யோர குடியிருப்புப் பகுதியில் மாற்றுவீடின்றி வாழும் எழுபத்தைந்து வயதே நிரம்பிய ஊர்மிளாத்தாயியும் வழுக்கி விழுந்து இடுப்பெலும்பு விரிசல் கண்ட தொன் னூற்றைந்து வயது நிரம்பிய அவளது மாமியும் மிகக் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர். இந்நிலையில் அவர்கள் குடி யிருப்புகள் அடுக்குமாடிக் குடியிருப்பாக மாறுவதற்காக இடிபடக் காத்திருக்கும் நிலையில் தன்வாழ்வை எண்ணி வேதனைப்பட்ட ஊர்மிளாத்தாயி தீயிட்ட தற்கொலை செய்து கொள்கிறாள். தற்கொலை செய்து கொண்ட ஊர் மிளாத்தாயின் மகன் தனது பாட்டியை முதியோர் இல் லத்தில் சேர்க்கிறான். மற்றைய கதை, கணவன் குமாரப் பாவுடனும் மன வளர்ச்சி குன்றிய அறுபது வயது நாத்த னாருடனும் மற்றும் நடமாட முடியாத மாமியாருடனும் வாழும் கதைசொல்லியினுடையது. இந்த வீட்டில் வேலை செய்யும் கம்லியின் கதை இச்சிறுகதையில் பிறி தொரு கதையாகக் கூறப்படுகிறது. ஈற்றில் கம்லியின் சதுப்பு நிலக் குடியிருப்புப் பகுதி உட்பட எல்லா கட்ட டங்களும் அழிக்கப்பட்டு பாங்காங்க் போன்றதொரு குடியிருப்புப் பகுதியில் 22ஆவது மாடியில் ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு புதிய வேலைக்காரி கம்முவுடன் கதை சொல்லி குடியேறுவதுடன் கதை நிறைவுக்கு வருகிறது. ஆரண்யங்களை நெருப்பிட்டழித்து பாண்டவரின் இந்திரப் பிரஸ்தத்தை மயன் எழுப்பிய போல புதிய குடி யிருப்புத் தொகுதி வந்ததாகக் கூறும் அம்பை முதியவர்க ளின் மரணங்களையும் குடியிருப்புப் பகுதிகளின் அழிவுக ளில் காவுகொள்ளப்பட்ட அவல மரணங்களையும் முதிய வர்களால் ஏனையோர் எதிர்கொண்ட வாழ்க்கைச் சிக்கல் களையும் விவரிக்கிறார்.

பல்வேறு சிரமங்கள் மத்தியில் முதிர்ந்த தாயாரின் ஆசையினை நிறைவேற்றும் மகளின் கதையே 'பயணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21'. புகழ்பெற்ற பரத நாட்டியப்பெண் காமுயம்மாவை வெளிநாட்டில் இருக்கும் அவளது மகள் அனன்யா பார்க்க வருகிறாள். மரணத்தின் அருகில் வசிக்கும் காமுயம்மா தனது வாழ்வை, பரத நாட்டியத்தில் தான் செய்திருக்கும் சாதனைகளை ஆவணப்படுத்த விரும்புகிறார். அவரது சுயசரிதையைத் தேசியப் புத்தக நிறுவனம் ஏலவே பலகாலங்களுக்கு முன்பு வெளியிட்டிருக்கிறது. அந்நூலின் ஒரு பிரதி கூட அவளிடம் இல்லாத நிலையில் அந்த நிறுவனம் இருக்கும் டெல்லி சென்று அதனைத் தேடி வருமாறு மகளிடம் கோரிக்கை விடுக்கிறாள். அனன்யா அரசாங்க நிறுவனத்தின் புத்தகக் கிடங்குக்கே சென்று ஏராளமான புத்தகக் குவியல்களுக்கிடையில் இருக்கும் இருபது பிரதிகளை மீட்டு வந்து தாயிடம் ஒப்படைக்கிறாள். முதிர்ந்த தாய்க்கு மகள் செய்த சேவகத்தை உணர்வின் நிலையில் பிசிரற்று இச்சிறுகதை வெளிப்படுத்துகிறது.

மரணம் வாசல்படியில் நிற்கும்போது பெற்ற மகனாக இருந்தால்கூட அவனும் கணக்கு வழக்குப் பார்த்துத்தான் முடிவெடுப்பான் என்பதை முதியவர் சத்யாவின் மரணத்துக்கூடாக எடுத்துக் காட்டும் சிறுகதையே 'வீழ்தல்'. இக்கதையில் மூப்பியல் பற்றியும் முதுமை பற்றியும் கொஞ்சமும் கவலைப்படாத அடிப்படை மனித நேயமற்ற சமூகத்தை கமலா எதிர்கொண்ட மரணத்தின் மூலம் காட்சிப்படுத்துகிறார். தன் மகன் ஆதியால் நிகழ்த்தப்பட்ட கொடுரத்தை ஜீரணிக்கமுடியாத கமலா, தன் கணவன் சத்யாவின் இழப்புக்கு பின்னர் உயிர்தரிக்க விரும்பாது மரணத்தை எதிர் கொள்வதை விவரிக்கும் இச்சிறுகதை இன்றைய இளைய தலைமுறை மனிதாபிமானமற்று எவ்வாறு இயங்குகிறது என்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

முதியவர்களின் தனிமையை, துணையிழந்த சூழலை, பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் போது தாய், சேய் இருவருக்குமான இடைவெளியை நுட்பமாக விளக்கும் 'வில் முறியாத சுயம்வரங்கள்' கதை இன்று நாம் காணும் மனிதர்களின் கதை. தனிமையில் வாழும் முதியவர்கள் கம்பேனியன்ஷிப் மூலம் தாம் விரும்பிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம் என்பதை மனிதர்களின் இயல்பான நடத்தைகளுக்கூடாக இச்சிறுகதை எடுத்துரைக்கிறது.

அம்பையின் சிறுகதைகள் வித்தியாசமான முறையில் மனித வாழ்வின் வெவ்வேறு கோணங்களைப் பதிவு செய்கிறது. அம்பையால் எழுதப்பட்ட 'மிருத்யு' சிறுகதையும் பயம் கொண்ட ஒரு முதியவர் தன் வாழ்நாள் பெருக வேண்டும் என்று எண்ணிச் செய்யும் யாகத்தை அவருடைய மகள் வெறுப்புடன் நோக்குவதை பதிவு செய்கிறது. ஓம குண்டத்தில் அவர் நெய் வார்க்கும் போது ஏற்கெனவே உயிரிழந்த ஒர் எலும்புக் கூடு நெய் வார்ப்பது போல் இருந்ததாக மகள் உணரும் காட்சி இச்சிறுகதையில் அருமையாகச் சித்திரிக்கப்படுகிறது. அம்பையின் 'வற்றும் ஏரியின் மீன்கள்' தன்னுடைய இளம் வயதிலேயே தாயை இழந்த பெண், தங்குவதற்காக, வாழ்வதற்காகப் பாதுகாப்பான இடங்ளை தேடித்தேடி மாறிமாறி இடம்பெயர்கிறாள். இடம் பெயர்ந்ததால் ஏற்படுகிற மனஉளைச்சல்களை, அது தரும் நெருக்கடிகளை, மிகுந்த வலியோடு சொல்கிறது இக்கதை. அம்பையின் சிறுகதையின் தலைப்புக்கள் சிறுகதையின் உள்ளகத் தன்மையை ஆழமாகவும் நுட்பமாகவும் வெளிப்படுத்துபவை.

குடும்பச் சூழ்நிலையில் வயதுக்கு வந்த பெண்ணுக்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள், பெண்ணின் உளநிலையில்

# அதிகார நரம்புகளின் தீராத வேட்கை


அம்மார்
உன் தாய் உயிர் மூலம் சிதைக்கப்பட்டாளா
அம்மார்
உன் தந்தை இரண்டாகப் பிளக்கப்பட்டாரா
ஆன போதும் நீ வெகுண்டிருக்கக்கூடாது
அம்மார்
உன் சகோதரிகள் பத்திரம் தானே
என்ன அவர்களும் நாசமாக்கப்பட்டார்களா
இன்னும் உன் காதலி
மற்றும் உன்னைச் சூழவுள்ள மலர்கள்
கருக்கப்பட்டதா

உன் சோற்றுப் பானையை தயங்காமல் என்னிடம்
ஒப்படைத்திருக்க வேண்டும்
அரை நூற்றாண்டு தாண்டியும் உன் படுக்கையறை
ஜன்னலை நான் திறக்கக்கூடாதென்று போராட
உனக்கத்தனை திமிரா அம்மார்

உன் தலை இன்னும் நிமிர்ந்திருப்பதும்
முள்ளந்தண்டுகள் வலுவிழக்காதிருப்பதும்
ஒலிவ் மரங்கள் பூத்துக் கிடப்பதும்
உன் வாசனை கலந்த காற்றை பச்சிலைகள் சுவாசிப்பதும்
சதாவும் இம்சிக்கிறதென்னை

முதலில் உன் பெயரை மாற்றிவிடு
எனக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை
என் பெயர் உலகப் பொலிஸ்காரன்
உனக்குப் பிடித்துத்தானாக வேண்டும்

**நுஹா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த அளவுக்குப் பாதிப்பைச் செலுத்தும் என்பதை நுண் மனவோட்டங்களுக்கூடாக எடுத்துக் காட்டும் சிறுகதையே 'அம்மா ஒரு கொலை செய்தாள்'. தாய் ஊரில் இல்லாத சமயத்தில் சிறுமி வயதுக்கு வருகிறாள். பருவமடைந்ததைத் தொடர்ந்து சிறுமியின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் அவளுக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறன. அதன் பின் வீட்டாரால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் சிறுமியின் உள நிலையைப் பாதிப்படையச் செய்கின்றன. ஏலவே பல்வேறான இக்கட்டான சூழலில் ஏளனப் பார்வையால் நிந்திப்புக்குள்ளான நிலையில் தனக்கு ஆதரவாக தன்னோடு அன்போடு இருந்த தாய் இந்நிலையில் தன்னை வாஞ்சையோடு அணைத்துக் கொள்வாள் என நம்புகிறாள் சிறுமி. எச்சந்தர்ப்பத்திலும் அவள் நிலைகுலையாது அவளைத் தாங்கிக் கொண்ட தாய் அவளை ஆதரவோடு அணைத்து ஆறுதல் சொல்வாள் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். அந்தத் தாய் ஊரிலிருந்து வந்ததும் அவள் கனவு நொருங்கிப் போகிறது. தாய் வந்தவுடன் உனக்கு ஆகியிருக்கும் இதுவும் அழகுதான் என்று சொல்வாள் என எதிர்பார்க்கிறாள் சிறுமி. பயமுறுத்திய முறுக்குப் பாட்டி, கல்யாணி எல்லோரையும் புன்னகையின் ஒரு தீப்பொறியில் ஒதுக்கித்தள்ளி விடுவாள் என்ற எதிர்பார்ப்பில் தாயின் வருகைக்காகக் காத்திருக்கிறாள் அந்தச் சிறுமி. ஆனால் அவளின் கனவு எல்லாம் நொருங்கிப் போகிறது. "உனக்கு இந்த இழவுக்கு என்னடி அவசரம்? இது வேறே இனிமே ஒரு பாரம்" எனத் தாய் கூறும்போது சிறுமியால் அவ் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனதளவில் தளர்ந்து போகிறாள். அவள் இதயம் சுக்குநூறாக உடைந்து சிதறுகிறது. ஒரு பெண்ணின் மனநிலையில் பூஜிக்க வேண்டிய தாய் என்னும் தெய்வாம்சம் உடைந்து நொருங்குவதையும் ஒரு பெண்ணின் மன உணர்வுகள் ஒடுக்கப்படுவதையும் அம்பை இச்சிறுகதையில் எடுத்துக் காட்டுகிறார்.

பெண் என்ற நிலையில், சமூகத்தில் எதிர்கொள்ளும் மானுடத் துயரமே அம்பையின் சிறுகதைகள். அவரின் ஆரம்பக் காலக் கதைகள் ஆணாதிக்கத்துக்கு எதிரான கதைகளாக அமைந்தன. ஆணாதிக்கத்தால் வதைபடும் அம்பையின் ஒற்றைப் பெண்முகத்தை 'வல்லூறுகள்', 'சிறகுகள் முறியும்' என பலகதைகளில் காணலாம்.

பெண்ணின் உடம்பும், அவளது மனமும் அம்பையின் பெரும்பாலான சிறுகதைகளில் ஆண்களால் வதைக்கப்படுகிறது. வாழ்வின்மீது கவியும் துன்பங்களை, உள்மனதில் எழும் சிதிலங்களை கலை அழகுடன் நுட்பமாகப் படைத்தவர். தன்னை நிறுவ முனையும் எழுத்துக்களுக்கூடாக அறிவுபூர்வமான புரிதல்களுடன் கதைகளைத் தந்தவர். வாழ்க்கையை பிரக்ஞையுடன் எதிர்கொண்டவர். பண்பாட்டின் கலாசார நிர்ப்பந்தங்களை, ஆதிக்கத் திணிப்புகளை, கற்பு பற்றிய கற்பிதங்களை அம்பை தன்கதைகளில் கேள்விக்கு உட்படுத்தினார். அம்பை தன் சிறுகதைகளில் பெண்மையை அதன் திண்மையை முழுமையான அர்த்தத்தில் வெளிப்படுத்தினார். அம்பையின் சிறுகதைகள் ஆண் பெண் உறவுச் சிக்கல்களில் உள்ளிருக்கும் சுயநலங்களை, தவறுகளை, துரோகங்களை அதனால் விளையும் மனநெருக்கடிகளை, உளச்சிக்கல்களை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தி நின்றன.

சலனம் தொடக்கம் மறுமுகம் ஈறாக சல்மா எழுதிய 11 சிறுகதைகளின் தொகுப்பே சாபம். சல்மாவின் கதையுலகம் பெண்ணின் ஆழ்மனத்தில் ஏற்படும் உணர்வுகளின் பிரவாகம். பயமும் பதற்றமும் நிறைந்த இப்புனைவுவெளி, கண்ணீரினூடாக பல்வேறு குடும்பத்தின் பிறழ்வுகளைப் பேசுகிறது. நிராசையான கனவுகளுடன் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தள்ளப்பட்டு வாழ்வு மறுக்கப்பட்ட பெண்களின் வாழ்வை இப்பிரதிகள் பேசிச் செல்கின்றன. அதிகார இடுக்குகளுக்குள் சிக்குண்டு மிதிபடும் பெண்ணுடல்களின் வலிகளையும் அவர்களின் எதிர்ப்புணர்வுகளையும் இச்சிறுகதைகள் பேசிச் செல்கின்றன. சல்மாவின் 'சலனம்' சிறுகதை யாசருக்கும் அனிதாவுக்கும் இடையிலான காதலுக்கு மதம் ஒரு தடையாக இருப்பதைக் கூறுகிறது. 'விதி' சிறுகதை மொட்டைக் கடிதத்தால் பெண்ணின் வாழ்வு சீர் குலைந்து செல்வதை எடுத்துரைக்கிறது. இது போல 'வலி' என்னும் சிறுகதை குழந்தையின்மையால் கணவன், மனைவிக்கிடையில் நிகழும் உணர்வோட்டங்களைச் சித்திரிக்கிறது. 'பொறி', 'இருள்' முதலான சிறுகதைகள் கணவனின் அதிகார இடுக்குகளுக்குள் சிக்குண்டு அல்லற்படும் பெண்களின் மனஅவசங்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. 'யுத்தம்' சிறுகதை எந்த விழாக்களுக்குச் சென்றாலும் எந்த ஒரு ஆணுடனும் பேசக்கூடாது என நினைக்கும் சராசரிக் கணவனின் மனஇயல்பை இச்சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. வன்புணர்ச்சிக்கு உள்ளாகி வாழ்விழந்த உளம் சிதைந்த பெண்ணின் வாழ்வைப் பேசும் 'சாபம்' சிறுகதை வறுமையில் வாழும் சராசரிப் பெண்கள், தாரமிழந்து பிள்ளைகளுடன் அல்லாடும் கணவனுக்கு, அவர்களின் பிள்ளைகளை வளர்ப்பதற்காக இரண்டாம் தாரமாகச் செல்வதையும் பேசுகின்றது. 'இழப்பு' சிறுகதை கணவன் இல்லாத போது மனைவிக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பேச 'விளிம்பு' சிறுகதை உறவுகளால் வாழ்வில் எதிர்கொள்ளும் பிணக்குகளை எடுத்துரைக்கிறது.

ஆணாதிக்க அரசியல், வாழ்வின் மேடு பள்ளங்களை தன் சிறுகதைகளில் சித்திரித்தவர் ராஜம் கிருஷ்ணன். இவருடைய பெரும்பாலன சிறுகதைகளில் தோழமை முதலிடம் பெறுகிறது. அடிப்படை வசதிகளற்று வாழ்வுடன் போராடும் மனிதர்களை தம் சிறுகதைகளில் அப்பட்டமாகச் சித்திரித்தவர் ராஜம் கிருஷ்ணன். மனிதனை நல்வழிப்படுத்த கல்வித்துறையில் உளவியலும் தத்துவமும் விளங்குவதை அபிதா பாத்திரத்தின் ஊடாக வெளிப்படுத்தும் சிறுகதையே ராஜம் கிருஷ்ணனின் 'அச்சம்'. நல்லதொரு சமூகமாற்றத்தை உருவாக்க வேண்டும் என்னும் நோக்கில் அபிதா இத்துறையை தெரிவு செய்து ஆய்வுகளை செய்கிறாள். அதே போல் இச்சிறுகதையில் வரும் சாருமதி மருத்துவ சேவைக்காகத் திருமணம் செய்யாத வாழ்வை அர்ப்பணிக்கிறாள். பெண்ணிடம் இரக்கம், கருணை, மனிதநேயம் என்றும் நிறைந்து இருக்கும் என்பதை இச்சிறுகதை உணரத்தி நிற்கிறது.

1976இல் 'வடிகால்' என்னும் ஆனந்த விகடன் முத்திரைக் கதையுடன் அறிமுகமான உஷா சுப்பிரமணியன். நானூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியவர். அயோவா பல்கலைக்கழக உலக எழுத்தாளர் மாநாட்டில் பங்கு கொண்ட இவரது சிறுகதைகள் பலமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. உஷா சுப்பிரமணியன் 1995ஆம் ஆண்டு 'திரில்' என்ற சிறுகதைக்கும் 2002ஆம் ஆண்டு லட்சுமி என்ற சிறுகதைக்கும் ஆனந்த விகடன் இலக்கியச் சிந்தனை விருதைப் பெற்றவர். இளைஞர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ண ஓட்டங்களுக்கு சவால் விடுகின்ற சிறுகதைகளை இவர் எழுதினார். இவருடைய 'திரில்' சிறுகதை பெண்ணிய எழுச்சியின் வெளிப்பாடு. இரு பிள்ளைகளின் தந்தையான விஜய்க்கும் நிஷாவுக்கும் இடையிலான நட்பு காதலாக மலர விஜய்யின் மனைவி அனு நீதிமன்றத்தில் விவாகரத்து கோருகிறாள். நீதிமன்றத்தில் குழந்தைகள் வளர்ப்பிற்கான தொகையையும் அனுவுக்கு தேவையான ஜீவனாம்சத்தையும் தருவதாக விஜய் கூறுகிறான். அப்பொழுது அனு நீதிபதியிடம் தன்னால் இரு குழந்தைகளையும் வளர்க்கமுடியாது. அக்குழந்தைகளை தன் கணவனே வளர்க்கட்டும் என்கிறாள். இதுவே கதையின் திருப்பமாக அமைகிறது. விவாகரத்துக்குப் பின்னால் ஏற்படப் போகும் தன்னுடைய நிலையை எண்ணிப் பார்த்தே இம்முடிவுக்கு அனு வருகிறாள். ஆணாதிக்கவாதிகளுக்கு பாடம் புகட்டுவதாக அமையும் இச்சிறுகதை வசதியாக வாழ்ந்த பிள்ளைகள் தன்னோடு வந்து கஷ்டப்படக்கூடாது என்ற அனுவின் உயர்ந்த உள்ளத்தையும் நிதர்சனமாக வெளிப்படுகிறது.

தமிழ் சிறுகதைகளில் வித்தியாசமான புதிய முறையில் சிறுகதைகளைப் புனைந்தவர் கிருஷாங்கினி. திட்டவட்டமான கதையம்சம் எதுவுமேயின்றி ஒரு கணநேர மனநிலையை (mood) தன் சிறுகதையில் வெளிப்படுத்தியவர். இவருடைய 'கிருஷாங்கினி கதைகள்' சிறுகதைகள் தொகுப்பு 'பாணிக்கிரஹணம்' முதல் 'மரணத்தை ஊடுருவி' ஈறாக முப்பத்தொரு சிறுகதைகளைக் கொண்டது. இச்சிறுகதைகள் ஆழமான மனவுணர்வுகளோ சம்பவங்களின் அழுத்தமான விவரிப்போ இன்றி கதைநிகழ்வுகளைத் தொட்டும் தொடாமலும் எடுத்துரைப்பவை. இவருடைய கதைகள் திடீரெனத் தொடங்கி திடீரென முடியும் தன்மை கொண்டவை. வீட்டில் கீரியும் பாம்புமாக வாழும் இருவரை இருட்டு எவ்வாறு இணைக்கிறது என்பதை 'பாணிக்கிரஹணம்' சிறுகதையும் பெண்ணின் பூப்படைந்த கணங்களை 'புஷ்ப்பித்தல்' சிறுகதையும் எலி வேட்டையால் விழைய இருக்கும் சாபத்தை 'எலி' சிறுகதையும் உணர்த்தி நிற்கின்றன. ஆனால் கதையில் உணர்த்தப்படும் விடயங்கள் ஆழமானவையன்று. எவ்வித விபரிப்புமற்று நிகழ்வுகள், ஒரு கணத்தில் தோன்றும் உணர்வுகளை மாத்திரமே இவருடைய சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன. கதையின் ஆழ, அகலங்களை இவரின் சிறுகதைகளில் காணமுடியாது. இவருடைய சிறுகதைத் தொகுதி 'சமகாலப் புள்ளிகள்' 1998ஆம் ஆண்டின் தமிழக அரசு தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசைப் பெற்றது என்பதுவும் இங்கு நினைவு கூரத்தக்கது. உண்மையாக மனதின் அலைக்கழிப்பையும், அதன் அதிர்வையும் தன் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர்.

காவேரி என்ற புனைபெயர் கொண்ட லட்சுமி கண்ணன் 'ஓசைகள்', 'வெண்மை போர்த்தியது', 'காவேரிக் கதைகள்', 'எங்கும் வானம்' போன்ற சிறுகதைத்தொகுதிகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நுண்மையாகச் சித்திரித்துள்ளார். மரணம், முதியோரின் தனிமை, மனிதனுக்குள் எழும் விடை தெரியாத வினாக்கள், பெண் தனித்து வாழும் சூழலில் எதிர் கொள்ளும் முரண்கள் எனப் பல்வேறு தளங்களில் இவருடைய சிறுகதைகள் மையம் கொள்கின்றன. வீட்டுப்பணியாளர்களாக, கடைநிலை ஊழியர்களாக, மீன்பிடிப்பவர்களாக, ஒடுக்கப்பட்டு வாழ்வை நகர்த்திக் கொண்டிருக்கும் விளிம்பு நிலை மனிதர்களாக சமூகத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மக்களின் பிரச்சினைகளை அடியாழம் வரை துருவிப்பார்த்தபடி இவரது படைப்புக்கள் பயணிக்கின்றன. காவேரியின் 'நிறமி' என்ற கதை பல்கலைக்கழக ஆய்வு மாணவி டல்சி தன் நண்பன் ராபர்ட்டுடன் இணைந்து தம் கறுப்பின மக்களின் வாழ்வுக்கு போராடுவதை சுட்டி நிற்கிறது. இச்சிறுகதையில் டல்சி பாத்திரம் வெள்ளையருடன் இணைந்து போராடும் இலட்சிய மாந்தராக சித்திரிக்கப்பட்டுள்ளது.

பாமா, சிவகாமி இருவரும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வைத் தமிழ்ச் சிறுகதைகளில் வெளிப்படுத்தியவர்கள். பாமாவின் வாழ்வோடும் உணர்வோடும் பின்னிப்பிணைந்த படைப்பாக்கங்களின் வெளிப்பாடாக 'கிசும்புக்காரன்', 'ஒரு தாத்தாவும் எருமையும்' முதலிய சிறுகதைத் தொகுதிகள் விளங்குகின்றன. சமூக ஒடுக்குமுறையின் அவலங்கள், அதற்கு எதிரான மனவெழுச்சிகள், அவை உண்டாக்கும் போராட்டச் சூழல்கள் முதலான கருத்து நிலைகளை ஒருங்கிணைத்து தம் சிறுகதைகளில் பாமா வெளிப்படுத்தியுள்ளார்.

சமயம், பொருளாதாரம், கல்வி போன்ற நடைமுறைகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிரான சுரண்டல்களை எடுத்தியம்பும் பாமாவின் படைப்புக்கள் அவரின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. ஆதிக்க வர்க்கமும் அதிகார வர்க்கமும் ஒடுக்கும்போது அதற்கு எதிராகப் போராடாது அடிமைகளாகவே வாழ்ந்து கழிக்கும் அவலத்தை பாமாவின் அண்ணாச்சி, விடுதலை முதலான கதைகள் சித்திரித்து நிற்கின்றன. மாடாய் உழைத்து உடைமைகளை உருவாக்கிய போதிலும் தலித்தாய் பிறந்தவனுக்கு சொந்தமாக ஏதும் இல்லாததை அவருடைய 'நிராசை' சிறுகதையும் துக்கம் விசாரிக்கச் சென்ற இடத்திலும் தீண்டாமை துரத்துவதை அவருடைய 'பிரிவு' சிறுகதையும் சமயம் மாறினாலும் சாதியச் சாயல் மாறாத சமூகக் கட்டமைப்பை 'வீரன்' சிறுகதையும் உணர்வின் தடத்தில் வெளிப்படுத்தி நிற்கின்றன. சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான கருத்துக்களை விளிம்பு நிலை மக்களின் வாழ்வோட்டத்துக்கூடாக பாமாவின் 'மொளகாப் பொடி', 'ஒரு தாத்தாவும் எருமையும்', 'எகத்தாளம்', 'கிசும்புக்காரன்' முதலான சிறுகதைகள் சித்திரிக்கின்றன. தமிழ்நாட்டில் தலித்துகளுக்கென்று உள்ளாட்சி நிர்வாகத்தில் இடஒதுக்கீடு செய்யப்பட்டாலும் அதில் போட்டியிட முடியாத நிலையே காணப்படுகிறது. லிங்கம்பட்டி கிராமத்தில் பொதுத்தொகுதியில் தலித் ஒருவர் வேட்புமனு செய்ததால் வெளிப்படும் கலவரத்தை 'எகத்தாளம்' சிறுகதை காட்டமாகப் பேசுகிறது.

விளிம்புநிலை சமூகத்தில் பெண்களின் நிலை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. சமூகம், அரசியல், பொருளாதார நிலைகளில் ஆதிக்கம் பெறமுடியாத பின்தங்கியவராக பெண்கள் காணப்படுகின்றனர். இவர்களின் வலிகள், மன உணர்வுகள் பாமாவின் சிறுகதைகளில் நுட்பமாய் பதிவு செய்யப்பட்டுள்ளன. கல்வி உரிமை மறுக்கப்பட்டு பாலியல் வன்கொடுமைக்காளாகிக் கொலை செய்யப்பட்ட சிறுமியைப் பற்றிய 'தாவணி' சிறுகதையும் அடிமை வாழ்வைத் தவிர வேறொன்றையும் தராத தாலியை விற்கும் நாயகியை 'பொன்னுத்தாயி' சிறுகதையும் பெண் சிசுக் கொலையின் வேதனையைக் 'கதறல்' சிறுகதையும் உயிர்ப்புடன் எடுத்துரைக்கின்றன. சாதிய ஒடுக்குதலுக்கும் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கும் மாற்றாகச் சமநிலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமரியாதையும் கொண்ட வாழ்க்கைச் சூழலை அடைவதற்கு இளைஞர்களின் பங்களிப்பு அவசியம் என்பதை பொங்கல்', 'அந்தக்காலம்' முதலான சிறுகதைகளும் கூறிநிற்கினறன. பிஞ்சு மனதில் விஷம் கலப்பது போல சாதிய வித்து ஊன்றப்படுவதை 'எளக்காரம்', 'தீர்ப்பு' முதலான கதைகளில் பாமா கண்டிக்கிறார். பெண் பிறக்கும் போது எதிர்கொள்ளும் சிக்கல்களை பாமாவின் 'கதறல்' சிறுகதை வெளிப்படுத்தி நிற்கிறது. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் பேருந்தில் பெண்ணானவள் 'பெண்குழந்தை'யை பிரசவிக்குபோது அப்பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சித்திரிக்கும் இச்சிறுகதை பெண் பிறப்பானது துன்பத்தின் குறிகாட்டியாவதையும் வெறுப்பின் காட்சிப்பொருள் ஆவதையும் சுட்டி நிற்கிறது.

அரசுப்பணியில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் சிவகாமி, 'நித்யா' என்ற புனைபெயரில் 'இப்படிக்கு உங்கள் யதார்த்தமுள்ள' என்ற முதல் சிறுகதைத் தொகுப்பை 1986இல் வெளியிட்டார். 'கடைசிமாந்தர்' என்ற இரண்டாவது சிறுகதைத் தொகுதி 1997இலும், 'கதைகள்' என்ற மூன்றாவது சிறுகதைத் தொகுதி 2003இலும் வெளிவந்தன. ஆனந்தவிகடன் பவளவிழா மலரில் 'ரஹமத் துன்னிஸா' என்ற சிறுகதையும் இவருக்குப் பேரையும் புகழையும் ஈட்டித்தந்தது. கிராம மக்களின் வாழ்க்கைக் கூறுகளை மனிதாபிமானத்தோடு ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் ஒரு விசாலமான பார்வை சிவகாமியிடம் உள்ளது. சாதிக் கட்டுமானம், கிராமியப் பெண்களின் வாழ்வியல் சூழல், நகரத்துப் பெண்களின் வாழ்க்கை முறை, அரசியல், பொருளாதாரம், திருமணம் முதலானவை பெண்ணிடத்தில் ஏற்படுத்தும் மாற்றம், உடல் அரசியல், இளைஞர்களின் சாதி மனப்பான்மை, சாதி சார்ந்த அவர்களின் இயக்கம் முதலானவை எவ்வாறு இருந்தன என்பதை இச்சிறுகதைகள் கூறிநிற்கின்றன.

'மரப்பாச்சி', 'அரளிவனம்', 'தொலைகடல்' சிறுகதைத் தொகுப்புக்களின் வாயிலாக அறியப்பட்டவர் உமா மகேஸ்வரி. ஆங்கில இலக்கியத்தில் முதுக்கலைமானிப் பட்டம் பெற்ற இவர், மரப்பாச்சி தொகுப்பின் ஊடாக சிறுகதை ஆசிரியராக அறியப்பட்டார். உமா மகேஸ்வரியின் கதைகளில் அழகியல் இயல்பாக வெளிப்படுகிறது. பெண்களின் உள்ளுணர்வின் மென்மையான, உண்மையான உணர்வுகளை தம் சிறுகதைகளில் உணர்வுபூர்வமாகச் சித்திரித்தவர். 'மரப்பாச்சி' தொடங்கி 'ரணகள்ளி' வரை 14 கதைகள் **'மரப்பாச்சி'** தொகுதியிலும் 'மூடாத ஜன்னல்' முதல் 'தொலைகடல்' வரை 14 கதைகள் **'தொலைகடல்'** தொகுதியிலும் 'அரளிவனம்' முதற்கொண்டு 'கனகாம்பரத் திரைகள்' வரை 14 கதைகள் **'அரளிவனம்'** தொகுதியிலுமாக 42 சிறுகதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இவரது சிறுகதைகள், ஆணாதிக்க நிலையில் பெண் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை, பெண்களின் தொலைந்து போன வாழ்க்கையைப் பேசுகின்றன. பெண்களின் வாழ்க்கைச் சிதைவுகளை, அவள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை இவருடைய 'மரப்பாச்சி', 'வருகை', 'ஆண்' முதலான சிறுகதைகளில் காணலாம்.

'கற்கிளிகள்' என்ற சிறுகதை சுகுணா தன் அக்காவின் கணவனால் சீரழிக்கப்படுவதையும் 'நிறைவின் உறைதளத்தில்' என்ற கதை தனது மகளாகக் காணவேண்டிய மருமகளிடம் மாமானார் தவறாக நடப்பதையும் எடுத்துரைக்க 'மரப்பாச்சி' சிறுகதை வயதுக்கு வராத சின்னஞ்சிறு பெண்ணான அனுவை அவளது மாமனே வரன்முறையற்று வேட்டையாடுவதை வெளிப்படுத்தி நிற்கிறது. மிருகத்தனமான பாலியல் வன்முறையின் உச்சத்தை 'கூறு' சிறுகதையில் காணலாம். தன் மனைவியைக் கட்டிய கணவனே நண்பனுக்கு கூறுபோடத் துணிவதை இச்சிறுகதை எமக்கு எடுத்துரைக்கிறது. பெண்ணை மதியாது, துதியாது சராசரி மனுஷியாகக் கூட எண்ணமுடியாத ஆண்களின் வக்கிரமான ஈனப் புத்தியை தம் கதைகள் ஊடாக வெளிச்சம் போட்டுக் காட்டியவர் உமா மகேஸ்வரி.

மனைவி, வீட்டில் இல்லாத பொழுது பணிப்பெண்ணுடன் உறவு கொள்பவன், தன் வீட்டிற்கு வந்திருக்கும் உறவுக்காரச் சிறுமியிடம் தவறாக நடக்க முனைபவன், மனைவியின் நகைகளைக் களவாடிப் பிற பெண்களோடு தவறாக நடப்பவன், மருமகளை காமத்தோடு பார்ப்பவன், திருமணத்தன்றே தன் புது மனைவியின் பரிசுத்தத் தன்மையினை பரிசோதித்து அறிந்து கொள்பவன், தோஷம் கழித்தல் என்ற பெயரில் சிறுமியை பலாத்காரம் செய்பவன், மனைவியின் தங்கையோடு தவறான உறவு வைத்துக் கொண்டு மனைவியை ஏமாற்றுபவன், நோய்வாய்ப்பட்ட நிலையில், தன் இயலாமையை ஆத்திரமாக மாற்றி மனைவியின் மீது களங்கம் கற்பிப்பவன் என ஆணாதிக்கத்தின் முகங்களை தம் சிறுகதைகளில் இயல்பாகச் சித்திரித்தவர் உமாமகேஸ்வரி. பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிரான தார்மீகக் குரலே உமாமகேஸ்வரியின் சிறுகதைகள்.

நவீன தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர் குட்டி ரேவதி. ஆதிக்க மாயைகளால் கட்டுண்ட தமிழகத்தில் கவிதைகள் மற்றும் சிறுகதைகளில் பெண்ணியச் சிந்தனையில் நிலவும் சமூக முன்னேற்றத்தை சாதிய கருத்தியல் சிந்தனைகளை உள்மனத் தடத்தில் வெளிப்படுத்தியவர். இவரது பெண்ணிலைவாதக் கருத்துக்கள் நவீன தமிழ்க் கவிதையின் எல்லைகளை விரிவாக்கின. இவருடைய கவிதைகளைப் போலவே 'நிறைய அறைகள் உள்ள வீடு' (2013), 'விரல்கள்' (2018), 'மீமொழி' (2020) ஆகிய சிறுகதைத் தொகுப்புக்களும் பேசாப் பொருளைப் பேசத் துணிந்தன. பெண்ணின் உள்ளுணர்வுத் தடத்தில் எழும் ரணம், கோபம், ஆற்றாமை எனப் பல்வகை உணர்வுகளை, மனதின் காயங்களை, வாழ்வில் பெண்ணுக்கு இழைக்கப்படும் சமூக அடக்குமுறைகளை தன் சிறுகதைகளில் நுட்பமாக விவரித்தவர். குட்டி ரேவதியின் இத்தொகுப்புக்கள் பெண்களுக்கென்ற தனித்துவ உடல்மொழியை உருவாக்க முயல்கின்றன. குட்டி ரேவதியின் 'முழுமதி', 'கந்தகப் பூ', 'கண்கள்' ஆகிய மூன்று கதைகளிலும் சங்க இலக்கிய அகமரபின் தொடர்ச்சியைக் காணலாம். இச்சிறுகதைகளில் திருமணத்துக்கு முன்னர் நிகழும் உடலிணைதல் ஒழுக்க மீறலாக அன்றி உணர்வின் தோற்றமாக வெளிப்படுகிறது. காமத்தால் கனலும் உடல் இன்பம் துய்க்க விளைவதை இவருடைய 'விரல்கள்' சிறுகதையும் எடுத்துரைக்கிறது. தேவாலயத்தில் முடங்கிக் கொண்டு உணர்ச்சியைக் கொன்று விட்டு வாழும் கன்னியாஸ்திரிகள் வெறும் ஜடங்கள் அல்ல. அவர்களுக்குள் கிளர்ந்தெழும் காமம், சுடர்விட்டெழுந்து ஆணுடலை தீண்டல் என்பது ஆசாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் செயலன்று. ஆனால் பருவத்துக்கு வராத சிறுமிகள் மீது ஆண்களால் நிகழ்த்தப்படும் பாலியல் வன்முறைகள் களையப்படவேண்டியவை. மிலேச்சத்தன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான இச்செயல்களால் பெண்ணின் உளம் சிதைக்கப்படு கிறது. அதன் வடு ஆறாத ரணமாய் உள்ளத்தை அரிக்கும் ரம்பமாய் பெண்ணின் உணர்வோட்டத்தில் விரிவதை 'விரல்கள்' கதை இயல்பாய்ச் சித்திரித்துச் செல்கிறது.

நனவுக்கும் கனவுக்கும் இடையில் அல்லாடும் பெண்ணின் உள்ளத்தை, அவளது வாழ்க்கையை எவ்வித பட்டோபமுமின்றி யதார்த்தமாக 'இமை'கதையில் வெளிப்படுத்தியவர். ஈற்றில் கனவு நனவான நிலையில் பெண் தன்னுணர்வு தடுமாறிய நிலையில் தன் பழைய காதலனை மனைவி அரவணைத்துக் கொள்வதை, ஒரு பார்வையாளனாக கணவன் எதிர்கொள்வதை 'இமை' சித்திரித்துச் செல்கிறது. பெண்ணுக்கு பாதுகாப்பு கணவன். எனவே அவனே இமையாவான் என்பதை எழுந்த மாதிரியாகக் கதை சித்திரிக்க முயன்றாலும் 'இமை' என்ற குறியீடு உணர்த்தும் உள் அர்த்தங்கள் கதையில் அநேகம். இமை மூடும் தருணத்தில் 'சுசிக்கு' கனவு சம்பவிப்பதையும் இமைக்கும் நொடிக்குள் சதாவை சுசி காண்பதையும் காதலால் கண்ணிழந்து நடைப்பிணமாய் சதா வாழ்வதையும் 'இமை' என்னும் ஆழ் குறியீடு பல்வேறு அர்த்தங்களுடன் எமக்குணர்த்தி நிற்கிறது.

பெண்கள் மீது சமூகம் நிகழ்த்தும் வன்முறையின் மூல வடிவத்தை குட்டிரேவதியின் 'கூந்தல்', 'தூமலர்' கதைகளில் காணலாம். கணவனால் நிகழ்த்தப்படும் வன்முறைகளைச் சகித்துக் கொண்டு வாழும் அமுதாவின் வாழ்வை 'கூந்தல்' சிறுகதை உணர்த்தி நிற்கிறது. முற்றிலும் உணர்வுத்தளத்தில் எழுதப்பட்ட இச்சிறுகதை பித்துக்குளி நிலையில் பெண் தன்னை மறந்து செய்யும் செயல் எவ்வாறு கலையாகிறது என்பதையும் சுட்டிநிற்கிறது. நவீன நாடகாற்றுகைக்குரிய அத்தனை விடயங்களையும் இச் சிறுகதை தன்னகத்தே கொண்டுள்ளது. 'கற்பூரம்' கதையில் ரயிலில் வரும் ஊதுபத்தி விற்பவனைப் போல இச்சிறு கதையில் வரும் ஓவியனும் கற்பனை என்றாலும் நாம் காணும் நிதர்சனமான மனிதர்களுக்குள் அவர்கள் இல்லாமலில்லை. 'கற்பூரம்', 'அமிலம்' ஆகிய இரண்டு கதைகளும் புனிதங்களுக்குள் ஒளிந்திருக்கும் அம்மாவின் விம்பத்தைக் கட்டுடைப்பவை. இவ்விரு கதைகளும் உறவுகள்மீது போர்த்தப்பட்டுள்ள புனித பிம்பங்களை அசைத்துப் பார்க்கின்றன.

கவிதைகளைப் போலவே அகத்தின் உட்சிடுக்குகளை சிறுகதைகளிலும் மொழிவழிப்படுத்தி இருக்கிறார் குட்டி ரேவதி. காயம்பட்ட அமுதாவின் உணர்வுகள் பெருவூற்றாக கூந்தல் கதையில் பொங்கிப் பிரவாகிப்பதைப் போல கனவுக்குள் அல்லாடும் சுசியின் உணர்வுகள் இமை சிறுகதையில் தங்கு தடையின்றி நகர்ந்து செல்கின்றன. வெறுப்பு மண்டிய உடலுக்குள் அல்லாடும் சேகரின் அகஉணர்வுகள் 'ஆணிகளாய்' கதையில் மையங்கொள்கின்றன. 'கற்பூரம்', 'அமிலம்' சிறுகதைகளில் தாயின் விம்பம் எவ்வாறு உடைந்து சிதைகின்றதோ அவ்வாறே 'ஆணிகள்' சிறுகதையில் தந்தையின் விம்பம் சிதைகின்றது.

கதை மாந்தரின் உள்ளுணர்வுகளுக்கூடாக கதைகளைத் தகவமைக்கும் குட்டி ரேவதி, பெண்மையை தன் இயல்போடு காட்சிப்படுத்துகிறார். குட்டி ரேவதியின் பெரும்பாலான கதைகளில் இயற்கையின் முழுமையானதொரு கூறாக பெண்ணுடல் போற்றப்படுகிறது. கட்டற்ற விடுதலையைக் கோரும் பெண்மனம் தடைகற்களாக நிற்கும் ஆண்களைச் சாடுகிறது. ஒடுக்கப்படுதலின் வலியும் துயரமும், தனிமையும் நதியாக கதையெங்கும் சுழித்து விரவிப் பாய்கிறது. வேட்கை கொண்டு விரகதாபத்தால் வாடும் காமம் துய்க்கும் பெண்ணுடல் அவர் சிறுகதைகளில் விரசமற்று வெளிப்படுகிறது. நிதர்சனமான பெண்மையை அதன் இயல்புத் தன்மையோடு குட்டிரேவதி தன் சிறு கதைகளில் முன்வைக்கிறார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் **1962**இல் பிறந்த ஆண்டாள் பிரியதர்சினி கவிதை, கட்டுரை, நாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு என பலதுறைகளில் காலடி பதித்தவர். சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் நிகழ்ச்சி நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றி, தற்போது கோயம்புத்தூர் பொதிகை தொலைக்காட்சி ஒளியலை வரிசையின் தலைமைச் செயலராகப் பணியாற்றி வரும் ஆண்டாள் பிரியதர்சினி தற்கால பெண் சிறுகதையாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர். 'சுருதி பிசகாத வீணை', 'ரிஷியும் மனுஷியும்', 'தோஷம்', 'சரஸ்வதியின் சிலுவை', 'தலைமுறை தாகம்', 'வானவில் வாழ்க்கை' முதலான சிறுகதைத் தொகுப்புக்களை தந்தவர். 'தோஷம்' சிறுகதைக்காக லில்லி தேவசிகாமணி விருதினையும் 'உண்டியல்' கதைக்காக பாவலர் முத்துசாமி விருதினையும் 'கழிவு' சிறுகதைக்காக இலக்கியச் சிந்தனை விருதினையும் பெற்றவர். நான்குமுறை சிறுகதைக்கான ஆனந்தவிகடன் விருதினைப் பெற்றுக்கொண்டவர்.

பெண் தன் இயல்பு வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் தன் உரிமைக்காக அவள் படும் துயரங்களையும் யதார்த்த பூர்வமாகத் தன்கதைகளில் சித்திரித்தவர். திருமணமாகி குடும்ப அமைப்பில் இணையும் பெண்கள், வரதட்சணைக் கொடுமையால் பாதிக்கப்படுவதையும் அமைதியையும், குடும்ப மகிழ்ச்சியையும் இழந்து பெண்ணானவள் நடைப்பிணமாக அல்லுண்டு வாழ்வதையும் தன் 'தீ' சிறுகதையில் வெளிப்படுத்தியவர். தோஷம் காரணமாக அழகிருந்தும் அறிவிருந்தும் நல்ல உத்தியோகம் இருந்தும் திருமணம் தள்ளிப்போகும் பெண்ணின் மனவுளைச்சல்களை வெளிப்படுத்தும் இவருடைய 'தோஷம்' சிறுகதை திருமணமாகாது ஈற்றில் செயற்கை முறையில் கருத்தரித்து பெண்ணானவள் தன் குழந்தையோடு வாழ நினைப்பதை வலியுறுத்தி நிற்கிறது. கணவனை இழந்த பெண் சமூகநெருக்குவாரங்களால் புறந்தள்ளப்படுவதை இவருடைய 'பூஜை' கதை வெளிப்படுத்தி நிற்கிறது. அமங்கலி என்பவள் அபசகுனமாகக் கருதப்படும் நடைமுறை வழக்கை இக்கதை உணர்வுபூர்வமாக பெண்ணின் அவலங்களுக்கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது.

'நிலா' எனும் பருவம் எய்திய சிறு பெண்ணை வீட்டின் வாகன ஓட்டுநர் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குவதையும் அதன்பின் அப்பெண் எதிர்கொள்ளும் நெருக்கடியையும் இவருடைய 'வலி' சிறுகதை எடுத்துக் காட்டுகிறது. சிறு வயது என்று கூடப் பாராது பாலியல் வன்கொடுமைப்படுத்தும் ஆணின் வக்கிரத் தன்மையினையும் ஈனமான காம உணர்ச்சியினையும் எடுத்துக் காட்டும் இச்சிறுகதை பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாகி உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் துன்பப்படும் பெண்ணின் மன வேதனையையும் வெளிப்படுத்தி நிற்கிறது. இயற்கையாக பெண்ணுக்கு ஏற்படும் மாதவிடாய் உடல்வழியே எத்தகைய சிக்கல்களை, மனவேதனைகளை ஏற்படுத்துகிறது என்பதை அவருடைய 'சரஸ்வதியின் ஏடு தொலைந்து போனது' எனும் கதை சுட்டி நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலை அகட்டி அகட்டி நடந்தாள் பவுனு. லேசாக உராய்ந்தாலும் சுரீரென்றது நெருப்புக் கங்கினால் தீய்த்த மாதிரி எரிந்தது உடல் உபாதை" எனக் கதைதோறும் வரும் காட்சிச் சித்திரிப்புக்கள் பெண் உணர்வையும் அவளது மனவலியையும் இயல்பாக கூறுகிறது. பெண்களைப் போகப்பொருளாக, வியாபாரப் பொருளாக எண்ணும் ஆண்வர்க்கத்தின் பிறிதொரு முகத்ததை உணர்த்தி நிற்கும் சிறுகதையே 'பரிகாரம்'. அரசியல்வாதியின் சுய நலத்திற்காக அவனது பேத்தியளவு சிறுவயதுள்ள பெண்ணின் வாழ்வு சூறையாடப்படுவதை இச்சிறுகதை உணர்த்தி நிற்கிறது. பன்னிரண்டு வயசுக் கன்னிச் சிறுமிக்குத் தாலி கட்டி அவளை மலர வைத்தால் அரசியல்வாதியின் பதவி நீடிக்கும் என்ற ஜோசியப் பரிகாரத்துக்கு சூழ்நிலைக் கைதியாகிப் போன பெண்ணின் அவல வாழ்வினை இச்சிறுகதை எமக்கு கூறிச்செல்கிறது. குடும்பம், சமுதாயம், பணிபுரியும் வேலைத்தளங்களில், பண்பாட்டு கலாசார மரபுகளால், ஆணாதிக்க சமூகக்கொடுமைகளால், பொருளாதார நெருக்கடிகளால், சூழ்நிலைக் கைதிகளாகிப் பெண்கள் அடையும் வேதனைகளை, துயரங்களை, சிக்கல்களை ஆண்டாள் பிரியதர்சினியின் சிறுகதைகள் வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றன.

தமிழக காவல்துறையின் முதல் தமிழ்ப்பெண் தலைமை இயக்குநரான கோ.திலகவதி இன்றைய எழுத்துலகில் சமூக நோக்கோடும், தனிமனிதனின் நலன் கருதியும் எழுதிக் கொண்டிருக்கும் இலக்கியப் படைப்பாளர்களில் ஒருவர். இவர் 1980களில் எழுத்துலகில் நுழைந்தவர். பெண்ணியச் சிந்தனையாளர். இவரது சிறுகதைகள் ஆழ்ந்த உண்மைகளையும், கருத்துக்களையும், மனிதகுலத்துக்கு எடுத்தியம்பும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. இவர்தம் படைப்புகள் வாயிலாகப் பெண்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சிக்கல்களை, நிகழ்வுகளை இயல்பாக வெளிப்படுத்தியவர். பெண்கள் சுயமாகக் கல்வி கற்று, ஊதியம் பெறும் ஒரு பணியில் இருந்தாலும் கூட ஆண்களுக்கு அடிபணிந்தே வாழும் நிலையில் பெண்கள் உள்ளனர் என்பதை இவருடைய பல சிறுகதைகள் உணர்த்தி நிற்கின்றன. சமூகத்தில் பெண் தனக்குச் சமமாக இருந்தால் தம்செயல்களுக்கு அடிபணிய மாட்டாள் என்னும் ஆண்வர்க்கத்தின் மனித இயல்பினை இவரின் 'அக்கரை' சிறுகதை எடுத்துரைக்கிறது. 'கூடாகி வந்ததொரு' என்ற சிறுகதையில் வரும் பெண், ஆணுக்கு சமமாக கல்வி கற்று ஊதியம் பெற்றாலும் ஆணின் அடக்குமுறைக்கு ஆளாகிறாள். கணவன் மனைவியரிடையே ஒருவருக்கொருவர் ஐயக்கண் கொண்டு பார்ப்பது குடும்ப உறவின் அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் பெருந்தடையாக இருக்கும் என்பதை 'உதைத்தாலும் ஆண்மக்கள்' என்ற சிறுகதை எடுத்துக் காட்டுகிறது. கணவனின் சந்தேகத்தால் துன்பமுறும் மனைவியின் நிலையை 'முதல் வெளிச்சம்', 'மாலையில் ஓர் உதயம்', 'எடுக்கவோ கோக்கவோ' முதலான சிறுகதைகளில் எடுத்துக்காட்டியுள்ளார். 'முதல் வெளிச்சம்' சிறுகதையில் வரதனின் மனைவி காஞ்சனா குழந்தைப் பிறப்பை தள்ளிப் போட எண்ணுகிறாள். ஆனால் அவள் கணவனோ மனைவியின் நடத்தையைச் சந்தேகிக்கிறான். அவமானம் தாங்காமல் காஞ்சனா தற்கொலை செய்து கொள்கிறாள்.

ஆணின் அடக்குமுறைக்கு ஆட்பட்டுத் துன்பங்களை அனுபவித்து வரும் பெண்களையும், கணவன் கயவனாகும் போது, குடும்பம் நரகமாகும் போது தனித்துச் செயல்படும் உரிமை பெண்ணுக்கு உண்டு என்னும் பொதுச்சிந்தனைகளையும் திலகவதி தன் சிறுகதையில் அழுத்தமாக உணர்த்துகிறார். கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மனதில் தன்னம்பிக்கையைப் பெற வேண்டும் என்பதையும் பணிபுரியும் பெண் பணியிடங்களில் எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதையும் தங்களுக்கு ஏற்படும் சிக்கல்களைத் துணிவுடன் பெண்கள் எதிர் கொள்ள வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தும் திலகவதி சிறுகதைகள் பெண்ணானவள் தன் தனித்தன்மைகளை, உரிமைகளை இழக்காது தனக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராகக் குரல்கொடுக்கவேண்டும் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன.

நடைமுறை வாழ்வில் நாம் சந்திக்கும் கிராமத்து மனிதர்களின் வாழ்வின் நுண்ணிய பகுதிகளை, அம்மனிதர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை, மனித மனத்தின் அந்தரங்கங்களை, சமூகத்திலுள்ள நடைமுறை நிகழ்வுகளை தம்கதைகளில் இயல்பாக வெளிப்படுத்தியர் சு.தமிழ்ச்செல்வி. இவரது கதைகளில் 'நிலம்' ஒரு பாத்திரமாக உயிர்கொள்கிறது. பசுமையான காடுகள், மேய்ச்சல் நிலங்கள், வெயிலால் வரண்டு பாளம் வெடித்து நிற்கும் பயிர் செய்நிலங்கள், தானியங்கள் நிறைந்த விவசாய நிலங்கள் என தமிழ்ச்செல்வியின் கதையில் வரும் நிலங்கள் மக்களின் வாழ்வாதாரத்தோடு இன்றியமையாத தொடர்புடையவை. நிலத்தைக் கதை மாந்தரோடு இணைத்து நிலத்துக்கும் மனிதனுக்கும் இடையிலான உறவை மண்மணத்தோடு காட்டும் தமிழ்ச்செல்வியின் சிறுகதைகள் எளிமையானவை. வாசகனோடு இயல்பாக உரையாடும் தன்மை கொண்டவை. விளிம்புநிலை மக்களின் வழக்காற்று மொழியை அதன் ஜீவன் குறையாது வெளிப்படுத்துபவை. புதினங்களின் வழியாக தமிழ் இலக்கியத்தில் நன்கு அறியப்பட்டிருக்கும் சு.தமிழ்ச்செல்வியின் முதல் சிறுகதைத் தொகுப்பு 'சாமுண்டி'(2006) எட்டுக்கதைகளுடன் வெளிவந்தது. இதனையடுத்து உயிர்மை பதிப்பக வெளியீடாக வெளிவந்த 'சு.தமிழ்ச்செல்வியின் சிறுகதைகள்' (2010) என்னும் தொகுப்பு 'இருசி' முதல் 'தவம்' ஈறாக பதின்மூன்று கதைகளைக் கொண்டது.

நாட்டில் வறுமைக்கோட்டுக்கு கீழ்வாழும் விளிம்புநிலை மக்களின் உழைப்பையும் ஊதியமின்மையால் மக்கள் படுந்துயரங்களையும் அவர்களைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளையும் 'யதார்த்தம்', 'ஈரம்', 'கொடும்பாவி' போன்ற கதைகள் விளக்கி நிற்கின்றன. ஏழைகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதனால் ஏற்படும் உள நெருக்கீட்டையும் 'கொடும்பாவி', 'கன்னியாயி' முதலான சிறுகதைகள் சித்திரிக்கின்றன. வயதுபோன காலத்தில் இயலாத கணவனோடும் பேரப்பிள்ளைகளோடும் வேலையின்றி அவதிப்படும் அம்மணிக்கிழவியின் வறுமையையும் துயரையும் விளக்கும் 'கொடும்பாவி' சிறுகதை 'கொடும்பாவி அடித்தல்' என்ற வழக்காற்று நம்பிக்கையையும் அம்மணிக்கிழவி குடும்பத்தின் மீது கொண்ட பரிவையும் அதைத் தாங்க அன்றாடம் அவள் படும்பாட்டையும் விளக்கி நிற்கிறது.

'யதார்த்தம்' சிறுகதை வறுமையால் குழந்தையை இழந்து தவிக்கும் குடும்பத்தின் நிர்க்கதியான வாழ்வை காட்சிப்படுத்துகிறது. இறந்த மகனின் பிணத்தைக் கூட வண்டி பிடித்து எடுத்துச் செல்லமுடியாத நிலையில் துணியால் மூடி பயணிகள் செல்லும் பஸ்வண்டியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச் செல்லும்போது தாய்படும் வேதனையையும் வறுமையின் நிமித்தம் குடும்பமொன்று எதிர்கொள்ளும் சங்கடங்களையும் பேசிச்செல்லும் இச்சிறுகதை யதார்த்த உலகின் அவலங்களைக் காட்சிப்படுத்துகிறது. தொழிலின்மையால் வறுமையில் வாடும் குடும்பங்களின் அவல வாழ்வே 'ஈரம்' சிறுகதை. வானம் பொய்த்தால் வாழ்வு பொய்க்கும் என்பதை வேலாம்பாள், பொன்னுச்சாமி குடும்பங்களுக்கூடாக விளக்கும் இச்சிறுகதை நிலம் செழித்தால் மட்டுமே ஏழைகளின் வாழ்வு செழிக்கும் என்பதை ஈழம் என்னும் ஆழ்படிமத்துக்கூடாக கூறிச் செல்கிறது.

குடிகார ஊதாரிக் கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு 'தொம்பா' என்ற பெண் எதிர்நோக்கும் சிக்கல்களும் சிரமங்களுமே 'தொம்பா'க்கதை. அப்பனும் ஆத்தாளும் சீதனமாய்க் கொடுத்த மாடுகளை மேய்த்து வரும் தொம்பா அதனைப் பெருக்கி அதன் மூலம் கிடைக்கும் கணிசமான வருவாயில் கடைக்குழியில் கிடக்கும் குடும்பத்தினை உயர்த்த நினைக்கிறாள். ஆனால் அவள் கணவனோ, மேய்ச்சலுக்குப் போயிருந்த மாடுகளை தொம்பாவிற்கு தெரியாமல் ஓட்டிக்கொண்டு போய் விற்று விட்டு குடித்து விட்டு வருகிறான். வக்கற்ற கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட தொம்பா தன் கையாலாகாத தனத்தை எண்ணி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு அழுகிறாள். இப்பின்னணியில் எழும் கதை குடிகார கணவர்மார்களால் வறிய மக்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார நெருக்கடிகளை விளக்குகிறது. தொகுதியில் இடம்பெறும் முதல் சிறுகதையான 'இருசி', ஐந்து அண்ணன்கள் மற்றும் அண்ணிகள் செய்யும் இடர்ப்பாடுகளை அனுபவித்துக் கொண்டு வாழ்வின் பலநிலைகளில் குடும்பத்தைத் தாங்கும் சூழல் பெண்ணுக்கு எவ்வாறு கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை உணர்த்துகிறது. அண்ணன்மாருக்கு ஆக்கிப் போடுவதும் அவர்களுடைய ஆடுகளை மேய்ப்பதும் கேள்வரகுகளை விதைப்பதுமாக வாழும் அருக்காணியின் வாழ்வை கிராமிய வாழ்க்கை முறைக்கூடாக உணர்வுபூர்வமாக இச்சிறுகதை சித்திரிக்கிறது.

ஈழத்திலிருந்து போன அகதிகள் வாழ்வைப் பிற்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட 'கன்னியாயி' கதை கூலிவேலைக்கு களைவெட்டச் செல்லும் பெண்ணொருவரின் இளகிய மனதை எடுத்துரைக்கிறது. பெண் வயதுக்கு வந்ததும் ஏழாம் தண்ணி வார்க்கும் வரை அவ்வீட்டில் தங்கியிருந்து அப்பெண்களைக் காக்கும் 'கன்னியாயி' தெய்வம் குறித்து வரும் நம்பிக்கைகள் வழக்காறுகள் கதையை நகர்த்திச் செல்ல உதவுகிறது. இந்நம்பிக்கை வழக்காற்றின் தொடர்ச்சியை 'வீரன்' சிறுகதையிலும் காணலாம். மனித வாழ்வோடு பின்னிப் பிணைந்த நாட்டுப்புற தெய்வமான வீரனை சமூகப் பின்னணியோடு இணைத்து அதன் வணக்கத்தை அதற்குரிய சடங்கை ராசாத்தி வாழ்கைக்கூடாக வெளிப்படுத்தும் 'வீரன்' சிறுகதை எல்லோராலும் வெறுத்து ஒதுக்கப்படும் தீட்டு எனப்படும் பெண்மைக்கே உரிய 'தூமை'யை புனிதச் செந்நீராகச் சித்திரிக்கிறது. கிராமியத் தெய்வங்களை நடப்பியல் வாழ்வோடு இணைத்து நம்பகத் தன்மையோடு கதை கூறுபவராக சு.தமிழ்ச்செல்வி காணப்படுகிறார். சாமுண்டி என்ற பாம்பினைத் தன் உடம்புக்குள் உள்ளிருத்திக் கொண்டு வாழும் விதவைப் பெண்ணின் கதையே 'சாமுண்டி'. மீனாட்சி தான் இறக்கப் போகும் நிலையில் தன் உடலில் ஜனித்த பாம்பை விதவைப் பெண் கனகத்திடம் இறக்கிவிட்டுச் செல்ல அன்று முதல் கனகமும் மனதளவில் பாம்பாக உருமாறிப் போகிறாள். மாய யதார்த்த விவரணைப்போக்கில் எழும் இச்சிறுகதை தெய்வ நம்பிக்கை குறித்த பதிவாக மட்டுமின்றி, நம்பகத்தன்மையுடன் கூடிய நடப்பியல் பதிவாகவுமுள்ளது.

பெண்மையை அதன் இயல்போடு, நெறியோடு படைத்தவர் சு.தமிழ்ச்செல்வி. தன்னுடைய நிலையில் இருந்து தவறாது, வைராக்கியத்தோடு இறுதிவரை தன் கொள்கையில் இருந்து வழுவாது நிற்கும் ரேவதியை 'தவம்' கதையில் சுயம் கொண்ட இலட்சியப் பெண்ணாகப் படைத்தவர். கணவனை இழந்த வேறொரு பெண்ணுடன் தொடுப்பு வைத்துக் கொண்ட தன் கணவனை விட்டுப் பிரிந்து இறுதிவரைக்கும் வீராப்போடு தன்னம்பிக்கையோடு தனித்தே வாழ்ந்து இறந்த ரேவதியின் வாழ்வு இன்றைய பெண்மைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

மகள் ஜெனிட்டாவுடன் கழிப்பறையில் மல்லுக் கட்டும் லில்லி டீச்சரின் வாழ்வை மையப்படுத்தி எழுதப்பட்ட 'சிக்கல்' சிறுகதை எடுத்துக் கொண்ட பொருள் தமிழ் இலக்கியத்துக்குப் புதிது. ஜெனிட்டா மலங்கழிக்க முடியாமல் அவதிப்படும்போது தாய் படும் வேதனையை, நுட்பமான மனவோட்டத்தை, இறை நம்பிக்கையை இச்சிறுகதை நுண்மனவோட்டத்தில் வெளிப்படுத்தி நிற்கிறது.

பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட அப்பாவி ஊமைப் பெண்ணின் வாழ்வை பிற்புலமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதையே 'வதம்'. காமுகர்களை அழிக்கும் காளியாகத் தன்னைக் கற்பனை பண்ணிக்கொண்டு அப்பாவிச் சிறுமி மல்லிகா செய்யும் வதம், ஈற்றில் அவளை மீளாத்துயில் கொள்ளவைக்கிறது. அதுவே அவள் வாழ்வின் விமோசனமாகவும் அமைகிறது. மனப்பிறழ்வு கொண்ட பெண்ணின் வாழ்வை பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட பிறிதொரு சிறுகதை 'பாஞ்சாலி'. கட்டிய கணவன் வண்டிக்கார மணி இருக்கத்தக்கதாகவே வேற்றாடவர் மேல் ஆசைகொள்ளும் சித்தம் கலங்கிய காந்திமதியை பெண்மையின் அழகோடும் பூரிப்போடும் எடுத்துக்காட்டும் 'பாஞ்சாலி' சிறுகதை ஐந்து பேருக்கு மனைவியாக இருந்தவளும் பத்தினியுமாகிய திரௌபதையை நினைவூட்டிச் செல்கிறது.

சு.தமிழ்ச்செல்வியின் பெரும்பாலான கதைகள் மழை காற்று வெயில் என்று பாராமல் அன்றாடம் வயல்காட்டில் உழைக்கும் கூலிப்பெண்களையே கதை மாந்தர்களாகக் கொண்டுள்ளன. அன்றாடம் உழைத்தால்தான் வீட்டில் உலைவேகும் என்ற அடிப்படையில் படைக்கப்பட்ட இப்பாத்திரங்கள் நிஜவாழ்வில் எம்மை நிழலாய்த் தொடரும் வறுமைக்கோட்டுக்கு கீழ்நிலையில் வாழும் மனிதர்கள். வாழ்க்கையைத் தொடர்ந்து, கொண்டு நடத்த முடியாமல் அன்றாட வாழ்வுக்கே அல்லாடுபவர்கள். குடும்பச் சுமையால் உறவுகளுக்குள் ஏற்படும் மனக்கசப்புகளால் துன்பத்தில் உலல்பவர்கள். குடும்பத்துக்காக, உறவுகளுக்காகத் தம்மை ஆகுதியாக்கிக் கொண்டவர்கள்.

வாழ்வின் நெருக்கடி மிகுந்த தருணங்களையும் பணமின்மையால் குடும்பங்கள் எதிர்கொள்கின்ற வாழ்க்கைச் சிக்கல்களையும் (யதார்த்தம்), மனக்கசப்புக்களால் உறவுகளுக்கிடையில் நிகழும் விரிசல்களையும் அதனால் ஏற்படும் மனச்சிதைவுகளையும் (வதம்) தமிழ்ச்செல்வியின் சிறுகதைகளில் காணலாம். குடிப்பழக்கம்(தொம்பா), பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணோடு தொடர்பு(தவம்), மனைவியை விடுத்து வேறு திருமணம் செய்து கொள்ளுதல் (தவம்), கணவன் இருந்தும் வேறொருவரை நினைத்தல் (பாஞ்சாலி) போன்ற வாழ்க்கையின் பல்வேறு கோணங்களை இச்சிறு கதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. மனித மனத்தின் பாலியல் விருப்பங்களை (காவல்) அது கிளர்த்தும் பாலி யல் வன்மங்களையும் இப்புனைவுகளின் (வதம்) மூலம் அறியலாம்.


*1950*களில் 'ஜிங்லி' இதழில் முதன்முதலில் குழந் தைகளுக்கான கதைகளை எழுதியவர் ஜோதிர்லதா கிரிஜா. இவர் தொடர்ச்சியாக குழ்ந்தைகளுக்கான ஆக்கங்களை கல்கண்டு, பூஞ்சோலை, கண்ணன் இதழ்களில் எழுதி னார். *1968*இல் ஆனந்த விகடன் இதழில் கலப்புத் திரு மணத்தை முன்னிறுத்தி 'அரியும் சிவனும் ஒண்ணு' என்ற குறுநாவலை எழுதி தமிழ் இலக்கிய உலகில் நன்கறியப் பட்டார். இவருடைய சிறுகதைத் தொகுப்புக்கள். 'வெகு ளிப்பெண்', 'வாழத்தான் பிறந்தோம்', 'புதிய யுகம் பிறக் கட்டும்', முதலான பெயர்களில் வெளிவந்தன. இவருடைய 'ஜோதிர்லதா கிரிஜா கதைகள்' தொகுப்பு 'கோபுரக் கலசம்' முதல் 'விபரீத சோதனை' ஈறாக இருபத்தேழு கதைகளைக் கொண்டது.

குமுதத்தில் வெளியான இவரின் 'கொலையும் செய் வாள்' சிறுகதை இன்றளவும் பேசப்படும் சிறுகதை ஆகும். மறுமணத்தின் ஊடாக வரவிருக்கும் சீதனப் பணத்துக் காகத் தன்னைக் கொல்ல நினைக்கும் கணவனையும் அவ னுடைய தாயாரையும் பெண்ணானவள் எவ்வாறு கொல் லுகிறாள் என்பதை இச்சிறுகதை எமக்கு உணர்த்தி நிற் கிறது. கண்ணதாசன் இதழில் வெளியான 'காவு' சிறுகதை சினிமாவுக்கு பாடல்கள் எழுதும் பாடலாசிரியரைக் கண்டிக்கிறது. கண்ணதாசனைக் கண்டித்து எழுதப்பட்ட இச்சிறுகதை அவருடைய இதழிலேயே வெளிவந்தது என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கது. 'கவரிமான் கணவர் களே' என்ற சிறுகதை அலுவலகத்தில் அப்பாவித் தொழி லாளர்களை அதட்டி ஒடுக்கி அவர்களைக் கசக்கிப் பிளிந்து வேலை செய்யும் உயர் அதிகாரிகள், தங்கள் வேலை செய் யும் அலுவலகத்தை எவ்வாறு சுரண்டுகின்றனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இவருடைய 'தலைமுறை விரிசல்', 'நியாயங்கள் மாறும்' முதலான சிறுகதைகள் இலக்கிய சிந்தனை விருது பெற்றவை.

முனைவர் நிர்மலா கிருட்டினமூர்த்தி அவ்வை நிர்மலா என்ற பெயரில் கவிதை, சிறுகதை, நாடகம், திறனாய்வு எனப் பன்முகத்தளங்களில் இயங்கி வருபவர். 'வாலாட்டும் மனசு', 'ஆசைமுகம் மறந்து போச்சே', 'கானல் வரி' முத லான சிறுகதைத் தொகுப்புக்களை வெளிக்கொண்டு வந்த வர். இவருடைய 'ஆட்டோ கிராப்' சிறுகதை இயக்குநர் சேரனின் 'ஆட்டோ கிராப்' திரைப்படத்தின் தாக்கத்தால் எழுந்த கதை ஆகும். திருமணமான தீனதயாளன் என்பவன் ஆட்டோ கிராப் படம் பார்த்து விட்டு தன் காதலி ஸ்டெல் லாவை நோக்கிச் செல்கிறான். அச்சந்திப்பின் பின் காதலர் இருவரின் மனங்களில் ஏற்படும் தாக்கங்களைச் சித்திரிக் கின்ற இக்கதை இரு குடும்பத்தின் மகிழ்ச்சியும் அவர்களின் சந்திப்பினால் தொலைந்து போவதை எடுத்துரைக்கிறது. இவர் எழுதிய பிறிதொரு கதையான 'மறதி' சிறுகதையும் திரைப்படம் ஏற்படுத்திய தாக்கத்தால் விளைந்ததே. புகழேந்தி தன் நண்பனின் வாயிலாக தம்மோடு கூடப் படித்த வேதாவின் முகவரியை அறிய நேரிடுகிறது. மனைவி எவ்வளவோ அறிவுரைகளைக் கூறியும் அதனைச் செவிமடுக்காது தன் மனைவியோடு வேதாவைக் காணச் செல்கிறான். அதன் ஊடாக இரு குடும்பத்தாருக்கும் உற வும் தொடர்பும் ஏற்படுகிறது. அச்சந்தர்ப்பத்தில் வேதா வின் குழந்தைக்கு விலையுயர்ந்த பொம்மையைப் பரிசாகக் கொடுக்க அதுவே வினையாக மாறி வேதாவின் குடும்பத் தில் விரிசலை உருவாக்குகிறது. பழைய காதல் நினைத்துப் பார்க்க சந்தோஷமான ஒன்றே தவிர அதனை மீளத் தொடர்தல் பெண்ணின் குடும்பத்தில் சிக்கல்களையே ஏற்படுத்தும் என்பதை இச்சிறுகதைகள் இரண்டும் ஆழ உணர்த்தியுள்ளன. பெண்ணிலைவாத நோக்கில் இவரெழு திய 'கானல்வரி' சிறுகதை ஜென்னியின் வாழ்வுக்கூடாக மரபுவழி கட்டமைக்கப்பட்ட பெண்மையை நிராகரிக்கி றது. பெண்விடுதலை தொடர்பாக வெளியில் முழக்கமிடும் ஆடவர் பலர் வீட்டில் பெண் தம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி வீட்டுப் பெண்ணாகவே இருக்க ஆசைப்படுகிறார் கள். தம் சொல்லை மீறி நடக்கமுனையும் போது அது விவாகரத்திலேயே முடியும் என்பதையும் இச்சிறுகதை கூறிச் செல்கிறது.

பெண்களின் உணர்வைத் தாங்கி வெளிவந்த பெண்ணி லைவாதச் சிறுகதைகள் தமிழ் இலக்கியத்தில் தனித்துவமா னவை. பெண்ணியக் கோட்பாட்டை அடியொற்றி உரத்த சிந்தனையோடு வெளிப்படும் இச்சிறுகதைகள் சமூகநிலை யில் வரதட்சனைக்கொடுமை, பெண்களுக்கு எதிரான வன் முறை, கட்டுப்பாடற்ற ஆண் பெண் நட்பு, பெண்களின் பாலியல் பிரச்சினைகள் போன்றவற்றை யதார்த்தமாகப் பேசுபவை. பெண்விடுதலையின் தீர்க்கமாக அமையும் இச்சிறுகதைகள் விரிவும் ஆழமும் கொண்டவை.

(தொடரும்)




## வரவு

நூல்:

தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்

( வாழ்க்கை - இலக்கிய - வரலாற்று ஆவன நூல் )

ஆசிரியர்:

கலாநிதி, பண்டிதர் செ. திருநாவுக்கரசு

விலை ரூபா: 2500.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடர்க்காலத்திலும் அரங்கேறிய 'களங்கம்'

## திருப்பாடுகளின் நாடகம்











திருமறைக் கலாமன்றம் வருடந்தோறும் மேற்கொள்ளுகின்ற பிரமாண்டமான ஆற்றுகையாகிய திருப்பாடுகளின் நாடக ஆற்றுகையானது, கொவிட்கால ஊரடங்கின் காரணமாக 2020 ஆம் ஆண்டு இறுதி நேரத்தில் தடைப்பட்டது. இந்த வருடம் இடர்க் காலத்திலும் மேற் கொள்ளக்கூடிய வகையில் திருப்பாடுகளுடன் தொடர்புடைய நவீன நாடகமாகிய 'களங்கம்' நாடகம் தயாரிக்கபட்டு உள்ளக மண்டபத்தில் வரையறுக்கப்பட்ட பார்ப்போருடன் மார்ச் மாதம் 26,27 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம், பிரதான வீதியல் உள்ள 'கலைத்தூது கலையக' மண்டபத்தில் மேடையேற்றப்பட்டது.

கலைத்தூது நீ. மரிய சேவியர் அடிகளினால் அறுபதுகளில் எழுதப்பட்ட 'களங்கம்' நாடகம் இயேசுவின் பாடுகளுக்கு காரணமானவர்களை கண்டறியும் செயல்வினையினூடாக பாடுகள் பற்றிய ஆழமான விடயங்களைப் பேசுகின்ற நாடகமாக அறுபதுகளிலேயே நவீன சிந்தனைகளுடனும் ஊமம், குறியீடு,செய்துகாட்டுகை, வரலாற்றுக்குள் சமகாலத்தவர் சென்று உரையாடுதல், பார்ப்போர் சமூகத்தில் இருந்து பாத்திரங்கள் அரங்கிற்கு வருதல் போன்றதான நவீன உத்திகளைக் கையாண்டு தயாரிக்கப்பட்டு , இலங்கையில் மட்டுமன்றி தமிழ்நாட்டில் திருச்சி தேவர் மண்டபத்திலும் (1972) ஈழத்தவர்களால் மேடையேற்றப்பட்டது, மீண்டும் 1990 ஆம் ஆண்டும் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டதுடன், ரூபவாஹினியிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்பு செய்யப்பட்டது. அத்துடன் கொழும்பிலும் வெளிநாடுகளிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது.

இப்படைப்பு இவ்வருடம் சில மாற்றங்களோடும் சமகால முக்கியத்துவங்களை இற்றைப்படுத்தியும் திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் அவர்களால் நெறிப்படுத்தப்பட்டது. அனுபவம் வாய்ந்த மன்றத்தின் கலைஞர் அணியின் ஒருங்கிணைப்பில் சிறப்பான படைப்பாக உருவாக்கப்பட்ட இப்படைப்பு மூன்று நாட்கள் நடத்தப்படும் நோக்கோடு தயாரிக்கப்பட்டபோதும் கொவிட்கால நெருக்கடிகளால் இரண்டு நாட்கள் மட்டும் மேடையேற்றப்பட்டது. அதே வேளையில் இப்படைப்பினை ஏனைய மக்களும் பார்வையிடக் கூடியவாறு தொலைக்காட்சிகள், இணையத் தொலைக்காட்சிகள் போன்றவற்றில் நேரடியாக ஒளிபரப்புச் செய்ததுடன் சமூக வலைத்தளங்களிலும் பல்லாயிரக் கணக்கான பார்ப்போர்களை சென்றடையும் வகையில் ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதனால் உலகளாவிய வகையில் இப்படைப்பு பலராலும் பார்வையிடப்பட்டு பாராட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. கொவிட் கால இடரிலும் திருமறைக் கலாமன்றம் மேற்கொண்ட இக்கலைச் செயற்பாடு பலராலும் வரவேற்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெயரிலி

**மரின் றேச்சல் மரியதாசன்**

“என்ன பிள்ள வேளைக்கு வெளிக்கிட்டியே?” அம்மம்மா மெதுவாக அனுங்கியபடி சமையலறை வாசலோடு வந்து நின்றார். “ஓமண, இண்டைக்கு எக்ஸ்ரா கிளாஸ் இருக்கு, வெள்ளன போக வேணும்” கூறிக்கொண்டே ஒரு கோப்பை நிறையத் தண்ணீர் மொண்டு பருகிவிட்டு வெளியே வந்தாள் காருண்யா. இன்னும் விடியவில்லை. வெளிக்கூடத்தின் மின்விளக்கு விசையை ஒளிரச்செய்து கடிகாரத்தப் பார்த்தாள். சுவரில் ஒய்யாரமாக உலாப் போய்க்கொண்டிருந்த இரண்டு பல்லிகள் மின்னொளி பட்ட மாத்திரத்தில் கடிகார நிழலில் பதுங்கிக்கொள்ள, கடிகாரம் காலை 5.40 என்று நேர அறிக்கை வழங்கியது.

“அம்மம்மா, எல்லாம் சமச்சிட்டன். காலம சாப்பாடு ஹொட் டிஷ்ஷில இருக்கு, புட்டு. முட்ட பொரியுங்கோ என்ன... மத்தியானத்துக்கும் எல்லாம் காச்சிட்டன். சோற மட்டும் போட்டீங்களெண்டா காணும். இண்டைக்கு கோப்பி போட நேரம் காணாது. சொறி.. நீங்க போட்டு குடியுங்கோ. நாளைக்கு கட்டாயம் ஊத்தித் தாறன். மறக்காம மருந்த போடுங்கோ... மற்றது, கண்ணன் பிந்தித்தான் வந்தவன். இப்ப எழுப்பாதேங்க, சள்ளெண்டு விழுவான். நான் வெளிக்கிடுறன் என்ன?” அவள் படபடவென்று பேசிவிட்டு தன் பேர்த்தியை அணைத்து ஒரு முத்த மிட்டாள்.

பல்லில்லாத அந்தக் கிழவி அவள் கன்னங்களை வருடி விட்டவாறு தன் பொக்கை வாயைத் திறந்து சிரித்தாள். “கவனம் பிள்ள. போட்டு ஒரு போன் எடுத்துச் சொல்லென்ன..” தன் நடுங்கும் குரலில் கூறிக்கொண்டே மீண்டும் சிரித்தாள். காருண்யா வழக்கமான புன்சிரிப்புடன் தலையாட்டிவிட்டு, தன் உழைப்பின் முதற்பலனாய் பெற்றெடுத்த மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு வீட்டுப் படலையைத் தாண்டினாள்.

காருண்யா ஒரு ஆசிரியை. தந்தையையும் தாயையும் நந்திக்கடலோடு கரைத்துவிட்டுத் தன் பேர்த்தியுடனும் தம்பியுடனும் கைபிடித்துக் கரையேறி வந்தவள் அவள். தடை முகாம்களில் காய்ந்து மறுஜென்மம் எடுத்து வந்த ஒரு தசாப்தத்தின் அடையாளமாய் எஞ்சி நின்ற சமூக மொன்றில் அவளும் ஒரு புள்ளி. முதுமையின் ஸ்பரிசத்தால் நரைகள் பூத்துத் தள்ளாடும் தன் பேர்த்திக்கு அமைதியான இறுதி நாட்களைப் பரிசளிக்க வேண்டுமென்ற எண்ணமும் தன்னைவிட இரு வயதே இளையவனான தம்பிக்கு நல்ல முன்மாதிரிகை காட்ட வேண்டுமென்ற தவிப்பும், குடும்பத்தின் மூத்த மகள் என்ற பொறுப்பை செவ்வனே செய்து முடிக்க வேண்டுமென்ற ஓர்மமும், அவளைக் கடினமாக உழைக்க வைத்தன. அதன் பலனாய் கல்வியியற் கல்லூரி முடித்து ஒரு ஆசிரியையாக பணியில மர்ந்தாள். சரியாக காலை ஏழரைக்கு வந்து ஒப்பமிட்டு, பின் மாலை இரண்டு மணிக்கு பாடசாலைப் படலையைத் தாண்டும் மேம்போக்கான ஆசிரியரல்ல அவள். மிக ஆழமான, அர்ப்பணிப்புள்ள ஆத்மார்த்தமான ஆசிரியயை. அளவான கண்டிப்பும், மாணவர்களை அரவணைக்கும் அவளின் குணமும், பிள்ளைகளைப் புரிந்து கொள்ளக் கூடிய அவளின் போக்கும் ஆர்ப்பாட்டமில்லாத அவளின் அழகும் கண்ட மாத்திரத்தில் வகுப்பறையை அவள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துவிடும். அவளின் குணங்கள் சக ஆசிரியர்களையும் அவள் பக்கம் ஈர்த்துவிட்டிருந்தது. அவளின் பணி மீது அவள் கொண்டிருந்த காதல் தான் அன்றும் அவளை காலைக் கருக்கலில் புறப்பட வைத்திருந்தது. அவளது வீட்டிலிருந்து சரியாக ஒருமணி நேரத் தொலைவிலிருந்த ஒரு கரையோரக் கிராமத்தின் சிறிய பாடசாலையில் சாதாரண தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்களை கற்பிக்க வாரத்தில் மூன்று நாட்கள் அவள் அவ்வாறு அதிகாலையில் புறப்படுவது வழமை.

என்றைக்கும் போல அன்றும் அவள் பண்ணைப்பாலத்தைக் கடக்கும் போது கிழக்கு வானத்தைப் பார்த்து ஒரு புன்னகை புரிந்தாள். அந்த வானம் மிக அழகாயிருந்தது. ஒரு நிமிடமாவது நின்று அந்த சூரிய பிரசவத்தைக் காண வேண்டும் போலிருந்தது அவளுக்கு. கைக்கடிகாரம் அப்போது நேரம் 5.45 என்று கூறியது. “ஆறுமணிக்கு வெளிக்கிட்டாலும் ஏழுக்கு கிட்ட போய்டலாம்.” அவள் தனக்குள் சொல்லிக் கொண்டு மெதுவாக மோட்டார் சைக்கிளை வீதியின் கரையாக நிறுத்திவிட்டு இறங்கினாள்.

கடலையும் அதன் கரையில் உறங்கிக் கொண்டிருந்த யாழ்நகரையும் பார்த்துக்கொண்டே அங்கிருந்த ஒரு இருக்கையில் அமர்ந்தாள். மெல்லிய கடற்காற்றும் ஓயாமல் சலசலத்துக் கொண்டிருந்த கடலும், இரவு முழுதும் அலையோடு போராடி ஓய்ந்து கரைசேரும் மீனவப் படகுகளும் அவளுக்கு ஒருவித பரவசத்தைக் கொடுத்தன. அந்த இயற்கையின் இரைச்சலில் ஒரு அமைதி ஊடாடிக் கொண்டிருந்தது. அவளின் அவசரமான காலைப் பொழுதுகளிற்கு அது நேர்மாறானதாக இருந்தது.

“வானம் வடிவா இருக்கென்ன?” திடீரென்று ஒரு குரல், அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றடித்துக் குழம்பிய தலை, மெலிதாகப் படர்ந்த தாடி, பழுப்பு நிறத்தில் ஒரு மேற்சட்டை, ட்றக் சூட், ஏறத்தாழ அவள் வயது மதிக் கத்தக்க ஒரு மனிதன் அந்தக் கருக் கல் வானைக் கூர்ந்து நோக்கியபடி நின்று கொண்டிருந்தான். அவள் சாதாரணமாக அறியாத மனிதரோடு சகஜமாக உரையாடுபவளல்ல. ஏனோ அந்த மனிதனிற்குப் பதிலளிப்பதில் பிழையில்லை என்று அவளிற்குப் பட்டது.

"ம்ம்.."

"டெய்லி வாறனீங்களா?" அந்த மனிதன் சகஜமாக பேசிக்கொண்டே அந்த இருக்கையின் அடுத்த முனை யில் அமர்ந்து கொண்டான்.

**காருண்யா ஒரு ஆசிரியை. தந்தையையும் தாயையும் நந்திக்கடலோடு கரைத்துவிட்டுத் தன் பேர்த்தியுடனும் தம்பியுடனும் கைபிடித்துக் கரையேறி வந்தவள் அவள். தடை முகாம்களில் காய்ந்து மறுஜென்மம் எடுத்து வந்த ஒரு தசாப்தத்தின் அடையாளமாய் எஞ்சி நின்ற சமூகமொன்றில் அவளும் ஒரு புள்ளி.**

அவன் மீண்டும் சிரித்து விட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்த படி அமர்ந்து கொண்டான்.

"பேசாம பைக்க எடுத்துக்கொண்டு போ காரூ" அவள் தனக்குள் கூறிக் கொண்டாலும் ஆணி அடித்தது போல அதே இடத்தில் அப்படியே நின்றாள். ஏதோ அவளை நகர விடா மல் பிடித்துக் கொண்டது.

"அதில இருக்கலாம். நான் ஒண் டும் நினைக்க மாட்டன்" அவன் கண் களை மூடியபடியே சொன்னான்.

மெல்லிய சிரிப்புடன் அவள் அமர்ந்து கொண்டாள். கைக்கடி காரத்தில் நேரம் 5.50.

"சன்-ரைஸ் வோட்ச்லயா தெரி யிது?" அவன் மீண்டும் கேட்டான்.

"இல்ல." அவள் ஒரு வார்த்தையில் பதிலளித்து விட்டு தன் தலைக் கவசத்தை எடுத்துக் கொண்டாள்.

"சன்-ரைஸ் பாக்காமலே போக போறீங்களா?" அவன் முதல் முறையாக திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான். அவள் ஏதோ மாபெரும் தவறிழைக்கப் போவது போல அவனது பார்வை இருந்தது.

"சன்-ரைஸ் பாக்க நான் வரயில்ல. எனக்கு வேல இருக்கு, நான் போறன்." அவள் சற்று அழுத்தமாகக் கூறி விட்டு எழுந்து கொண்டாள்.

"உங்களோட ஃப்ளேர்ட் பண்றனெண்டு நினச்சிட்டீங்க போல..." அவன் மெல்லிய சிரிப்புடன் தலையை ஆட்டினான்.

"இல்ல"


"அப்பிடியெண்டா இருந்து பாத்திட்டு போங்க. டெய்லி வேலைக்கு போவீங்க. டெய்லி சூரியன் உதிக்கும். ஆனா டெய்லி இப்பிடி இருந்து பாக்கக் கிடைக்குமா?"

"உங்களுக்கு என்ன பிரச்சின? உங்கட வேலய மட்டும் பாருங்க" அவள் சற்று கடுமையாக கூறிவிட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்தாள். சூரிய கிரணங்கள் மெல்ல மெல்ல மேகங்களை விலக்கிக்கொண்டு வெளியில் தெரி யத்தொடங்கியது. அந்த ஒளிப் பிழம்பு உறங்கிக் கொண் டிருந்த நகரைத் தட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. அவள் சிரித்தாள்.

"தாங் யூ!" கூறிக்கொண்டே அவனைத் திரும்பிப் பார்த்தாள். "உண்ம தான். டெய்லி எல்லாம் நடக்குது. நாங்க தான் அதயெல்லாம் நிண்டு பாக்க நேரமில்லாம ஓடிக்கொண்டே இருக்கிறம்..." அவள் ஒரு பெருமூச்செறிந் தவாறு சொன்னாள். கடிகார முட்கள் அந்த வட்ட டயலை சரிபாதியாக பிரித்தன. நேரம் சரியாக ஆறு மணி.

"வெளிக்கிட வேணும் போல?" அவன் தன் பாதங் களைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தான்.

"ம்ம்... என்னப் பாத்துக் கொண்டு கொஞ்சப் பிள்ளைகள் இருப்பினம். ஏமாத்தக் கூடாது தானே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது தலைக் கவசத்தையும் எடுத்துக் கொண்டு அவள் எழுந்தாள்.

"ஓ.. அப்ப டீச்சர்.." அவன் பிரகாசமாக சிரித்தான். அவன் கண்களில் அப்போது பிறந்த சூரியனின் ஒளி பட்டுத் தெறித்தது. "சொல்லுறனெண்டு குற நினைக்க வேண் டாம்.. உங்கட கடம உணர்ச்சிக்கு ஒரு ஹட்ஸ் ஓஃவ், ஆனா பிள்ளைகள் நீங்க பிந்தி போனா உண்மையில சந்தோஷப் படுவினம்!" அவன் சிரித்துக்கொண்டே கூறிவிட்டு மீண் டும் குனிந்து கொண்டான்.

"இருக்கலாம்.." சிறிய மௌனத்தைத் தொடர்ந்து அவள் மீண்டும் பேசினாள். "எண்டாலும் ப்ரொவஷனல் எதிக்ஸ் எண்டு ஒண்டு இருக்கெல்லா... தொழில் தர் மம்..." அவள் மீண்டும் சிரித்தாள்.

"வடிவான சிரிப்பு.."

"ஃப்ளேர்ட் பண்ண மாட்டீங்க எண்டு நினச்சன்.." அவள் திரும்பவும் சிரித்தாள்.

"நான் ஃப்ளேர்ட் பண்ணயில்லயே... இப்ப இந்த சூரி யன், கடல், அங்க தூரமா வாற படகுகள், அந்த பறவை கள் எல்லாத்தையும் போல உங்கட சிரிப்பும் வடிவு."

"ஓ.. அப்ப நீங்க அது எல்லாத்திட்டயும் போய் நீ வடிவு எண்டு சொல்லுவீங்களா?" அவள் கேட்டுக் கொண்டே அவனைக் கூர்ந்து பார்த்தாள்.

"இல்ல..."

"அப்ப பின்ன?"

"உங்களிட்ட சொல்லலாம் போல இருந்திச்சு."

"நல்லா கதைக்கிறீங்க. நாவலாசிரியரோ?" அவள் மீண்டும் அமர்ந்து கொண்டாள்.

"இல்ல. மருத்துவர்"

"ஓ... அப்ப ஹொஸ்பிட்டல் போகாம இந்த ப்ரொம னேட்ல வந்து இருக்கிறீங்க?"

"நான் மனதுக்கு மருந்து குடுக்கிற மருத்துவர்." அவள் "அப்படியெண்டால்?"என்பது போல அவனைப் பார்த் தாள். "பொயட்" சொல்லிவிட்டு மெலிதாய்ச் சிரித்தான் அவன். அந்த சிரிப்பு அழகாக இருந்தது. மழை ஓய்ந்த பின் மரங்கள் தூறும் சாரல் போல.

"நான் சொன்னன்.. நல்லா கதைக்கிறீங்க. எனி-வே, மிஸ்டர் பொயட், இட்ஸ் எ ப்ளெஷர் டு மீட் யூ" அவள் மீண்டும் புன்னகைத்துவிட்டு எழுந்து கொண்டாள்.

"அப்ப அந்த பிள்ளைகள கவலப் படுத்தத்தான் போறீங்க!" அவன் சிரித்துக் கொண்டே கேட்டான்.

"கட்டாயம். சரியாச் சொன்னா, நான் போய் சேர எப்பி டியும் அஞ்சு பத்து நிமிஷம் பிந்தத்தான் போகுது. அவ் வளவு சந்தோஷம் காணும் அவேலுக்கு..." சொல்லிக் கொண்டே தலைக்கவசத்தையும் அணிந்து கொண்டாள்.

"வாசிக்கிற பழக்கம் இருக்கா?" அவன் கேட்டுக் கொண்டே கடலைப் பார்த்தான்.

"இருக்கு, ஆனா இப்ப எனக்கு ஸ்க்கூலுக்கு நேரமாச்சு, இன்னொரு சன்-ரைஸ்ல உங்கள காணக் கிடச்சா, அப்ப அதப் பற்றிக் கதைக்கலாம். பாய்..." சொல்லிவிட்டுத் தன் மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தாள்.

"அப்பிடியெண்டா 'சண்டே தினக்குரல்' ஏலுமெண் டால்... வாசியுங்க!" அவன் சற்று உரக்கக் கூறினான்.

அவள் தனது பெருவிரலை உயர்த்திக் காட்டிவிட்டு தனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டாள். அவளின் பக் கக் கண்ணாடியில் அந்த சூரிய உதயம் சிறுத்துக் கொண்டு போனது. அவளின் இதழோரமாய் ஒரு புன்னகை விரிந்து கொண்டே போனது.

***

அடுத்த திங்கட்கிழமை பாடசாலையில் வார இறுதிப் பத்திரிகைகள் வழக்கம் போல ஆசிரியர் ஓய்வு அறையில் வைக்கப்பட்டிருந்தன.

"அப்பிடியெண்டா 'சண்டே தினக்குரல்' ஏலுமெண் டால்.. வாசியுங்க!" சட்டென்று அந்தக் குரல் எதிரொலிக்க ஞாயிற்றுக்கிழமைக்கான பத்திரிகையில் கவிதைகளுக் கென்று ஒதுக்கப்பட்ட பக்கத்தை வேக வேகமாய்ப் புரட்டிப் பார்த்தாள்.

எது புதையல்?

ஆழ்கடல் இடுக்குகளும்
உயர் மலை முகடுகளும்
காதலித்துக் கலவி செய்து
பிரசவித்த உயிர்ப்புதையல்!
பொற்கதிர் வெய்யோனும்
வெண்ணிலாக் குமரியுமாய்
முத்தமிட்டுக் கண்சிமிட்ட
பளபளக்கும் உடுப்புதையல்!
மேகங்கள் கனம்கூடி
சிந்தும் மழைத்துளிகளெல்லாம்
ஒளியோடு தாம் தழுவி
வானவில் நிறப்புதையல்!
எதிலும் லயிக்கவில்லை,
தேடல் தொலையவில்லை.
அவள் ஒற்றைச்சிரிப்பினுள்
சிறகடித்த பரவசத்தால்
தெரிந்து கொண்டேன் தேடிச்செல்லும்
நானே ஓர் பெரும் புதையல்!

-பெயரிலி

*(பிற்குறிப்பு: புத்தகங்கள் பற்றிய உங்கள் புன்னகைக்காக காத்திருக்கிறேன், மீண்டுமொரு சூரிய பிரசவத்தில் சந்திப்போம்)*

***

அதன் பின் அந்தப் பாலத்தைக் கடக்கும் போதெல்லாம் அந்தப் பெயரிலி மனிதனைத் தேடினாள், எனினும் அவன் அவள் கண்களில் படவில்லை. "அந்தாளும் உன்னப் போல தான். இங்கதான் எங்கயோ இருக்கிறார்... ஆனா நான் டெய்லி காணுறதில்ல!" அவள் அந்தப் பாலத்தில் பரவும் ஒளிக் கிரணங்களிடம் இடைக்கிடை முறைப்பட்டுக் கொண்டாள். அவளும் காத்திருந்தாள். மற்றுமொரு சூரிய பிரசவத்திற்காய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் மதிப்பீடுகள்




## இனிப்புக் கதைகள்

| | |
|---|---|
| நூல்: | இனிப்புக் கதைகள் (அனுபவங்களும் சிறுபுனைவுகளும்) |
| ஆசிரியர்: | த. அஜந்தகுமார் |
| வெளியீடு: | ஜீவநதி<br>கலை அகம், அல்வாய் |
| பதிப்பு: | மார்கழி 2019 |
| விலை: | 200.00 |

ந. குகபரன்

கடந்துபோன நினைவுகள் உள்ளத்தில் உறைந்திருந்து அவ்வப்போது வெளிக்கிளம்பும். அவற்றின் உயிர்ப்பிலே வாழ்தலின் அர்த்தம் பின்னியிருக்கிறது எனலாம். நினைவுகளை மீட்டல் என்பது மனிதர்களுக்கு உள்ள பொதுவான ஒரு காரியம். மகிழ்வுறுதலும், துயர்கொள்ளலும், மீண்டெழுதலும் என நினைவுப்பாதைகள் பல்வேறான உணர்வுகளை விரித்துச்செல்லும் தன்மைகொண்டன. அவற்றில் தோய்ந்து திளைத்து அந்நினைவுகளைப் பதிவுசெய்யும் போது அவை கலைகளாகின்றன. அவ்வாறு கலையாகும் போது அதீத சக்திபெற்றுவிடுகின்றன. வரலாறாகி நிலைபெறுகின்றன. அவ்வாறான நினைவுகளின் பதிவுகளில் எழுத்து வடிவம் பிரதானமானது. அஜந்தகுமாரின் 'இனிப்புக்கதைகள்' நினைவுகளின் வழியே பயணிக்கின்றன. அவற்றின் ஊடாகப் பாடங்களை உரைக்கின்றன.

அஜந்தகுமார் கவிஞர், சிறுகதையாளர், சஞ்சிகையாசிரியர், இலக்கியஆய்வாளர், பேச்சாளர் எனப் பன்முகத் திறமைகளைக் கொண்டவர். இனிப்புக் கதைகள் இவரது அண்மைய பிரசவம். "நாளாந்த வாழ்பனுபவங்களை இலக்கிய சுவாரஷியத்தோடு பதிவாக்கும் அதேவேளை தோற்றப்பாடுகளுக்கான மெய்ம்மை காணும் முயற்சியில் இறங்கியுள்ளார்." என இந்நூலின் அறிமுகத்தில் இராஜேஸ் கண்ணன் குறிப்பிட்டுள்ளதைப்போல குறித்த ஒரு அனுபவம், அந்த அனுபவப்பொருளோடு தொடர்புறத்தக்க விடயங்கள் ஈற்றில் அந்த அனுபவங்களை அடியாகக் கொண்ட முன்வைப்பு என்ற வகையில் ஒவ்வொரு கதைப் பகுதியிலும் அ, ஆ, இ, ஈ என நான்கு பிரிவுகள் உள்ளன. பதினான்கு கதைப்பகுதிகளை உள்ளடக்கி இந்நூல் வெளிவந்துள்ளது.

கடந்து வந்த பாதையின் நினைவுக்குறிப்புகள் கதைகளாகி உள்ளன. சம்பவங்களை வாசகரின் மனதில் தொற்றவைக்கும் நேர்த்தி, எளிமையான முன்வைப்பு, உயிரோட்டமான மொழிநடை, யாழ்ப்பாண பேச்சுவழக்கு, சுவாரஷியத்தைத் தூண்டும் திருப்பங்கள் என ஜனரஞ்சக வாசிப்பிற்குரிய பிரதியாக இனிப்புக்கதைகள் உள்ளன.

கதைகளாக மட்டும் கடந்துபோகமுடியாதவாறு சிந்தனைக் கிளர்வைத் தருவனவாக, சமூக அக்கறையை அவாவியனவாக உரையாடும் பாங்கு கவனிப்பிற்குரியது. இக்கதைகள் துயருறுவோர்க்கு தோள்கொடுக்கின்றன. குடும்பத்தில் இருந்து துளிர்க்கும் அன்பு சமூகம் கடந்து விரிந்து செல்லும் பாங்கினை இக்கதைகளில் காணமுடியும். தந்தையின் நேயத்தை, மகனின் பாசத்தை, முதுமையின் உணர்வை, சிறுபருவக் குறும்புகளை, போர்தந்த காயங்களை, சுகமான சுமைகளை, சூழும் நெருக்கடிகளை, உணர்வுத்தூண்டல்களை, தொடரும் நம்பிக்கைகளை, பேணவேண்டியவற்றை, புரியவேண்டியவற்றை என பலவற்றையும் சம்பவங்களினூடாக விரித்துச்செல்லும் பாங்கு இனிப்புக்கதைகளின் தனித்துவமாகும்.

நூலின் தலைப்பு 'இனிப்புக் கதைகள்' என அமைந்திருந்தாலும் அவை உரையாடும் உணர்வுப்பரப்புகள் வித்தியாசமானவை. கதைகள் எல்லாவற்றிலும் நம்பிக்கையை அவாவிய குரல் தொடர்வதை இனங்காணமுடிகிறது.

சம்பவங்களின் நிறைவில் ஆசிரியர் முன்வைக்கும் கருத்துகள் கதைகளுக்கு புதிய பார்வையைத் தருகின்றன. "துப்பாக்கி ரவைகள் கொல்லப்படுபவர்களின் உடல்களையும் தாண்டி அவர்களை நம்பியிருப்பவர்களின் மகிழ்வைக் காலம் பூராகவும் சிதறடித்து விடுகின்றன" என போரின் நினைவுகளைக் குறித்துரைக்கும் அஜந்தகுமார் "பொருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று சொல்லி எம் வாழ்வைச் சீரழிப்போம். மகிழ்ச்சி." என இயந்திர உலகில் முதியவரைத் தனித்து விடும் சமூக மனநிலையைக் கண்டு அறச்சீற்றம் கொள்கிறார்.

"...ஜன்னல்களுக்கு
ஒரு காலத்தில் கால்கள் இருந்தன
சிறகுகள் இருந்தன
ஆசைகள் இருந்தன.."

என முதியவருக்காய் கவியுரைக்கிறார். நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது "உதட்டில் சிறுபுன்னகை பொருத்தியபடியே நகர்வோம். இடுக்கண் வருங்கால் நகுக. என்று வள்ளுவன் சும்மாவா சொல்லி இருப்பான்" என்று வள்ளுவனுடன் கைகோர்க்கிறார்.

இக்கதைகளில் தனித்துத் தெரியும் மற்றுமோர் அம்சம் ஆசிரியரின் பன்முக வாசிப்பனுபவம். சம்பவங்களைக் குறித்து விபரிக்குமிடத்து தான் நுகர்ந்த இலக்கியங்களோடு அவற்றைப் பொருத்தி உரைக்கும் இலாவகம் கூற வந்த விடயத்தை செறிவுடையதாக்குகிறது. வாசகர்களுக்கு புதிய பாதைகளைத் திறந்துவிடுகிறது.

எஸ்.பொ தனது அனுபவங்களை 'நனவிடைதோய்தல்' என்ற நூலில் முன்வைத்தார். அது இன்றுவரை ஒரு தனித்துவமான படைப்பாகத் திகழ்கிறது. இனிப்புக் கதைகளில் அஜந்தகுமாரும் ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டுள்ளார். அவர் எழுத்துலகில் மேலும் மெருகேறி புதிய பிரசவங்களைத் தருவார் என நம்பலாம். •

---

# துளி அல்லது துகள்




**சி. ரமேஷ்**

நூல்: துளி அல்லது துகள்
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: அலறி
வெளியீடு: Pages புத்தக இல்லம்
117, பட்டினப் பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 02
பதிப்பு: டிசெம்பர் 2020
விலை: 400.00

**க**விஞனின் மெய்யான செயலூக்கமாகக் கருதப்படும் கவிதை புறவயமானதும் அகவயமானதுமான இயக்கங்களின் மீது தன் தளத்தை அமைத்துக்கொள்கிறது. உணர்வின் வெளிப்பாட்டில் கட்டுண்டவையாகவும் ஒரு கலைப் படைப்பின் நிரந்தரமாகவும் கருதப்படும் கவிதை தூய மொழியியல் உறவினையும், மொழிசாராத யதார்த்தத்தின் உறவினையும் உட்கருத்தாய்க் கொண்டியங்குகின்றது. அர்த்தம் மற்றும் அர்த்ததன்மைக்கு அப்பாற்பட்ட அதீத சுயம் கொண்ட மொழியால் உருவாக்கப்படும் கவிதை பல்வேறு பொருண்மைகளைத் தனக்குள் உள்ளடக்கக்கூடியது. ஸர்ரியலிஸக் கருத்துப்படி கவிதை என்பது மனதின் நித்திய இயக்கம். அறிவை முரணிக்கும் சிந்தனைகளின் இடைவிடாத மடைதிறப்பாய் வெளிப்படும் கவிதையில் பயனையோ முடிவையோ எதிர்பார்க்கமுடியாது. மனதில் கட்டற்று பிரவாகிக்கும் கவிதையானது அவசியமான இடங்களில் மொழியில் காட்சி ரூபமாய் வெளிப்பாடு காண்கிறது. இயல்பெழுச்சியை மறுத்து திட்டமிட்டு உருவாக்கப்படும் திறன்கவிதை எனப்படும் கவிதையாக்கல் செயற்பாட்டால் எதனையும் சாதித்திட முடியாது. குறிப்பாக இதுவே ஈழத்துக் கவிதைச்சூழலில் தொடர்ச்சியான பொறிமுறையாக - வழிமுறையாக தொடரப்பட்ட சூழலில் அலறியின் 'துளி அல்லது துகள்' தொகுப்பு படிப்போர் மனதுக்கு நிறைவைத் தருகிறது.

வாழ்க்கைக்கான காலதரிசனத்தை தன் அனுபவங்களில் இருந்து பெறும் அலறி சொற்களை பொருள் பொதிந்த நிலையில் கட்டமைக்கிறார். அவரின் கவிதை எந்தளவுக்கு எளிமையானதோ அந்தளவுக்கு வீரியமானது. முன்னோக்கோ திட்டமிடலோ இன்றி தெளிவான நேரடுக்குகளில் கட்டுண்ட இவரின் கவிதைகள் சுயம்வழி இயங்குகின்றன. உணர்வின் பரிமாணங்களை வெளிப்படுத்தும் அகம்சார் கவிதைகளிலும் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளைக் காட்சிப்படுத்தும் புறநிலைக்கவிதைகளிலும் அலறியின் அனுபவம் சுயம்புவாகத் துலங்குகிறது. உறவின் இழையில் கட்டுண்ட தன்னுணர்வின் வெளிப்பாடே 'குளிர்ப் பறவை'. மனிதவுடல் இயற்கையின் படைப்பு. அது பஞ்ச பூதங்களின் கூட்டமைப்பு. மனிதவுடலின் வாய்ப்பகுதி நீர்நிலையாகவும், தேகம் நிலமாகவும், சுவாசம் காற்றாகவும், மனிதனின் நெற்றிப்பகுதி ஆகாயமாகவும், நெருப்பென்பது உடம்பின் உஷ்ணமாகவும் கூறப்படுகிறது. இதற்கும் மேலானது மனித மனம். உடலின் தலைமைப்பீடமான மனமானது, கோபம், காமம், அன்பு, விருப்பு, வெறுப்பு, பயம், கவலை என்னும் உணர்வுகளாலானது. சபலங்களாலான மனிதமனம் மலரினும் மெல்லியது. சஞ்சலமுடையது. மனித உணர்வுக்குட்பட்டது. இந்நிலையில் மனிதமனத்தின் அலைகளே உடம்பைச் செலுத்துகிறது. உடம்பையும் அதேசமயம் அறிவையும் மனமே ஆக்கிரமிக்கிறது. கடிவாளமற்ற உணர்வின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவாகத்தை அதன் இயல்பை நுண்ணுணர்வின் தளத்தில் இருந்து அலறியின் 'குளிர்ப் பறவை' மற்றும் 'பெருக்கு', **'முத்தம் - 04'** முதலான கவிதைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. சாதாரண மனிதனின் தவிர்க்கமுடியாத உணர்வுகளை அவனுக்குள் முடங்கிக் கிடக்கும் உடலிச்சையை அருவருப்பின்றி நாகரிகமாக இக்கவிதைகளில் வெளிப்படுத்துகிறார் அலறி.

*இறுகப் பின்னிய போர்வைக்குள்*
*இறகுகள் நீவிப் பறக்கின்றது*
*தகதகப்பு*
*தண்ணீரில் ஆடும் தண்டு*
*அலைகள் அடங்கும் இரவு*

*குலாவுகை*
*கும்மிருட்டு*
*குறுகுறுப்பு*
*கதவுகள் மெல்ல விரிய*
*வெட்கம் கூடி வெளியேறி விடுகிறது*
*உஷ்ணமாக*

யாரையும் கெடுக்காத, யாருக்கும் தீங்கிழைக்காத ஒரு ஆடவனின் உடல் சார்ந்த இயக்கமாகக் கருதப்படும் மனவிச்சைகளை இக்கவிதை மனச்சக்தியாக மாற்றுகிறது.

மனித வாழ்க்கையில் இருந்து வேறுபடுத்த முடியாத அரசியல், நடத்தை குறித்து கற்பதுடன், அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கும் உதவுகிறது. மனித குலம் ஒன்றுபட்டு வாழ்வதற்கும் தேவையான அரசியல் இன்று பேரவலத்துக்கு காரணமானதாகவும் உருமாறியுள்ளது. நேர்மையான மனிதன் அரசியற் சுழலுக்குள் அகப்படும்போது அவன் எதிர்கொள்ளும் விளைவுகள் ஆபத்தானவை. சாணக்கியத்தன்மை கொண்ட புலமைத்துவ வறுமையை அரசியல் களத்தில் தமிழ், முஸ்லிம் தரப்புக்கள் தொடர்ந்தும் சந்தித்தே வருகின்றன. குரோதங்களாலும் வஞ்சனைகளாலும் முன்விரோதங்களாலும் கட்டமைக்கப்பட்ட அரசியலை அலறியின் 'வேட்பாளன்' கவிதை எடுத்துரைக்கிறது.

*"நான் / பயணிக்கிறேன் / நீள்வழியில் / நோட்டமிடல்/ திட்டமிடல் / சாத்தியமில்லை / வழி / முட்களாலும் / கற்களாலும் / முகடுகளாலும் ஆனதுதான் /*
*கற்கொண்டு /கூரியசொற்கொண்டு / தாக்குகிறார்கள் / பூங்கொத்தோடும் புன்னகைக்கிறார்கள் /*
*எனினும் / விடியும் நம்பிக்கையோடு / வெல்லும் வேண்டுதலோடு / பயணிக்கிறேன்"*

அரசியலில் தான் எதிர்கொண்ட விளைவுகளை 'வாக்குத்தேடி' முதலான கவிதைகளிலும் அலறி சம்பாஷித்துச் செல்கிறார்.

தொன்மையான சங்க இலக்கியத்தின் திணைமரபின் கூறுகளை அலறியின் கவிதைகளில் காணலாம். திணை என்பது முதற்பொருள் என்ற நிலம், பொழுதுகள் கருப்பொருள்கள், உரிப்பொருள்கள் இணைந்த தன்மையையே குறிக்கிறது. பொழுது, பெரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். நிலம் என்பது மலை, காடு, கடல் போன்ற நிலவியலின் ஒரு பகுதியைக் குறிக்கும். கருப்பொருள் என்பது நிலத்துக்குரிய கடவுள், புள், விலங்கு, நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண் முதலானவற்றைக் கூறிநிற்கும். உரிப்பொருள் என்பது நிலத்துக்குரிய ஒழுக்கமாகும். சமூகவியல் நோக்கில் மையம்கொள்ளும் அலறியின் கவிதைகள் தமிழ் மரபின் இயற்கைசார்ந்த திணை ஒழுக்கங்களால் வரையறுக்கப்பட்டவை. அலறியின் பெரும்பாலான கவிதைகளில் கடலும் கடல் சார்ந்த நெய்தல் திணையின் சமூக வாழ்வும் வயலும் வயல் சார்ந்த மருதத்திணையின் மக்கள் வாழ்வும் மணலும் மணல் சார்ந்த பாலை நிலத்தின் இயற்கைப் பின்னணியும் காடும் காடு சார்ந்த முல்லைநிலத்தின் இன்றைய நிலையும் தன்சுய வாழ்வின் பின்னணியில் இணைத்துக் காட்சிப்படுத்தப்படுகிறது.

*இயந்திரப் படகுகள், நீள்கயிறு*
*கட்டுமரம்*
*நூற்றாண்டு காலம் வளைந்தும் இழுத்தும்*
*வலைக்குள் சிக்காத கடல்*

என நெய்தல் நிலம் விவரணமொழிக்கூடாக புலக்காட்சிகளாக விரிகிறது. இவருடைய 'பறவையைப் போல சிறகடிக்கும் கடல்' தொகுப்பில் இடம்பெறும் பெரும்பாலான கவிதைகள் நெய்தல் நிலப்பின்னணியில் எழுதப்பட்டதாகும்.

*"ஒட்டகைகள், நெடுவழிப்போக்கர் / தீக்காற்று, /ஓயாமல் பயணித்தும் / திசையெங்கும் விரியும் பாலை"*

என பாலை நிலத்தை காட்சிப்படுத்திய அலறி வெட்டரிவாள்களால் அரிந்தும் எரிந்தும் சாம்பலாகிப்போகும் இன்றைய காட்டின் நிலைகளை எடுத்துரைக்கிறார்.

கவிதைகள் பலவற்றில் வார்த்தைக்கலையை நிஜவுலகைச் சித்திரிக்கும் பிரதிபலிப்பானாக மாற்றுகிறார் அலறி. மனிதன் தன் வாழ்வில் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களை அனுபவிக்கும் வேதனைகளை மருதநிலக் கருப்பொருட்களுக்கூடாக எடுத்துரைக்கும் கவிதையே 'மருவும் மருதம்'. வாழ்வின் ஆதாரங்களைத் தேடும் நிலம் நோக்கிய இப்பயணத்தில் இக்கவிதை நம் முன்னோர்களின் பண்பாட்டு வேர்களைக் கண்டடைகிறது. தீவிர பிரக்ஞையுடன் யதார்த்த வாழ்வை வெளிப்படுத்தி நிற்கும் இக்கவிதையில் இடம்பெறும் பேச்சுமொழிச் சொற்கள் கவிதையை உணர்வும் உயிர்ப்புமுடையதாய் மாற்றுகிறது.

*"கேட்டிக் கம்பு இழுவையில் / தோலுரிக்கின்றன / சாம்பலும் செவலையும்*
*ஓட்டிச் செல்கிறான் ஒய்யாரமாக / ஏற்றிச் செல்லும்/ வைக்கோல் கற்றைகளில் நிரம்பியிருந்தன / வயல் / வயிறு / வாழ்வு*
*இந்தப் போகம் முடிந்தது / அமோக விளைச்சல் என்றில்லை / பத்து பன்னிரண்டு அவணம்...*
*வண்டிக் கீழசையும் லாந்தர் ஒளிபோல / பிரகாசமாய் / மங்களாய் / பொட்டாய் / மருதமும் வசந்தமும் தூர்ந்து போகின்றன"*

யதார்த்த வாழ்வில் ஏழை விவசாயி எதிர்கொள்ளும் சங்கடங்களும் மனித நெருக்கீடும் மனித வாழ்வோடு டொட்டி படைப்பில் சங்கமாகின்றன. வாழ்க்கைக்கு நெல் கைகொடுக்கப்போவதில்லை. வயலில் நிறைந்திருக்கும் வைக்கோல் தான் வாழ்க்கைக்கு கைகொடுக்கப் போகிறது என்பதை "ஏற்றிச் செல்லும் வைக்கோல் கற்றைகளில் நிரம்பியிருந்தன / வயல் / வயிறு / வாழ்வு" என்னும் கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையடி சுட்டிநிற்கிறது. கிழக்கு மாகாணத்தில் கேட்டிக் கம்பு என்று அழைக்கப்படும் மாடுகளுக்கு அடிக்கும் தடி இயல்பாய் கவிதையில் கையாளப்படுகிறது.

வாழ்வின் அனுபவச் சூட்டில் மையங்கொள்ளும் அலறியின் கவிதைகள் வாழ்வின் இன்ப துன்பங்களைச் சித்திரிக்கின்றது. மனிதவாழ்வை அர்த்தப்படுத்திக்கொள் கிறது. இன்றைய வாழ்வின் நெருக்கடிகளை அதனால் எழும் வாழ்க்கைச் சிக்கல்களை அலறியின் கவிதைகள் பேசவிளையும்போது அவை காலப்பதிவுகளாகவும் அனுபவ பிரதிபலிப்பானாகவும் தோற்றங்கொள்ளுகின் றன. புதுவூற்று வெள்ளம்போல் நுங்கும் நுரையுமாய் வெளிவரும் அலறியின் கவிதைகள் கலைப்படைப்பாய் இருந்து யதார்த்த வாழ்வைப் பேசுகின்றன. 'கொரோனா / நூற்றாண்டுத் துயர் / புத்தன்' கவிதை இன்றைய இலங்கை யில் முஸ்லிம் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினையை துல்லியமாய் வெளிப்படுத்தி நிற்கிறது.

"வௌவால் / பாம்பு, பன்றி இறைச்சி / கரப்பான் பூச்சி புசிக்காத பூமி / செல்ல விளைகிறேன்... /

அகல்விளக்கு, அறியாமை / மடமை, முகக்கவசம் / ஊரடங்கு, தனிமை / அற்ற கண்டம் / காண விரும்புகின்றேன் /

எரிப்பு, புதைப்பு வாதங்கள் / ஆறடிநிலம், அகிம்சை / புத்தன் போதனைகள் / அர்த்தம் புரியாத மண் / அகன்றிடத் துடிக்கிறேன் /

நடுக்கடல், நூற்றாண்டுத்துயர் / பிணவாடை / கொரோனா வைரஸ் கோடிக்கணக்கில் / குடிகொண்ட தீவு/ எனினும் குதூகலித்துச் செல்கிறேன்"

முஸ்லிமாகப் பிறந்த ஒரு தனிமகன் அரசினால் நிந்திக் கப்படுகிறான். தீர்வின்றி, இலங்கையில் அரசினால் புதிய புதிய பிரச்சினைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. நாட்டில் முஸ்லிம்கள் மீது வன்முறைகள் மீண்டும் மீண்டும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சூழலில் மனித உயிரைக் கொல்லும் கொரோனா தேசம் இந்நாட்டை விட சிறந்தது என கவிஞன் கருதுகிறான். அந்தளவுக்கு அவன் அனுபவிக் கும் பாடுகளை இக்கவிதை வெட்டவெளிச்சமாய் உலகுக்கு எடுத்துக்காட்டுகிறது.

நவீன கவிதையில் அலறி சித்திரிக்கும் அரசியல் மக்க ளின் பெயரால் நாட்டில் நடமாடும் நாகரிகக் கோமாளி களின் முகமூடிகளைக் கிழித்தெறிகின்றன. வன்முறைக ளால் கட்டமைக்கப்படும் ஈழத்தரசியலின் இன்றையநிலை, சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்பினை வழங்க வில்லை. சீனாவின் நிதியுதவியின் கீழ் இலங்கையில் முன் னெடுக்கப்படுகின்ற செயல்முறைகள் இலங்கையின் இறை மைக்கு அச்சுறுத்தலாகவும் அபிவிருத்தி நடவடிக்கை ளுக்கு ஆபத்தானதாகவும் அமையும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்ற நிலையில் அலறியின் 'சீனத்துப் பெண் / வல்லாதிக்கம்' கவிதை இதனை நன்கு உணர்த்தி நிற்கிறது.

"சிவப்பில் நட்சத்திரங்கள் மின்னும் / பட்டாடை விரித்துப் பாடிக்கொண்டிருக்கிறாள் / சீனத்துப்பெண் அவள் பாடலில் / தாழ்பூ வாசம் / பாம்பின் படம்

வூஹான் சந்தையில் / முகக்கவசம் அணிந்தபடி பலர் பாடலை / அருந்துகின்றனர் / ஷாங்காய்த் தெருக்களை பாடல் நனைக்கிறது / சதுக்கத்தில் / தீபெத்தின் பீட பூமிகளில் / மடலாயங்களில் துயரென படிகிறது பாடல்/

தீவின் /கரை கடலை நோக்கிப் பாய்கிறது / கடல் கரையை நோக்கி மடிகிறது / துறைமுகத்தில் / நங்கூரமிடுகின்றன

போர்க்கப்பல்கள் / அசைகின்றன நாவாய்கள்

நோய் நொதிக்கும் காலமும் / எல்லைச் சுவர்களை துளைத்து / பெருக்கெடுக்கும் அவள் பாடலுக்கு / சிவப்பு / மஞ்சள்/ வல்லாதிக்கம் / உட்பட ஏழுநிறங்கள்"

இனங்களுக்கிடையில் ஒருமைப்பாடு காணும் அலறி யின் கவிதைகள் மற்றவர்களுக்காய் படும் துயராய் விரிகி றது. உயிர்த்த ஞாயிறு அன்று தேவாலயங்களை இலக்காக வைத்து முஸ்லிம் கடும் போக்காளர்களால் மேற்கொள் ளப்பட்ட தொடர்தாக்குதலை 'ஈஸ்டர்/ 2019.04.21 / கல்லெறி' என்ற கவிதை வன்மமாக கண்டிக்கிறது. மானிட நேசிப்புமிக்க மனிதாபிமானத்தின் நித்திய மானுட உணர்ச் சியின் தூண்டலே இக்கவிதை

ஆராதனையும், பிரார்த்தனைகளும் முடிவுறாமலே / மெழுகுவர்த்திகள் அணைந்து போயின / அந்தரித்து உயிர்கள் பல அடங் கிப் போயின

அந்தோனியார் தேவாலயம் / செபஸ்தியன் தேவாலயம், / சீயோன் தேவாலயம் / பேரதிர்ச்சியில் உறைந்த தேவாலயங்களின் / மாடங்கள் / சிலுவைகள் / மணிப்புறாக்கள் / நொருங்கிச் சிதறி மௌனித்தன...

சலனமற்ற தாமரைக்குளத்தில் நிகழ்ந்த / தவளைப் பாய்ச்சல் / பசுமைபோர்த்திய வயல்வெளியில் கிளர்ந்த / அறக் கொட்டிகளின் தாக்கம் / இனிமை சிந்திய தேன் கூட்டில் விழுந்த / கல்லெறி.../

இவ் ஓராண்டு இடைவெளியில் இனங்களுக்கிடையில் / நாலாயிரம் வன்மம் / நாற்பதடிச்சுவர்

தருக்க அறிவுக்குட்படாத புறநிலையில் பெறப்படும் அனுபவங்களின் அனுபூதியை உணர்வுத் தளத்தில் வார்த் தைகளாக்கும்போது அது செறிவடர்த்திமிக்க கவிதையாகக் கட்டமைகிறது. பன்பொருண்மையில் புனையப்படும் கவிதைகள் ஒற்றைத் தன்மையுள்ள பிரதிமையைத் தருவ தில்லை. காலமும் வெளியும் வளைகோடாய் நிற்கும் கருத்து துளையே அலறியின் கவிதைகள். அலறியின் பெரும்பா லான கவிதைகள் முடிவுக்கும் முடிவின்மைக்குமிடையில் தன்னுள் சுருங்கிக் கொள்கிறது. அக்கவிதைகள் வார்த் தைகளின் புரிதலுக்கேற்ப வடிவங்கொள்கிறது. அதன் பருவெளி பன்முகத்தன்மை கொண்டது. 'அந்தப்புரப் பறவை / 'நித்தியப் பறவை', 'வல்லபம்', 'மூங்கில் குருதி' முதலான பல கவிதைகள் இத்தளத்தில் இயங்குகின்றன. இக்கவிதைகள் சுயம்சார் முடிவை முடிவிலியை நோக்கி நகர்த்தும் தன்மை கொண்டவை. காலத்தின் தன்மைக் கேற்ப மாற்றுருக்களாய் மாறும் வல்லபம் கொண்டவை.

"பன்னிரெண்டு குதிரைகளின் முதுகில் / தாவிச் செல்கிறது சூரியன் / கூர்வாளின் மினுக்கம் / போர்க் கவசத்தின் பளபளப்பு ...

நிலத்தின் ஆட்சி / நீரின் சுழற்றி / பெருங் காட்டையே சுருட்டிப் போடும் / வல்லபம்

அக்னி பிரவாகம், வியாபகம் / அத்தனையும் / கருக்கலில் அரைக்குருட்டோடும், வேக்காட்டோடும் / அடங்கிப் போகும் பொட்டுப் பூச்சியென

இலங்கையின் அதிகார அரசியலின் பன்முகத்தன்மையை எடுத்துரைக்கும் இக்கவிதை ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் இன்றைய அரசாட்சியையும் அதன் சர்வவல்லமை கொண்ட இறைமையையும் நுண்ணிய படிமங்களுக் கூடாக வெளிப்படுத்தி நிற்கிறது.

இறப்பு என்பது கட்டுக்கதை. உயிர். ஓரிடத்தில் மற் றொரு இடத்துக்கு நகர்ந்து கொண்டிருப்பதே மெய்ம்மை யானது. அதாவது உயிர் ஒரு பரிமாணத்திலிருந்து இன் னொரு பரிமாணத்திற்கும், இன்னொரு பரிமாணத் திலிருந்து மற்றோர் பரிமாணத்திற்கும் நகர்ந்து கொண்டி ருக்கிறது. உடலால் வாழ்க்கையைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லையாயின் அதனை மரணம் என்கி றோம். அதாவது தூல பொருட்தன்மையால் கட்டுண்டவு டலால் -விழிப்புணர்வால் உய்த்தறியக்கூடிய மனோநி லையை அறியமுடியாத நிலையை மரணம் எனக் கூறுவர். எனவே இதனை உணர்ந்தவனுக்கு மரணம் குறித்த அச்ச மில்லை. சுடுகாடு அவன் மனத்தினில் எச்சலனத்தையும் உருவாக்குவதில்லை. வாழ்வின் இயல்பானநிலையை மகிழ்ச்சியான தருணத்தை சுடுகாட்டில் எதிர்கொள்ளும் மனிதமனம் தன்னலமற்றது. மனிதவாழ்வின் இயல்பை அறிந்தது. இத்தன்மை கோடியில் ஒருவனுக்கே அமையும். அது அலறிக்கு வாய்க்கப்பெற்றுள்ளது.

*மயானத்தைக் கடந்து செல்கிறேன்*
*மாசிப்பனியில் நனைவதுபோல*
*பொற்சுரங்கத்துள் புகுவது போல*
*நீர்ப்பறவையின் நிழலைப் போல*
*வாவிக்கரை போல*
*இன்னும்*
*மரணத்தை நெருங்கிச் செல்வது போல*

அலறியின் ‘செல்கிறேன்’ கவிதை மரணம் குறித்து அறிந்தவன் தெளிந்தவனின் மனோயியல்பின் வெளிப் பாடு.

யதார்த்த சித்திரிப்புகள், கிராமிய வாழ்வுக்கான ஏக்கம், இழந்து போன காலத்துயர், கபடமற்று சலமின்றி பாயும் உணர்வின் பிரவாகம் என எழும் அலறியின் கவிதைகள் இயற்கையைப் பருப்பொருளாகவும் நுண்பொருளாகவும் கொண்டு இயங்குபவை. அலறியின் கவிதைகளில் இயற்கை அழகியலை வெளிப்படுத்தும் புறப்பொருள் மாத்திர மன்று அது மனித வாழ்வாதாரங்களின் ஜீவசக்தியாகவும் மனித வாழ்க்கையுடன் இணைந்து பயணிக்கும் ஆதார ஊற்றாகவும் அமைகிறது. அரசியல், சமூகப்பிரக்ஞையும் தனிமனித அவசமும் கொண்ட அலறியின் கவிதைகள் மனதின் அடியாழத்தில் இருக்கும் நனவு மனதின் காலப் பெட்டகமாகத் துலங்குகின்றன. அகவயமான வாசிப்பைக் கோரி புலனனுபவத்தால் சிந்தனைத் தளத்தில் சீரிய தாக்கத்தை நிகழ்த்தும் இக்கவிதைகள் பன்முக வாசிப்பைக் கோரிநிற்கின்றன. •

---

# கொரோனா வீட்டுக் கதைகள்




**இயல்வாணன்**

| | |
|---|---|
| நூல்: | கொரோனா வீட்டுக் கதைகள் (சிறுகதைத் தொகுப்பு) |
| ஆசிரியர்: | மனோ சின்னத்துரை |
| வெளியீடு: | கருப்பு பிரதிகள் பி55, பப்பு மஸ்தான் தர்கா, லாயிட்ஸ் சாலை, சென்னை 600 005 |
| பதிப்பு: | டிசெம்பர் 2020 |
| விலை: | 150.00 (இந்திய ரூபா) |

**உ**லகம் முழுமையும் முடங்கிய கொரோனா நெருக்கடிக் காலம் பலவித அனுபவங்களையும் தந்திருக்கிறது. வலி கள், வேதனைகள், இழப்புக்கள், மனப்பிறழ்வுகள் என்று தனி மனிதர்களும், குடும்பங்களும் இந்த நெருக்கடிக்குள் சிக்கித் தவித்து வரும் வாழ்க்கை எளிதானதல்ல. மிகுந்த சவால் நிறைந்தது. இந்தக் காலம் பல படைப்பாளிகளை உசுப்பி விட்டிருக்கிறது. விளைவாக கவிதைகள், கதைகள் பலவும் நமக்குக் கிடைத்து வருகின்றன.

மனோ சின்னத்துரை ஒரு இலக்கியச் செயற்பாட்டா ளராகவே அதிகம் அறியப்பட்டவர். ஓசை இலக்கிய இதழ், ‘அம்மா’ சிறுகதை இதழ் மூலம் பல படைப்பாளிகளைக் களம் காண வைத்தவர். ஏற்கெனவே, கதைகளை எழுதி யுள்ள போதிலும், உள்ளிருப்புக் காலத்தில் பிரசவித்த பல கதைகளுடன் ‘கொரோனா வீட்டுக் கதைகள்’ என்ற இந்தத் தொகுப்பு நூலைத் தந்து தன்னை ஒரு படைப்பாளியாக நிலைநிறுத்துகிறார் எனலாம்.

24 கதைகள் கொண்ட தொகுதியில் பெரும்பாலான கதைகள் கொரோனா உள்ளிருப்புக் காலத்தையொட்டிய பதிவுகளாக உள்ளன. தெய்வம், பதுமை, கொரோனா வீடு, ஒன்றுமேயில்லை சின்னக் காயந்தான், ஒரு கிலோ மிள காய்த்தூள், உயிர்வதை நாட்குறிப்பு என்று வெவ்வேறு களங்கள், வேறுபட்ட உணர்வுத் தளங்களில் விரியும் சிறு கதைகள் கொரோனா உள்ளிருப்பின் பல்வேறு அனுபவங் களை எம்முள் தொற்ற வைக்கின்றன.

‘தெய்வம்’ சிறுகதை கொரோனா பாதித்த சதீஸை அவரது நண்பர்கள், வீட்டு உரிமையாளர் எல்லோருமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிட்டு விலகி நிற்கையில் ஒரு வாடகைக்கார் சாரதி தெய்வம் போல் உதவியதை விபரிக்கிறது. தொற்றுக்குள் ளான நிலையில் சதீஸ் வீட்டில் தனிமைப்படுத்தப்படு கிறான். அந்த வேளை இடியப்பமும் சொதியும் சாப்பிட ஆவல்படுகிறான். தனக்கு அதனைத் தயாரித்து, நடுவழி யில் வைத்து விடுமாறும், தான் வந்து எடுப்பதாகவும் வீட்டு உரிமையாளரிடம் கேட்கிறான். அவரோ பிள்ளை களும் இருக்கின்றனர். தானும் வருத்தக்காரன் எனக் கூறி மறுக்கிறார். இந்த இடத்தில் ‘நான் விளங்கிக் கொள்ளுறன் அங்கிள்’ என்று சதீஸ் சொல்வது மனதை நெருடுவதாக உள்ளது.

‘பதுமை’ என்ற கதை உள்ளிருப்புக் காலத்தில் வெளியே ஜொக்கிங் செய்யப் போன மகளைக் காணாது பரிதவிக்கும் குடும்பத்தாரதும், மகளதும் எண்ணவோட்டத்தைச் சொல் கிறது. கொரோனா உள்ளிருப்பின் விளைவான உளநெருக் கடிகளையும், மனப்பிறழ்வு ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தையும் கணவன் மனைவி உறவு சார்ந்து பேசுகிறது ‘ஒன்றுமே யில்லை சின்னக் காயந்தான்’ சிறுகதை.

கொரோனாவால் உலகமே முடங்கிப் போயிருக்கும் சூழலில் வேலை கிடைப்பது கடினமாயிருக்கிறது. இந்த நிலையில் வேலைக்குப் போனால்தான் வாழ்க்கையை நடத்தலாம் என்ற நிலையில், கொரொனா அறிகுறிகளைத் தெரிந்தும் வேலைக்குச் செல்லத் தயாராகும் ஒரு இளந்தா யின் கதைதான் ‘கொரோனா வீடு’. தமக்குத் தொற்று ஏற்பட்டால் நோயாளியான பெற்றோர் பாதிக்கப்படுவர் என்ற நிலையில், தனது ஒரே பிள்ளையைக் கூடத் தூக்காது பெற்றோரின் கவனிப்பில் விட்டு விட்டு வீட்டுக்குள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளும் அவளது மனக் குமைச்சலை இக்கதை வெளிப்படுத்துகிறது.

கொரோனா நெருக்கடிகள் காரணமாக உணவுப் பொருட் களை ஓடர் செய்து வீட்டிற்குப் பெற்றுக் கொள்ளும் சம்ப வமொன்றைச் சுவாரஷியமாக வெளிப்படுத்துவதாக ஒரு கிலோ மிளகாய்த்தூள் கதை உள்ளது. கொரோனா அச் சத்தை விதைத்த ஆரம்பச் சூழலையும், அதிலிருந்து விடுபட்டு கொரோனாவுடன் வாழப் பழகும் சூழலையும் ஒப்பிட்டுக் காட்டும் ஒரு பதிவாக உயிர்வதை நாட்குறிப்பு கதை அமைகிறது.

தனியே கொரோனா நெருக்கடிகளை மட்டுமல்ல பிரான்ஸின் வாழ்க்கை அனுபவங்கள், பால்ய கால நினை வுக் கிளர்த்தல்களை வெளிப்படுத்தும் கதைகளும் இத் தொகுதியில் உள்ளன. மேற்குக் கலாசாரத்தில் முதிய பெற் றோருக்கும், பிள்ளைகளுக்கும் இடையிலான ஊடாட் டத்தை பிரான்ஸிய நிலையில் இருந்தும், புலம்பெயர்ந்த தமிழரது நிலையில் இருந்தும் முறையே ‘எலோதி’க் கிழவி, அம்மாவின் வானொலிப் பெட்டி ஆகிய கதைகள் சொல் கின்றன.

புலம் பெயர்ந்த சூழலில் பொருளாதார நெருக்கடியின் விளைவான உளநெருக்கடியை ஆண் பெண் ஆகிய இரு நிலையில் நின்று பேசுகிறது நல்லதங்காள் கதை. பொரு ளாதார நெருக்கடியின் இன்னொரு பருக்கை இலங்கை வேந்தன் என்ற கடித வடிவிலான கதை. அதே சூழலின் தலைமுறை இடைவெளியை அப்பாவும் BMWவும் கதை பேசுகிறது. புலம்பெயர் சூழலில் உழைத்துக் களைத்த மனிதர்களின் மனநெருக்கடிகளைப் பேசுகிறது வாழ்வை வெல்வதே வாழ்க்கை சிறுகதை.

2050ஆம் ஆண்டு வன்னி எயார்லைன்ஸ் விமானத்தில் வந்து இரணைமடு விமான நிலையத்தில் இறங்கிய சிவமாறன் ஐயாவின் வழியாக அப்போதய சூழலை நம்முன் காட்டும் கதையாக ‘விதைநிலம்’ சிறுகதை எழுதப்பட் டுள்ளது.

பார்வதி, மயில், தழும்பு என்பன சொந்த மண்ணின் கழிவிரக்கமாக விரியும் கதைகள்.

இவ்வாறே ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு தளத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சமூக மனிதர்களை, அவர் களது பாடுகளை, பொருளாதாரத்துக்காக ஆலாய்ப் பறந்து படும் அவஸ்தைகளை புறநிலை விமர்சனமாக அல்லாமல் பாத்திரங்களை இயங்கச் செய்வதனூடாகவும், பாத்திரங் கள் பேசுவதனூடாகவும் எம்முள் தொற்ற வைக்கின்றன இக்கதைகள். இந்தக் கதைகள் வாசகர்களுக்குப் புதிய அனு பவங்களையும், உணர்வுத் தொற்றலையும் ஏற்படுத்தும் எனலாம். •

## நூல் மதிப்பீடுகள்

‘நூல் மதிப்பீடுகள்’ பகுதியில் தங்கள் நூல்களும், சஞ்சிகைகளும் தொடர்பான மதிப்பீடுகள் இடம் பெறுவதை விரும்பும் வெளியீட்டாளர்கள் தமது படைப்புகளின் இரண்டு பிரதிகளை அனுப்பிவைக்கவும்.

மூன்று வருடங்களுக்குள் வெளிவந்த நூல்கள் மதிப்பீட்டுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

‘வரப்பெற்றோம்’ பகுதியில் சிறிய அறிமுகக் குறிப்பிற்கு ஒரு பிரதி மட்டும் அனுப்பலாம்.

ஏற்கெனவே மதிப்பீட்டிற்காகவும் அறிமுகக் குறிப்புகளுக்காகவும் கிடைக்கப்பெற்ற நூல்கள் தொடர்பான மதிப்பீடுகளும் அறிமுகக் குறிப்புகளும் அடுத்தடுத்த இதழ்களில் வெளிவரும்.

## வரவு

**நீங்களும் எழுதலாம்**

(கவிதையிதழ் தொகுப்பு - 01)

திருகோணமலையில் இருந்து வெளிவரும் ‘நீங்களும் எழுத லாம்’ கவிதை இதழின் முதல் 12 இதழ்களும் அதன் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கத்தால் முழுமையாகத் தொகுக்கப்பட்டு நூல் வடிவில் வெளிவந்துள்ளது.

விலை: 900.00






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீரூறிய சொற்கள்

**இராகவன்**

| | |
|---|---|
| நூல்: | நீரூறிய சொற்கள் ( கவிதைத் தொகுப்பு ) |
| ஆசிரியர்: | ந. குகபரன் |
| வெளியீடு: | புலரி, சித்தன்கேணி |
| பதிப்பு: | மார்கழி 2020 |
| விலை: | 250.00 |

**வா**ர்த்தைகள் விளக்காகி ஒளிர்கின்றன. வார்த்தைகள் சகதியாகிப் புதைகின்றன. வார்த்தைகளின் அடுக்குகளில் எரிமலைகள் வெடிக்கின்றன. வார்த்தைகளின் சிறகுகளில் காலங்கள் கனிகின்றன. கண்களிலும் நினைவுகளிலும் நீள்கின்றன. மௌனமாய் மெல்லக் கரைகின்றன. வார்த்தைகளால் வளர்ந்து வார்த்தைகளால் குலைந்து வார்த்தைகளால் உயிர்த்து வாழ்க்கையை ஆள்கின்றன வார்த்தைகள். இந்த வார்த்தைகள் கேள்விகளை நிறைத்து இடமெங்கும் அறைகின்றன. மோதி மோதி எழும் வண்டுகளாகின்றன. ஓயாது குடைந்து பிழிந்து மயக்குகின்றன. கிடந்து கிடந்து உருவேறுகின்றன. அவிழாத முடிச்சாகி இறுகுகின்றன. கரைகின்றன. கனிகின்றன. காலத்தை வரைந்து சிரிக்கின்றன. கடந்து போன பருவங்களை ஒளித்து வைத்திருக்கின்றன. தோயும் பொழுதில் அள்ளியணைத்து அகங்காட்டுகின்றன. முகங்களைப் பற்றி உணர்வுகளின் ரேகைகளில் வழுக்கிச் செல்ல செல்ல ஒன்றாய் நூறாய் நினைவுகளைச் சுமந்து வருகின்றன. பின்னர் இத்தனையையும் பூட்டி வைத்துவிட்டு மௌனமாய் நினைவுகளைத் திறக்கும் சாவியாய் சிலிர்த்து, உடைந்து, மகிழ்ந்து உணர்வழிய ஆயிரமாய் நிழற்படங்களை இறைத்து விடுகின்றன. நீரூறிய சொற்களால் நிறைந்திருக்கிறது அகம். பற்றைகளால் மூடுண்டு கிடக்கிறது சிதறுண்ட பெருங்கனவு. அழுது தீராக் கண்ணீரால் நிறைந்தோடும் காலப் பெருநதியில் கரைந்து போயின ஆழப் பதிந்த சுவடுகள். எழுதப்படாத வார்த்தைகள் நிரம்பிய காவியத்தில் ஆழ்கிற மௌனம் சூறையாகி அறைகிறது. மன இடுக்குகளெங்கும் நெய்வற்றி எரிந்தழிந்த திரிகள் சுடர்கின்றன. அதிகாரத்தின் பற்களுக்குள் சிக்கி வலியைத் தாங்க முடியாது துடிக்கும் குறிசுட்ட மாட்டின் புண்ணில் வயிற்றை நிரப்புகின்றன ஈக்கள். புண்கள் வலியையும் வடுக்களையும் தருகின்றன. வடுக்கள் அதிகாரத்தின் பற்களாகின்றன. கூனிக் குறுக வைத்துப் பேசமுடியாத வார்த்தைகளைப் பரிசளிக்கின்றன. புண்களே மார்க்கம். புண்களே வியாபாரம் என்றாகிப் போன உலகில் புண்களையும் வடுக்களையும் பேணிக் கொள்கிறது அதிகாரம். கடலைச் சுற்றி நிலமும் நிலத்தைச் சூழக் கடலும் கோலங்களாய். தாகத்தோடு நகர்ந்து கொண்டேயிருக்கும் கோடுகள். வட்டத்திற்குள்ளும் சதுரத்திற்குள்ளும் அதிகாரத்தின் முகத்தைக் காட்டியபடி. கடைசியில் மினரல் போத்தல்களில் கடலையும் அடக்கிய பின் எஞ்சும் கானல் கோலம். சிரிக்கும் வானம்.

ஊஞ்சலைத் தாங்கிய கூரை மரத்தில் ஆழப்பதிந்திருந்தன மகிழ்ச்சியின் தழும்புகள். கப்பல்கள் புறப்பட்டுப் போன நடு முற்றம். சாணம் மெழுகிய ஓரறை. தலைமுறைகளை வளர்த்த கம்பீரத்தால் மிடுக்கேறியிருந்த சுவர்கள். எப்பொழுதும் தன்னைத் திறந்து வைத்திருந்த வீடு. மரணத்தின் கணத்தில் தூசியால் மூடிக்கொண்டது. எங்கிருந்தோ வந்து வாழ்ந்து பிரியும் மனிதர்களாகப் பயணமாகின்றன உடையுண்ட வீட்டின் கற்கள் மரங்கள் அத்திவார மண். எல்லா இடங்களிலும் சிதறிக் கிடக்கின்றன நூற்றாண்டு கால நினைவுகள். அந்தச் சுழியை இப்போது எழுத முடியுமெனத் தோன்றவில்லை. பாம்பு போல மேலெழுந்து படமெடுத்தாடும் சுழி. பழைய புத்தகங்களில் பத்திரமாய் இருக்கிறது. மற்றவற்றைப் போலன்றி மிடுக்காக நின்ற காரணத்தாலோ என்னவோ இன்றில்லை. பதிலாகக் கீழே சுழிக்க வைத்தார். சுழிக்கச் சுழிக்கச் சங்கிலியாய் அதே நினைவுகள் தொடர்ந்து நீள்கின்றன. நோகாமல் நீர் வார்க்கும் மேகம் துளிகளாய். நனைகிறது மனம். கனிகிறது நிலம். நிறைகிறது வயல். பிழிந்துலர விட்ட ஆடையிலிருந்தும் தலையுதறும் மரங்களிலிருந்தும் துளிகள். தனது துளி தேடிக் கரை வருகிறது கடல். துளிகளால் துளிர்க்கிறது உயிர். மறுபுறமோ வற்றிக் கொண்டிருக்கும் குட்டையில் எஞ்சிய மீன்களுக்காகக் கண்களைத் தீட்டியபடி கொக்குகள். கொக்குகளையும் சேர்த்துச் சுவைக்க அலைந்தபடி நாய்கள். இன்னும் உயிர்பிடித்து பெருமழைக்காக ஏங்கிக் கிடக்கின்றன மீன்கள். எங்கள் மௌனத்தை முதலாக்கும் அத்தனை நாடகங்களும் இடையூறின்றி அரங்கேறுகின்றன. ஒவ்வொன்றுக்குமான ஆக்கிரமிப்புக் காலம் வந்து போகிறது. இது பப்பாளிகளின் காலம். சந்தைகளை ஆக்கிரமித்தலில் மகிழ்ச்சி பப்பாளிக்கு. நெடிய பப்பாளி மட்டுமிருந்த காலம் போய் கட்டைப் பப்பாளி கிளைப் பப்பாளி ஒட்டுப் பப்பாளி என வகை வகையாய்ப் பப்பாளிகள் குண்டாயும் நீளமாயும் குவிகின்றன. பப்பாளிப் பழங்கள் இருந்தும் ஆதங்கம் மட்டும் தீரவில்லை. தாலபுராணம் போல தமக்கும் வேண்டுமாம் புராணம். இது பப்பாளிகளின் வேட்கை. வளர்ந்தால் மட்டும் போதுமா? நிழல் தர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. கிளைகளும் இல்லை கள் தந்து வெளியேற்றியதுதான் மிச்சம். பனைகளைப்பற்றி ஏகடியம் பேசுகின்றன பப்பாளிகள். ம்... இது பப்பாளிகளின் காலம். இதுவும் கடந்து தான் போகும்.

இனி மாற்றங்களை காட்ட முடியாது. கருகத் தயாராயிருக்கும் முகங்களில் கடைசியான ஒப்பனையின் சாயமும் அழிந்துவிட்டது. அத்தனை முகமூடிகளும் கழன்று போனபின் எஞ்சியிருந்த முகங்கள் மட்டும் நாடகத்தின் உண்மையை நடிப்பவர்க்குச் சொல்லியபடி இருண்டு கிடக்கின்றன தகனத்துக்காக. கூண்டில் அசைவற்றுத் தவமிருக்கின்றன வேட்டை விலங்குகள். கண்களின் கூர்மை மாறவேயில்லை. நித்திரையே கனவாகிப் போன காலங்களில் நினைவுகளை நிறைத்தன கனவுகள். மின்மினிகளின் வழித்தடங்களைத் தேடித் தொடர்ந்த கனவுகள் அறுபட அறுபட இழைகளைப் பின்னிப் பின்னிப் புதிர் புதிராக இருண்ட வழியில் பதிந்த கரையையும் விழுங்குகிறது கடல். துர்க் கனவுகளிடை துளிர்க்கும் சிறு ஒளியைப் பற்றி நடக்கின்றன மரத்துப் போன கால்கள். கனவுகள் கனவுகளாகத் தொங்குகிறது காலம். எல்லோரையும் எல்லாவற்றையும் பேரச்சம் விழுங்கிக் கொண்டிருக்க காட்சிகள் மாறிய களம் நிகழ்வுகளுக்கான வெடிகளால் நிறைகிறது. நினைவிடுக்குகளிலிருந்து கிளம்புகிறது பழைய காயம். நூற்றாண்டுகள் கரைந்த போதும் சுடு தீயில் கரிந்த சாம்பல் திடல் மட்டும் தகித்த படியேயுள்ளது. இப்போதும் தனித்துப் போகும் போதெல்லாம் எழுதப்படாத பாடல் தான் துணைவருகிறது. அருவாய் நின்று வழி சொல்கிறது. சிறகுகள் தந்து புன்னகைக்கிறது. கண்ணீரைத் துடைத்துக் கையாகிறது. இப்பொழுதும் சொற்களுக்குள் அகப்படாது தூர நின்று சிரிக்கிறது. சொற்களில் புதைகின்றன கண்கள் இரண்டு பகல்களுக்கிடையே நசுங்கிச் சிதைகிறது இரவு. அவியும் பொழுதில் மௌனம் பேரொளியாக. எல்லாக் காலங்களிலும் யாதேனுமொன்று எங்கள் இரவுகளை கௌவிப் போகிறது. காதுகளிலிருந்து இரத்தம் ஒழுகிடவும் கண்டிப்போன விரல்களிலிருந்து தோல் உரிபடவும் இன்னும் அப்படியே கேட்டுக் கொண்டும் கூடவே எழுதிக் கொண்டும். எப்பொழுது தொடங்கப் போகிறோம் நமக்காகத் தேடுவதற்கு?

நினைவுகளில் நீந்துகின்றன நேற்றைக்கும் நாளைக்குமான நினைவுகள். எச்சமான கடைசித் தாளோடு ஆடிக் கொண்டிருக்கிறது நாட்காட்டி. இரைமீட்கும் மாட்டின் வாயிடுக்கில் முட்கள். படிந்திருந்த புழுதியைக் கழுவிக் கடைசிவரை பொழிகிறது மழை. கொட்டுகிற மழைக்கிடையே கூடாரத்துக்குள் எரியத் தொடங்குகிறது பிணம். நேற்றெரித்தெஞ்சிய சாம்பலைக் கரைத்துக் கொண்டு செல்கிற மழை நீரில் மிதந்தபடி போகிறது பூமாலை. தூவானம், மழைக்குளிர், குடைக்குள் பத்திரமாக நின்றவர்களைத் தொட்டுப் பார்க்கிறது தீயின் வெக்கை. கரையும் பொழுதில் குருதியாக ஒருபொழுது கவசமும் நம்பிக்கையுமான நெற்றிப் பொட்டினைப் போல் தொடர்கின்றன ஆயிரம் நினைவுகள். இங்கே மாற்றொணாப் புண்ணுடையார் நினைவுகளை உண்டு மெலிந்தார். தெருவில் தேரடியில் வரங்கேட்டார். அவருக்கும் இவருக்கும் இடையில் வதைபட்டு வருவாரென வாழும் உள்ளத்தார். உதிர்த்தி உதிர்த்தித் துளிர்க்கிறது மரம். தீராத இரசனையுடன் தினமும் தன்னைப் புதிதாய் எழுதுகிறது. சாகும்வரை ஓயாத செதுக்கல் இது. புழுதி இறைத்த போதும் புலனடக்கி நிற்கும் மழைக்காக. கற்பதற்கும் தெளிவதற்கும் திறந்தேயிருக்கிறது புத்தகமாய்.

கனவுகளில் தலைகளைக் காவிப் போகின்றன பறவைகள். முண்டங்கள் திரண்டு ஒருடல் கொண்டு பெருமலையாகி அசைகிறது. களமெங்கும் ஊறிக் காய்ந்த குருதியில் சொற்கள், வழித்தடங்களாகி நெளிகின்றன. நேற்றுச்சூடிய கிரீடம் நீர்க்குமிழியாக யுகத்தை விழுங்கும் வெறியோடு மூசுகிறது பேராறு. சகுனிகள் புதிய புதிய முகங்களோடு தோன்றுகிறார்கள். உருட்டப்படும் சதுரங்கக் காய்களில் ஊழியின் முகம் தெரிகிறது. சிந்திப்பதற்கும் போதிப்பதற்கும் தேவையற்ற களம் தகிக்கிறது பாலையாய். அங்கிங்கெனாதபடி தொடர்கின்றன குருஷேத்திரப் போர்கள். சதிகோலோச்சும் நிலத்தில் அர்ச்சுனர்களும் கர்ணர்களும் களம் வருமுன்பே கொல்லப்படுகின்றனர். அவதாரங்கள் பூமிக்கு வந்த கதைகளைத் திரும்பத் திரும்பச் சொல்கின்றன புராணங்கள். எந்தச் சலனமும் இல்லாது அறிதுயில் கொள்கிறான் மாயன். அவன் உதட்டில் தவழ்கிறது முப்புரங்களை எரித்த சிவனின் சிரிப்பு. மயானத்தின் தகிப்பில் ஊழியின் நிழல் கவிகிறது. கால்களை விழுத்துவதற்குக் குழிதோண்டுகின்றன கைகள். புன்னகையில் பளிச்சிடுகின்றன விஷப்பற்கள். சுய நலத்தில் ஊறிக்கனக்கிறது மூளை. சிதைப்பிற்கான தருணங்களைப் பற்றித் தாவுகிறது மனக்குரங்கு. உதிரும் வார்த்தைகளில் ஈக்கள் மொய்க்கின்றன.

பெருகுவதற்குப் பொருத்தமான இடமாக மனிதர்களைத் தேர்ந்துகொண்ட இந்தக் கிருமிகளின் காலத்தில் 'நீறுறிய சொற்கள்' அணிவகுத்துச் செல்கின்றன. அன்று அணிவகுத்த சொற்களில் சிறுவர்கள் கிரீடங்களைச் சூடிக் கொண்டார்கள். அவர்களது இரவுகள் பால்வார்த்த நிலவால் தோய்ந்திருந்தன. இன்று அணிவகுக்கும் சொற்களில் முள்முடி தரித்த சிரங்களிலிருந்து இரத்தம் கசிகிறது ஒரு முழு நிலாநாளில் பகிர முடியாமல். இனி அணிவகுக்கவிருக்கின்ற சொற்களில் கவனந்தேவை. ஏனெனில் இது மின்மினிகளையும் நசுக்கிவிட்டு இருளைக் காக்கும் உலகு.


## வரவு

**நூல்:**
சினிமாத்தடம்
(கட்டுரைகளும் மொழி பெயர்ப்புகளும்)




**ஆசிரியர்:**
ஜி. ரி. கேதாரநாதன்

**வெளியீடு:**
நிகரி

விலை ரூபா: 450.00




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கார்காலப் புலர்வுகள்

நூல்: கார்காலப் புலர்வுகள்
(கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: வேலணையூர் ரஜிந்தன்
வெளியீடு: நூலாசிரியர்
பதிப்பு: மார்ச் 2021
விலை: 299.00

நிலாந்தி சசிகுமார்

**வே**லணையூர் ரஜிந்தன் அவர்களுடைய 'கார்காலப் புலர்வுகள்' என்ற இந்தக் கவிதைத் தொகுப்பு உள்ளடக் கியுள்ள கவிதைகள் ஏனைய அவரது மூன்று கவிதைத் தொகுப்புகளைப் போலவே காதல் மற்றும் சமூகம் சார்ந்தே அமைந்துள்ளன. இவர் ஆசிரியராக பணி புரிபவர் என்ற வகையில் சமூகத்திற்கும் எதிர் கால சந்ததியினருக்கும் இன் றைய இளைஞர்களுக்கும் அறிவுரை கூறவும் சமூக அவ லங்கள் மீதான தனது அதிருப்தியை வெளிப்படுத்தவும் எழுத்துக்களை ஆயுதமாக்கியுள்ளமை தெளிவாகத் தெரி கின்றது.

*2018* இல் வெளிவந்த 'நிலா நாளிகை' மற்றும் 'பொற் கனவு' ஆகிய தொகுப்புகள் போலவே இத்தொகுப்பிலும் எளிய முறையில் பாமர மக்களும் புரிந்து கொள்ளும் விதத் தில் சொல்லாடல்களை கையாண்ட விதம் அருமை. கவி ஞர் ஓர் இளைஞராய் இருப்பதால் புரட்சிகரமான தனது எண்ணவோட்டங்களை கவித்துவமாக வெளிப்படுத்தி அனைவரையும் ஈர்த்துக் கொள்கிறார். தமிழ் மீதான தனது பற்றுதலை சில கவிதைகளில் குறிப்பிட்டும் காதலின் மேல் தான் கொண்ட காதலை சில கவிதைகளில் வெளிப்படுத் தியும் நகர்கிறார்.

யுத்தமும், யுத்தம் தந்த வலிகளும் இடம்பெயர்வுகளும், இளைஞர்களின் தடம் மாறிய பயணமும், ஏழ்மையின் வாழ்வும், இயற்கையின் அழிவும், காதலின் இன்பமும் இன் னும் எத்தனையோ இத் தொகுப்பில் பாடு பொருள்களாய் இருக்கின்றன.

ஒவ்வொரு கவிஞனுடைய ஆத்ம தேடலே இங்கு அவ ரது தேடலாய் விரிந்திருக்கின்றது. சமகால அரசியல் போக்குகளும் அது சமூகத்தில் மத இன மொழி ரீதியில் ஏற்படுத்திய தாக்கங்களும் கூட இதில் இடம் பிடித் திருப்பதைக் காணலாம். சின்னஞ் சிறிய இதயம் கொண்ட பறவையின் துடிப்பையும், யாருக்கும் அடங்காத நேரத்தை யும் தன் உணர்வுக்குள் அடக்கி கவி வடித்த இவன் கவிஞன் அல்ல படைப்பாளன்.

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பதை தன் மொழியில் வடிக்க முற்பட்ட கவிஞர்,

"எல்லோரும் தேவபாலனிடம் கையேந்தி இறைஞ்சு கிறார்கள்
எல்லோரிடமும் ஓர் ஏழைப் பாலன்
கையேந்தி இறைஞ்சுகிறான்
சில மெழுகுவர்த்திகள் கைகளில்"

என்பதாக குறிப்பிடுகிறார்.

தொகுப்பின் தலைப்புக் கவிதையில்,

"நாகரீக வளர்ச்சியின் சிகரத்திலின்று வைரஸ் செடிகள் செழிப்பாக வளர்ந்திருக்கின்றன" என ஆதங்கப்பட்ட கவிஞர்,

"கார்காலப் புலர்வுகள் எல்லாம்
புதிய மாற்றத்திற்கான
அறைகூவல்களே"

என்ற நம்பிக்கையில் முடித்திருந் தமை சிறப்பு.

பயணம் பலரது வாழ்வில் பலவித அனுபவங்களைத் தரும். காதலர்களுக்கு மட்டுமே கனவும் வரமாகும் அங்கே. கவிஞர் அனுபவித்த சுகத்தில் வெளிப்பட்ட கவி என எண் ணம் தோன்றுகிறது. இடம்பெயர்ந்த மக்களின் வலியை அவலத்தின் ஓலமாய் கவி வடித்திருந்தமை அற்புதமாக இருக்கின்றது. பார்க்கும் இடமெங்கும் காட்சிகளாய் கவி தைகள் நிறைந்தே கிடக்கின்றன. கவிஞனின் கண்கள் மட் டுமே அவற்றை சிறைப்பிடித்து எழுத்தில் வடிக்கும் திற னைப் பெற்றுள்ளன. அந்த விதத்தில் ரஜிந்தன் அதிஷ்ட சாலியே.

தனது ஒவ்வொரு கவிதையிலும் உணர்வு ரீதியான தனது பல முகங்களைக் காட்டும் ரஜிந்தன் அங்கங்கு தான் ஒரு ஆசிரியர் என்பதையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. சீர்கெட்ட நாட்டைத் திருத்தவும் தனது கவிதைகளையே துணைக்கு அழைத்திருப்பது அபாரம்.

தொகுப்புகள் முழுவதும் தன்னம்பிக்கை, தேடல், ஏக் கம், ஆதங்கம் நிறைந்திருப்பதைக் காணலாம். பல் துறை ஆளுமையான வேலணையூர் ரஜிந்தனின் நான்காவது தொகுப்பு வெளிவந்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி. எதிர் வரும் காலங்களில் மேலும் அவரது பார்வையும் வீச்சும் விரிவடைய வாழ்த்துகிறேன். •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலண்டரில் உட்காரும் புலி




| | |
|---|---|
| நூல் : | கலண்டரில் உட்காரும் புலி ( கவிதைத் தொகுப்பு ) |
| ஆசிரியர் : | அகமது ஃபைசல் |
| வெளியீடு : | பட்டாம்பூச்சிகள் கலை இலக்கிய பரண் |
| பதிப்பு : | ஜூலை 2019 |
| விலை : | 350. 00 |

**அஸ்மா பேகம்**

அதிக பட்சமாக இரசனையைக்கொடுக்கும் சொற்களின் மெல்லிய போதையும், விஞ்ஞானத்தனமான விநோத நுட்பமும், கணிதவியல் புதிர்களை விடுவிப்பதும் வேற்றுவிடையோடு தனியே அவதிப்படவைக்கும் சுகமான அனுபவத்தை சுவைபடப் பேசி நிற்கின்றது 'கலண்டரில் உட்காரும் புலி'. தலைப்பில் சொல்ல வந்தது விளங்காமல் விலங்குகள் திகிலடையச்செய்யும் ஒரு இருண்ட வனத்தின் பிரமையில் தனித்த நடைபோட்டு பிரதிகள் தோறும் புலியைத்தேடினேன்.

அது சொற்களால் உருவாக்கப்பட்டிருந்த ஒரு பூங்காவனம். புலியை மறந்து விட்டு ஒவ்வொன்றாக வாசிக்கும் தோறும் புதிரும் விஞ்ஞானமும் கவிதையும் சொற்களும் என்னை விம்பமாக்கி உடைத்துக்கொண்டேயிருந்தது.

வெறும் கற்பனைகளால் இரசனைகளோடு ஆக்கப்படாமல் சமூகத்தில் அவசியம் தொடவேண்டிய விடயங்களை நவீனத்திலும் நவீனம் செய்து காட்டியிருக்கின்றார் கவிஞர் அகமது ஃபைசல்.

அன்றாட வாழ்வின் நுண்ணிய இரசனைகள் கோடிக்கணக்கில் குவிந்திருந்தாலும் அவை இவர் போன்று நுண்ணிய இரசனையும் மாற்றத்தை மாற்றிப்படைக்கும் மந்திரமும் தெரிந்த கவிஞர்களிடம் மாத்திரமே புன்னகைத்து, கைகட்டி முன்னே நிற்கிறது.

சிறிய பறவைகள் பெரிய வானத்தைக் கடப்பது போல சிறிய கவிதைகளால் இவர் கூற விழைந்திருக்கும் பேசுபொருட்கள் மிக விசாலமானவை என்பதை எந்தவொரு வாசகனாலும் மறுக்க முடியாது.

இவரின் கவிதைகளின் பேசு பொருட்களாக முதுமை, மரணம், மானுட உணர்ச்சிகள், பசி, இயற்கை, காதல், பிரிவு, பிழைப்பு, வறுமை, எளியதன் வலிமைகள் என்பனவும் இயற்கையின் விதியை தனக்கேயுரிய தனித்தன்மையோடு புதுவித நோக்கில் அமையுமாறும் மற்றும் தனித்துவமான இரசனைகளில் அமைந்த பல அற்புதமான கவிதைகளையும் 'கலண்டரில் உட்காரும் புலி' சொற்களை உண்போருக்கு வேட்டையாடிப் படைத்திருக்கிறது.

வித்தியாசமான அட்டைப்படத்தோடு வெளிவந்திருக்கும் இந்தக் கவிதைத் தொகுப்பில் என்னை அதிகம் வியக்க வைத்த கவிதைகள் பற்றிய இரசனைக் குறிப்புக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

பசி பற்றிப் பாடாத கவிஞர்களே இல்லையென்றாலும் அவை மனிதப்பசியையே அதிகம் பேசிவிட்டன. ஒரு மரத்தின் பசியை கவிஞர் இவ்வாறு கூறுவது இரசனையில் புதுவித கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. எனினும் இந்தக் கவிதை பசியை வெளிக்காட்டிக் கொண்டிருக்கும் எத்தனையோ சோமாலிய மனிதர்களையும் நினைக்கச்செய்கின்றது.

*"ஆலமரம்*
*பசியோடிருப்பதைக் காட்டிக் கொள்வதற்காகவே*
*தன் குடலை*
*வெளியே தொங்கவிட்டிருக்கின்றது"*

மற்றுமொரு கவிதை ஒருவகையான அரசியல் தந்திரம் மிக்கவர்களை அல்லது அதிகாரத்தை அறியாமையோடு பிரயோகிப்பவர்களை மறைவில் பேசுவது போலும், சாதாரணமாக நாய் பற்றிய அடிப்படைத்தத்துவத்தை எவரும் கூறாத எளிமையிலும் புதுமையிலும் முன்வைத்திருக்கும் அவரின் கவித்துவம், அவரின் தனித்துவமாகின்றது.

*"தனக்குத் தெரிந்த*
*ஒரு சொல்லை வைத்துக்கொண்டு*
*நாய்*
*தெருவையே வலம் வருகிறது"*

ஒரு கவிதையானது ஒரு காட்சியை அல்லது தத்துவத்தை கண்முன்னே கொண்டு வருவதற்கு சொற்கள் அடிபணிய வேண்டும் ஆனால் மூன்றே வரிகளில் அதனை நிகழ்த்திக்காட்டியிருக்கும் கவிஞரின் மற்றொரு கவிதை,

*"அங்கும், இங்கும்*
*அதிலும், இதிலும் தாவி*
*மரத்தைப் பரப்புகிறது குரங்கு"*

கவிதையின் அழகும் குன்றாமல் கருத்தும் குன்றாமல் மாபெரும் தத்துவம் ஒன்றை அதாவது மரணத்தை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதுவும் மகிழ்ச்சியில் மாத்திரம் நிகழும் மரணம் பற்றி புதுமையான கவிதையொன்றாக, கவிஞரின் பெயரை நன்கு பதிக்கும் ஒரு கவிதையாக, இனி வரும் காலங்களில் மனிதர்களுக்கும் ஏற்படும் மரணம் குறித்த ஒரு தீர்க்கதரிசனமாக இக் கவிதையைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

"சந்தோசமான தினமொன்றில்தான்
பட்டாசு
உடல் சிதறி இறக்கின்றது"

இதயம் உறையும் வார்த்தைகளோடு புதுமையான சிந்தனையை தன் கவிதை நாமம் நிலைத்திருக்கும் பாங்கில் சொற்களை உயிர் கொடுத்து பிரபஞ்சத்தில் ஓட விட்டுள்ளார் கவிஞர் பைசல் அவர்கள்.

கலண்டரில் உட்காரும் புலி, மாயம் நிறைந்த அந்த விலங்கும் வாசிப்பில் உறுமியது. நாட்கள் பறப்பதாக அல்லது சுழல்வதாக யுகக்கணக்கில் எழுதிப்பழகிய மொழி இம்முறைதான் வேட்டைக்குப் புறப்பட்டிருக்கின்றது. புத்தகத்தின் தலைப்பைப் புதிய மொழியில் பேசுகின்ற கவிதை இது

"வீட்டுக்குள் ஒரு புலி
கலண்டரில் உட்கார்ந்திருக்கிறது
தேதிகளை வேட்டையாடுகிறது
தண்ணீர் குடிப்பதில்லை
உருமி குழந்தைகளை விரட்டுவதில்லை
வீட்டின் எல்லா இடங்களிலும் குந்தித் திரியும்
விடுமுறைத் தேதியை ருசித்து உண்ணும்
தேதி 32 ஆல் புலியை வெல்ல முடியுமென்று
ஒரு ஜோசியக்காரன் சொன்னான்."

அனைத்தையும் மாற்றி அதில் கவி வியக்கும் பிரபஞ்சம் வித்தியாசமானது. இவ்வாறான நவீன கவிதைகளின் மாற்று அனுபவங்களை வாசகர்களுக்கு வசப்படுத்திய கவிஞர் அகமது ஃபைசல் அவர்கள் இவை போன்று மேலும் பல தொகுப்புக்களை வெளியிட வேண்டும். அவரால் ஏற்கனவே வெளியிடப்பட்ட நூல்களான

1. ஆயிரத்தோராவது வேதனையின் காலை.
2. நிலத்தோடு பேசுகிறேன்.
3. நீரில் எழுதப்பட்டிருக்கும் மீனை பூனை வாசிக்கின்றது.
4. வலதுகால் புன்னகை

என்பனவும் கூர்ந்து விமர்சிக்க வேண்டிய அருமையான தொகுப்புக்களாகவே உள்ளன. வாசக நேசங்களை மாயப் பள்ளத்தாக்கில் யோசிக்க வைக்கும் அவரின் எழுத்து ஈழத்தின் இணையில்லா தனி எழுத்து.

வாழ்த்துகள் அகமது ஃபைசல். •

# பசுமை தொங்கும் காடு



ரகசியங்களைப் பதுக்கி வைக்கும் காடு நான்
நினைவுகளின் ஊற்றில்
ஊறிப்பதுங்கும் எனதுணர்வுகள்
துளித் துளியாய் கசிந்தோடும்

பேரமைதிகளின் தெருக்களில்
கால் தடங்களால் மிதிக்கின்றன
வாழ்வின் பகுதிகள் ஒவ்வொன்றும்
ஊறும் உணர்வுகள் பெருகி வழியும்
கதைகளாய் நீள் பக்கங்களாகின்றன

அவகாசங்களற்ற மாற்றங்கள்
துளிர்த்துப் பெருகும் காடுகளுக்குள்
பொங்கும் உணர்வுகளைச் செதுக்கி
நனைந்த குருத்துக்களாய் துளிர்க்கின்றன

உளச்சதைகள் தோறும்
ஞானக்கதவுகள் ஊறி
பெரும் தளைகளாய்ப் பல்கி
அடவியாய்ப் பெரும் அடவியாய்ப் பெயர்ந்து
உணர்வுகளைக் கோர்த்து விடுகின்றன

பொக்கிச உண்மைகள் தோறும்
பசுமையின் தொங்கிய உணர்வுகள்
செதுக்கிச் செதுக்கித் தளிர்த்து
ஞானமும் பசுமையுமாய்ப் பெருகி நகர்கின்றன.

**சித்தி றபீக்கா பாயிஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயிற்று வலை

**ஜமீல்**

உண்ணுவதும் உறங்குவதுமென எதுவித பரபரப்புகளு மின்றி ஆலிசமாகி உதிர்கின்றது அடைவு காலம். கடலுக் குச் சென்று ஒரு கறிக்காவது மீன் எடுத்து வரலாமென்று இடைக்கிடை சொல்லிக்கொண்டே இருந்தது மனம்.

கால்களில் கடல் மண் அப்பியிருப்பதனை கண்டவுடன் எதுவும் விசாரிக்காமல் சாப்பிடும் போது அகப்பக் கணை யால் சாத்து சாத்தென சாத்துவார் உம்மா. அடி தாங்காமல் மண் புழுவென சுருண்டு மூத்தம்மாவின் முந்தானைக்குள் ஒளிந்து கொள்வேன். என் மீதான கோபம் தணியாது மீள வும் மீளவும் அடித்து புரட்டியெடுக்க காட்டுத் தனமாக கூடுவார் உம்மா.

உம்மாவின் கட்டுக்கடங்கா ஆத்திரத்தை ஒருவாறு சமாளித்து காப்பாற்றி அரவணைத்து முதுகில் பூரான் மாதிரி ஊர்ந்து செல்லும் தழும்புகளுக்கு களிம்பு தடவி என்னை ஆற்றுப்படுத்துவார் மூத்தம்மா. கடல் அலைகள் எனக்குள் ஆர்ப்பரிக்கும் போதெல்லாம் இப்படியான அனுபவங்கள் என்னை பயமுறுத்தத் தவறுவதில்லை.

இருந்தும் வகுப்பு நண்பனின் அன்பின் நிமித்தம் அவ னது அழைப்பினை மறுக்காது சம்மதித்து நாளை கடலுக் குச் சென்று வலை இழுத்து கறி கொண்டு வருவதாக இரு வரும் திட்டம் தீட்டினோம்.

மீன்கள் பற்றிய கனவுகள் என் படுக்கை அறை முழுவது மாக விடிய விடிய சுழித்து அலைகளும் ஆர்ப்பரித்தன. ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. சூரியன் சோம்பெறி முறித்து எழுந்து பல்லிளித்தது. பறவைகள் கூடுகளை விட்டும் இரை தேடிச் சென்றன. நானும் அவைகளோடு எழுந்து பெற்மின்றன் பயிற்சிக்கு செல்வதாகப் பொய் சொல்லி அவசரவசரமாக கிளம்புகிறேன். உம்மா ஆவி பறக்க தயாரித்து வைத்த மைலோ கிடந்து ஆறுகிறது.

உம்மாவின் கண்களில் படாமல் தெருமுனைச் சந்தியில் மறைந்து எனக்காக காத்து நின்றிருந்தான் அம்றி. நாங்கள் இருவருமாக கடற்கரை நோக்கி சாலையில் கிடந்த வெற்று நெகிளி குடுவைகளை பந்தென உதைத்தவாறு செல்கி றோம்.

இடையில் அப்பாவின் சந்திக் கடையில் பிடித்தமான பிஸ்கற் மற்றும் இனிப்புகளை வாங்கிச் சாப்பிட்டுச் சாப் பிட்டு எங்களைக் கடந்து செல்பவர்களை கவனித்தபடி விரைவாக நடந்து செல்கிறோம்.

சூரியன் தனது கதிர்களை இன்னும் சரியாக ஊண்டி உதிர்த்தவில்லை என்பதனை சாலை மருங்கினில் தலை நிமிர்ந்து நிற்கும் புற்களில் பூத்திருக்கும் பனிக் குடங்கள் கண் சிமண்டிச் சொல்கிறது. பட்டாம் பூச்சிகள் அதனை தனது கால்களினால் உடைத்து வன்மம் புரிகின்றன கடல் அலைகளின் ஆர்ப்பரிப்பும் உரத்து வீசும் காற்றில் தலைவிரித்தாடும் தென்னைகளின் ஓசையும் மெது மெதுவாக காதுகளை வந்தடைகின்றன. இன்றைக்கு எப்படியாவது கயிற்று வலையில் இழுத்து மீன் எடுத்து வந்து உம்மாவை அசத்த வேண்டுமென்ற ஆசையினை நெஞ்சில் சுமந்தபடி அலாதியாக செல்கிறோம்.

தூரத்தில் பளைய கம்பர் சைக்கிளில் வந்து கொண்டி ருந்தார் எனது மூத்தப்பா. எங்களுக்கு ஈரக் கொல கருகி நெஞ்சு காய்ந்து பயமும் பீதியும் எடுத்தது இருவரும் செய் வதறியாது பிதுங்கி நின்றோம். மூத்தப்பா எங்களை நெருங்குவதற்கு முன்பாக அருகிலிருக்கும் மிக்சர் தயாரிக் கும் ஆலைக்குள் யாரும் காணாதபடி பூனைக் குட்டிகளென நுழைந்து கொண்டோம்.

இடையில் குறுக்கறுத்த மடார் அப்பச்சியிடம் கடல் பற்றியும் அதன் நிலைமை பற்றியும் பேசிக் கொண்டிருந்தார் மூத்தப்பா. தாமதிக்கத் தாமதிக்க எங்கள் இருவருக்கும் பயத்தில் நாவரண்டு தொண்டைத் தண்ணி வற்றத் துவங்கியது.

அப்போது சொல்லாமல் கொள்ளாமல் பெய்த ஊசித் தூறல் மழை அவர்களைத் துரத்தியது. பகிர்ந்த கதைகளை பாதியில் நிறுத்திக் கொண்டு இருவருமாக கிளிந்து சென்ற னர். போன உசிர் திரும்பி வந்த உணர்வோடும் கூண்டில் அடைபட்டுக் கிடந்த பறவைகளுக்கு விடுதலை கிடைத்த சிரிப்போடும் மழைக்கு நன்றி சொல்லியவாறு கடற்கரை நோக்கிப் பறந்தோம்.

சற்று முன்னர் பருவமடைந்த ஒரு பெண்ணைப் போன்று அலைகளற்று மிக அமைதியாக கிடந்தது கடல். அது குளிப்பதற்கு ஏதுவாக நதிபோல் காட்சியளித்தது. சில தோணிகள் கடலில் நங்கூரமிட்டபடி கிடந்தன. கரையில் சில தண்டையல்கள் மீன் சிகப்பிற்காக காத்துக் கிடந்தனர்.

மூன்றாம் ஜாமத்தில் கடலுக்குச் சென்ற இயந்திரப் படகுகள் கரைக்குத் திரும்பி முட்டி வளையா தோறா பாரை போன்ற மீன்களை ஒவ்வொன்றாக சுமக்க முடியாது ஐஸ் வாடிக்கு சுமந்து சென்றனர்.

நாங்கள் இருவருமாக கடல் மண்ணில் கால்கள் புதைந்தபடி நடந்து கரையில் காத்திருக்கும் செம்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களை நெருங்கி அமர்கிறோம். யாருமே எங்களை சட்டை செய்ய வில்லை சற்றுத் தொலைவிலிருக்கும் தென்னங் காலைக்கு அப்பால் எங்க ளது வயதை ஒத்த நாலைந்து சிறு வர்கள் பட்டம் விட்டுக் கொண்டிருந் தனர். அவர்களைக் கண்ட மட்டற்ற மகிழ்ச்சியில் அங்கு சென்று பார்க்க அம்றியை அழைத்தேன். அதற்கு அவன் அங்கு சென்று புதினம் பார்த்தால் நேரம் போய் விடும் வலை இழுத்து வீட்டுக்கு மீன் கொண்டு செல்ல முடியாது என்று சொல்லி மறுத்து விட்டான்.

**சற்று முன்னர் பருவமடைந்த ஒரு பெண்ணைப் போன்று அலைகளற்று மிக அமைதியாக கிடந்தது கடல். அது குளிப்பதற்கு ஏதுவாக நதிபோல் காட்சியளித்தது. சில தோணிகள் கடலில் நங்கூரமிட்டபடி கிடந்தன. கரையில் சில தண்டையல்கள் மீன் சிகப்பிற்காக காத்துக் கிடந்தனர்.**

இரண்டு முதியவர்கள் பளைய தண்டையல்மார்களின் கதைகளை யும் பண்புகளையும் லைற்கவுஸ் கோபுர நிழலில் அமர்ந்தவாறு பேசிக்கொண்டிருந்தனர். நாங்களும் அவர்களின் அருகில் சென்று வாய்பாத்திருந்தோம்.

அந்தக் காலங்களில் வளர்பிறை, அன்னக் கிளி, ஏரோப்பி ளேன், சின்ன டம்பர், பெரிய டம்பர், வளிஞ்சான் காக்கா, மொட்டையன் மன்னி போன்ற நல்ல தண்டையல்கள் இருந்தனர். அவர்கள் சுபகு தொழுது பின்னர்தான் கடலுக் குள்ளே கால் வைப்பார்கள்.

ஏலேலே ஏலேலோ
எங்கட பிள்ளய பீக்கண்ணி எங்கிறா
எண்ணத் தலையில மண்ணள்ளி வைக்கிறா
வைச்ச பிணாட்டில மிச்சம் பிடிக்கிறா
வெலிக்கிடவில பீ பேண்டு வைக்கிறா
ஏலேலா ஒவேலா

*0*

தொங்கா தொங்கா
தொங்கக் கிழவா
தொங்கலில் என்ன சுண்ணாம்போ
சுண்ணாம்பென்றா சிவக்காதோ
சிவக்க என்ன திப்பிலியோ
திப்பிலி என்றா நாறாதோ
நாறா என்றால் கருவாடோ
கருவாடென்றால் காச்சாவோ
காச்சா என்ன கொல்லனோ
கொல்லன் என்றா கொத்தானோ
கொத்த என்ன கொள்ளியோ
கொள்ளி என்றா பத்தாதோ
பத்த என்ன நெருப்போ
நெருப்பு என்றா பறக்காதோ
பறக்க என்ன ஆலாவோ
ஆலா என்றா ஓடாதோ
ஓட என்ன வாய்க்காலோ
வாய்க்கால் என்றால் வழுக்காதோ
வழுக்க என்ன திருக்கையோ
திருக்கை என்றால் குத்தாதோ
குத்த என்ன முள்ளோ

*0*

இவ்வாறு அம்பாப் பாடல்களை உரக்கச் சப்தமிட்டுப் பாடி வலை இழுப்பவர்களின் சோர்வை போக்குவார்கள். அது செவிக்கு விருந்தாகவும் இருக்கும்.

மீன் பட்டதும் முதலில் கறிக்காக வலை இழுப்ப வர்களுக்குரிய பங்கை எடுத்து வைத்து விட்டுத்தான் மீனை ஏலம் கூறவே துவங்குவார்கள். அன்நேரம் ஒரு பீப்பா மீன் 1500 ரூபா போகும். அது இப்போதுள்ள பத்துப் பதி னைந்து கூடைகளுக்கு நிகராக இருக்குமென்று தங்களுக் குள் கதைத்துக் கொண்டிருந்தனர்.

திடீரென அலை ஆர்ப்பரித்து எங்களது முகத்தில் உவ ரள்ளி எறிந்தது. கடலில் ஆக்கிரமித்திருந்த சோள நீரோட் டம் விலகிச் சென்றது. கடலில் நங்கூரமிட்டிருந்த தோணி களும் கரையில் காத்திருந்த தோணிகளும் வளைந்து வலை களை விரித்தனர்.

தண்டையலை சந்தித்து நாங்களும் வலை இழுத்தா மீன் தருவியளா? என்று ஒஞ்சி ஒஞ்சிக் கேட்டோம். அதற்கு அவர் சிரித்துக் கொண்டே மீன் பட்டா கிடைக்கும் இழுங்க என்று சொன்னார். உடன் இருவருமாக அணிந்திருந்த சேட்டையும் சாறனையும் செருப்பையும் கழட்டி எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு போய் லைற் கவுஸின் முதல் மாடியில் பவுத்திரமாக வைத்து விட்டு ஜம்பறுடன் வலை இழுக்கச் சென்றோம்.

கயிற்று வலயையிலிருந்து முழுப் பலத்தையும் பிரயோகித்து கைகள் சிவந்து கொப்பளிக்க ஓயாது இழுத்தோம். தண்டையல் வாய் புழுத்து வழிந்து புதுப் புது தூசன வார்த்தைகளை கேட்டோம். எங்களை விட வயசிலும் உடல் பலத்திலும் கூடிய சிலர் கயிற்று வலை முடிந்து நைலோன் வலை வரும் வரைக்குமாக காத்து நிற்கின்றனர்.

எங்களுக்கு மீன்களைத் தவிர வேறு எதுவுமே புலப்படவில்லை. அம்பாப் பாடல்கள் சொல்லி வலை இழுக்குமளவிற்கு புதிய தலைமுறைக்கு அம்பா பாடல்கள் தெரியவில்லை. எல்லோரும் ஐரா ஐரா என்ற ஒரே சொல்லை மட்டும் சொல்லிச் சொல்லி வலை இழுத்தனர்.

கயிற்று வலை முடிந்து நைலோன் வலை வந்து விட்டது. தொலைவில் கை கட்டி பார்த்து நின்றவர்கள் வந்து எங்களுடன் சேர்ந்து வலை இழுத்தனர். தோணியில் இருந்தவர்கள் கைகளை உயர்த்திக் காட்டி ஊண்டி இழுக்கும்படி ஒழுக்கமற்ற வார்த்தைகளை உரக்கச் சப்தமிட்டுச் சொல்லி சைகையும் காட்டினார்கள்.

தோணி கரைக்கு நெருங்க நெருங்க கறிக்கு மீன் எடுப்பவர்களின் தொகையும் அதிகரித்தன. மீன் கிடைக்குமா என்ற சந்தேகம் இடைக்கிடை எழுந்தாலும் எனக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் புள்ளுகளும் தாய் மடிக்கு மேலாக பறந்து கொண்டிருந்தன.

வலை கரைக்கு வந்து விட்டது. மடி தாங்கி போட்டு இழுத்து மீன்களை அத்தாங்கு கொண்டு அள்ளி விரித்து வைத்திருந்த படங்கில் குவிக்கின்றனர். பெரம்பு மாதிரி தனி நெத்தலி. நமக்கு எப்படியும் மீன் கிடைக்குமென்ற மகிழ்ச்சியில் உப்பு நீர் சொட்டச் சொட்ட ஆட்களுக்குள் சிக்குண்டு நிற்கிறேன் தண்டையலை காண முடியவில்லை.

எப்படியும் ஐந்தாறு லட்சத்திற்கு மீன்கள் பட்டிருக்கலாமென்று கூடி நின்றவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்வது கேட்கிறது. மடியிலிருந்து கூடையில் மீன்களை அள்ளிக் கொண்டு செல்லும் போது வளிந்து கொட்டினும், மீன்களை சில சிறுவர்கள் அடி உதைகளை வாங்கியும் அதனை சற்றும் பொருட்படுத்தாது பாய்ந்தும் பூந்தும் பொறுக்கினார்கள்.

மீன் ஏலம் கூறி விற்கப்படுகிறது. நானும் அம்றியும் மீன் பகிரும் வரைக்கும் தண்டையல் பின்னால் அலைந்து திரிந்தோம். அவர் எங்களை கண்டுகொள்ளாமல் மடிக்குள்ள கிடக்கும் மீன்களைப்போல் மூச்சுவிட அவகாசமின்றி படபடத்து திரிந்தார்.

மீன்களை வாங்கிய வியாபாரிகள் ராட்சத சர்ப்பமென ஊர்ந்து செல்லும் கடற்கரை சாலையில் நின்று கொண்டு ஒரு கிலோ நூறு ரூபாப்படி விற்றுக் கொண்டிருந்தனர்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. சுணங்கச்சுணங்க உம்மா எனக்குள் அலையென ஆர்ப்பரித்தார்.

ஒருவாறு மீன்கள் விற்று முடிந்ததும் அத்தாங்கில் மீன்களை கொண்டு வந்து பகிர்ந்தார் தண்டையல். நானும் அம்றியும் பாய்ந்து சென்று உள் நுழைந்து மிதிபடுவது கூடத் தெரியாமல் கயிற்று வலையில் இழுத்த எங்களுக்கும் தாங்க என்று தண்டையல் பின்னால் சென்று தவண்டு திரிந்தோம். அவர் எங்களைக் கண்டு கொள்ளாமல் நைலோன் வலையில் இழுத்தவர்களுக்கெல்லாம் அள்ளியள்ளி பகிர்ந்தார்.


ஒரு கட்டத்தில் மனம் சலிப்புற்று வெயிலின் சூடு தாங்காது தோணியின் நிழலில் போய் அமர்ந்து கொண்டேன். அம்றிக்கு ஏற்கெனவே கடலுக்கு வந்து மீன் எடுத்த அனுபவமிருந்ததனால் பின் வாங்காது போராடி ஒரு பை நிறைய மீன்கள் வாங்கி வந்தான்.

கண்கெட்ட தண்டையல் மீது கடும் கோபமும் எரிச்சலும் எனக்கு ஏற்பட்டது. இந்த ஏமாற்றத்தை என்னால் தாங்க முடியவில்லை. இந்த நூறு ரூபா பெறுமதியான மீனுக்காக இல்லாத திட்டமெல்லாம் தீட்டி தண்டையலின் வாயால் லட்சம் ரூபாட கதை கேட்டதுதான் மிச்சம்.

நண்பன் அம்றி தான் எடுத்த மீன்களில் அரைவாசியை எனக்குத் தந்து துவண்டுபோன என் மனதை ஆற்றுப்படுத்தினாலும் கடைசிவரை மீன் கிடைக்கவில்லை என்ற ஏக்கத்துடன் வீடு திரும்புகிறேன். கயிற்று வலை தண்டையலின் மனசுபோல் காய்ப்புக் காய்ச்சிய என் கரங்களில் பாம்பென சுருண்டு படுக்கிறது. •

---

## வரவு




**நூல்:**

தேநீர்

முரண்களின் கலவை

( தேயிலை என்ற கருப்பொருள் மீதான ஓவியர் ஒருவர் கவிஞர்கள் இருவரின் சுயாதீனமான எதிர்வினைகளின் கூட்டு வெளிப்பாடு )

வைதேகி

பா. அகிலன்

கீதா சுகுமாரன்

**வெளியீடு:**

டூலி

விலை: 895.00 (இந்திய ரூபா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர்ந்தவர்கள்



**செல்வம் அருளானந்தம்**

இரண்டாவது தடவையும் சோமசுந்தரம் அண்ணன் தொலைபேசியில் கேட்டபோது என்னால் அதை நிரா கரிக்க முடியவில்லை.

சோமசுந்தரம் அண்ணன் செயலாளராக இருக்கும் வய தானோர் சங்க வருடாந்த விழா பட்டி மன்றத்தில் பேசுவ தற்கான அழைப்பு.

கூட்டங்களில் பேசி நாள்களாயிற்று. எனக்கும் 'மைக்' மீது விருப்பம் தான்.

இங்கு பெரும்பான்மை பேச்சாளர்கள் பேசுவது என்று சொல்லிக்கொண்டு மைக்கை சாப்பிட்டுக் கொண்டிருப் பார்கள் அல்லது அவர்கள் பேச மைக் மாத்திரம் கேட்டுக் கொண்டிருக்கும். பேச்சுக்கேட்க வந்தவர்கள் வேறு பிராக்கு களில் இருப்பார்கள்.

நான் கொஞ்சம் சுமாரான பேச்சாளன் நாலு ஐந்து பேரா வது கொஞ்சம் கவனிப்பார்கள்.

அதற்காகத்தான் திருப்பவும் அவர் கேட்டார்.

பட்டிமன்றமாய் இல்லாமல் வேறு மாதிரி அக்கூட் டத்தை ஒழுங்கு செய்தால் என்ன?

பட்டிமன்றம் என்றால் விடயத்தை விட்டு விட்டு பகடி, பம்பல் என்ற பெயரில் கீச்சு கீச்சு மூட்டுதல் தான் நடக்கும் என்று சொன்னேன்.

புலம்பெயர்ந்த தமிழரால் ஊரில் உள்ள உறவுகளுக்கு நன்மை என்று இரண்டுபேரும் இல்லை அவர்களால் ஒரு நன்மையும் இல்லை தீமைதான் என இரண்டுபேரும் பேசுவதாக முடிவுக்கு வந்தோம்.

என்ரை சம்மதம் இல்லாமலே புலம்பெயர்ந்த தமிழ ரால் தாயகத் தமிழருக்கு நன்மை என்ற தலைப்பில் ஆதா ரங்களுடன் பேசும்படி சோமசுந்தரம் அண்ணன் உறுதி யாகக் கூறிவிட்டு தொலைபேசியை வைத்துவிட்டார். என் னோடை பேசப்போவது யார் என்றும் சொல்லவில்லை.

எனக்கு இதில் பெரிய மகிழ்ச்சியில்லை. எனக்கு தனிப் பட்ட விதமாக புலம்பெயர்ந்தோர் செய்யும் அரசியலிலோ அல்லது செயல்பாடுகளிலோ பெரியநம்பிக்கை இல்லை.

அதைவிட ஊரில் உள்ள உறவுகளில் பெரும்பாலான வர்களுக்கு எங்கள் சம்மந்தமாக வெளியில் சொல்லாவிட் டாலும் பெரிய மதிப்பு இல்லை. ஏதோ சில உதவி செய்கி றோம் அல்லது உறவாய் இருக்கின்றோம் என்றதற்காக போற நேரங்களில் வரவேற்பார்கள்.

வருடத்திற்கு ஒரு தடவையாவது ஊருக்குப் போய் வந்த அனுபவத்தில் இது எனக்குத் தெரியும். தப்பிப் போனவர்கள், தங்களைச் சாட்டி வசதி பெற்றவர்கள் என்ற பார்வை எல்லோரிடமும் இல்லாவிட்டாலும் சிலபேரிட மாவது இருக்கின்றது.

இங்கிருந்தும் அவர்களுக்கு பெரிய உதவி கிடைப்பது போல் பாவனை இருக்கிறது. அவர்களுக்கு ஒன்றும் எங்க ளால் பெரிய பிரயோசனம் இல்லை என்ற எண்ணம் எனக்கு இருக்கு-

நான் எழுந்தமானத்திற்கு ஓம் என்று சொல்லி விட்டேன்.

இனி மறுக்கேலாது சும்மா வாற மைக்கை விடவும் விருப்பம் இல்லை.

மற்றது என்ன தலைப்பில் பேசுவது என்றாலும் அது மாடு பற்றி இருந்தாலும் மாடுபற்றி ஒன்றும் தெரியாவிட் டாலும் மாட்டை கொண்டே தென்னை மரத்தில் கட்டி

தளரா வளர் தெங்கு
தாளுண்ட நீரை
தனயாலே தருவதால் என்று

ஔவையார் மூலம் தென்னை புகழ் பாடும் வல்லமை மெல்ல மெல்ல கை கூடி வந்துவிட்டது.

என்ன கூட்டம் என்றாலும் என்ன தலைப்பு என்றாலும் அங்கை இருக்கின்ற பார்வையாளர்களின் போக்கு அறிந்து

தாகமறிந்து தீயுமருள் வான்மழைக்கேயுண்டோ
தாகத்தின்துயர் மழைதான் அறிந்திடுமோ?
காலத்தின் விதி மதியை கடந்திடுமோ
என்று பாரதியையோ
கல்லா மதியே கதிர்வாள் நிலவே
செல்லா இரவே கிறுகா இருளே
என்று கம்பனையோ சொல்லிப்பார்ப்பேன்
அதுக்கும் கிறுங்கா விடில்
கந்தையணிந்தோம் இரு
கையை விரித்து எங்கள்
மெய்யினை போர்த்தோடு
மெந்தையல் கூழை பலர்
மொய்த்து குடித்து பசி கிடந்தோம்

என பாரதிதாசனை பேச்சில் ஓர் இடத்தில் செருகி கைதட்டு வாங்குவேன்.

மற்றக்கூட்டங்களில் தரவுகள் இல்லாமல் சூழலைப் பார்த்து எழுந்தமானமாக பேசுவது மாதிரி இல்லாமல் கொஞ்சம் பொறுப்போடு பேசவேண்டும் என்ற எண்ணம் எழுந்ததும் அப்படி பேசுவது என்றால் சில தரவுகளைத் திரட்ட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2009க்கு முதல் வேறுமாதிரி உதவிகள் கனடாவில் இருந்து போனதை நான் அறிவேன்.

2009க்கு பிறகு நிலைமை வேறு மாதிரி, உதவி செய்ப வர்கள் கூடியிருக்கிறார்கள் போல் தோற்றம். கை கால் இழந் தவர்களுக்கு, வீடு வாசல் இல்லாதவர்களுக்கு, கல்விக்கு, முன்னாள் போராளிகளுக்கு என ஆளுக்கொரு பட்டிய லோடு திரிபவர்களைக் கண்டிருக்கின்றேன்.

ஒரு சிறிய கவிதைப் புத்தகத்தை விற்கப்போய் யாரும் ஒருவருடன் கதைத்தால் கூட நாலு பிள்ளைகளுக்கு படிப் பிக்க காசு அனுப்புகின்றேன். மூன்று முன்னாள் போராளி களின் குடும்பங்களை பராமரிக்கின்றேன் எனச் சொல் வார்கள்.

இவற்றுள் பல உண்மையாய் இருக்கலாம்.

ஆனால் கனடாவில் மாத்திரம் உதவி செய்கின்றோம் என்று சொல்பவர்களின் தொகையைப் பார்த்தால் ஊரில் பல பேரின் தேவைகள் நிறைவேறியிருக்கும்.

எனக்கு இவர்களில் பெரிய நம்பிக்கையில்லை.

இப்படியான விடயங்களில் உண்மையாக தொடர்பில் இருக்கும் கிருஸ்ணராசாவிடம் என்ரை பேச்சுப்பற்றியும் அதற்கு ஏதாவது ஆதாரங்கள் தரமுடியுமா என்றும் கேட்டேன்.

நான் எப்போ கேட்பேன் என்றமாதிரி கிறிஸ் உடனேயே சொன்னார். தனக்கு தெரிந்த ஒருவர் தாயகத்தில் இருக்கும் ஏறத்தாழ 350 மாணவர்களுக்கு உதவி செய்கின்றார் என்று.

அவருடைய தொடர்பை தரமுடியுமா என்று கேட் டபோது

அவர் இருப்பது 'பிறெம்ரனில்'

அவரைப் பிடிப்பது கஸ்ரம், ஏன் என்றால் அவர் ஒரு டிலிவரி கொம்பனியில் வேலை செய்கின்றார். விடிய மூன்று மணிக்கு வேலைக்குப் போய் பின்னேரம் நாலு மணிக்கு வந்து கொஞ்ச நேரத்தில் படுத்துவிடுவார். சனி, ஞாயிறு தான் லீவு. அந்த இரண்டு நாள்களிலும் இந்த உதவி செய்யும் அலுவலா ஓடித்திரிவார்.

அவர், 'மார்கம்' அல்லது 'ஸ்காபரோ' பக்கம் வரேக்கை அவரை சந்திப்பதற்கு ஒழுங்கு செய்து தருவதாகச் சொல்லி அந்த ஒழுங்கையும் செய்து தந்தார்.

ஒரு ஞாயிறு பின்னேரம் மார்கம் றோட்டில் உள்ள ஒரு மக்டோனாசில் அவரைச் சந்திப்பதற்கு நேரம் தந்தார்.

நான் போக கொஞ்சம் பிந்திபோச்சு - அவர் என்னைப் போல் இரண்டொரு தமிழரை நீரோ அவர் அவரோ நீர் எனக் கேட்டு ஏமாந்து கொஞ்சம் கொதியாகி போக வெளிக் கிடக்கேக்கை தான் நான் போய் சேர்ந்தேன்.

ஆள் கொஞ்சம் 'மூட் அவுட்டாத்தான்' இருந்தார்.

'பிந்தி வந்ததுக்கு மன்னியுங்கோ' என்று சொல்லி ஆளைக் "கூல்" படுத்த முயற்சித்தேன்.

ஒரு தனியாளாய் 350 பிள்ளைகளை படிப்பிப்பது என் பது பெரிய ஆச்சரியமான விடயம் என்று நான் சொல் லப்போக

"ஆர் சொன்னது நான் தனியாக இப்பணியை செய்கின் றேன் என்று" ஆள் பாய்ஞ்சு விழுந்தது.

கிருஸ் அப்படித்தான் உங்களைச் சொல்லி அறிமுகப் படுத்தினார் என்ற போது, அவர் அப்படித்தான் கதைப்பார். இது பலபேர் பங்குபற்றுகின்ற விடயம். நான் பெரிய பணப்பலமோ கல்விப்பலமோ இல்லாத சாதாரண மனிதன்.

இயல்பாக மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என் கிற குணத்தைத் தவிர்த்துப் பார்த்தால் ஒரு சாதாரண மானவன்.

ஆனால் இந்த விடயத்தில் மாட்டுப் பட்டு இதற்கா கவே வாழ வேண்டும் என்றும் இதுவே என் வாழ்வின் இலட்சியமுமாய் போயிற்று. -

இப்போ ஆள் கொஞ்சம் தணிந்து போயிற்று. அவரே போய் இரண்டு கோப்பி வேண்டிவந்து ஒரு ஒதுக்குப் புறமான மூலையில் குந்தினோம்.

உங்களுக்கு ஏதாவது அமைப்புப் பின்புலம் இருக்கோ என என் முதல் கேள்வியைக் கேட்டேன்.-

அப்படியொரு அமைப்பு பின்புலம் ஒன்றும் இல்லை. தனிப்பட்ட விதமாகத்தான் தான் உதவி செய்பவர்களை அணுகுகின்றேன். என்னில் நம்பிக்கை உள்ள நண்பர்கள் எனக்கு பல்வேறு விதமாக உதவிகள் செய்கின்றார்கள் என்றார்.

ஒரு வசதிக்காகவும், பதிவுக்காகவும் ஒரு ஊர் அமைப் புப்பெயரை பாவிக்கின்றேன். அதைவிட லண்டனில்

**பாடசாலை மாணவர்கள் (2014 – 2019)**

| | |
|---|---|
| 2014 | 139 |
| 2015 | 166 |
| 2016 | 202 |
| 2017 | 232 |
| 2018 | 234 |
| 2019 | 247 |




**பல்கலைக் கழக மாணவர்கள் சார்ந்துள்ள துறைகள் (2019)**

| துறை | மாணவர் எண். |
|---|---|
| மருத்துவத்துறை | 08 |
| பொறியியற்றுறை | 12 |
| முகாமைத்துவத்துறை | 04 |
| கணினியியல் | 02 |
| விஞ்ஞானத்துறை | 03 |
| கலைத்துறை | 02 |
| மொத்தம் | 31 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற ஒர்அமைப்பும் எங்களுக்கு பக்கபலவமாக இருக்கின்றது - என

அப்ப கனடாவில் இதற்கு அமைப்பு இல்லையோ என அமைப்பு என்று இல்லை அமைப்புக்கள் தாற பலத்தை விட தனிமனிதர்களாக சில அருமையான நண்பர்கள் இதை தாங்கும் தூண்களாக தங்கள் பெயர் வெளியில் தெரியாமல் உதவி செய்கின்றார்கள்.

சரி, நீங்கள் பணம் சேர்த்து அனுப்புகின்றீர்கள் அதை எப்படி ஊரில் சரியானவர்களுக்கு பங்கிடுகிறீர்கள் என்று? நான் பேசமுதலே இடைமறித்து -

அதுதானே முதல் சொன்னேன் நான் இதில் ஒரு கருவி மாத்திரம் உண்மையாய் இயங்குபவர்கள் தாயகத்தில் தான் இருக்கின்றார்கள். அவர்கள் சம்பளத்துக்கு வேலை செய்பவர்களோ என நான் வாய் துறக்க, வசனம் சொல்லி முடிய முன்னரே இல்லை இல்லை. ஆறு ஏழு பேர் கொண்ட ஒரு தன்னார்வ மனிதர்கள்- உண்மையாய் சமுகத்தில் அக்கறை கொண்டவர்கள் தங்களுக்கு எந்த பிரையோசனமும் இல்லாமல் இதை இயக்குபவர்கள் அவர்கள் தான்.

முன்னாள் ஆசிரியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் என தானாய் சேர்ந்த அந்த உபகாரிகள் தான் இந்த 350 மாணவர்களின் கல்விக்கு வழிசெய்பவர்களாக இருக்கின்றார்கள் என்றார்.

உங்களின் கல்விக் கொடையில் சேருவதற்கு என்ன தகுதியைப் பார்க்கின்றீர்கள்? என -

திறமை, வறுமை இந்த இரண்டும் தான் எங்களுடைய அளவீடு-

அதைத்தான் ஊரில் உள்ள அந்த குழு அளவுகோலாய் வைத்து மாணவர்களை தெரிவு செய்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்கின்றது. திறமையான மாணவர்கள் வறுமையின் காரணமாக கல்வியை நிறுத்தக்கூடாது என்பதே அவர்கள் நோக்கம்.

வறுமை எங்கள் கல்வியை அழிக்கக்கூடாது. அதுவும் யுத்தத்திற்கு பிறகு சமூகம் தலைகீழாக போன இந்த நேரத்தில் இது முக்கியமாக எங்களுக்குப் பட்டது.

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போது நான் குறுக்கிட்டு உங்கடை முழுப்பெயர் என்ன என்று கேட்டபோது, அதைக்கேட்டு என்ன செய்யப் போறீங்கள். அதை விட்டு விட்டு நாங்கள் செய்கின்ற இந்த வேலையை யாரும் நல்லவர்கள் கண்ணுக்கு புலப்படச்செய்தால் நல்லது. வாய்ச் சொல்லில் வயிறு நிரப்புவர்களை தவிர்த்து பெரிய விளம்பரங்களை விரும்புவர்களை விட்டு இச்செய்தி நல்ல மனிதர்களை அடைந்தால் நல்லதுதான்.

திரும்பவும் சொல்கின்றேன் நான் இதில் சிறிய கருவி, ஒரு இணைப்பாளன். என்ரை பெயரைத் தவிர்த்து விடுங்கள் என்றார்.

உங்கள் உதவிகளையும் திட்டங்களையும் கொஞ்சம் விபரியுங்கள் என்று கேட்டபோது-

கொஞ்சம் “றிலக்ஸ்” ஆகி உரையாடத் தொடங்கினார்.

ஏறத்தாழ 350 மாணவர்கள் உதவி பெறுகின்றார்கள். இது எட்டாவது வருடம், மாதம் கிட்டத்தட்ட ஐந்து லட்சம் இலங்கை ரூபா செலவாகிறது.

5ஆம் வகுப்புத் தொடங்கி பல்கலைக்கழகம் வரை இந்த உதவி கிடைக்கின்றது.

திறமை, வறுமை இதை அடிக்கோடாக வைத்து அளவிட்டு எங்களால் முடிந்த உதவியைச் செய்கின்றோம்.

உதவிபெற வேண்டிய திறமையான மாணவர்கள் பட்டியல் நீளமானது.

எங்களுக்கும் பல நெருக்கடிகள் இருக்கின்றன குறிப்பாக பணம் என்றார்.

நான் ஆச்சரியத்துடன் உங்கள் உதவியில் இருக்கும் பல்கலைக்கழக மாணவர்களைப் பற்றிச் சொல்லுங்கள் என்றேன்.

50 மாணவர்களுக்கு மேல் பல பல்கலைக்கழகங்களில் இருக்கின்றார்கள்.

ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாணவனுக்கும் மாதம் 5000ரூபா வழங்குகின்றோம். ஏறத்தாழ 10 வைத்திய மாணவர்கள் 12 பொறியியல் மாணவர்கள், 10 கலைப்பிரிவு மாணவர்கள் மிகுதி பல்வேறு பிரிவுகள் என்றார். ஒவ்வொரு மாதமும் இரண்டாம் திகதிக்குப் பிந்தாமல் அவர்கள் பணம் வங்கி மூலம் அவர்களுக்குக் கிடைக்கும்.

மற்ற மாணவர்களுக்கு எப்படி என்று கேட்டபோது -

நாங்கள் இதை 5ஆம் வகுப்பில் தொடங்குகின்றோம். 5ஆம் வகுப்பில் திறமைச் சித்தி பெற்று வறுமையில் இருக்கும் மாணவர்களை தேடிப்பிடித்து அவர்கள் வறுமையையும் திறமையையும் அவர்கள் கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர்களின் சிபாரிசுடனும் கிராம விதானைமாரின் உதவியுடனும் எங்கள் திட்டத்தில் இணைக்கின்றோம். 5ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் அவர்கள் பள்ளிக்கூடத்திலேயே மாதம் முதலாம் திகதியே பணத்தை சேர்பிப்போம்

6ஆம் வகுப்புத் தொடக்கம் 12ஆம் வகுப்பு வரை - உதவிசெய்யும் தொகை கூடிக்கொண்டு போகும்.

இதுகள் பற்றி மேலும் நீங்கள் அறிய வேண்டும் என்றால் இலங்கையில் இதற்கு தங்களை அர்ப்பணித்து வேலை செய்யும் அந்த தன்னார்வ தொண்டர்களின் தொலைபேசி இலக்கத்தைத் தருகின்றேன் என்றார்.

நான் அதற்கு பதில் சொல்லாமல் பணத்தைத் தவிர வேறு என்ன உதவிகள் செய்கின்றீர்கள் என்ற போது-

சைக்கிள் இல்லாத மாணவர்களுக்கு சைக்கிள்களும் - கணனி இல்லாத மாணவர்களுக்கு கணனியும் இதைத் தவிர புத்தகங்கள், கொப்பிகள், உடுப்புகள் எனக் முடிஞ்சதுகளை செய்கின்றோம் என்றார்.

எனக்குப் பெரிய ஆச்சரியமாக இருந்தது. எங்கிருந்து பணத்தைக் கண்டுபிடிக்கின்றீர்கள் ஒரு தடவை செய்யிற விடயம் இல்லை. ஆறு வருசமாய் செய்கின்றீர்கள் என்கிறீர்கள் என -

அவர் சிரித்துக்கொண்டு இன்னும் நல்ல மனிதர்கள் உலகத்தில் இருக்கின்றார்கள் என்றார்.

லண்டனில் எங்கள் உறவுகள் மூலம் லண்டன் வாழ் தமிழர்கள் கொஞ்சம் பேர் நிறைய உதவி செய்தார்கள். இப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் செய்கின்றார்கள். அதைவிட கனடாவில் மனம் கனிந்த பல மனிதர்கள் தாங்களாகவே உதவிசெய்கின்றார்கள். நான் யாரையம் கெஞ்சிக்கேட்டோ வற்புறுத்தியோ ஒரு நாளும் உதவி கேட்கவில்லை. பெரும்பாலும் உதவி செய்பவர்கள் தானாய் சேர்ந்த கூட்டம்தான் என்றார்.

ஏன் நீங்கள் இதுபற்றி விளம்பரம் செய்வதில்லை சில அறிவித்தல்களை செய்தால் கூட உங்களுக்கு மேலும் சில உதவிகள் கிடைக்கும் அல்லவா என -

உண்மைதான், ஆனால் பெரிய விளம்பரங்கள் செய்து ஆர்ப்பாட்டம் செய்தால் அதால் தீமைகள் தான் வரும் என மற்றவர்களின் அனுபவங்கள் எனக்குப் பாடமாய் இருக்கென்றார்.

நான் உங்களைப் பெரிதாக மினக்கெடுத்தவில்லை, கடைசியாய் ஒரு கேள்வி உங்களுக்கு இப்படியொரு எண்ணம் வரக் காரணம் என்ன? எனக் கேட்டேன்.

நான் மிகச் சாதாரண ஆள், சாதாரண படிப்பும், பெரிய பணப்பலமோ, பதவிகளோ இல்லாதவன், இங்கு வந்து உடல் உழைப்பை மூலதனமாகக் கொண்டு ஓரளவு முன்னுக்கு வந்தவன்.

*2009*ஆம் ஆண்டு எனக்கு தனிப்பட்ட விதமாகவும் பெரிய மனச்சோர்வு ஏற்பட்டது. என் சமூகத்தை நினைக்கும் போது பெரிய கவலை சூழ்ந்தது. இங்கும் தனிப்பட்ட ரீதியாகவே சில இழப்புக்கள் நடந்தன.

*2010*ஆம் ஆண்டு தொடக்கத்தில் விட்டு விட்டு வந்த உறவுகளையும் வீட்டையும் பார்க்க ஊருக்குப் போறேன்.

என்ரை வீடு இருந்த இடம் தெரியவில்லை. மரங்களும் பற்றைகளும் வீட்டை சூழ்ந்து வளர்ந்திருந்தன. நான் என் பால்ய நண்பனோடைதான் வீட்டைப் போய் பார்த்தேன். அந்த நண்பன்தான் என் பெரிய உறவும் உதவியும். அவன் வசதியான ஆள். வீட்டைச் சுற்றி சுற்றிப் பார்த்தேன். அந்த குந்தில் தான் அம்மம்மா இருப்பா. அம்மா நித்தம் கூட்டும் முற்றத்தில் காஞ்சோண்டி வளர்ந்திருந்தது. நானும் தம்பிமாரும் விளையாடும் திடலை மூடி மறைத்துக்கிடந்தது.

ஏனோ நான் விக்கி விக்கி அழுதேன். நண்பன் திடுக்கிட்டுப் போனான். டேய் அழாதையடா இப்ப உனக்கென்ன வேணும்? நீ இரண்டொருமாதம் நிற்பாய்தானே அதுக்குள்ளே இந்தவீட்டையும் வளவையும் முன்பு இருந்த மாதிரி ஆக்கிக்காட்டுகிறேன் என்று சொன்னதோடு நில்லாமல் அடுத்நாளே எட்டுப் பத்து பேரைக் கொண்டு வந்து வேலையைத் தொடங்கி விட்டான்.

நானும் ஒவ்வொரு நாள் காலையும் வீட்டிற்கு வந்து வேலைகாறருடன் வேலைகாறராய் நின்று உதவி செய்தேன்.

இரண்டு மூன்று இளம் பொடியன்களும் தந்தைமாரும் வேலை செய்து கொண்டு இருப்பார்கள்.

அப்படியொரு நாளில் என் பழைய நண்பன் ஒருவன் இப்போ பாடசாலை அதிபராக இருப்பவன் என்னைத் தேடிவந்தான். அவனைக் கண்டவுடன் வேலை செய்து கொண்டிருந்த ஒரு பையன் ஓடிப்போய் ஒரு மரத்துக்குப் பின்னாலை ஒழித்தான். என்ரை அந்த தலைமையாசிரிய நண்பன் அவனைக் கண்டுவிட்டான். அவர் என்னுடன் கதைக்கிற மாதிரி கதைத்துக்கொண்டு அந்தப் பையன் ஒளித்த மரத்துக்குப் பின்னால் போய் அவனைப் பிடித்துவிட்டார்.

ஏன்ரா பள்ளிக்கூடம் வாறாய் இல்லை எனக் கேட்க அந்தப் பையனின் தகப்பன் அவனை விடுங்கோ மாஸ்ரர். அவன் பள்ளிக்கூடம் வந்தால் நாங்கள் எட்டுப்பேர் பட்டினி கிடக்க வேணும்.

அதைவிட படிப்பிக்கவோ அதுக்கு செலவழிக்கவோ எனக்கு வசதியில்லை - எனச் சொல்ல தலைமை ஆசிரியரும் ஏதோ சொல்லி வாக்குவாதப்பட்டினம்.

நான் தலையிட்டு என்ன பிரச்சினை என்றபோது தலைமையாசிரியர்- இவனைத் தேடித் திரிந்தநான். நல்லாய்ப் படிக்கக்கூடிய பெடியன். டொக்ரராயோ இஞ்சினியராவோ வரவேண்டிய பையன். வறுமையாலை கூலிவேலைக்கு திரியிறான் என்றார்.

தகப்பனைப் பார்த்தேன்! அவர் தலை கவுண்டு கொண்டு - தம்பி எங்களுக்கு பெரிய வறுமை, போரால் எங்களுக்கு பெரிய பாதிப்பு, இப்போதுதான் அது முடிந்து எப்போதாவது கூலி வேலையாவது கிடைக்குது என்று திரியிறோம். படிச்சு உத்தியோகம் போற சூழல் எங்களுக்கு இல்லை. எங்கடை சாதியிலை யாரும் படிச்சு பெரிதாக வந்ததும் இல்லை என, எனக்கு கோபம் வந்து அப்படி என்னென்று அண்ணன் சொல்லுவாய் என்று சொன்ன நான் ஏதோ உணர்ச்சி வசத்தால் சரி நான் உங்களுக்கு உதவி செய்கிறேன். மாதம் மாதம் நான் ஆயிரம் ரூபா தாறேன். அவனை பள்ளிக் கூடம் அனுப்புங்கள் இந்த ஆயிரம் ரூபாவை இந்த அதிபரே மாதம் மாதம் உனக்குத் தருவார் என்றேன்.

அந்தப் பொடியனின் முகம் மலர்ந்தது.

இது ஒரு சம்பவம் .

இன்னொரு ஆசிரிய நண்பருடன் ஒரு *(Fancy)* பான்சி கடைக்கு ஏதோ ஒரு அலுவலாய் போனேன். அங்கையும் ஒரு பொம்பிளைப் பிள்ளையைக் கண்டுவிட்டு அந்த ஆசிரியர், நீ என்ன இந்தக் கடையிலையே வேலை செய்கிறாய் என, அந்தப் பெண்ணும் ஓம் சேர். நாளுக்கு முன்னூறு ரூபா தருகினம் ஊரோடை வேலை பெற்றோருக்கு பெரிய உதவியாய் இருக்கு என்றார்!

பத்தாம் வகுப்பு பரீட்சை முடிவு வந்தபிறகும் இப்படியோ வேலை செய்யப் போகிறாய் என்றுவிட்டு இவளுக்கு எல்லாப்பாடங்களுக்கும் (A) கிடைக்கும் - எனச் சொல்லிக்கொண்டு அவளைப்பார்க்க “அப்பா சொல்லுறார் படிச்சது காணும்” என்று அந்தப் பெண் சொன்னா. ஆசிரியர் நண்பர் கவலையோடு வெளியே போய்விட்டார்.

இரண்டு மூன்று நாள்களுக்குப் பின் நான் அக்கடைக்கு அப்பெண்ணைத் தேடிப்போய் கதைத்து அவளின்ரை பெற்றோரைக் கண்டுபிடித்து மாதம் ஆயிரம் நான் தருவேன் அவளைத் தொடர்ந்து படிப்பிக்க அனுமதிக்க வேணும் என்றேன்.

இப்படியே நின்ற இரண்டு மாதங்களும் நாலு ஐந்து மாணவர்களுக்கு வாக்குறுதி கொடுத்து -

அதை இங்கு வந்து என் உறவினருக்கும் நண்பர்களுக்கும் சொல்ல அவர்களுக்கு நாங்களும் உதவி செய்கிறோம் என உதவிகள் செய்ய அடுத்தவருசம் ஊருக்குப்போனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைகொண்ட, வறுமையால. கல்வியைத் தொடர முடியாத மாணவர் குடும்பங்களை சந்திக்க நேர்ந்தது. சமூக அக்கறை உள்ள நண்பர்கள் சேர்ந்து உருவாக்கிய இந்த கல்விக் கொடை இன்று பெரிய ஆலமரமாய் வளர்ந்து விட்டது.

வருசத்தில் ஒரு தடவை மாத்திரம் ஊரில் இதற்காக ஒரு விழா செய்வோம், அந்த விழாவில் நிறைய மாணவர்களும் பெற்றோர்களும் வருவார்கள், பெரிய கல்விமான்களின் சமூக சேவகர்களின் உரைகளோடு மாணவர்களுக்கு மேலும் சில பரிசளிப்புகளும் நடைபெறும் என்று சொல்லி,

கனடாவிலும் இலண்டனிலும் ஊரிலும் என்மேல் இருக்கின்ற நம்பிக்கையால் இது தொடர்ந்து நடைபெறுகின்றது என்னைவிட இரண்டு மூன்று நண்பர்கள் இதிலை முக்கியமானவர்கள். அவர்கள் பெயரைச் சொல்ல அவர்களே விரும்பமாட்டார்கள். என்று அவர் தன்னோடு கொண்டு வந்திருந்த ஒரு கோப்பினை எடுத்து அதில் இருக்கும் மாணவர்கள் சிலரின் படங்களையும், அவர் செய்த விழா படங்களையும் காட்டினார். அந்தக் கோப்பினை என்கையில் எடுத்துப்பார்க்கும் போது -

அவர் முன்பக்கத்தில் எழுதி வைத்திருக்கும் ஒரு குறிப்பு கண்ணில் பட்டது.

*"Education is the most powerful weapon which you can use to change the world" - Nelson mondela* •

# அஞ்சலிகள்

- திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் எஸ். பி. ஜனநாதன் 14. 03. 2021
- மூத்த இசைக் கலைஞர் சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை 17. 03. 2021
- கலைஞர் பரதன் இராஜநாயகம் 18. 03. 2021
- குணச்சித்திர நடிகர் வெங்கடேஷ் 22. 03. 2021
- எகிப்து பெண்ணிய எழுத்தாளர், மருத்துவர் நவல் எல் சதாவி 24. 03. 2021
- தமிழறிஞர், பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் 26. 03. 2021
- மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் பேரருள்திரு. இராயப்பு யோசப் ஆண்டகை 01. 04. 2021
- திருமறைக் கலாமன்ற ஸ்தாபக இயக்குநர் அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகள் 01. 04. 2021
- மொழியியல் அறிஞர் ஹெச். பாலசுப்பிரமணியன் 02. 04. 2021
- யாழ். ஒலி, ஒளிபரப்புக் கலையின் முன்னோடி தேவசகாயம் ஆசீர்வாதம் (குணம்) 02. 04. 2021
- கவிஞர் நீலாபாலன் (கல்முனை பூபால்) 05. 04. 2021
- இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி வேலாயும் சிவஞானசோதி 05. 04. 2021
- மூத்த இசையமைப்பாளர் கே. எம். ஸவாதுஹிர் 07. 04. 2021
- நகைச்சுவை நடிகர் விவேக் (சின்னக் கலைவாணர்) 17. 04. 2021
- பிரபல ஹிந்தி இசையமைப்பாளர் ஷர்வான் 23. 04. 2021
- திருக்குறளை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்த தமிழறிஞர் பிரான்சுவா குரோ 26. 04. 2021
- ஆய்வாளர் பெ. சு. மணி 27. 04. 2021
- திரைப்பட இயக்குநர், கட்டுரையாளர் தாமிரா 27. 04. 2021
- மலையாள சிறுவர் இலக்கிய ஆளுமை லீலா நம்பூதிரிபாட் (சுபமங்களா) 28. 04. 2021
- குணச்சித்திர நடிகர் செல்லத்துரை 29. 04. 2021
- மூத்த கலைஞர், இலக்கியவாதி கனக மகேந்திரா 30. 04. 2021
- திரைப்பட இயக்குநர், ஒளிப்பதிவாளர் கே. வி. ஆனந்த் 30. 04. 2021
- 'தமிழ் மண்' பதிப்பக நிறுவுனர், பதிப்பாசிரியர் கோ. இளவழகன் 04. 05. 2021
- பழம்பெரும் நடிகர், பாடகர் டி. கே. எஸ். நடராஜன் 05. 05. 2021
- நகைச்சுவை நடிகர், ஓவியர் பாண்டு 06. 05. 2021
- பேராசிரியர், மார்க்சிய திறனாய்வாளர் செ. போத்திசெட்டி 11. 05. 2021
- கரிசல் இலக்கியத்தின் பிதாமகர் மூத்த எழுத்தாளர் கி. ராஜாநாராயணன் (கிரா) 17. 05. 2021
- சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ஜம்பு மகேஸ்வரக் குருக்கள் 24 05. 2021
- கோவையில் 'யாழ் நூலகம்' நடத்தி வந்த துரை மடங்கன் 25. 05. 2021
- கவிஞர், எழுத்தாளர் மு. பஷீர் 28. 05. 2021
- நடிகர், சினிமா விமர்சகர் வெங்கட் சுபா 28. 05. 2021
- திருமறைக் கலாமன்ற மூத்த கலைஞர், நாட்டுக்கூத்துப் பிரிவுப் பொறுப்பாளர் அண்ணாவியார் அ. பேக்மன் ஜெயராசா 28. 05. 2021
- 'காலக்குறி' இதழின் ஆசிரியர் ஜபருல்லாகான் (கான்) 29. 05. 2021
- கணனித் தமிழ் வளர்த்த பேராசிரியர் மு. ஆனந்தக் கிருஷ்ணன் 29. 05. 2021
- யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளர் திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தகுமாரசாமி 29. 05. 2021
- ஒலி ஒளி அமைப்பாளர் யோசப் விக்ரர் ஜெயராஜா (றோஸ் ஆட்ஸ்) 03. 06. 2021
- கன்னட தலித் கவிஞர் பேராசிரியர் சித்திலிங்கையா 11. 06. 2021
- ஓவியர் இளையராஜா சுவாமிநாதன் 07. 06. 2021
- இசைநாடகக் கலைஞர் செ. இரத்தினகுமார் 17. 06. 2021
- மொழிபெயர்ப்பாளர் வின்சன் புளோரன்ஸ் யோசப் (அருளாளன்) 27. 06. 2021
- பழம்பெரும் நடிகை ஜெமினி ராஜேஸ்வரி 27. 06. 2021
- திருமறைக் கலாமன்ற கலைஞர் யோ. யூட் மரிய செல்வம் (சாள்ஸ்) 03. 07. 2021
- மனித உரிமைப் போராளி, இயேசு சபைக் குரு
- அருட்பணி ஸ்ரனிஸ்லோஸ் லூர்து சாமி (ஸ்டான் சுவாமி) 05. 07. 2021
- பழம்பெரும் ஹிந்தி நடிகர், திரைப்படத் தயாரிப்பாளர் திலீப்குமார் 07. 07. 2021
- மூத்த மிருதங்கக் கலைஞர் க. ப. சின்ராசா 21. 07. 2021
- நாட்டுக்கூத்து அண்ணாவியார் கி. கிறிஸ்தோப்பர் 24. 07. 2021
- மூத்த தமிழறிஞர், தமிழ் இலக்கணத் தொன்மம் குறித்த ஆய்வாளர் புலவர் இரா. இளங்குமரனார் 25. 07. 2021
- சக்தி, சிரஸ, MTV ஊடகக் குழுமங்களின் உரிமையாளர் ஆர். ராஜமகேந்திரன் (கிளி) 25. 07. 2021
- நாட்டுக்கூத்து அண்ணாவியார் முடியப்பு அருள்பிரகாசம் 29. 07. 2021
- எழுத்தாளர் சி. பன்னிர் செல்வம் 31. 07. 2021
- எழுத்தாளர், கலைஞர் மாத்தளை கார்த்திகேசு 06. 08. 2021


சமூகப் பணியாளர்களாக, படைப்பாளிகளாக, கலைஞர்களாக வாழ்ந்து மறைந்த இவர்களுக்கு 'கலைமுகம்' தனது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நினைவுச் சின்னம் ஒரு வரலாற்றுத் தொடுகல்



அ. அஜந்தன்

**நி**னைவுச் சின்னமென்பது ஒரு நபரின் அல்லது மக்களின் அல்லது ஒரு சோக நிகழ்வின் நினைவை உயிர்ப்போடு வைத்துக்கொள்வதற்கான சிலையாக அல்லது தூணாக அல்லது கட்டடம் போன்ற ஒரு பௌதீக அமைப்பாக அமையப் பெறலாம். சிலரது நினைவுகளை விடுமுறை நாட்களாக அறிவித்தும் அவர்களை நினைவுகூருவது உண்டு. நினைவுச் சின்னங்கள் என்பன அந்த இனம் அல்லது நாடுசார்ந்த வரலாற்றுத் தொடுகல்களாக அமைந்துவிடுகின்றன. கடந்தகாலங்களை நிகழ்காலத்துடன் இணைக்கும் ஒரு நினைவுப் பாலமாகவும் இவை திகழ்கின்றன. இறந்தவர்களின் ஆத்மாக்களை தத்தமது கலாசார, ஆன்மீக விதிமுறைப்படி நினைவுகூருவது மட்டுமன்றி அவர்களுக்கு இன மத வேறுபாடற்று மதிப்பளிக்கவும் இந்த நினைவுச் சின்னங்கள் பயன்படுகின்றன.


இந்த நினைவுச் சின்னங்கள் புகழ்பூத்த மனிதர்களின், போரில் கொல்லப்பட்ட மக்களின், போரில் பங்குகொண்ட வீரர்களின் அல்லது அனர்த்தங்களில் கொல்லப்பட்ட மக்களின் நினைவுகளை மீட்டுத்தருவதோடு எதிர்காலச் சந்ததிக்கு அதன் வரலாற்று அம்சத்தை நினைவுபடுத்தும் இடமாகவும் மாறிவிடுகின்றன. இவ்வாறான நினைவுச் சின்னங்கள் அல்லது நினைவாலயங்கள் உயிர் நீத்தவர்களின் உறவினர்களுக்கும் அவர்கள் சார்ந்த சமூகத்திற்கும் பலவகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

- அன்போடு நல்வாழ்வு வாழ்ந்தவர்களின் ஆத்மாக்களிற்கு நித்திய அஞ்சலி செலுத்தக்கூடிய இடமாக அமையும். பொதுவாக நடைபெறும் மரணங்களின் போது அவர்களின் உடலை புதைத்த இடத்தில் அல்லது தகனம் செய்த இடத்தில் நினைவாலயம் அமைப்பர் அல்லது கிரிகை செய்வர். ஆனால் போர் போன்ற நிகழ்வில் தொகையாக கொல்லப்பட்டவர்களுக்கு அவ்வாறு அமைவதில்லை. எனவே அவர்களுக்காக பொதுவான மரபுவழிக் கலையுருவாக நினைவுச் சின்னங்கள் அமையப் பெறுகின்றன.
- எப்பொழுதுமே இவ்வாறான நினைவிடங்கள் அமைதியான சூழலாகவும், எப்பொழுதும் வந்துசெல்லக்கூடியதாகவும் அமையும். அவை வெறும் சீமென்ற் தூண்களாகவோ, கலைக்கட்டுமாணமாகவோ, கட்டடமாகவோ அமையப்பெற்றபோதிலும் அது ஆத்மாக்களின் கல்லறைகளாகவே போற்றப்படுவதால் அந்த நினைவிடம் புனிதமானதாகவும் அமைதியானதாகவும் அமையவேண்டும். உறவினர்கள் இறந்தவர்களின் நினைவுகளுடன் அவர்களுடன் இருக்கும் உணர்வை இந்த இடம் பிரதிபலிக்கும்.
- நினைவுச் சின்னங்கள் எதிர்காலச் சந்ததிக்கு கடந்தகால பதிவுகளைக் கொண்டுசெல்லும் நிரந்தரக் கட்டமைப்பாக அமைகின்றன. ஒவ்வொரு நினைவுச் சின்னத்தின் பின்னும் ஒரு நீண்ட சமூகத்தின் வரலாறு பொறிக்கப்பட்டிருக்கும். அதில் அமைக்கப்பட்ட சிலைகளின் கலைத்துவம் அல்லது பொறிக்கப்பட்டிருக்கும் பெயர்களும் நிகழ்வும் எதிர்காலச் சந்ததிக்கு கடந்த காலத்தின் பதிவுகளை விட்டுச்செல்லுகின்றன.
- ஒரு சமூகத்தின் கலையையும் வரலாற்றையும் பறைசாற்றும் படைப்பாகவும் அமைகின்றன. நாளுக்குநாள் வளர்ச்சிபெறும் விஞ்ஞான, நாகரிக உலகத்தில் கடந்த கால கலைவடிவங்களையும் அவற்றின் உணர்வுபூர்வமான எண்ணங்களையும் அவர்களின் முடிவுவரையான வாழ்வியலையும் காலம் கடந்தும் காண்பிக்கும் வல்லமை படைத்தவை இந்த நினைவுச் சின்னங்கள்.
- இறுதிச்சடங்கின் கிரிகைகள் முதல் நினைவுச் சின்னங்கள் அமைப்பது வரையிலான மனிதனது செயல்கள் அனைத்தும் தத்தமது சமய கலாசார முறைப்படியான நினைவுகூரும் செயல்களாகவே கருதப்படுகின்றன. பலர் தமது இறந்துபோன உறவுகளுக்கான தமது சமய ரீதியான கிரிகைகளையோ முறைப்படியான இறுதிச் சடங்கையோ செய்யமுடியாத சூழ்நிலையில் இவ்வாறான நினைவுச் சின்னங்களில் அவர்களது நினைவு தினங்களில் விளக்கேற்றி அல்லது மெழுகுவர்த்தி ஏற்றி தமது கடமைகளை நிறைவேற்றி இறந்த ஆத்மாக்களின் ஈடேற்றத்திற்கு பிரார்த்திக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நினைவுச் சின்னங்கள் தப்பிவாழும் மக்களின் மன வெழுச்சிகளின் வெளிப்பாட்டு மையங்களாக பணியாற்று கின்றன. போர் போன்ற பேரிடர் நிகழும்பொழுது பலமக்கள் கொல்லப்படுகின்றனர், பலர் அங்கவீனமான வர்களாகின்றனர், பலர் காணாமல் போகின்றனர், ஏனை யவர்களே உயிர்பிழைத்து வாழ்கின்றனர். உயிர் பிழைத்து வாழ்பவர்கள் பல்வேறுபட்ட உணர்வுகளின் பிடியிலும் இறந்தவர்கள், காணாமற்போனோரின் பிரிவுத்துயருடன் மீதிக் காலங்களை கழிக்கின்றனர். அவர்களின் மனவெழுச்சிகளுக்கு இந்த நினைவுச் சின்னங்கள் ஆறுதலளிக்கின்றன.

- இழப்புத்துயரைக் குறைக்கும், குணப்படுத்தும் செயற் பாடாக அமைவதோடு இறந்தவர்களுக்கு நிரந்தரமான ஓய்விடமாக மாறிவிடுகிறது. உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அல்லது அவர்கள் சார்ந்த சமூகத்தினர் எப்பொழுதெல்லாம் இறந்தவர்களின் நினைவுகள் வருகின்றதோ அப்பொழுதெல்லாம் அந்தநினைவிடத்திற்குச் சென்று தமது மனஅழுத்தத்தை தணித்து ஆறுதல் அடைவது அவர்களை இயல்பு வாழ்விற்கு இட்டுச்செல் லும்.



- நினைவுச் சின்னங்கள் சிறு நிலப் பரப்பில் கற்களால் கட்டப்பட்டிருப் பினும் அவை அழிக்கப்பட்ட அத் தனை மனிதர்களதும் ஆத்மாக்களும், சிதறிக்கிடக்கும் பல்லாயிரக்கணக் கான உறவினர்களின் உணர்வுகளும் சங்கமிக்கும் மையப் புள்ளியாக அமைவதால் அதிக சக்தி வாய்ந்த தாகவும் புனித பூமியாகவும் நாம் பார்க்கவேண்டும். அனைவரும் கூடி நிகழ்த்தும் கூட்டுப்பிரார்த்தனை போன்று இந்த நினைவுச் சின்னங் களில் நினைவுதினங்களில் ஒன்று கூடி விளக்கேற்றுவதும் நினைவு கூரு வதும் பெரும் ஆறுதலை வழங்கும்.

- காலாகாலமாக நினைவுகூரும் பண்பாடு வளர்ந்து கொண்டே வருகின்றது. இந்தப் பண்பாடு ஒரு சமூ கத்தை உணர்வுரீதியாக வலுவாக்குவதோடு சமூகத்தின் ஒருபகுதியாகவும் மாறிவிட்டது.

இவ்வாறான நினைவுச் சின்னம் அமைக்கும் பண்பாடு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வரு கின்றது. எகிப்தின் பிரமிட்டுகள், *1914 - 1918* வரையான காலப்பகுதிகளில் நடைபெற்ற 1ஆம் உலகப்போரில் மரணித்தவர்களுக்காகவும், *1939 -1945* வரையான காலப்பகுதியில் நடைபெற்ற 2ஆம் உலகப்போரில் கொல்லப்பட்டவர்களுக்காகவும் நினைவுச் சின்னங்கள் கட்டப்பட்டுள்ளன. இங்கிலாந்தில் புனித மரியாள் தேவாலயத்தில் *1921* இல் கட்டப்பட்ட நினைவுச் சின் னத்தில் போரில் பங்கெடுத்த 149 பேரின் பெயர்களும் மரணித்த மற்றும் காணாமல்போன 41 பேரின் பெயர்க ளும் பொறிக்கப்பட்டு அவர்கள் நினைவுகூரப்படுகின்றனர். 2ஆம் உலகப்போரின் நினைவுச்சின்னம் அமெரிக்காவில் 2004இல் அமைக்கப் பட்டது. இது 2ஆம் உலகப்போரில் பணியாற்றிய மற்றும் இறந்த போர் வீரர் களையும் பொதுமக்களையும் நினைவு கூரும் இடமாக அமைக்கப்பட்டுள்ளது.

'ரஸ் ஏர் விமானம் 9605'என பெயரி டப்பட்ட விமானம் ரஷ்யாவின் பெட் ரோசாவோட்ஸ் என்ற இடத்திற்கு அருகே பனிமூட்டம் காரணமாக 2011ஆம் ஆண்டு ஜூன் 20ஆம் திகதி விபத்துக்கு உள்ளானது. இந்த விபத்தில் 50 பேர் பலியாகினர். இருவர் உயிர் பிழைத் துக்கொண்டனர். இறந்தவர்களை நினைவு கூரும் முகமாக விபத்து நிகழ்ந்த இடத்திற்கு அருகில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டது.

*1974* தை மாதம் 3ஆம் திகதி முதல் 9ஆம் திகதிவரை நடைபெற்ற நான்கா வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட் டில் 9 தமிழர்கள் கொல்லப்பட்டதை








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சம்பவம் நடைபெற்ற முற்றவெளியில் 9 நினைவுத் தூண்களை உள்ளடக்கி நினைவுச் சின்னம் அமைக்கப் பட்டுள்ளது. இது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டையும் மரணித்த 9 தமிழர்களையும் நினைவூட்டும் வரலாற்றுச் சின்னமாக மாறியுள்ளது. இவற்றைப்போன்றே முள்ளி வாய்க்கால் என்ற குறுநிலப்பரப்பு தமிழர் தாயகத்தின் தவிர்க்க முடியாத நினைவிடமாக மாறியிருப்பதை எவரா லும் மறுக்க முடியாது. நீண்டகால யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் ஒரு குறுநிலப்பரப்பில் கொல்லப்பட்ட இலட் சக்கணக்கான மக்களை நினைவுகூருவதற்காக முள்ளி வாய்க்காலில் சுடரேற்றும் இடமொன்றும், யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் அர்ப்பணிப்போடு தம் இன மக்களுக்கான நினைவுச் சின்னமொன்றும் அமைக் கப்பட்டிருந்தது. முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த மனிதப்பேர வலத்தில் நிகழ்த்தப்பட்ட கொலைகளுக்கு நீதி கிடைக்கப் பெறாததும், இறந்தவர்களின் உடல்களை உறவுகளால் தத்தமது சமயமுறைப்படியும் புனிதமாகவும் அடக்கம் செய்யவோ தகனம் செய்யவோ முடியாமற்போனதும் பல ரது உடலை இராணுவமே இயந்திர வாகனங்களால் குழி தோண்டிப் புதைத்த துர்ப்பாக்கிய நிலையின் தாக்கமும் இன்றுவரை நம் மக்களின் மனக்கூட்டை அழுத்திக்கொண் டிருப்பது கவனத்திற் கொள்ளப்படவேண்டும். இந்தச் சின்னங்கள் மரணித்த மனிதர்களின் ஆத்மாக்களுக்கும் அவர்களின் உறவினர்களுக்கும் ஆறுதலைக் கொடுத்தன.

அண்டை நாடான இந்தியாவின் தஞ்சாவூரில 'முள்ளி வாய்க்கால் முற்றம்' என்ற நினைவேந்தல் மையம் அமைக் கப்பட்டுள்ளது. இலங்கையில் நடைபெற்ற இறுதிப்போ ரின் அவலங்களையும், கொலைக்களமாகக் காட்சியளித்த நிலப்பரப்பையும் சித்திரித்த சிற்பங்கள் மட்டுமன்றி முகாம் களில் முடக்கப்பட்ட மக்களின் ஏக்கம் நிறைந்த முகங்களை யும் முட்கம்பிகளின் பின்பாக சித்திரிப்பது உயிர்பிழைத் தவர்களின் கடந்தகால துன்பியல் வாழ்வை நினைவூட்டு வதாகவும் அமைந்துள்ளது. இவை ஒரு ஒடுக்கப்பட்ட, அழிக்கப்பட்ட சமூகத்தின் வரலாற்றுத் தொடராகவே பார்க்கப்படவேண்டும். அவை காலத்தால் அழிக்கவோ மறக்கவோ முடியாத நினைவலைகளின் சங்கமமாக தோற்றம் பெற்றுள்ளன.


இவ்வாறு உலகின் பல பாகங்களில் வெவ்வேறு அனர்த் தங்களில் கொல்லப்பட்டவர்களின் நினைவுச் சின்னங்கள் அமைப்பதென்பதை சமகால சமூகத்தின் கடமையாகப் பார்க்கவேண்டியுள்ளது. கொல்லப்பட்டவர்கள் பொதுமக் களா, போராளிகளா அல்லது போர்வீரர்களா என்பதற்கு அப்பால் மானிடத்தின் உருவங்களாக பார்க்கப்படுவது அவர்கள் சார்ந்த சமூகத்தின் கடமை.


வோஷிங்டனில் அமைந்துள்ள வியட்நாம் வீரர்களின் நினைவிடத்தை ஆய்வு செய்த உளவியலாளர்கள் இவ்வா றான நினைவுச் சின்னங்கள் தகவல்களைப் பெறுவதற்கும், அவற்றை சேமிப்பதற்கும் பின்பு அவற்றை மீட்டுப்பார்க் கவும் பயன்பெறும் என்கின்றனர். இவற்றை அவர்கள் மூன்று வகையாக வகைப்படுத்துகின்றனர். குறிப்பாக்கம், சேமிப்பு மற்றும் மீட்டெடுத்தல். குறிப்பாக்கம் மற்றும் சேமிப்பு இரண்டும் நினைவுச் சின்னத்தை அமைப்பதைக் குறிக்கிறது. அதேவேளை மீட்டெடுத்தல் என்பது நினைவு கூரும் செயற்பாடுகளோடு தொடர்வுறுகின்றது.

இங்கு இன்னுமொரு விடயத்தையும் நாம் பார்க்க வேண்டும். நினைவுச் சின்னங்கள் கடந்தகால நினைவுகளின் மறுசீரமைப்பாக நினைவுகூருவது என்பது நினைவகம் மற்றும் கட்டடக் கலைகளுக்கிடையிலான இரு திசை உறவை அவற்றின் தூய்மையான வடிவத்தில் பிரதிபலிக்கின்றது. இவ்வாறான நினைவுச் சின்னங்கள் குறிப்பிட்ட சம்பவத்தின் நினைவுச் சுருக்கமாகவும், அதில் இறந்தவர்களை பிரதி நிதித்துவப்படுத்துவதாகவும் அமைந்துவிடுகின்றன. எனவே நினைவுச் சின்னங்கள் எப்பொழுதும் சமூகத்தின் ஆத்மரீதி யான புனித இடமாகவும், வரலாற்றின் தொடுகல்லாகவும், ஆரோக்கியமான சமூகத்தின் அடையாளமாகவும் அமைய வேண்டும். •











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடா மண்ணில்
## தமிழ் இருக்கை
## TAMIL CHAIR

**கொ. ராஜன்**

எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை உலகின் தலைசிறந்த நாடுகளிலுள்ள முதன்மையான பல்கலைக்கழகங்களில் இருக்கை செய்வதற்காக பல தமிழ்ப்பற்றுக் கொண்ட கல்விமான்கள், மொழியியலாளர்கள், ஆய்வாளர்களினால் ஏற்பாடுகள் நடந்தேறி வருகின்றன. அந்த வகையில் கனடா மண்ணில் ரொறன்ரோ உயரிய பல்கலைக்கழகத்திலும் 'தமிழ் இருக்கை' *(Tamil Chair )* செய்வதற்கான சகலவிதமான முன்னெடுப்புக்களில் கனடா திருமறைக் கலாமன்றமும் தனது பங்களிப்பை திறம்பட செய்து முடித்துள்ளது.

கனடா திருமறைக் கலாமன்றமானது கலைச் செயற்பாடுகளில் மட்டுமல்லாது இனம், மதம், மொழி கடந்து நின்று சமூகச் செயற்பாடுகளிலும் மற்றும் எமது எதிர்காலச் சந்ததியினரின் கல்வி மேம்பாட்டிற்கான செயற்பாடுகளிலும் முற்று முழுதாக கரம் கோர்த்து நிற்கின்றமை மனநிறைவைத் தருகின்றது. மன்ற இயக்குநர் தந்தை கலைப்பிதா நீ. மரிய சேவியர் அடிகளாரின் கனவுகளிலும் நினைவுகளிலும் இவை பதியப்பட்டிருந்தன. அவை இத் தருணத்தில் நிறைவேறி இருப்பது எம் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சியை தருகின்ற அதேவேளை அடிகளார் நினைத்தவை சாதனையாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமை மகிழ்வும் நிறைவும் தருகின்ற விடயமாகும்.

எமது தாய் மொழியாம் தமிழ் மொழியை உலகப்புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் 'தமிழ் இருக்கை' செய்வதன் அவசியத்தையும் அதனால் விளையும் நன்மைகள் என்ன என்பதையும் இங்கே சுருக்கமாக குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

ஒரு மனித இனத்தின் பண்பாட்டின் அடையாளமாக விளங்குவது மொழி.மனித வாழ்வின் வழிகளை எமக்கு வகுத்து காட்டி நிற்பதும் மொழி. அதிலும் எம் தாய் மொழியாம் தமிழ் மொழி போல் வேறு மொழிகள் உண்டோ என்று வியக்க வைக்கும் அளவுக்கு பல்வகையான சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது எம் 'தமிழ் மொழி'.

தமிழுக்கும் அமுதென்று பேர் அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்று பாவேந்தர் பாரதிதாசன் உணர்வு ததும்ப தமிழின் சிறப்பை இயம்பி இருக்கின்றார்.

முதலில் எம் தமிழ் மொழிக்கு பிற நாடுகளில் ஏன் இருக்கை அமைக்க வேண்டுமென்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் மறைந்து போயிருக்கும் பல்வேறு விதமான உண்மைகள் புலப்படும். எம் தமிழ் மொழி இன்றோ நேற்றோ தோன்றியதல்ல. மாறாக இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபுகளைக் கொண்டது எம் தமிழ் மொழி. இது தற்போது வழக்கிலிருக்கும் சில செம்மொழிகளில் ஒன்றாகும். இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் மிகவும் நீண்ட இலக்கண, இலக்கிய மரபுகளைக் கொண்டதும் எம் தமிழ் மொழியே.

உலகில் ஆறாயிரத்து எண்ணூற்றி ஒன்பது மொழிகள் தோற்றம் பெற்றிருப்பதாக கூறப்படுகின்றது. ஆயினும் எழுநூறுக்கும் குறைவான மொழிகளால் தான் பேசவும் எழுதவும் முடிகிறது. அதற்குள்ளும் சொந்த வரி வடிவம் கொடுக்கின்ற மொழிகள் நூறு இருக்கின்றன. அவற்றுக்கெல்லாம் ஆறு மொழிகள் மூல மொழிகளாய் திகழ்கின்றன. உலகில் காலத்திற்கு காலம் புத்தம்புது மொழிகள் தோன்றி வளர்ந்து மறைந்துள்ளன என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு தோன்றி மறையும் பல்வேறுபட்ட மொழிகளுக்கிடையே பழங்காலத்தில் தோன்றி இலக்கியச் செல்வாக்குடன் இன்றும் வாழ்ந்து வருகின்றது எம் தமிழ் மொழி. சீன மொழிகளுக்கும் ஏனைய அனைத்து மொழிகளுக்கும் தாய் மொழியாய் விளங்குவது எம் தமிழ் மொழியே என்று கூறினால் அது மிகையாகாது.

தமிழ் என்றால் 'இனிமை' தமிழைப்போல் தரமுள்ள காத்திரமான வளமிக்க வார்த்தைகள் நிறையவே இருக்கின்ற ஒரே மொழி எங்கேயுமே கிடையாது என்று கூறப்படுகின்றது. அந்தளவுக்கு மனித அறிவின் வளர்ச்சியும், வேகமும், தாகமும் தமிழ் மொழியால் மட்டுமே பிரதிபலிக்கச் செய்ய முடிகிறது. அதனால் தான் உலகெங்கும் வளர்ந்து நிமிர்ந்து நிற்கிறது எம் தமிழ்.

"தமிழ் மிகவும் பண்பட்ட மொழி. தனக்கே உரிய வளம் வாய்ந்த இலக்கிய சொற்களை பெற்றிருக்கும் மொழி" என்று மாக்ஸ் முல்லர் அழகாக கூறுகின்றார்.

எல்லாவற்றிற்கும் ஒரு வரலாறு உண்டு. அதுபோல் ஒரு மொழியின் வரலாற்றை படைக்க அதனுடைய கல்வெட்டுக்கள், தொல்பொருட்கள் ஆகிய சான்றுகள் தான் சாட்சி கூறுகின்றன. சான்றுகளே இல்லாது வெளிக்கொண்டு வரும் வரலாறுகளில் உண்மை இராது. வெறும் கட்டுக் கதைகளாகவும் ஓடும் தண்ணீரில் எழுதப்படும் எழுத்துக்களாகவும் தான் இருக்க முடியும்.

உலகில் தமிழ் மொழிக்கு நீட்சி கொண்ட வரலாறு உண்டு. பழமையாய் இருக்கின்றவற்றிற்கு பழமையாயும் இலக்கிய நயமுடையதாயும் நிற்பதோடு, புதுமையாய் விளைகின்றவற்றிற்கு புதுமையான கருத்து செல்வம் நிறைந்ததாய் எம் மத்தியிலே என்றும் இளமைச் செழிப்புடனும் பொலிவுடனும் விளங்குவது எம் தமிழ் மொழியாகும். ஆகவே தான் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்து நின்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கும் எம் தமிழ் மொழி வாழ்ந்து கொண்டிருக் கின்றது என்பதே நிஜமாகவுள்ளது.

உலக நாடுகளில் தொண்ணூறு மில்லியன் மக்களால் பேசப்படுகின்ற மொழியாக எம் தாய்த் தமிழ் மொழி திகழ் கின்றது. அது மட்டுமல்லாது உலகிலேயே ஒரு மொழிக் கென தமிழ் மொழிக்கே முதன்முதலாக சங்கம் உருவாக்கப் பட்டதாக கூறப்படுகின்றது.

ஆகவே எம் தமிழ் மொழியின் சிறப்புக்களையும் அதன் இலக்கிய வளங்களையும் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். அதற்கு உலகப்புகழ் பெற்ற பல்கலைக்கழகங் களில் 'தமிழ் இருக்கை' அமைக்கப்பட வேண்டும் அங்கு தமிழ் செவ்வியல் இலக்கியங்களை கற்றுக்கொள்ளவும், ஆய்வுகளை விரிவாக்கத்தோடு மேற்கொள்ளவும் இது ஒரு தளமாக அமையப் பெற்று அது உலகளவில் நிஜமாக்கப் பட்டு பேசப்பட வேண்டுமென்பதும், தமிழையும் தமிழ் சார்ந்த எல்லா செயற்பாட்டு திட்டங்களையும், திறமைக ளையும் வெளிக் கொணர வேண்டும் என்பதும் எமது தமிழ் கல்விமான்களினதும் ஆய்வாளர்களினதும் மொழியியலா ளர்களினதும் எண்ணக்கருக்களாகப் பிறந்திருக்கின்றன. அதுவே அவர்களது குறிக்கோளாகவும் இருக்கின்றது.

ஆகவே தான் வரலாற்றுச்சிறப்பு மிக்க எம் தமிழ் மொழியை உலக அரங்கில் நிலை நிறுத்த முனைகின்றனர். இது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். எமது தாய்மொழியாம் தமிழ் மொழியை கனடா மண்ணில் புகழ்பெற்ற ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் 'தமிழ் இருக்கை' *(Tamil Chair)* செய்ய வேண்டுமென்ற உயரிய எண்ணங்கள் தமிழ் பற்றுக் கொண்ட எமது மேதாதைகளிடையே தோன்றியிருப்ப தால் தான் தமிழ் இருக்கையை நிலைநிறுத்துவதற்கான செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தனர்.

இப்படிப்பட்ட சீரும் சிறப்புடனும் விளங்கும் எம் தமிழ் மொழிக்கு கனடா மண்ணில் ரொறன்ரோ பல் கலைக்கழகத்தில் நிரந்தரமான உன்னதமான ஆசனத்தை நிலைநிறுத்தி அழகு பார்ப்பது சாலச்சிறந்ததாகும்.

ஏனென்றால் மற்றைய செம்மொழிகள் முன்னேறி வரு கின்றன. அவை உலக நாட்டு கல்வி மையங்களில் நிறுவப் பட்டு தேடல், கற்பித்தல், ஆராய்ச்சிகள் மூலம் பல நன்மை களைப் பெற்று வருவதை அறியக்கூடியதாக இருக்கின்றது.

ஆகவே பிரசித்தி பெற்ற, மிகவும் தொன்மையான எமது தமிழ் மொழியை ஏன் அரியாசனம் ஏற்ற முடியாது என்ற கேள்விகள் பலருடைய மனதையும் தொட்டுச் சென்றுள் ளன. அதன் பலாபலனை இன்று எம் முன்னே காணக் கூடியதாக இருக்கின்றது.

எந்தவொரு நாட்டிலும் அதன் பிரசித்தி பெற்ற பல் கலைக்கழகங்களில் தமிழ் மொழி இருக்கையை நிறுவுவது என்பது அவ்வளவு இலேசான காரியமல்ல. ஆனாலும் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்பதற்கமைய தமிழ் இருக்கையை நிறுவி எம் தமிழர் வெற்றி கண்டுள் ளனர்.

முதன் முதலில் அமெரிக்காவில் அமைந்துள்ள முதன்மை வகிக்கின்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் 'தமிழ் இருக்கை' நிறுவுவதை இலக்காகக் கொண்டு தமது செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர். அதற்காக பெருந்தொகை பணத்தை வைப்புப் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே அதற்கான பணத்தை திரட்டும் பணியில் களமிறங்கிய போது உலக வாழ் தமிழ் சமூகமும் மற்றும் இந்திய அரசும் ஏனைய கட்சிகளும், அமைப்புக்களும், தனிநபர்களும், தமிழ்பற்றா ளர்களும் பணத்தை வாரிக் கொடுத்தனர். 6 மில்லியன் (40 கோடி) அமெரிக்க டொலர்களை ஆதார நிதியாக திரட் டிக் கொடுத்து தமிழ் இருக்கையை உறுதிப்படுத்திக் கொண்டனர். அதற்கான அங்கீகாரமும் கிடைக்கப்பெற் றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரின் வரலாற்று தொன்மை கொண்ட தொல்காப்பியம் என்னும் தமிழின் இலக்கண நூலும் தமிழின் சிறப்புக்களை தெளிவாக எடுத்தியம்புகின்றது. நீண்ட நெடிய வரலாற்று தொன்மையும் தொடர்ச்சியும், வளர்ச்சியும் எம் தாய் மொழியில் தான் நிறைந்து பொதிந்து இருக்கின்றது.

நாம் பிறந்து எம் தாயிடம் இருந்து கற்றுக்கொள்ளும் மொழியே எம் தாய் மொழியாகின்றது. அதுபோல் தாயாக எம்மைக் காக்கும் மொழியே எம் தாய் மொழி. அதுவே எம் தமிழ் மொழி. செம்மொழியாம் தமிழ் மொழி இத் தரணியில் நிலைத்து நிற்பதென்றால் பழமையும், வளமையும் போதுமென்றில்லாமல் அம்மொழி பேச்சு மொழியாக, எழுத்து மொழியாக, ஆட்சி மொழியாக நிலைநிறுத்தப்பட வேண்டும். ஹார்வர்டு, ரொறன்ரோ பல்கலைகழகங்களில் நிறுவப்பட்ட தமிழ் இருக்கையினூடாக எம் தமிழர்களின் அங்கீகாரத்தை உலக அரங்கில் நிலை நிறுத்துவதோடு தொடர் பயன்பாட்டிற்கும் பல முன்னேற்ற கரமான செயற்பாட்டிற்கும் வலுச் சேர்க்கும், அத்தோடு எமது எதிர்கால சந்ததியினர் இதுனூடாக எம் தமிழையும் அதற்கான தேடல்களையும் மேற்கொண்டு பல சாதனைகள் புரிவார்கள் என்பதில் மாற்றமில்லை என்பது தான் உண்மை.

ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து வாழும் கனடா மண்ணில் 'தமிழ் இருக்கை' நிச்சயமாக தேவை என்பதை நிலைநிறுத்தி உள்ளனர். ஆகவே தான் இதனை அமைக்கும் பணி இரண்டரை வருடங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டது. அதற்காக தமிழ் இருக்கை அறக்கட்டளை அமைப்பும், கனடிய தமிழ் பேரவையும் மற்றும் கல்விமான்கள், அறிஞர்கள், புலவர்கள், மொழியியலாளர்கள், ஆய்வாளர்கள் என பலரும் இணைந்து எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது. இத் தமிழ் இருக்கையை நிரந்தரமாக பெற்றுக் கொள்வதற்காக உலகத் தமிழர்கள் மற்றும் கட்சிகள், அமைப்புக்கள், நிறுவனங்கள், தனிநபர்கள் என்று பலரும் தேவையான நிதியை கொடுத்து உதவி புரிந்தனர்.

3 மில்லியன் (15.6 கோடி ) டொலர்களை ஆதார இருப்பு நிதியாக கொடுத்து தான் இத் தமிழ் இருக்கை உருவாக்கப்பட்டுள்ளது. இது என்றும் தமிழர்களுடைய சொத்தாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

மிகவும் உயரிய பல்கலைக்கழகமான ரொறன்ரோவில் தமிழ் மொழிக்கு இருக்கை அமையவிருப்பதை கனடா நாட்டின் நாடாளுமன்றத்தில் அண்மையில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தமிழ் மொழி பேசுகின்ற சமூகத்தால் கனடா மண்ணில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் அமையப் பெற்ற முதல் தமிழ் இருக்கை என்பதும் பெருமைக்குரிய விடயமாக இருக்கின்றது.


கனடா அரசாங்கமும் இத் தமிழ் இருக்கையை அமைப்பதற்காக தாராள மனத்தோடு ஒத்தாசை கொடுத்துள்ளார்கள். அதுமட்டுமல்லாது தை மாதம் பிறந்தால் தமிழர்களால் கொண்டாடப்படும் தைப்பொங்கல் விழாவினை கனடா அரசாங்கம் அங்கீகரித்தது மாத்திரமன்றி 'தமிழ் மரபுத் திங்கள்' என்று அழைத்து தைமாதத்தையே பெரும் விழாவாக கொண்டாடி வருகின்றார்கள். வேற்று மொழிக்காரர் பிரமிப்போடு எமது தமிழ் மரபுத் திங்கள் விழாவை பார்க்குமளவுக்கு சிறப்பாக நடைபெறுகின்ற ஒரு விழாவாக அமைகின்றது.

கனடா மண்ணிலே எமது தமிழ் மொழியை இருக்கை செய்வதற்காக கனடா திருமறைக் கலாமன்றத்தால் 'கலைக்கரம்' என்னும் கலை நிகழ்வுகள் மெய்நிகர் ஊடாக (zoom) கடந்த சித்திரைத் திங்கள் 17 ஆம் நாள் நிகழ்த்தப்பட்டு அதனால் பெறப்பட்ட நிதியை திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும், இயக்குநருமாகிய தந்தை அருட்கலாநிதி நீ. மரிய சேவியர் அடிகளாரின் பெயரிலேயே ரொறன்ரோ மண்ணில் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கைக்காக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இக் 'கலைக்கரம்' கலை நிகழ்வில் உலகளவில் வியாபித்திருக்கும் திருமறைக் கலாமன்றங்களின் கலைஞர்கள் எமது மண்வாசனையை தொட்டுச் செல்கின்ற பாரம்பரிய கலை நிகழ்வுகளை மெய்நிகர் ( zoom ) ஊடாக நிகழ்த்திக் காட்டினர். இது எம் தந்தையினது எதிர்கால கனவுகளில் ஒன்றாக பதிந்திருந்ததும் அவை இந்நாளிலே வியப்பூட்டுமளவிற்கு நிகழ்த்தப்பட்டதையும் யாவரும் அறிவர். இந் நிகழ்வுகளில் யாழ்ப்பாணம், திருகோணமலை, பிரான்ஸ், சுவிஸ்ர்லாந்து, லண்டன், கனடா போன்ற திருமறைக் கலாமன்றங்களில் இருந்து தமிழ் மொழியை பறைசாற்றி வரலாற்றினை சொல்லுகின்ற பல கலை நிகழ்வுகள் நிகழ்த்தப்பட்டன.

சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கிய "யாழ்ப்பாணண்" என்ற ஆவணப் படம் காட்சிப்படுத்தப்பட்டது. கலைக்கரம் கலை நிகழ்வுகள் அனைத்தும் மிகவும் சிறப்பாக இருந்தன. இந் நிகழ்வுகளை உலகனைத்திலும் இருந்து பலரும் பாராட்டி இருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. •

## வரவு





**நூல்:**
ஜீவபிரயத்தனம்
(நாடகங்கள் ஏழு)
**ஆசிரியர்:**
யோ. யோண்சன் ராஜ்குமார்
**வெளியீடு:**
கலைச் சோலை, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
விலை ரூபா: 400.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Northern
# PC Park



## வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction,
Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327
077 336 6443 | 071 777 2377

021 567 5566 | 021 222 9581
021 222 2050 | 021 222 0388

Northern Pc Park  Npcpark  northernpcpark  Northern PC Park

Leading publisher on Sri Lankan Studies in Tamil & English

# குமரன் புத்தக இல்லம்
# Kumaran Book House

No. 39, 36th Lane, Colombo - 06

Tel. 112 364 550, 113 097 608
Fax. 112 364 254

E-mail: kumbhik@gmail.com
www. kumaranbookhouse.com

Towards Wider and Deeper Knowledge



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAPTHAMI

*Pro-music & recording studio*

DIGITAL AUDIO RECORDING STUDIO

TEL: 077 5858 079

sapthamipro@gmail.com

## ஸப்தமி கலையகம்

சகல விதமான இசைக்கருவிகளும் விற்பனை செய்யப்படுவதுடன் திருத்தியும் கொடுக்கப்படும்

(646) 1010/45, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணம்.

ஆலோசகர்:
கலாபூஷணம்
இசைவாணர்-கண்ணன்

எமது சக நிறுவனங்கள்

## SAI MADHURAM

DIGITAL AUDIO RECORDING STUDIO

## KALADARSHANAM

School of Fine Arts



0091 44 2258108
0091 99 4152889
kannanmaster66@yahoo.i

Plot No.2, ஷீலா நகர் முதன்மைத் தெரு, புழுதிவாக்கம், மடிப்பாக்கம், சென்னை - 600 091

இசையமைப்பு-ஒலிப்பதிவு-மேடை ஒலியமைப்பு-ஒளிப்பதிவு-ஒளித்தொகுப்பு

# MASS FOOD Restaurant

Eat Good Feel Good
Choose your taste



No. 270, Main Street, Jaffna, Sri Lanka
021 222 7576, 077 66 48 391
evelin4ns@gmail.com
Mass Food Restaurant


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சசிகா லேணர்ஸ்
# THE SASIKA LEARNERS



## தலைமைக் காரியாலயம்

**இல. 57 வேம்படி வீதி, யாழ்ப்பாணம்**

**021 221 7678, 077 722 6247**

**அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை**

## கிளைக் காரியாலயங்கள்

வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472, 070 301 3012

கே.கே. எஸ் வீதி, மல்லாகம்
021 224 3393, 070 301 3014

ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664, 070 301 3016

தபால் நிலைய வீதி, (A9),
சாவகச்சேரி (NDB Bank அருகில்)
021 227 0616, 071 557 0616

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு
021 225 2333, 071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
021 226 0999, 071 775 0999

இல. 821C, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
021 222 8004, 070 301 5004

பழைய கண்டி (பிரதான வீதி)
காரைநகர்
021 225 2454, 070 510 2484

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றிப் பயிற்சி வழங்கப்படும்.**